# மொழிபெயர்ப்புத் தமிழ்

முனைவர் ச.சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# மொழிபெயர்ப்புத் தமிழ்

முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத்தொழில்நுட்பப்
பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Mo<u>l</u>ipeyarpput tami<u>l</u> |
| Author | : | Dr. S. Sivakami<br>Associate Professor<br>International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai 600 113. |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.P.T. Campus,<br>Taramani, Chennai - 600 113. |
| First Edition | : | 2004 |
| Publication No | : | 525 |
| Language | : | Tamil |
| Paper Used | : | 18.6 kg TNPL Map litho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | viii + 200 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 60/- |
| Printed by | : | Powerman Printers<br>No. 89, Coral Merchant Street<br>Mannady, Chennai - 600 001 |
| Subject | : | Translation in Tamilology |

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

## அணிந்துரை

மொழி வளர்ச்சியின் அடிப்படைக் கூறுகளுள் குறிப்பிடத்தக்கது மொழிபெயர்ப்பாகும். இம்மொழிபெயர்ப்பு, இன்று ஒரு தனி ஆய்வுத்துறையாகவே வளர்ந்து வருகிறது. மொழிபெயர்க்கும் பணி தமிழிலிருந்து பிற மொழிகளுக்கும், பிறமொழிகளிலிருந்து தமிழுக்கும் தொன்றுதொட்டு இலக்கியப் பரிமாற்றங்களாக நடைபெற்று வந்தபோதிலும் இக்காலத்தில் மொழிபெயர்ப்புக் கொள்கைகளும், கோட்பாடுகள் குறித்த சிந்தனைகளும், வரலாற்றுப் பார்வையும் போற்றப்பட வேண்டியனவாக இலக்கிய வரலாற்றில் பேரளவில் இடம்பெற்று வருகின்றன. இப்போக்கு ஒப்பிலக்கியப் பார்வைக்கும், திறனாய்வுப் போக்கிற்கும் மிகவும் தேவையாக உள்ளது.

மொழிபெயர்க்கப்பட்ட பலதுறை சார்ந்த நூல்கள் பல்வேறு சிந்தனைகளை வழங்குகின்றன. மூல நூலாசிரியர்களின் படைப்பாற்றலை, கருத்தோட்டங்களை, மொழிபெயர்க்கப்பட்ட நூல்களின் வழியாக அறிகிறோம். அத்துடன் மொழிபெயர்ப் பாசிரியரின் ஆற்றலையும், அனுபவத்தையும் புரிந்துகொள்கிறோம். இவற்றை ஒருங்குநோக்கி இதில் அடங்கியுள்ள பொருண்மையைப் பகுத்து வழங்கும் நிலையில் '**மொழிபெயர்ப்புத் தமிழ்**' எனும் இந்த அரியநூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிடுகிறது.

நூலாசிரியர் முனைவர் ச. சிவகாமி விரிந்து பரந்த அளவில் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் ஏழு தலைப்புகளில் கூடுதல் தகவல்களை இந்நூலில் வழங்கியுள்ளார். இவற்றை, மொழிபெயர்ப்புப் பற்றி அறியும் ஆர்வலர்களுக்கும், மாணவர் களுக்கும் மிகவும் பயனுடைய வகையில் வழங்கியிருப்பது பாராட்டுக்குரியதாகும். மொழிபெயர்ப்புக் குறித்த அவருடைய நீண்டகால அனுபவ முத்திரை இந்நூலில் பதிந்துள்ளது.

மொழிபெயர்ப்பு என்றால் என்ன என்பதை அறிவதில் தொடங்கித் தமிழ் மொழிபெயர்ப்புப் பற்றிய ஒரு வரலாற்றுப்

பார்வை, தமிழ் இலக்கியங்கள் எந்தெந்த மொழிகளில் எவ்வெவ்வாறு இடம்பெற்றிருக்கின்றன என்பது வரை மிக விரிவாக ஆராய்ந்துள்ளார். மொழிபெயர்ப்புக் கோட்பாடுகளும், மொழிபெயர்ப்பாளர் பலரின் அனுபவ மொழிகளாக இடம் பெறும் சிந்தனைகளும் என ஆழ்ந்தகன்ற நோக்குடன் இந்நூலாசிரியரால் வழங்கப்பட்டுள்ளன.

இத்தகைய சிறப்புடைய இந்நூல் மொழிபெயர்ப்புத் துறையில் குறிப்பிடத்தக்க சிறப்பிடம் பெறும் என்பதில் ஐயமில்லை. இச்சிறந்த நூலை வழங்கிய முனைவர் ச.சிவகாமி அவர்களின் ஊக்கத்தையும், உழைப்பையும் பெரிதும் பாராட்டுகிறேன். இது போன்ற மேலும் பல சிறந்த நூல்களை வழங்க வாழ்த்துகிறேன்.

இந்நூலை வெளியிட இசைவுதந்த நிறுவனப் பதிப்புக் குழுவினர்க்கும், மதிப்பீடு செய்து ஒப்புதல் தந்த மதிப்பீட்டுக் குழுவினர்க்கும் இந்நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற **நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், **தமிழ் வளர்ச்சி பண்பாடு—மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா** இ.ஆ.ப., அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன்** இ.ஆ.ப., அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளி அச்சுக்கோப்புச் செய்த திருமதி இரா. வெண்ணிலாவிற்கும், அழகுற அச்சிட்டுத்தந்த பவர்பேன் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

சென்னை
4-12-2004

இயக்குநர்

# முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சுமார் பன்னிரு ஆண்டுகள் (1983 - 1995) மொழிபெயர்ப்பியல் முதுகலைப் பட்டய வகுப்பு மாணாக்கர்க்குக் கற்பித்ததன் பயனாகவும் மொழிபெயர்ப்பு நூற்றொகை (Bibliography on Translations) உருவாக்கியமையாலும் இந்நூல் எழுந்துள்ளது. மொழிபெயர்ப்புப் பற்றி அறிய விழையும் மாணாக்கர்க்குத் துணை நிற்கும் நோக்கில் நூல் படைக்கப் பட்டுள்ளது.

இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என முத்தமிழாகப் புகழப்பட்ட தமிழ் இன்று அறிவியல் தமிழ் என நான்காக உணர்த்தப்படுகிறது. ஆய்வுத் தமிழ் என்பதையும் இணைத்து ஐந்தமிழாகக் கொள்வாரும் உளர். இந்நிலையில் மொழிபெயர்ப்பு எனும் துறை தமிழில் பெற்றுள்ள இடத்தினைப் பலநோக்குகளில் இந்நூல் காட்டிச் செல்வதாலும், 'மொழிபெயர்ப்புத் தமிழ்' என இதனையும் கூட்டி முத்தமிழின் இரட்டிப்பாக ஆறு தமிழாக, தமிழாறாகப் பெருகி நிற்பதை உணர்த்தும் நோக்கத்தாலும் இந்நூல் **'மொழிபெயர்ப்புத் தமிழ்'** எனப் பெயர் கொண்டுள்ளது.

மொழிபெயர்ப்பு - அறிமுகம் எனும் முதற் கட்டுரை, மொழிபெயர்ப்பு பற்றிய சிறு அறிமுகமாக, விளக்கமாக, தமிழில் அதன் நிலை பற்றிய தெளிவாக அமைகிறது.

தொல்காப்பியர் முதலாக இன்று வரையிலுமாகத் தமிழில் மொழிபெயர்ப்பு பெற்றுள்ள இடத்தினைத் தமிழ் மொழிபெயர்ப்பு வரலாறு எனும் இரண்டாம் கட்டுரை விரிவாகப் பேசுகிறது.

தமிழிலிருந்து பிறமொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள இலக்கண, இலக்கியங்கள் பற்றிய செய்திகளை 'உலக மொழிகளில் தமிழ்' கட்டுரை தருகிறது.

தமிழிலக்கியங்கள் மொழிமாற்று பெறும் இயல்பினை அதன் ஆங்கிலப் பெயர்ப்பு கொண்டு அளவிடும் முயற்சியாகத் 'தமிழின் ஆங்கிலப் பெயர்ப்புகள்' அமைகிறது.

மொழிபெயர்ப்புக்கு இன்றியமையாத சொல்லாக்கம் பற்றிச் 'சொல்லாக்கம்' எனும் அடுத்த கட்டுரை ஆராய்ந்துள்ளது.

உரைநடையிலக்கிய மொழிபெயர்ப்பில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து 'உரைநடையிலக்கிய மொழிபெயர்ப்புக் கோட்பாடுகள்' கட்டுரை காட்டுகிறது.

தமிழ் மொழிபெயர்ப்பாளரின் மொழிபெயர்ப்புச் சிந்தனைகளை, இறுதிக் கட்டுரையான 'மொழிபெயர்ப்புச் சிந்தனைகள்' தொகுத்துள்ளது.

நூலாக்கத்திற்கு அடித்தளமிட்ட நிறுவன மேனாள் இயக்குநர் மதிப்பிற்குரிய பேராசிரியப் பெருந்தகை டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள்; அவ்வப்போது எழும் ஐயங்களைத் தெளிவித்து, வழிகாட்டிய நிறுவனப் பேராசிரியர் இனிய நண்பர் டாக்டர் அன்னிதாமசு அவர்கள்; அழகியதொரு அணிந்துரை நல்கி, நூல் வெளிவரத் துணை நின்ற நிறுவன இயக்குநர் டாக்டர் சா. கிருட்டினமூர்த்தி அவர்கள்; பதிப்புக் குழுவினர்; மதிப்புரை வழங்கிய வல்லுநர்; கணினிப் பதிவு செய்தளித்த திருமதி இரா. வெண்ணிலா; மெய்ப்புத் திருத்தியுதவிய செல்வி அ. வனிதா; செல்வி பி. ஜானகி ஆகிய அனைவர்க்கும் என் அன்பு நிறை நன்றி.

**ச. சிவகாமி**

# உள்ளே....

| | |
|---|---|
| மொழிபெயர்ப்பு - அறிமுகம் | 1 |
| தமிழ் மொழிபெயர்ப்பு வரலாறு | 31 |
| உலக மொழிகளில் தமிழ் | 105 |
| தமிழின் ஆங்கிலப் பெயர்ப்புகள் | 134 |
| சொல்லாக்கம் | 159 |
| உரைநடையிலக்கிய மொழிபெயர்ப்புக் கோட்பாடுகள் | 174 |
| மொழிபெயர்ப்புச் சிந்தனைகள் | 180 |
| பார்வை நூல்கள் | 195 |

# மொழிபெயர்ப்பு - அறிமுகம்

தாம் இன்புறுவது, உலகு இன்புறக் காமுறும் அறிஞரால் ஒவ்வொரு மொழியினரும் பெறும் பயனே மொழிபெயர்ப்புகளாம். பண்பாட்டுக் கலப்பிற்கு, அறிவு பெருக்கத்திற்கு, குறிப்பிட்ட இனத்தினரை அறிந்து கொள்வதற்கு எனப் பல பெருமைகளுக்குரிய எளிய கருவியாக அமைவது மொழிபெயர்ப்பு. ஒரு மொழியின் சிறப்புக்கூறுகள் அனைத்தும் பிற மொழிகளில் ஏற்றம் பெறுதற்கு உற்ற துணை மொழிபெயர்ப்பே. மொழி வளத்திற்கும் இம்மொழிபெயர்ப்பு நூல்கள் பெரும் துணை செய்கின்றன. ஒவ்வொரு மொழியிலும் இன்று சிறப்பிடம் பெற்றுத் திகழும் மொழிபெயர்ப்புகள் இலக்கியம், அறிவியல், கலை என எல்லாத் துறைகளிலும் அமைந்துள்ளன. எனவே உலக அரங்கில் இது தனக்கென ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைக் கொண்டுள்ளமை வெள்ளிடை மலை.

## மொழிபெயர்ப்பு – விளக்கம்

மொழி, பெயர்ப்பு எனும் இரு சொற்களின் இணைவில் தோன்றுவது மொழிபெயர்ப்பு. "மொழி என்பது பேசுவோரின் குரலில் பிறந்து, பொருளுடைய அறிகுறிகளாக அமைந்து கேட்போரால் பொருள் உணரப்படும் ஒலிவகை எனலாம். அது பெரும்பாலும் பேசுவோர், கேட்போர் ஆகிய இரு திறத்தார்க்கு இடையே நிகழ்ந்து ஒருவர் உணர்ச்சியையோ கருத்தையோ மற்றவர் உணர்வதற்குப் பயன்படுவது" என்பது மொழிக்கு அறிஞர் தரும் விளக்கமாகும் (மு. வரதராசனார், மொழிநூல், ப. 1). பெயர்ப்பு, பெயர்த்தல், பெயர்ச்சி என்பன பொருள் தொடர்புடைய சொற்களாகும். பெயரச் செய்கை, போக்குதல், நிலை மாறச் செய்தல், திருப்பிப் போடுதல், செலுத்துதல், விடுத்தல், இடமாறுகை, இடமாற்றுகை என இவை பல பொருள் படுகின்றன (Tamil Lexicon - Vol. V). இவற்றை ஒருங்கிணைத்து நோக்குங்கால் ஒரு மொழியில் உள்ளவற்றை மற்றொரு மொழிக்குச் செலுத்துதல், போக்குதல்

என்பது மொழிபெயர்ப்பாகிறது. இது ஒன்றிலிருந்து ஒன்றிற்கு இடமாறுதலை, இடமாற்றுதலைக் குறிக்கிறது. பெயர்த்தெழுதுதல் என்பதும் மொழிபெயர்ப்பினைச் சுட்டுவதாகும்.

இம் மொழிபெயர்ப்பு பற்றிப் பலர் தங்கள் விளக்கங்களை நல்கியுள்ளனர்.[1] **பொது நிலையில், மூலநூலின் முழு உணர்வினையும், கருத்துகளையும், நிகழ்வுகளையும், உரையாடல் களையும் சிறிதும் விடுபடாமலும், அதிகப்படுத்தாமலும், மாற்றாமலும் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மாற்றுதலை உண்மையான மொழிபெயர்ப்பாகக் கொள்ளலாம்.** ஆயின் கூட்டியும் குறைத்தும் சுருக்கியும் விரித்தும் பெயர்த்தமைப்பதையும் மொழிபெயர்ப்பாகக் கொள்வாரும் உளர்.[2] ஒரு மொழியின் கருத்துகளை மற்றொரு மொழியில் உணர்த்தல் எனும் நோக்கில் இவர்கள் மொழிபெயர்ப்பில் இம்மாற்றங்களை ஏற்றுக் கொள்கின்றனர் எனலாம். மற்றும் பொதுவாகப் பல மொழிபெயர்ப்பு நூல்கள், மொழிபெயர்ப்பாளரின் கருத்திற்கேற்பக் கூடியும் குறைந்தும் வருதலானும்[3] இம்மரபினை ஏற்றுக் கொள்கின்றனர் எனக் கொள்ளலாம். இவ்வாறு எழுவனவற்றை மொழிபெயர்ப்பின் மாற்று வடிவங்களாகக் கொள்ளலாமேயன்றி உண்மை மொழிபெயர்ப்பாகக் கொள்ளல் இயலாது. மூல நூலாசிரியரினின்றும் மொழிபெயர்ப்பாளர் இந்நிலைகளால் மாறுபட்டமைதல் இதன் காரணமாகும்.

## மொழிபெயர்ப்பின் நோக்கம்

கருத்து வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளுதல், அறிமுகங் கொள்ளுதல் எனும் இவையே மொழிபெயர்ப்பின் பொதுவான நோக்கங்களாக அமைகின்றன. கருத்து வளர்ச்சி, அறிவு வளர்ச்சி என்பன அறிவியல், பொருளாதாரம், வரலாறு, புவியியல் போன்ற மொழி பெயர்ப்புகளில் முதன்மையாகின்றன. ஒருவரையொருவர் அறிமுகம் கொள்வதனையும், புரிந்து கொள்வதனையும் இலக்கியம் மற்றும் கலை மொழிபெயர்ப்புகள் அடிப்படையாகக் கொள்கின்றன. இவை பொதுநிலையாக அமைய, மொழி பெயர்ப்பாளர்கள் தங்களுக்கெனத் தனித்த நோக்கங்களுடன் மொழி பெயர்த்தலும் காணப்படுகிறது.

"பிரேம்சந்த் அவர்களின் சமூகச் சீர்திருத்தக் கதைகளை எடுத்துக் கொண்டதற்கு விசேஷ காரணங்கள் இல்லாமலில்லை. முதலாவது தமிழ் பாஷையின் மறுமலர்ச்சிக்கென்றே பாரதியார்

அவதரித்ததுபோல் பிரேம்சந்த் அவர்களும் ஹிந்தி பாஷைக்குத் தோன்றியவர். தேசவிடுதலை, சமூகச் சீர்திருத்தம் இவைகளே இருவர்களின் முக்கிய லக்ஷியங்களாயிருந்தன. கருத்துகள் விஷயத்திலும் அவ்வாறே. ஆகவே எனக்கு, பாரதியாரிடம் உள்ளதுபோன்ற பிரேமையும் பக்தியும் பிரேம்சந்த் அவர்களிடமும் ஏற்பட்டது. இரண்டாவது நம் நாட்டின் விடுதலைக்கேற்ற உபயோககரமான நூல்கள் ஹிந்தியில் இருக்கின்றன என்பதை இன்னும் ஹிந்தி கற்காத தமிழர்கள் அறிந்து அதன் பிறகாவது அவர்கள் ஹிந்தி கற்றுக்கொள்ள முன்வர வேண்டுமென்பதே எனது பேரவா. மூன்றாவது நமது சமூகத்திலுள்ள மூடப்பழக்கவழக்கங்களைப் போக்க என்னாலான தொண்டைச் செய்ய வேண்டுமென்கிற நெடுநாளைய விருப்பம், இவைகளே ஹிந்தி பாஷையில் சிறந்த பொக்கிஷமாயுள்ள ஸ்ரீ பிரேம்சந்த் கதைகளை நான் தமிழில் கொணருவதற்குத் தூண்டு கோலாயிருந்தன" என்பது (ஆக்கூர் அனந்தாச்சாரி, பிரேம்சந்த் சிறுகதைகள், முன்னுரை) போன்ற கருத்துகளைச்[4] சான்றாக்கலாம். நிறுவனங்களும் இத்தகு நோக்கங்களுடன் செயல்படுதல் காணப்படுகிறது.[5] இவற்றை நோக்குங்கால் பொதுநிலையில் மொழிபெயர்ப்புகள் எத்துறையில் எழுவதாயினும் ஏதேனும் பயன்பாட்டு நோக்கத்துடனே எழுவது காணப்படுகிறது. இதனால் மொழிபெயர்ப்பின் முக்கியத்துவம் புலனாகும். திறனாய்வாளரின் எண்ணமும் இவ்வாறே அமைகின்றது[6].

## மொழிபெயர்ப்பு முறை

மொழிபெயர்ப்பின் முழுப்பயனையும் கற்போர் பெறும் பொருட்டு, மொழிபெயர்ப்பாளர் சில நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. மொழிபெயர்ப்பு சிறப்புப் பெறவும் இது பயன்படுகிறது. இது பற்றி அறிஞர் பலரும் தம் கருத்துகளை நவின்றுள்ளனர். அவற்றைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தி முறைப்படுத்திக் கூறலாம்.

**1. எளிமை:** மொழிபெயர்ப்பு நடை கடினமானதாக இல்லாமல் யாவருக்கும் புரியும் வண்ணம், எளிய சொற்களால் எளிய தொடராக அமைந்திருத்தல் வேண்டும். கற்பாருக்கு நூலைப் படிக்கும் பொழுது அது மொழிபெயர்ப்பு நூல் என்ற உணர்வு தோன்றாதிருப்பின் அதுவே மொழிபெயர்ப்பாளருக்கு மிகப் பெரிய வெற்றியாகும். சாகித்திய அக்காதெமி வெளியிட்டுள்ள

'கன்னடக் கவிதைகள்' நூல் இதற்குச் சிறந்த சான்றாகும். மூல நூலின் தொடர் நீண்டதாக இருப்பினும் அதனை மொழிபெயர்க்கும் பொழுது சிறு சிறு தொடர்களாகப் பகுத்துக் கொள்ளலாம்.

**2. பயன்படுத்தும் சொற்கள்:** அவ்வம் மொழியின் வழக்குச் சொற்கள் மொழி எளிமை குறித்து வேண்டப்படுகின்றன. நாடோடிப் பேச்சு வழக்கும், இழிந்தோர் பேச்சு வழக்கும் கடியப்படுகின்றன. பிறமொழிச்சொற்களை நூலுள் பயன்படுத்தல் கூடாது, பயன்படுத்தலாம் என இருவேறு கருத்துகள் காணப்படுகின்றன. இலக்கியத்துள் பிறமொழிக் கலப்பு தவிர்க்கக் கூடியதாயினும் அறிவியல் முதலானவற்றில் தவிர்க்க இயலாது என்பது பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்வாரின் கருத்தாகும். "சைக்கிள், மோட்டார், பெட்ரோல் என்பன போன்ற சொற்களுக்குத் தமிழ் மொழிபெயர்ப்புத் தேடுவது கால விரயத்தையும், தோல்வியையும் உண்டு பண்ணும். வழக்கில் வந்தனவற்றை அப்படியே நமதாக்கிக் கொள்வதுதான் வளர்ச்சிக்கு வழி. இன்றைய உலகில் வேற்றுமொழிச் சொற்களைக் கடன் வாங்குவது என்பது தவிர்க்க இயலாத ஒன்று------ இல்லாதனவற்றைப் பிறரிடமிருந்து வாங்கி நமதாக்கிக் கொள்வதே அறிவியல் தமிழாக்கத்திற்கு உரிய முறைகளில் சிறந்தது எனலாம். அதாவது நம்முடைய மொழியில் உள்ள ஒலிகளைக் கொண்டே அவைகளை அமைப்பது நல்லதாகும். மேலும் உலகமெலாம் ஏற்றுக் கொண்டுள்ள அறிவியல் குறியீடுகளையும் அப்படியே ஏற்றுக் கொள்வதுதான் நல்லது. அவைகளைத் தமிழாக்க முயன்றால் நாம் தனித்து நிற்க வேண்டிவரும். அப்போதுதான் அறிவியல் வளர்ச்சி எந்த நாட்டில் ஏற்பட்டாலும் நம்மால் எளிதில் புரிந்து கொள்ள இயலும்". எனும் கருத்து (ஜி. ஆர். தாமோதரன், அறிவியல் தமிழாக்கம், ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு கருத்தரங்கு ஆய்வுக் கட்டுரைகள், ப. 451-452) ஏற்புடைத்தே. இதனால் உயர்கல்வி பெறுதல் எளிமையாகும்.

சொற்களைப் பயன்படுத்தும் பொழுது அது பொருளைத் தெளிவாக, மயக்கமின்றி உணர்த்துதலாக இருத்தலும் வேண்டற்பாற்று. "மெய்ப் பொருளியல், தத்துவக் கருத்துகளை விளக்கும் வடமொழிச் சொற்கள் பல வழக்கில் இருந்து வருகின்றன. அவை மாற்றம் பெறவில்லை. அவற்றிற்குத் தக்கனவாகப் படைக்கும் புதிய தமிழ்ச் சொற்களைப் பொது மக்களும் தமிழ் அறிஞர்களும் புரிந்து கொள்வது கடினமானதாகையால் இம்முயற்சி

மேற்கொள்ளப் பெறவில்லை" எனும் கூற்றும் (கீழைமேலை நாடுகளின் மெய்ப் பொருளியல் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பதிப்புரை) நோக்கற்பாலது. இவற்றால் பிறமொழிச் சொற்களைத் தன் வயமாக்கி ஏற்றுக் கொள்ளுதல் தவிர்க்க இயலாதது என்பது புலனாகும்.

மூலநூலாசிரியர் பயன்படுத்தியிருக்கிற சொல்லைக் காட்டிலும், அச்சொல்லை எந்தப் பொருளில், எந்தப் பாவத்துடன் பயன்படுத்தியிருக்கிறார் என்பதனையே முக்கியமாக நோக்க வேண்டும்.

சான்றாக,

இது மற்றெவனோ தோழி துனியிடை
இன்னார் என்னும் இன்னாக் கிளவி (குறுந். 181)

எனும் பாடலடிகள்,

What good is it
my friend
to say he is wicked
in our anger

என மொழிபெயர்க்கப்பட்டுள்ளதைச் (M. Shanmugam Pillai & David Ludden) சுட்டலாம். இங்குத் துனி என்ற சொல் 'புலவி' எனும் பொருளில் வர அதற்கு இணையாகக் 'கோபம்' எனப் பொருள்படும் anger என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆயின் sulk என்ற சொல்லே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. இதனால் தலைவியின் நிலையே மாறிவிடுகிறது. அதாவது புலவி கொண்டுள்ள நிலை கோபம் கொண்டுள்ள நிலையாக மாறிப் பாடலின் இயல்பினை மாற்றிவிடுகிறது. இம்மாதிரியான பிழைகள் அதிகமாக மொழிபெயர்ப்பில் தோன்றுகின்றன. மொழி உணர்த்தும் பொருளினை, மரபினைத் தெளிவாக உணர வேண்டியதன் தேவையையும், மொழிபெயர்க்குங்கால் நினைவில் கொள்ள வேண்டியதன் தேவையையும் இதனால் உணரலாம்.

சாதாரண சொல்லாயினுங்கூட, அதனுடன் சரியான தொடர்புடைய பிறமொழிச் சொல்லைப் பயன்படுத்தும் பொழுதுதான் மூலநூலாசிரியன் எண்ணம், திறமை அவ்வாறே வெளிப்படும். ஒரு சொல்லுக்கு அதனுடன் பொருந்தாத சொல்லைப்

பயன்படுத்தினால் மூலத்தின் அழகே கெடுவதுண்டு. முன்சுட்டியுள்ள சான்றே இக்குறைபாட்டினையும் கொண்டுள்ளது. அக்கூற்றில் உள்ள 'இன்னார்' என்னும் சொல் தலைவனைக் குறிப்பிடுங்கால், மாறுபட்டவர், துன்பந்தருபவர் என்று பொருள்படுமே அன்றி மொழிபெயர்ப்பாளர் கொடுத்துள்ள 'கெட்டவன்' என்று பொருள்படும் 'Wicked' எனும் சொல்லுக்கு இணையாகாது. மொழிபெயர்ப்பாளரால் தலைவனின் பண்பு, மூலத்தினின்றும் மாறுபட்டு அப்பாத்திரத்தின்பால் கற்பார் வெறுப்புணர்ச்சி கொள்ளத் தூண்டுகிறது. மூலநூலாசிரியர் தலைவியிடம் இரக்க உணர்வைக் காட்டச் செய்கிறாரே அன்றித் தலைவனை வெறுக்கும்படி பாடவில்லை. எனவே தவறான மொழிபெயர்ப்பால் பாடலின் இயல்பு இங்கு மாறக் காண்கிறோம். ஒன்றுக்கு மேற்பட்ட பொருளுடைய சொல்லை மூலநூலார் பயன்படுத்தியிருக்கும் பொழுதும் இதனைக் கடைப் பிடித்தல் இன்றியமையாததாகிறது. மூலநூலின் உண்மைக் கருத்தினை உணர இதனால் ஏதுவாகிறது. சான்றாக,

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும். (114)

எனும் குறளை வைத்து நோக்கலாம். இங்கு எச்சம் என்ற சொல் மிச்சம், சந்ததி, மகன், ஒரு வாசனைப் பண்டம், குறைவு, பிறப்பில் வரும் குறை, தொக்கு நிற்பது போன்ற பொருள்களை உடையதாகும். ஆயின் குறளில் சந்ததி எனும் பொருளில் வள்ளுவர் கையாண்டுள்ளார். எனவே இதனை மொழிபெயர்ப்பாளர் உணர்ந்து பொருள் மயக்கம் கொள்ளாவாறு,

The just and unjust, both are known
By each one's offspring truth is known

என மொழிபெயர்த்தல் ஏற்புடைத்தாகும். (Kasthuri Srinivasan, Tirukkural, p. 14).

இலக்கிய மொழிபெயர்ப்புகளில் சொற்களின் ஆற்றலுக்கு அகராதி துணை நிற்பதை விட அனுபவத்தின் துணையே பெரிதும் வரவேற்கப் படுகிறது எனும் கருத்தும் (வீ. சந்திரன், மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும், ப. 35) கருதத்தக்கதாகும்.

மூலத்தில் காணப்படும் சிறப்புப் பெயர்ச்சொற்களுக்கு மொழிபெயர்ப்பில் ஆங்காங்கே அல்லது தனியே,

"அமலாபேகி - கோவிலின் ஒரு சிறப்பம்சம், அலங்காரம்

கோப - புண்டரீகச் சேலை - கோர்தா அரசர் முடிசூட்டப்படும போது ஜகந்நாதரின் இசைவுக்கு அடையாளமாகப் பெறப்படும் தலைப்பாகைத்துணி.

மாதலா - பாஞ்ஜி - பதினோராம் நூற்றாண்டு முதல் ஜகந்நாதர் கோவிலின் கஜபதி ராஜாக்கள், அவர்கள் காலத்து மக்கள் நிலைமை பற்றிக் கிரமமாக விவரிக்கும் நூல் மாதவ (மத்தளம்) வடிவில் கட்டி வைக்கப்பட்டிருந்த தால் இதை மாதலா பாஞ்ஜி என்கிறார்கள்".

என்பன போன்று (எம்.வி. வெங்கட்ராம், நீலமலை, பக். 381-384) விளக்கம் அளித்திருப்பது, கற்பாருக்கு மிகவும் பயனுடைய குறிப்புகளாகும். இத்தகையன எல்லா மொழி பெயர்ப்பு நூல்களிலும் இடம்பெறல் வேண்டற்பாலது.

"மூலத்திலுள்ள சொல்லும் எழுத்தும் மொழி பெயர்ப்பாளருடைய சுதந்திரத்தைப் பாதிக்கும் விலங்காக அமைந்து விடக்கூடாது..... சில சமயங்களில், மூலத்திலுள்ள சில சொற்களை மொழிபெயர்க்காமல் விட்டு விட்டால் அதனால் மொழிபெயர்ப்பு ஒன்றும் கெட்டுப் போய்விடாது. உண்மையில், மூலத்தின் பொது பாவத்தைச் செம்மையாக மொழிபெயர்ப்பதற்காகவே சில சொற்களைத் தமிழாக்கம் செய்யாமல் தவிர்க்க வேண்டியிருக்கும்" என்று சிறந்த மொழிபெயர்ப்பாளர் ஒருவர் கருதுவதும் எண்ணத்தக்கது (எஸ். மகராஜன், மொழிபெயர்ப்பது எப்படி? Studies in Arts and Sciences - A felicitation Volume to Prof. N. Subbu Reddiar, pp. 95-96). மொழிபெயர்ப்பின் எளிமைத் தன்மையைச் சிறப்பிக்கவும், அச்சொற்களின் சிறப்பினைச் சிதைக்காது வெளிப்படுத்தவும் அவர் இவ்வாறு கருதுகிறார் எனலாம்.

**3. இலக்கிய நயம்:** எளிமையாக, அனைவருக்கும் புரியும் சொற்களைக் கையாண்டுத் தெளிவாக மொழிபெயர்ப்பு அமைத்தல் என்பதுடன் மற்றும் சில பொதுக்கூறுகள் இலக்கியமொழி பெயர்ப்புகளில் வேண்டப்படுகின்றன. மூலத்தின் இனிமை, மொழி நடையில் அமையும் பொருள் பொதிந்த சிறப்பு நிலைகள், உவமை, உருவகம், குறியீடு போன்ற பிற இலக்கிய நயங்கள் முழுமையான நிலையில் மொழிபெயர்ப்பிலும் இடம்பெறல் இன்றியமையாததாகும். மூலத்தின் சிறப்பினை முற்றிலுமாக உணர்ந்து கொள்ள இவை

தேவைப்படுகின்றன. ஒப்பிலக்கிய ஆய்விற்கும் புத்திலக்கிய ஆக்கத்திற்கும் இவை பெரிதும் துணை நிற்கின்றன. 'தமிழரின் அரும்பெரும் செல்வமான சங்கப் பாடல்களுள் குறுந்தொகையினை உலகிற்கு உணர்த்த மொழிபெயர்ப்பாளர் கொண்டுள்ள முயற்சியினைக் கொண்டு இதனை விளக்கலாம்.

அருவி அன்ன பருஉறை சிதறி
யாறுநிறை பகரும் நாடனைத் தேறி
உற்றது மன்னும் ஒருநாள் மற்றுஅது
தவப்பல்நாள் தோள் மயங்கி
வௌவும் பண்பின் நோய் ஆகின்றே

என்பது மூலம். இதன் துறை, 'தலைமகற்கு வாயில் நேர்ந்து புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது' என்பதாகும். இதனை 'What she said to her friend, who came as his messenger after his drip to the harlot' என மொழிபெயர்த்துள்ளனர் (M. Shanmugam Pillai & David E. Ludden, Kuruntokai, p. 235) பாடலை,

I chose that man
from a land where drops
spray from a river in full flood
as though from a water fall;
and I stayed with him
one day
But since then,
for many, many days
grief has stayed on my shoulders
and consumed all my charms

எனவும் தந்துள்ளனர். இங்குப் பாடலின் உட்கருத்தினை மேலும் விளக்குவதற்காகவும், அதன் பொருளை முழுமையாக உணர்த்து வதற்காகவும், பாடலின் நயத்தைப் புரிந்து கொள்வதற்காகவும்,

The waterfall is an element of mountain region imagery, which represents his passion. The river is an element of lowland region imagery; and the full flood represents the over-flowing of his passions, in his affair with the harlot. His love flies away from her toward the harlot just as it flew toward herself in their courtship. Her chastity consists in complete fidelity to him from their first meeting. She had one day of joy with him; and ever

since, she had had grief, which has consumed her beauty. Nevertheless, this poem indicates that she accepts him back, in her virtue,

என விளக்கியுள்ளனர். இதனால் மொழிபெயர்ப்பின் நோக்கமும் நிறைவு பெறுகிறது. ஒவ்வொரு மொழிக்கும் எனத் தனித்த சிறப்புகள் உண்டு. அவற்றை அறிவதற்கு இத்தகையன துணை நிற்கின்றன. இவ்வாறு மொழிபெயர்ப்பாளர் உரையாசிரியராகவும் செயல்படுதல் வேண்டற்பாற்று.

சில இடங்களில் மூலத்தின் முழுச் சிறப்பினையும் மொழிபெயர்ப்பில் கொணர இயலாமை தோன்றுகிறது. "இதுவும் இங்கு வருகின்ற மற்ற சிலேடைகளும் முதல் நூலில் சிலேடையாக வந்துள்ள சொற்களின் நேர் மொழிபெயர்ப்புகள் அல்ல. அது இயலாத தாகையால் ஒரு சிறிது அக்கருத்து அமையும் படி வேறு சில தமிழில் வருவித்துக் கொள்ளப்பட்டன" என்பதினின்றும் (டி.என். சேஷாசலம், ஜூலியஸ் ஸீஸர், ப. 6) அதனை உணரலாம். அத்தகைய சூழல்களில் இந்நிலையையே ஏற்றுக்கொள்ள வேண்டியதாகிறது. "சில இடங்களில் மூல பாஷையிலுள்ள ஒரு சொல்லுக்குச் சரியான சொல்லைத் தேடி அக்கருத்தைப் பிற பாஷையில் அப்படியே பிரதிபலிக்கச் செய்வதில் பூரண வெற்றியை அடைய முடிவதில்லை, இது எனது சொந்த அனுபவம்" என்ற கூற்றும் (எஸ். என். ஸ்ரீராம தேசிகன், இருமொழி இலக்கிய இன்பம், ப. 75) இவண் இணைத்து நோக்கற்பாலது.

பாடலின் காட்சிக்கோ கருத்துக்கோ மிகத் துணையாக இருந்தாலன்றி வருணனைகளை மொழிபெயர்ப்பில் விட்டு விடலாம். அதனால் பாடலின் சுவை குன்றப் போவதில்லை என்ற சிந்தனையும் (டி.என். இராமச்சந்திரன், On Translation, ப. 136) சிந்திக்கப்பட வேண்டியதாகும்.

4. தெளிவு: மொழிபெயர்ப்பு நூல்கள் அனைத்திலும் இது வேண்டுவதாயினும் அறிவியல், மருத்துவம், சட்டம், கலைகள் போன்ற துறைகளில் மிக இன்றியமையாததாகின்றது. கருத்துகளை உணர்த்துதல் அடிப்படையாதலின் ஆடம்பரத்திற்கும் அலங்காரத்திற்கும் இங்கு வேலை இல்லை. கருத்தினைத் தெளிவு படுத்துவதில்தான் மொழிபெயர்ப்பாளர் தம் உழைப்பினைச் செலவிட வேண்டும். "சட்டத்துறை நூல்களைப் பொறுத்தவரை பொருளும் அதன் அமைப்பும் மிகவும் இன்றியமையாதன" என்பர்.[7]

இக்கூற்று ஏனையவற்றிற்கும் பொருந்தும். பொருளில் மாறுபாடு தோன்றின் அதனால் விளையும் இடர்ப்பாடுகள் இவற்றில் பெரிது. ஆதலின் இங்கு அதிகமாக வலியுறுத்தப்படுகிறது. எனவே இவற்றில் மொழிபெயர்ப்பாளர் மிகுந்த கவனம் கொள்வது தேவையாகிறது. அவ்வத் துறையைச் சார்ந்தோரால் இம்மொழிபெயர்ப்புகள் நிகழின் இக்குறைபாடு மறைதற்கு வாய்ப்புண்டு. இரட்டைப் பொருள் தரும் சொல், தொடர் போன்றவற்றை விலக்கி, கற்பாருக்கு எளிதில் புலனாகக் கூடியவாறு அவர்களுடன் தொடர்புடைய சொற்களையே பயன்படுத்தலாம். அதனால் தொடரில் ஏற்படும் பொருள் மயக்கம் நீங்கித் தெளிந்த கருத்தினைப் பெற முடியும்.

யுனெஸ்கோ நிறுவனம், 'மொழிபெயர்ப்பாளர்களுக்கு நெறிமுறைகள்' எனும் கையேட்டினை வெளியிட்டுள்ளது. அதில் மொழிபெயர்ப்பின் முதல் தேவையாக இடம் பெறுவது துல்லியமே ஆகும். மேலும் ஒரு மொழிபெயர்ப்பு அதன் மூலப்படைப்பு அதன் வாசகனுக்கு என்ன விதமான உணர்வை ஏற்படுத்துமோ அதுபோன்றதொரு உணர்வை இலக்கு மொழி வாசகனுக்கு ஏற்படுத்த வேண்டும் என்கிறது என எடுத்துக்காட்டுவதும் (க. பூரணச்சந்திரன், நவீன மொழிபெயர்ப்புக் கொள்கைகள், ப. 34) அறியத் தக்கது.

**5. மொழிபெயர்ப்பாளர் நிலை:** மொழிபெயர்ப்பினைத் தொடங்குமுன் மொழிபெயர்ப்பாளர் சில முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எத்துறையைச் சார்ந்த நூலாயினும் மொழிபெயர்ப்பாளர் அந்நூலின் எல்லாப் பகுதியினையும் சிறிதும் ஐயத்திற்கு இடமின்றி நன்கு புரிந்து கொள்வதற்காகப் பன்முறை பயிலல் தேவையாகும். அவர் அந்நூலில் கொள்ளும் தெளிவுதான் பின், மொழிபெயர்ப்பில் இடம்பெறுதலின் மொழிபெயர்ப்பாளர் இதில் மிகவும் கருத்தைச் செலுத்த வேண்டியுள்ளது.[8]

மொழிபெயர்ப்பாளருக்கு இரு மொழிகளையும் பற்றிய தெளிந்த அறிவும் இலக்கியப் புலமையுடன் இலக்கணப் புலமையும் வேண்டற்பாலது. அவற்றின் மரபுகளையும் அறிந்திருத்தல் மிகவும் தேவை. விளக்கத்திற்காகச் சங்க இலக்கியங்களை எடுத்துக் கொள்ளலாம். அவற்றுள் அகப்பாடல்கள் எனில் தொல்காப்பியத் தேர்ச்சியுடன் சங்க இலக்கியப் பின்புலம் தெரிந்திருத்தல் மிகமிகத் தேவை. அதில் வரும் உள்ளுறை, இறைச்சி இவற்றைத் தெளிவாக அறிந்த ஒருவராலேயே அப்பாடல்களை மொழிபெயர்க்க இயலும்.

மொழிபெயர்க்கப்படும் மொழியிலும் அவ் உள்ளுறை, இறைச்சி ஆகியவற்றை அமைத்துக் கவிதையை உருவாக்கும் தேர்ச்சி பெற வேண்டியதாகிறது. அவை அமையும் பொழுதுதான் உண்மை மொழிபெயர்ப்பாகிறது. மிகக் குறைந்த அளவிலேயே சங்க இலக்கியம் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதற்கு இதுவே முதற் காரணமாகும்.

அவரவர் மூலத்தினைப் புரிந்து கொள்வதற்கு ஏற்பவே மொழிபெயர்ப்புகள் அமையுமாதலின், மொழிபெயர்க்கப் புகுமுன் அதனைச் சரிவர புரிந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும். இல்லாவிடில் மொழிபெயர்ப்பில் பிழைகள் நிகழ்வதற்கு வாய்ப்புண்டு. இதனைத் திருக்குறள் மொழி பெயர்ப்பினின்றும் உணர்த்தலாம்.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற' (34)

எனும் குறள், 'Let him who does virtuous deeds be of spotless mind to that extent is virtue all else is vain show' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (Tirukkural, p. 33). இங்கு, 'குற்றமற்ற மனத்தினை உடையதாயிருப்பதே அறம்' என மூலம் உணர்த்த, மொழிபெயர்ப்பாளர் அறத்தைச் செய்பவன் குற்றமற்ற மனத்தினை உடையவனாக இருத்தல் வேண்டும் என மாறுபட மொழிகிறது. இதனால் கற்பாரிடையே மூல நூலாசிரியர் காட்சிப் படுத்தப்படுவதில்லை; மொழிபெயர்ப்பாளரே முன் நிற்கின்றார். எனவே மூல நூலின் கருத்தினையே மாற்றித்தரும் குறைபாடுகளைக் களைதல் மொழிபெயர்ப்பாளருக்கு மிகவும் இன்றியமையாததாகிறது. மூலத்திற்கு எழுந்துள்ள உரைகளையும் ஊன்றிக் கற்பதின் மூலம் இக் குறைபாடுகளைத் தவிர்க்கலாம்.

மூலநூலாரின் ஏனைய நூல்களையும் கற்பது அவரின் மனநிலையை, அவரது இலக்கியத்தின் தனிச் சிறப்பைக் கூடுதலாக அறிவதற்கு உதவுகிறது. சான்றாகக் கபிலர் நற்றிணையில் பாடியுள்ள குறிஞ்சிப் பாடல்களை மொழிபெயர்க்கப் புகுமுன் அவரது ஏனைய குறிஞ்சிப் பாடல்களையும் கற்றறிவதால் அவர் 'குறிஞ்சிக்குக் கபிலர்' என அழைக்கப்படுவதன் சிறப்பினையும், அவரின் தனித்தன்மையினையும் புரிந்துகொண்டு, அவற்றை மொழிபெயர்ப்பிலும் புலப்படச் செய்தல் ஏதுவாகிறது. அத்துடன்

ஆசிரியரின் எண்ணத்தோடு ஒத்துச் செல்லவும் உதவுகிறது. அவிரோத உந்தியாரின் மொழிபெயர்ப்பாளர் அதன் முன்னுரையில்,

> "To understand Avirodha Undhiyar fully one must study the other three works of Santhalingar Viz. Kolai Maruthal, Vairaagya sathakam and Vairaagya Deepam. The four Sastras form as it were a complete manual serving as an invaluable guide for the four great conquests of Siddhis viz. love, Renunciation, knowledge and Realisation".

என்று கூறியிருப்பதை இங்கு இணைத்துப் பார்க்கலாம்.

இலக்கிய நயத்தையும், அழகையும் ஒருங்கே கொடுக்க வேண்டிய இலக்கிய மொழிபெயர்ப்பாளர்க்குக் கற்பனைத்திறனும், உட்பொருளை வெளிப்படுத்தும் ஆற்றலும் மிகுந்திருக்க வேண்டும் என்பது திறனாய்வாளர் கருத்தாக அமைவதை,

> "Often when one comes across a passage of apparent untranslatability imagination can help the translator out of the difficulty.
>
> Literature is art and art aims at beauty and the translator has the double task of conveying the message as well as the beauty.
>
> A translator in his work makes plentiful use of the interpretative skill. Indeed the first stage in translation is comprehension and interpretation of source language"

என்பதில் காணலாம். (S. Kanakaraj & J. Samuel, Anatomy of Translations, p. 77-79).

பிழையான மொழிபெயர்ப்பானது பொருட் சிதைவு, பொருள் மாற்றம், விளக்கமின்மை, தெளிவின்மை, பொருள் முரண், சூழலோடு இயைபில்லாமை முதலிய பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. எனவே, இவற்றிலிருந்து விடுபட மொழிபெயர்ப்பாளருக்கு டபிள்யூ. டபிள்யூ. பிரோவர்,

> உங்களுக்குப் புரியாத சொற்களை மொழிபெயர்க்காதீர்கள்
> ஊகம் செய்வதை எப்போதும் தவிருங்கள்
> அகராதியைப் பயன்படுத்துங்கள்

> விசேஷமான சொற்களைப் பரிசோதியுங்கள்
> விசேஷமான சொற்களைஅடிக்கோடிடுங்கள்
> அறிமுகமில்லாத சொற்களையும் ஐயத்திற்கிடமான சொற்களையும் ஆராய்ந்து பாருங்கள்
> அத்துறை வல்லுநர்களைக் கலந்தாலோசியுங்கள்
> நீங்களே ஒரு சொற்பட்டியலைத் தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள்

என வழிகாட்டுவதைப் பெ. பானுமதி எடுத்துரைக்கிறார் (வங்கமொழிப் புதினங்கள், சிறுகதைகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள் - ஒரு திறனாய்வு, ப. 473).

பிறர் மொழிபெயர்த்த அதே நூலைத் தானும் அதன் மீதுள்ள பற்றின் காரணமாக மீண்டும் மொழிபெயர்க்க விரும்பும் பொழுது முன் எழுந்துள்ள மொழிபெயர்ப்புகளையும் உற்று நோக்குதல் தேவை. அம்மொழிபெயர்ப்புகளில் உள்ள குறைபாடுகள் அல்லது முரண்பாடுகளைக் களைந்து செம்மைப்படுத்துவதற்கும், அம்மொழிபெயர்ப்பில் உள்ள சிறப்புக்கூறுகளைத் தாம் மேலும் மேன்மைப்படுத்தி மொழிவதற்கும் இதனால் ஏதுவாகிறது. ஒரே நூலைப் பலர் மொழிபெயர்த்தல் இலக்கியத்தில் பரவலாகக் காணப்படுகிறது.

மொழிபெயர்ப்பில் ஆசிரியரின் புலமை, கருத்து இவற்றில் கவனம் செலுத்தும் அதே வேளையில் அதனைச் சுவையுடனும் படைக்க வேண்டும். இலக்கிய மொழிபெயர்ப்பாளருக்கு இஃது மிகவும் வேண்டற்பாலது. அப்பொழுது தான் கற்பார் விருப்பம் கொண்டு தொடரவும் சுவைக்கவும் முடியும். மில்ட்டனின் 'Paradise Lost'ஐ மொழிபெயர்ப்பாளர்,

> விசேஷமாய் இடங்கொண்டு விசாலித்த கொலு வறையில் சுற்று முற்றும் களரிகட்டி சூரரான வீரர்கள் கத்தி கட்டிக் குதிரையேறிக் கடுமுடுக்காய் சுல்த்தான் முன் அஞ்ஞானச் சக்திகளின் அசுவப் படையெல்லாம் ........

என்று மொழிபெயர்த்துள்ளது போன்று அமைப்பின் அஃது வாசகர்களைச் சோர்வடையச் செய்யும். இது மொழிபெயர்ப்பு என்று உணரமுடியாத வகையில் மொழிநடை சிறப்புடையதாய் இருத்தல் வேண்டும். சான்றாக,

*கான் ஆள நிலமகளைக் கைவிட்டுப் போனானைக்*
*காத்துப் பின்பு*
*போனானும் ஒரு தம்பி; போனவன் தான்வரும் அவதி*
*போயிற்று என்னா*
*ஆனாத உயிர்விட என்று அமைவானும் ஒரு தம்பி;*
*அயலே நாணாது*
*யானும் இவ் அரசு ஆள்வென்? என்னே இவ் அரசாட்சி*
*இனிதே அம்மா (10172)*

என்னும் கம்பன் பாடலை,

A brother is he, who went escorting the one who, deserting
the Earth maid, went to rule over the jungle;
He is a brother, too, who stands resolved to give up his
dear life because those who went have not returned
in time;
Standing apart, like an unconcerned spectator am I to
unblushingly rule over this kingdom! Sweet indeed,
is this blooming sovereignity!

என மொழிபெயர்த்திருப்பதனைக் (S. Maharajan, Kamban, p. 75) காட்டலாம். இதுபோன்றே உமர்கய்யாம் பாடலைப் பிட்ஜெரால்டின்,

Come fill the cup and in the fire of spring
Your winter garment of Repentance fling
The bird of Time has but a little way
To flutter and the Bird is on the wing

எனும் மொழிபெயர்ப்பிலிருந்து தமிழாக்கம் செய்த கவிமணி,

*வாராய் நண்பா! வருத்தமெனும்*
*வாடைக்காலப் போர்வையினை*
*நேரா வருமிவ் வசந்த மெனும்*
*நெருப்பில் வீசி எறிவாயே*
*தேரா வாழ்வின் பறவை இனும்*
*செல்லும் தூரம் சிறிதே யாம்*
*பாராய்! பாராய்! பறவை. அதோ*
*பறக்கச் சிறகும் விரித்ததடா!*

எனக் கவினுற மொழிபெயர்த்துள்ளதையும் காட்டலாம்.

இதனையே ச.து.சு. யோகியார்,

> வாடீ என்கிண்ணம் வழியமது வார்த்திடுவாய்
> நீடொளியின் வான்வசந்த நெருப்பிசையில் உன்கவலை
> கடுக்கும் குளிருடையைக் கழற்றிஎறி! காலப்புள்
> விடுக்கும் ஒரு கணத்துள்ளே வியன் சிறகும் விரித்ததுவே

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு யோகியார் கருத்திற்கு மட்டுமின்றிச் சொற்களிலும் ஆழ்ந்த கவனம் செலுத்திக் கவிதை நடையினைச் சற்று கடுமையாக்கியுள்ளார். கவிமணி கருத்திற்கு மட்டுமே முக்கியத்துவமளித்துத் தமிழ்ப் படுத்தியுள்ளார். இத்தகைய மொழிபெயர்ப்பே கற்போர் மனத்தைக் கவருகின்றன. இலக்கிய மொழிபெயர்ப்புகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்குக் கவிமணி சிறந்த சான்று.

மூலநூலாசிரியரே சில நேரங்களில் மொழிபெயர்ப் பாசிரியராதலும் உண்டு. இச்சூழல்களில் தம் எண்ணங்களைக் கூட்டியோ குறைத்தோ மொழிபெயர்க்க வாய்ப்புண்டு. எனினும் நூலின் உயிர்நிலையில் மாற்றம் நிகழாது. மூலத்தின் முழுமையான உண்மையான உருவத்தைக் காட்டும். அடுத்தடுத்த பதிப்புகளில் ஆசிரியர் தம் கருத்துகளை விரித்தோ, மாற்றியோ, பிழைகள் இருப்பின் திருத்தியோ தருவதற்கும் வாய்ப்பு உண்டு. சாகித்திய அக்காதெமி வெளியிட்டுள்ள மு. வரதராசனாரின் இலக்கிய வரலாறு, History of Tamil Literature என்பனவற்றை இங்குக் கருதலாம்.

ஒரு ஆசிரியரின் நூல்களனைத்தையும் ஒருவரே மொழிபெயர்த்தலுண்டு. காண்டேகரின் கதைகளைக் கா.ஸ்ரீ.ஸ்ரீயும், சரத்சந்திரரின் கதைகளை ஜெயராமனும் மொழிபெயர்த்துள்ளதைச் சுட்டலாம். இந்நிலைகளில் மொழிபெயர்ப்பாசிரியர் அதிகமாக மூலநூலாசிரியரைப் பற்றி அறிய முடிவதால் மொழிபெயர்ப்பில் பொருள், கருத்து முரண்பாடுகள் எழுவது முற்றிலுமாக இல்லாவிட்டாலும் பெருமளவு குறைவதற்கு வாய்ப்புண்டு.

தமிழகத்தின் தலைசிறந்த மொழிபெயர்ப்பாளருள் ஒருவரான பிரேமா நந்தகுமார், மொழிபெயர்ப்பின் வெற்றிக்கு,

> Take up the work only if you are onthused by the text, whether for its form, or diction message. Be prepared to work very hard. There

> is no easy way out in discipline. Close to cent percent it is a constant struggle, change of phrases idioms, phrases, the red and blue pencils at work tirelessly, a never-tiring honeymoon with dictionaries, lexicons and volumes of grammar.
>
> Approach the work as a sacred task.

என அறிவுறுத்தியிருப்பதும் இணைத்துக் கருதத்தக்கது. (On Translation, p. 16).

*6. மூலநூலின் அறிமுகம்:* மொழிபெயர்ப்பாளர் மொழி பெயர்ப்பு நூலின் முன்னுரையில் மூலநூல், மொழி, அதன் ஆசிரியர் போன்ற குறிப்புகளைத் தரல் சிறப்பாகும். மற்றும் இவை பற்றிய விளக்கங்கள் தரல் மொழிபெயர்ப்பினைக் கற்பாருக்கு இவை பற்றிய எண்ணம் பெற உதவும். அவற்றின் சிறப்பு மொழிபெயர்ப்பினை மட்டுமின்றி மூலநூலினையும் கற்கத் தூண்டும். "உலகத்தில் சீன மொழியும் அரபு மொழியும் தான் சமயம் சாராத கதையிலக்கியங்களைப் படைத்த பெருமை கொண்டவை. ஆயிரத்தோர் இரவுகள் ஒரு குறிப்பிட்ட ஓர் ஆசிரியராலோ, ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள்ளோ தோன்றிய ஒரு படைப்பிலக்கியம் அன்று. அரபு நாடுகளிலிருந்து இசுலாமிய இனம் அனைத்துலக நாடுகளில் ஆட்சியாலும் சமயத்தாலும் பரவிய காலத்திலேயே கி.பி. 8ஆம் நூற்றாண்டில் அரும்பி, ஊர் பேர் அறியாத கதைவாணர்களின் வாய்மொழி இலக்கியமாக 10ஆம் நூற்றாண்டில் போதாகி, கற்பனைச் செல்வர்களால் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் மலர்ந்து மணம் பெற்று இன்று உலகமெங்கும் மணம் வீசும் பெருமையுற்றது. முதன்முதலில் பிரெஞ்சில் அந்தனிகாலன் என்பவரால் 12 புத்தகங்களாக மொழிபெயர்க்கப்பட்டது... இந்தியாவில் இந்நூல் இசுலாத்தின் ஆட்சிக் காலத்தில் அரபுக் கதைகள் என்ற பெயரில் உருதுவிலும், பின்னர் 17ஆம் நூற்றாண்டில் வங்க, இந்தி மொழிகளில் அராபிய ரஜினி, அராபிய உபன்யாசான் என்ற பெயர்களில் வெளிவந்தது. பல கதைகள் வங்கம் போன்ற மொழிகளில் குறுங் காப்பியங்களாகப் பாடப்பட்டும் உள்ளன" என்பது போன்ற அறிமுகங்கள் (சுநீத் குமார் சட்டர்ஜி, 1001 இரவுகள்-தொகுதி V, பரதன், முன்னுரை). இதனை உணர்த்தும். இது போன்றே 'ஆராரும்' தமது 'காண்டர்பரிக் கதைகள்' முன்னுரையில் அதன் மூலம் பற்றிய மிக ஆழமான, அழகான, விரிவான அறிமுகம் கொடுத்திருப்பதும் குறிப்பிடற்பாலது.

மற்றும் மூலநூலாரின் பிற நூல்களையும், அவை பற்றிய சிறப்பினையும் தருவதால் கற்பாருக்குப் பயனாகின்றது. மூல நூலில் அமைந்துள்ள அணிந்துரை, முன்னுரை போன்றவற்றையும் மொழிபெயர்த்துத் தருதல் வேண்டற்பாற்று. சு. கிருஷ்ணமூர்த்தி தம் 'கறையான்' மொழிபெயர்ப்பில் சரோஜ்பந்த்யோபாத்யாவின் முன்னுரையினையும் மொழி பெயர்த்திருப்பதன் மூலம் கற்பார் வங்க இலக்கியம் பெற்றுள்ள புதின வளர்ச்சியை அறிந்து கொள்ள முடிகிறது. சுந்தர ராமசாமி தம் செம்மீன் மொழிபெயர்ப்பில், டாக்டர் நாராயணமேனனின் முன்னுரையைத் தருகிறார். அதில் மூலநூலார் தகழி சிவசங்கரன் பிள்ளையின் இளமைப்பருவம், இலக்கியத் துறையை ஆட்கொண்ட விதம், பிற கதைகள் பற்றிய விளக்கங்கள் போன்றன உள்ளன. இவற்றால் மூலநூலார் பற்றிப் போதுமான அளவு அறிந்துகொள்ள இயலுகிறது.

'சிறந்த மொழிபெயர்ப்பாசிரியர் ஒரு பாலத்தைப் போன்றவர்' என்பர் விஸ. காண்டேகர் (யயாதி, காஸ்ரீ ஸ்ரீ, முன்னுரை). அப்பாலமாய் அமைய அவர் மேற்கொள்ளும் துயரினை வில்லியம் கூப்பர் தம் நேரிடை அநுபவத்தால் நவில்கிறார்.[9] மொழிபெயர்ப்பாளராய் இருத்தலை விட மூலநூலாராய் இருத்தல் எளிது என்பது இவற்றால் புலனாகும்.

### மொழிபெயர்ப்புச் சிக்கல்கள்

மொழி பெயர்ப்பில் மிகுந்த இடர்ப்பாடுடையது இலக்கிய மொழி பெயர்ப்பு எனில் மிகையன்று. மூலநூலின் இலக்கிய நயம் சிறிதும் விடுபடாமலும், முரண்படாமலும் அளித்தற்கு மொழி பெயர்ப்பாளர் மிகவும் துன்பப்பட நேரிடுகிறது. இதனை மேனாட்டறிஞரும் ஏற்றுக் கொள்வர்.[10] கவிதையை மொழிபெயர்க்க முடியாது என்பது கவி இரவீந்திரநாத் தாகூரின் எண்ணம் (ஆரார், டாக்டர் பாஸ்டஸ், முன்னுரை). எனவே தான் செய்யுள் இலக்கியங்கள் பெரும்பாலும் உரைநடையால் அல்லது உரைநடையும் கவிதையும் கலந்த நடையால் மொழிபெயர்க்கப் படுகின்றன.

"மொழிபெயர்ப்பு என்பது ஒரு கலை. அந்தக் கலையில் வசனத்தை மொழிபெயர்ப்பது ஓரளவுக்கு எளிதானது. கவிதையை மொழிபெயர்ப்பதோ மிகவும் சிரமம். கவிதையை மொழி பெயர்ப்பதற்கு ஒருவன் கவிஞனாகவும் இருக்க வேண்டும் என்பதோடு, மொழிபெயர்க்கும் கவிதையின் கருத்தும் உணர்வும்

உருக்குலையாத வண்ணம், மொழிபெயர்ப்புக்கு வடிவும் வலுவும் கொடுக்கும் பொறுப்பும் திறமையும் அவனுக்கிருந்தாக வேண்டும். மேலும் எதுகையும் மோனையும் தாளக்கட்டும் சமயங்களில் மூலக் கவிதையை நீட்டவோ, குறுக்கவோ தூண்டும் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தும். இவற்றுக்குத் தலை வணங்காது எடுத்துக் கொண்ட வடிவத்துக்குள்ளேயே மூலக் கவிதையின் கருத்தையும் உணர்ச்சியையும் இழுத்து மடக்கிக் கொண்டு வந்து நிலை நிறுத்துவதே மொழிபெயர்ப்பவனின் கடமையாகும்" எனும் கூற்று (ரகுநாதன், சோவியத் நாட்டுக்கவிதைகள், முன்னுரை) மொழிபெயர்ப்பின் இடர்ப்பாட்டினை விளக்கி நிற்கிறது.

பொது நிலையில் மொழிபெயர்ப்பின் நிலை இவ்வாறிருக்க, குறிப்பிட்ட சில சொற்கள் பற்றியும் இடர்ப்பாடுகள் எழுகின்றன. ஒவ்வொரு மொழிக்கும் அம்மொழிக்கென அதன் தனித்துவத்தை உணர்த்தும் சிறப்புச் சொற்களும், மரபுத் தொடர்களும், பழமொழிகளும் உண்டு. இவற்றை அவ்வாறே தரின் பொருள் புலப்படுதல் கடினம். மாற்றப்படும் மொழியின் மரபிற்கு ஏற்ப அமைப்பின் மூலத்தின் உண்மை நிலையை, அதன் சிறப்பை மாற்றும் குறைபாடு தோன்றும். இவ்விரண்டாம் நிலையை மேற்கொள்வதை அறிஞர் வரவேற்கின்றனர்.[11] பொருள் புலப்பாடு மட்டும் இவர்களின் நோக்கமாக அமைதல் இதற்குக் காரணமாகும். இவ்விரண்டினுள் ஏதேனும் ஒரு முறையைப் பின்பற்றிய பின் மொழிபெயர்ப்பாளர் முதல் முறையைக் கையாண்டிருப்பின் மாற்று மொழியின் மரபிற்கேற்ப அதனை விளக்கியும் அல்லது இரண்டாவது நிலையை மேற்கொண்டிருப்பின், மூலத்தில் அதன் சிறப்பினைத் தனித்துக் காட்டியும் அமைப்பின் பொருள் புலப்பாடு, மூலத்தின் பெருமை, மரபு அறிதல் எனும் இவை ஒருங்கே நிறைவுபெற வாய்ப்புண்டு. சான்றாக:

> உங்கள் வாழ்விற்கு நற்றொடக்கம் வேண்டுமென்று
> நீங்கள் அவாவினால் சரியான நாள் பார்த்துத்தான்
> நீங்கள் தின்பண்டங்கள் அருந்தவேண்டும். எலி நாள்
> அதற்கு மிகவும் பொருத்தமானதே (ப. 380).

என்பது ஜப்பானிய மொழியில் முரசாக்கி என்பவர் எழுதிய 'கெஞ்சி கதை' எனும் புதினத்தின் ஒரு பகுதி. இங்கு எலிநாள் என்பது தமிழருக்குப் புரியாத ஒன்று. தமிழ் மரபிற்கு ஏற்ப தருதலிலும் இடர்ப்பாடுண்டு. இதற்கு மொழிபெயர்ப்பாளர் அடிக்குறிப்பில்,

'முதலாவதாக 12 உயிரினக் குறியீடுகளிலும் முதலாவது எலியே. அத்துடன் எலி என்பதற்கான வரி வடிவம் குழந்தை என்ற பொருளுடைய சொல்லையும் குறிக்கும்' என்று விளக்கம் அளித்துள்ளார். இதனால் எலிநாள் என்பது ஜப்பானியர் களிடையே ஒரு குறிப்பிட்ட சிறப்புடையது; அதனைப் பாராட்டுவது மரபு என்பவற்றைக் கற்பார் அறிந்து கொள்கின்றனர்.

இது போன்றே ராஜாஜி தமது குறள் மொழிபெயர்ப்பில், நமது 'கேள்வி' எனும் சொல்லின் சிறப்பினை,

> Knowledge acquired or confirmed by listening to the teaching and expositions of learned men was a major division of learning in our ancient system, apart from knowledge acquired by study. This is called 'கேள்வி'. kelvi in Tamil and the phrase 'கல்வி கேள்வி' - kalvi kelvi expresses the complete accomplishment of a learned man.

என விளக்கியிருப்பது சுட்டத்தக்கது. (பக். 81-82).

மொழிபெயர்ப்பில் அடிக்குறிப்புகளைக் கையாள்வதிலும் ஒரு வரன்முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். பொருள் தெளிவுக்கு மிகத் தேவை என்றாலொழிய அடிக்குறிப்புகளைப் பயன்படுத்தக் கூடாது. அடிக்குறிப்புகள் ஆராய்ச்சிக் குறிப்புகளாக நீண்டுவிடக் கூடாது என்ற எண்ணமும் (சேதுமணி மணியன், மொழிபெயர்ப்பியல் கோட்பாடுகளும் உத்திகளும், ப. 27);

மொழிபெயர்ப்புப் பற்றி, "வேறொரு மொழியின் இலக்கண விதிகளையும், இலக்கண மரபு ஆகியனவற்றையும் அப்படியே நம் மொழியிலும் புகுத்தப் பார்ப்பது முறையாகாது. காலத்திற்கு ஏற்றபடியும் நம்முடைய மொழியின் வளர்ச்சியை நோக்கியும் சில புதிய சொற்களை ஆக்கிக் கையாள வேண்டியிருக்கலாம்" என்பதும் (தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை, முன்சுட்டியது, ப. 12) ஏற்புடைத்தே. இதன்படிப் புதிய சொற்களை உருவாக்குவதில் இடர்ப்பாடு தோன்றுகிறது. இச்சூழல்களில் புதிய சொற்களை உருவாக்கிவிட்டுத் தெளிவிற்காக அதனை அருகில் விளக்கியும் சொல்லலாம் அல்லது அதற்கு இணையான ஒரு பொது மொழிச் சொல்லினையும் அடைப்புக்குறியில் தருவதால் புரிந்து கொள்ள முடிகிறது. கார்பன் பேப்பர் என்பது ஆங்கில மொழி. அதனைத் தமிழ்ப்படுத்தும் பொழுது 'மைத்தாள்' என்ற சொல்லினை

உருவாக்குகிறார் மொழிபெயர்ப்பாசிரியர் (தி.ப. சித்தலிங்கையா, கன்னடக் கட்டுரைத்திரட்டு, ப. 115). அவ்வாங்கிலச் சொல்லையும் அப்படியே அடைப்புக்குறியுள் எழுதிவிடுவதால் வாசகரும் இடர்ப்பாடின்றிப் புரிந்துகொள்ள முடிகிறது. இத்தகைய சொல்லாக்கங்கள் தொடக்கக் காலத்தில் பொருளைப் புரிந்து கொள்வதில் இடர் அளித்தாலும் பின் பழக்கத்தின் காரணமாக அவ்விடர் நீங்குகின்றது. மொழியும் வளர்ச்சி பெறுகிறது. மொழிபெயர்ப்பின்போது அருஞ்சொற் பொருள்களைக் கையாண்டால், அவற்றிற்குப் பொருள் தருவதன் மூலம் கருத்துப் புலனாகின்றது (தேவனாம் பிரியன் - தேவர்களின் அன்பிற்கு உரியவன் - மேற்படி, ப. 82).

இலக்கியம் மட்டுமின்றி ஏனைய அறிவுத் துறைகளிலும் இவை மிகுதியாக வேண்டப்படுகின்றன. இத்துறை மொழி பெயர்ப்பாளர்களுக்கு அவரவர் மொழியில் துறைச்சொல்லாக்கும் திறனும் பெற்றிருத்தல் இன்றியமையாதது என்பதும் இதனால் பெறப்படுகிறது. பிறமொழிகளை ஆழமாகக் கற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளுள் மொழிபெயர்ப்புப் பணி முதன்மையானது எனும் பிரேமா நந்தகுமார் (கலந்துரை) கருத்து இவண் இணைத்துப் பார்க்கத்தக்கது.

மொழிபெயர்ப்பாளர் மூலநூலின் சுருக்கத்தினின்றும் மொழிபெயர்ப்பினை உருவாக்கும்போது, ஐயப்பாடுகளோ, அன்றித் தெளிவின்மையோ ஏற்படின் அவற்றை மூலநூலுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதன் மூலம் தவிர்க்க இயலும். சுருக்கமான மொழிபெயர்ப்பே தரினும் அதனையும் மூலத்தினின்றே நேரிடையாக மொழிமாற்றம் செய்யின் இவ்விடர்ப்பாடுகள் எழுவதைத் தவிர்க்கலாம்.

### மொழிபெயர்ப்பின் பயன்

மொழிபெயர்ப்பினால் கிடைக்கும் பயன்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. மொழி வளம் பெறுகிறது. புதிய புதிய சொற்களும், புதிய புதிய நூல்களும் தோன்றி இவ்வளப்பத்தை உண்டாக்குகின்றன. இலக்கியத் துறையாயின் மொழிபெயர்ப்புகள் மட்டுமன்றித் தழுவல்களும் புதிய வடிவங்களாயின் அவற்றைப் பின்பற்றி வேறு பல முதனூல்களும் எழுதல் குறிப்பிடத்தக்கது. தி. வேங்கட

கிருஷ்ணய்யங்காரின் இராகவ காவியம், வடமொழி, தமிழ், இந்தி ஆகிய மொழிகளில் உள்ள இராமாயணங்களைக் கொண்டுப் புதிதாக உருவாக்கப்பட்டதைச் சான்றாக்கலாம்.

2. இலக்கிய மொழிபெயர்ப்புகளால் ஒப்பிலக்கிய ஆய்வு சிறப்புப் பெறுகிறது.

3. ஒரு மொழியினர் அல்லது நாட்டினர் அல்லது இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம், போன்றவற்றை எளிதில் உணரலாம். ஒரு நாட்டின் சிறப்புகளை (இடம், பொருள்,..) அறிதற்கும் ஏதுவாகிறது.

4. மூலமொழியின் சிறப்பினையும், மூலநூலாசிரியர், மூலம் இவற்றின் சிறப்பினையும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இதனால் பிறமொழி இலக்கிய அறிவு சிறப்புறுகிறது.

5. அறிவியல், மருத்துவம் போன்றவற்றின் மொழி பெயர்ப்புகளால் அம்மொழியினர் அடைந்துள்ள முன்னேற்றத்தை உணரவும், அம்முன்னேற்றத்தினை மொழி பெயர்ப்பின் மூலம் பயன்படுத்திக் கொள்ளவும் துணை நிற்கின்றது.

6. கலைகளின் மொழிபெயர்ப்பு பண்பாடு, நாகரிகம் இவற்றினை உணர்தற்கும், பண்பாட்டுக் கலப்பு நிகழ்வதற்கும் வாய்ப்பாகிறது. பழகிய கலைகளிடையே புதுமையைத் தோற்றுவிக்கவும் வளர்ச்சியடையச் செய்யவும் இம்மொழிபெயர்ப்புகள் உதவுகின்றன.

7. வரலாறு, பொருளாதாரம், புவியியல் போன்றன அவ்வந் நாட்டின் உண்மையை உணர வழியாகின்றன. வழிகாட்டுதலாகவும் அமைகின்றன.

8. பிறசமயம் பற்றிய அறிவிற்குச் சமய நூல்களின் மொழிபெயர்ப்புகள் உதவுகின்றன.

9. எத்துறையைச் சார்ந்தவராயினும் உலகப்புகழ் பெற்றவரையும் அவரது சாதனைகளையும் உணர்வதற்கு மொழிபெயர்ப்புகள் சிறந்த கருவியாகும்.

செருமானிய புலவர் கதே, 'அன்றாட அறிவரங்கில் மொழிபெயர்ப்புப் பணி பொருள் பொதிந்த பயன் கெழுமிய செயலாகவே மலர்ந்து வருகிறது. உலகியல் நடைமுறையில் இன்றியமையாத, பயனார்ந்த இடம் பெற்றுள்ள மொழிபெயர்ப்புப்

பற்றி மொழி பேசும் மாந்தர் அனைவரும் பேரார்வம் காட்டுதல் வேண்டும்' என்று கூறுவதும் (மொழிபெயர்ப்பியல், ப. iv) கூறத்தக்கது.

## மொழிபெயர்ப்பு மரபு

நேர் மொழிபெயர்ப்பு, சுருக்கம், மொழிபெயர்ப்பாளர் இடையீடு, தழுவல் எனும் நான்கு நிலைகளில் மொழிபெயர்ப்பு மரபு அமைகிறது. **நேர் மொழிபெயர்ப்பு** என்பது மூலத்தினின்றும் சிறிதும் மாற்றம் கொள்ளாது அதனை அவ்வாறே மொழி மாற்றம் செய்வதாம். இங்கு மொழிபெயர்ப்பு தவிர மொழிபெயர்ப்பாளருக்கு வேறு வேலை இல்லை. இந்நிலை மொழிபெயர்ப்பு இருவகையாகச் செய்யுள் இலக்கியங்களில் அமைகிறது. செய்யுள் வடிவத்தினைச் செய்யுள் வடிவத்திலேயே தரல் ஒன்று. அதனை உரைநடை வடிவத்தில் தருதல் மற்றொன்று. உரைநடையில் தருவதினால் செய்யுள் மொழிபெயர்ப்பில் தோன்றும் இடர்ப்பாடுகள் சில தோன்றுவதில்லை. இவற்றுள்ளும் சில உரைநடையும், ஆங்காங்கே கவிதை வடிவமும் பெற்றமைதல் உண்டு. க.நா. சுப்பிரமணியத்தின் சிலப்பதிகார மொழி பெயர்ப்பினைச் சான்றாகச் சுட்டலாம். சொல்லுக்குச் சொல்லாக மொழிபெயர்த்தலும் [Sundarakandam (Sanskrit - Tamil), P.S. Krishnaswami Iyer] இதனுள் அருகிக் காணப்படுகிறது. இதனை அத்துணைச் சிறப்பாகக் கொள்ள முடியாது.

சிறந்த நூலை அறிமுகப்படுத்துதல் எனும் நிலையில் **சுருக்கங்கள்** அமைகின்றன. மூலநூலின் முழுச் சுவையையும் இதனால் அளிக்க இயலாவிடினும் அந்நூலினைப் பற்றி அறிந்து கொண்டோம் எனும் உணர்வினைப் பெறமுடியும். எனவே மூலத்தின் சிறந்த பகுதிகள், தேவையான பகுதிகள் அனைத்தும் விடுபடாதவாறு பார்த்துக் கொள்ளுதல் மொழிபெயர்ப்பாளரின் கடமையாகிறது. இலக்கியங்களின் சுருக்க மொழிபெயர்ப்புகள், கவிதை அல்லது உரைநடை அல்லது இரண்டும் இணைந்த நிலை என அமைதலும் உண்டு. முழுமையாக நூலினைப் படிக்க இயலவில்லையே என்று கற்பாரை எண்ணத் தூண்டும் வகையில் அமைத்தல் இத்தகைய நூல்களில் மொழிபெயர்ப்பாளர் பெறும் வெற்றியாகும். இவ்விரு மரபுகளையும் எல்லாத் துறைகளிலும் காணலாம். பின் வருவன இலக்கியங்களில் மட்டுமே அமைகின்றன.

**மொழிபெயர்ப்பாளர் இடையீடு** என்பது மூலத்தினை மொழிபெயர்ப்பதில் ஆங்காங்கே மொழிபெயர்ப்பாளர் செய்யும்

சில மாற்றங்களாகும். இதுவும் இருவகையாக அமைகிறது. ஒன்று, மூலத்தின் கருத்தினை மட்டும் தான் வாங்கிக் கொண்டு அதில் ஏதும் மாற்றம் செய்யாது அதில் இடம்பெறும் பாத்திரங்கள், நிகழ்ச்சி நடைபெறும் இடங்கள் போன்றவற்றினை மொழி பெயர்க்கப்படும் மொழிக்கு ஏற்ப மாற்றித் தருதலாகும். கற்பாருக்கு இது மூலமே, மொழிபெயர்ப்பு அன்று எனும் உணர்வினைத் தருதலும், மேலும் எளிமையாக்கித் தருதல் எனும் எண்ணமும் இவற்றின் நோக்கங்களாகும்.

மொழிபெயர்ப்பாளர் ஆங்காங்கே மூலநூலினைத் தம் விருப்பம்போல் மாற்றிக் கொள்ளுதல் இரண்டாவது வகையாகும். மூலநூலினை அறிமுகப்படுத்துதல் மட்டுமின்றித் தம் புலமையையும் வெளிப்படுத்த வேண்டும் எனும் மொழிப்பெயர்ப்பாளர் உணர்வே இத்தகு நூல்களின் எழுச்சிக்குக் காரணமாகும். இரா. ஏகாம்பரநாதன் மொழிபெயர்த்த 'புயல்' நாடகத்தினை இதற்கு எடுத்துக் காட்டாக்கலாம். இவற்றால் மொழிபெயர்ப்பின் நோக்கங்கள் அனைத்தும் நிறைவுறுவதில்லை.

முற்றிலுமாக மூலத்தினின்றும் மாறுபட்டு அமைவன தழுவல்களாகும். மூலநூலின் கருவினை (Plot) மட்டும் அதனின்றும் பெற்றுக்கொண்டு ஏனைய நிகழ்வுகள், கதைமாந்தர், நிகழ்ச்சி மாற்றங்கள் போன்றன அனைத்தினையும் தம் விருப்பம்போல் படைத்துக் கொள்ளுதல் இதன்பாற்படும். இங்கு ஏறக்குறைய மொழிபெயர்ப்பாளர் மூலநூலாசிரியராகவே செயல்படுகிறார் எனலாம். எனவே இவ்வாறு எழும் படைப்புகளை மொழிபெயர்ப்பின் ஒரு நிலையாகக் கொள்ளல் பொருந்தாது எனலாம்.

ஒரு கட்டுரையைக் கவிதையாக மொழிபெயர்த்தாலும் ஒரு கவிதையை, செய்யுளை உரைநடையில் மொழிபெயர்த்தாலும் அதுவும் தழுவலே என்பாரும் உளர் (வீ. சந்திரன், மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும், ப. 89).

சிறுபான்மையாக, பக்தியிலக்கியங்கள் கொள்ளும் எழுத்துப் பெயர்ப்புகளும் இங்குச் சுட்டத்தக்கன. நூலின் கருத்தினையோ நயத்தினையோ இதில் மொழிபெயர்க்காது வெறுமனே வரிவடிவில் மட்டுமே மாற்றம் பெறுவன இத்தகையன. இம்முறையினால் மூலமொழியினைப் படிக்கக் கூடுமே யன்றி அதன் நயம் துலங்குவதில்லை. வழிபாட்டிற்கு என மேற்கொள்ளப்படும் நூல்கள்

இவ்வாறு அமைகின்றன. "இன்றும் ஆந்திர நாட்டுக்குள் வசிக்கும் ஆந்திர வைணவ குடும்பங்களுக்குச் சென்றால், தெலுங்கு லிபியில் தமிழ் நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தைப் பக்தி சிரத்தையோடு ஓதி வருவதைப் பார்க்கலாம். இது பல நூற்றாண்டுகளாக இருந்து வரும் சம்பிரதாயம்" எனும் கூற்று (எஸ்.வி.எஸ்., வக்கீல் சுமித்ரா, ப. 3) நம் ஆழ்வார் பாடல்கள் பெற்றுள்ள சிறப்பை உணர்த்தும்.

அறிவியல், தொழில்நுட்ப நூல்களின் மொழிபெயர்ப்புகளில் ஒலிபெயர்ப்பும் அதிகம் இடம்பெறும் என்பர் (வீ. சந்திரன், மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும், ப. 112).

மொழிபெயர்க்கும் மரபில் மற்றொரு நிலை பரவலாகக் காணப்படுகிறது. மூலமொழி ஒன்றாய் இருக்க அதன் மொழிபெயர்ப்பிலிருந்து மற்றொரு மொழிபெயர்ப்புத் தோன்றுதலை இது குறிக்கிறது. ஆங்கிலமொழி இத்தகைய ஊடுமொழியாக மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. சிறுபான்மை பிறமொழிகள் பயன்படுகின்றன. உலக மொழியாக ஆங்கிலம் விளங்குதலின் இச்சிறப்பினை அது பெறுகிறது. மூலமொழியறிவு இல்லாவிடினும் அதன் சிறப்பு, நூலைப் பிறமொழி வாயிலாகவேனும் தரவேண்டும் என்ற உணர்வைத் தூண்டுவதின் அடிப்படையில் எழும் இத்தகைய மொழி பெயர்ப்புகளும் வரவேற்கப்பாலதே. ஒரே நூலுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மொழிபெயர்ப்புகள் இருக்கும்பொழுது எதனைப் பின்பற்றுவது எனும் ஐயப்பாடும் எழலாம். இந்நிலையில் மொழி பெயர்ப்பாளரின் சிறப்புக் குறித்து அவற்றுள் ஒன்றைத் தேர்ந்து கொள்வது இம் மொழிபெயர்ப்பாளரின் கடமையாகிறது. அப்பெயர்ப்பாளர்களிடையே வேறுபாடு களிருப்பின் மூலமொழியறிவைப் பெற்றுத் தான் ஒரு முடிவுக்கு வர வேண்டியதாகிறது.

எந்த அளவிற்குப் பிறமொழிபெயர்ப்புகளை நம்புவது என்பதும், ஒரு மொழிபெயர்ப்பினின்றும் எழும் பிற மொழிபெயர்ப்பு எந்த அளவிற்கு மூலத்தினைப் பிரதிபலிப்பதில் வெற்றி கொள்ளும் என்பதும் வினாவிற்குரியதே. ஆயின்வேறு வழி இல்லை. இம்முறையின் மூலமே மொழிபெயர்ப்பினைக் கொணர முடியும் எனுங்கால் இவற்றை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. அறிவுத் துறை சார்ந்த நூல்களில் இது தவிர்க்க இயலாததாகிறது. இலக்கியங்களைப் பொறுத்தவரையில் நேரிடையாக மூலத்திலிருந்து மொழிபெயர்த்தலே சிறப்பு. அப்பொழுதுதான் மூல ஆசிரியரின்

நோக்கம், புலமை முதலானவற்றை மொழி பெயர்ப்பில் இயன்ற வரையில் கொணர இயலும். இதனால் தாம் பின்பற்றிய மொழிபெயர்ப்பாசிரியர் புரிந்த பிழையினின்றும் விடுபடவும் இயலும்.

இன்று உலகின் பல்வேறு மொழிகளிலும் காணும் சிறப்புச் செய்திகளை ஏதேனும் ஒரு பொதுநிலையின் கீழ்த் தொகுத்து ஒரு மொழிப்படுத்தித் தரலும் பரவலாகக் காணப்படுவதைச் சரோஜினி சங்கர் தொகுத்துள்ள, 'அதிசய செய்திகள்', லியோ இராமலிங்கத்தின், 'உலக நாடுகளைப் பற்றிய சுவையான செய்திகள்', சீதாலட்சுமி தொகுத்துள்ள 'சிந்தனைக் களஞ்சியம் - உலகப் பேரறிஞர்களின் பொன் மொழிகள்' போன்ற நூல்களால் அறியலாம்.

### உடனடி மொழிபெயர்ப்பு

இதுகாறும் கண்டன நூலாக்கம் பெற்ற மூலங்களின் மொழிபெயர்ப்புகளாம். ஒருவர் பேச, உடனடியாக மற்றவர் அதனைக் கேட்போர் அறிந்த மொழியில் மொழிபெயர்ப்பது இங்கு நினைக்கப்படுகிறது. அரசியல், இலக்கியம், பண்பாடு எனப் பல்வேறு மேடைகளில் பிறமொழியினர் நிகழ்த்தும் சொற்பொழிவுகளிலும்; முக்கியத் தலைவர்கள் சிலர் தங்களுக்குள் ஒரு பொதுமொழியின்றிக் கலந்துரையாடல் நிகழ்த்தும்பொழுதும் இவ்வுடனடி மொழிபெயர்ப்பு நிகழ்கிறது. அவற்றைக் கேட்போர் உடனுக்குடன் அறிந்து கொள்ள, புரிந்து கொள்ள, அவர்கள் அறிந்த மொழியில், பேச்சாளர் கூற்றை மொழிபெயர்த்தல் இன்றியமையாததாகிறது. ஒருவர் பேச, மற்றொருவர் உடனுக்குடன் மொழிபெயர்ப்பதனால் இதனை உடனடி மொழிபெயர்ப்பு எனலாம்.

சிந்திப்பதற்கு நேரமின்றி மிக விரைவாக மொழிபெயர்க்க வேண்டுதலினால் இவ்வகையில் மொழிபெயர்ப்பாளர் இரு மொழிகளிலும் மிகத் திறமையானவராக இருத்தல் (தாய்மொழி போன்று) தேவை. பெரும்பாலும் இங்கு மூலவரின் மொழியினைக் கூட்டியோ, குறைத்தோ, மாற்றியோ மொழிதற்கு வாய்ப்பில்லை. மூலவரின் கருத்தினின்றும் மொழிபெயர்ப்பாளர் மாறுபடினும் அது மொழிபெயர்ப்பளரின் அறியாமையைத்தான் உணர்த்தும். ஒருவர் கருத்தை மற்றொருவர் தெரிந்துகொள்ள வேண்டும்; அதற்கு இடையிலுள்ள மொழிபெயர்ப்பாளர், மொழிபெயர்த்து உதவ வேண்டும் என்பதுதான் இங்கு நோக்கமே தவிர அதனைத் தன்

விருப்பிற்கு மொழியும் உரிமை மொழிபெயர்ப்பாளருக்கு இல்லை. பொது மேடைகளில் பொது மக்களைக் கவர, உரையினை மேலும் சுவையுடையதாக்க, மொழிபெயர்ப்பாளர் தம் மொழியாகவே மூலவரின் கூற்றை விமரிசனம் செய்யலாம். அஃதின்றி மூலவரின் மொழியிடையே தம் கூற்றைக் கலத்தல் இயலாதாம்.

இன்று ஒருவரைப் பற்றி மற்றவர் அறிந்துகொள்ளும் விருப்பம் எல்லாத் துறைகளிலும் காணப்படுதலானும், பல மொழியினரும் தம்முள் இணைந்து செயல்பட விரும்புவதாலும் இவ்வகை மொழிபெயர்ப்புகள் என்றைக்கும் மிகவும் தேவையானதொன்றாக அமைகின்றன.

முடிவுரை

மேற்கண்டவை அனைத்தினையும் ஒருங்கிணைத்து நோக்குங்கால் கீழ்க்கண்டன மொழிபெயர்ப்பு இயல்புகளாகப் பெறப்படுகின்றன.

1. பயன்பாடு கருதி மொழிபெயர்ப்பு எழுகிறது.
2. எளிமை மற்றும் தெளிவு மிகத் தேவை.
3. பொருள்/கருத்து வேறுபாடு அறவே நீங்குதல் வேண்டும்.
4. பொருள் புலப்பாட்டிற்காக மொழிபெயர்ப்பாசிரியர் தேவையான விளக்கங்களைத் தரலாம்.
5. பிறமொழிக் கலப்பினை இயன்றவரைத் தவிர்த்தல் வேண்டற்பாலது.
6. மொழிபெயர்ப்பு, மூலத்தின் வடிவில்தான் இருக்க வேண்டும் என்பது இல்லை. கருத்துணர்த்தல் தான் முக்கியமே தவிர வடிவம் (கவிதை, நாடகம்,_) அத்துணை முக்கியமன்று.
7. மொழிபெயர்ப்பில் இடம்பெறும் பெயர்களை மொழியாக்க நிலையிலும் மேற்கொள்ளலாம்.
8. மொழிபெயர்ப்பாளருக்கு மூலமொழி மொழிபெயர்க்கப் படும் மொழி எனும் இரண்டிலும் நல்ல புலமை தேவை.

இவ்வடிப்படையில் எழும் மொழிபெயர்ப்புகள் சிறந்தனவாகப் பாராட்டப்படுகின்றன.

அடிக்குறிப்புகள்

1. a) Normally, it is universally accepted that any translation worthy of the name must reproduce the full sense of the original, omitting nothing and adding nothing. If it does either of these things, then it is no longer a translation, but moves into the spheres of the summary, precis, adaptation, version, abstract or arrangement.

   lan. F. Finlay; Translating; Teach Yourself Books; London; led. 1971; p. 4.

   b) A translation in other words, involves an encounter of linguistics and literary norms and conventions, a confuntation of linguistic and literary systems.

   Anton Popovic; The concept 'Shift of Translation' in translation Analysis - The Nature of Translation; Mouton - The Hague; Paris' 1970; p.79.

   c) Translation may be defined as follows: The replacement of textual material in one language (Source Language) by equivalent textual material in another language (Target Language).

   J.C. Catford: A Linguistic Theory of Translation; p. 20.

2. மொழிபெயர்ப்பு எனப்படுவது, ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்குச் சொல்லுக்குச் சொல்லாகப் பெயர்த்து அடுக்கி வைப்பது அன்று; வாக்கியங்களிலுள்ள சொற்களுக்கு மற்ற மொழியிலிருந்து நேரான சொற்களைப் பெய்து வாக்கியங்களாக்கி அமைத்துவிடுவதுமன்று. உண்மையில் பெயர்த்து எழுதப்பட வேண்டியது பொருளேயாகும். எடுத்துக்கொண்ட பொருளின் கருத்தும் நுட்பமும் நயமும் தோன்ற ஏற்றவாறு கூட்டியும் குறைத்தும், சுருக்கியும் விரித்தும் பெயர்த்து அமைப்பதே மொழிபெயர்ப்பாகும்

   தென்புலோலியூர், மு. கணபதிப்பிள்ளை; மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும்; அருள் நிலையம்; சென்னை; மு.ப. 1967; ப. 11.

3. இயன்றவரை முதனூலாசிரியரின் சம்பாஷணைகளையும், சுலோகக் கருத்துகளையும் அப்படி அப்படியே அந்தந்த

இடங்களில் அமைத்திருக்கிறோம். பொருத்தமான பாட்டுக்களும் சேர்த்திருக்கிறோம். நாடகம் தாமதமின்றித் தொடர்ந்து செல்ல ஆங்காங்குக் காட்சி அமைப்புகளை முதனூலாசிரியர் அமைத்துள்ள முடிபிலிருந்து இன்றியமையாத இடங்களில் கொஞ்சம் மாற்றியும் புதிதாகச் சேர்க்க வேண்டிய இடங்களில் சிறிதளவு சேர்த்தும் இன்றைய அரங்கிற்கு ஏற்றபடி அமைத்திருக்கிறோம்.

வைத்தியநாதன் + ஹநுமந்தராவ்; இன்பப் புரட்சி; முகவுரை.

4. ஆக்கூர் அனந்தாச்சாரி; பிரேம்சந்த் சிறுகதைகள்; முகவுரை.

அ) ஒவ்வொரு நாட்டவரும் தங்கள் தங்கள் நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கு ஏற்றவாறு, மேதை ஈசாப்பின் கதைகளை அவற்றின் கருப்பொருளை உள்ளீடாகக் கொண்டு, விரிவுபடுத்தி எழுதியிருக்கிறார்கள். இந்தத் தொகுப்பிலுள்ள கதைகள் முழுவதையும் ஒவ்வொரு தமிழ்மகனும் ஒவ்வொரு தமிழ்மகளும் படிக்க வேண்டும் என்பது எனது அவா. படித்தால் அவர்கள் அதனால் பெரும்பயன் அடைவார்கள் என்பது என் கருத்து. அறிஞர்களாக, அன்பர்களாக, உற்ற நண்பர்களாக, ஒற்றுமையுடையவர்களாக, யோக்கியமானவர் களாக, முன்னெச்சரிக்கை உள்ளவர்களாக வாழ, மேதை ஈசாப் சொன்ன கதைகள் வாசகர்களுக்கு வழிகாட்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஆ) It is my earnest desire and hope that these books in this series would not only be helpful for imparting sound knowledge of Tamil but also help to a certain extent to acquire sound knowledge of the Learned of Saivism by the grace of Lord Siva.

N.C. Naidoo; Selections from the Thevaram of Sundaramurthy Swamigal by K.M. Venkataramaiah; Acknowledgement.

5. a) Kulapati; Tiruvachakam - The Hindu Testament of Love by Ratna Navaratnam; Preface.

b) பாலகிருஷ்ண கோல்கர்; அக்னிநதி - சௌரி; முன்னுரை.

6. The aim of a translation is to transfer certain intellectual and aesthetic values from one language to another.

Anton Popovic; Do; p. 78.

7. As for as legal translations are concerned, the matter and form are equally important and the translation should convey the full meaning and form of the original carrying out the interesting but difficult objective of precision, clearness logic and grace..... We have to invert the syntax of the original, without disturbing the original emphasis in the text.

   A. Chidambaram; Aspects of Translation of Laws into Indian languages - Proceedings of the fifth International Conference-Seminar of Tamil Studies - Vol. 2; International Association of Tamil Research; Madras; Sep. 1981; pp. 15-24.

8. The first golden rule by no means always observed is to read the whole of the original text before beginning to translate one word of it. There are several good reasons for this advise. First of all it will enable you to gain a general impression of the text its subject matter, depth, linguistic and subject matter difficulties, style and the like.

   Ian. F. Finlay; Do; P. 93.

9. It cost me all the morning yesterday and all the evening to translate a single simile to my mind. The transitions from one member of the subject to another though easy and natural in the Greek, turn out often so intolerably awkward in an English version that almost endless labour and no little address are requisites to give them grace and elegance.

   The Ayodhya Canto of the Ramayana; C. Rajagopalachari; P. 12.

10. As Lloyd Alexander says: Translating Poetry is as risky as playing music. Like the performer the translator may gain his own special sense of inner noices and structures, but the rewards of insights are no protection against the hazards of execution Essence; Poetic or musical can often be elusive. Passion and Vision of the Original can be at best be suggested seldom probably duplicated. I will be glad if readers feel they are guided to the richness of the Originals.

    Dr. Krishna Srinivas; Tamil Poets.

11. தமிழர்களுடைய அனுபவ அறிவிற்கு எட்டாத ஆங்கில உவமைப் பொருள்களை எவ்வாறு தமிழ்ப்படுத்துவது என்பது ஒரு முக்கிய பிரச்சினை. மூலத்தின் உள்ளுணர்ச்சியைக் காட்டவல்ல, ஆனால் தமிழகத்தில் அடிபடுகின்ற ஒரு பொருளைப் (Flakes - பிச்சிப்பூ) பதில் உவமையாகச் சொல்லலாம். இந்தப் பிரச்சினையை இதைக் காட்டிலும் சிறந்த முறையில் சமாளிக்க முடியும் என்று தோன்றவில்லை. மொழியின் பண்பிற்குத் தக்கபடி மொழி பெயர்க்கவில்லை என்றால் பொருளற்ற அல்லது பொருள் புரியாத வேதனையே மிஞ்சும்.

எஸ். மகராஜன்; மேற்படி; ப. 99.

******

# தமிழ் மொழிபெயர்ப்பு வரலாறு

மொழிபெயர்ப்பின் பயனும் தேவையும் தெளிவாக உணரப்பட்டுள்ள இந்நாட்களில் பலதுறைகளிலும் மொழிபெயர்ப்புகள் பெருகி வருகின்றன. ஒவ்வொரு நாடும் மொழியும் மொழிபெயர்ப்புகளுக்கு மிகுந்த சிறப்பளிக்கின்றன. உலகின் பழமை வாய்ந்த ஐந்து மொழிகளுள் (கிரேக்கம், எபிரேயம், லத்தீன், சமஸ்கிருதம், தமிழ்) ஒன்றாக, இன்றும் உயிருடன் வளர்ந்து கொண்டிருக்கும் மொழியாக விளங்கும் தமிழ் மொழியின் மொழிபெயர்ப்பு வரலாறும் மிக்க பழமை வாய்ந்தது. தொல்காப்பியர் காலத்திலேயே மொழிபெயர்ப்புச் சிந்தனைகள் தோன்றிவிட்டன என்பது பெருமைக்குரியது. நீண்ட வரலாறுடைய இம்மொழிபெயர்ப்பு வரலாற்றினை இரு நெறிகளில் அணுகலாம். ஒன்று, **தமிழ் பெற்ற மொழிபெயர்ப்புகளின் வரலாறு**, மற்றொன்று, **தமிழ்தந்த மொழிபெயர்ப்புகளின் வரலாறு**. முன்னது காலப் பழமையும், பெயர்ப்புத் தொகை மிகுதியும் உடையது. இக்கட்டுரையில் விரித்துரைக்கப்படுகிறது. பின்னது "உலகமொழிகளில் தமிழ்' எனத் தனிக்கட்டுரையாக அதன் பெருமை நோக்கி அடுத்துச் சிறப்பிக்கப்படுகிறது.*

## தமிழ்பெற்ற மொழிபெயர்ப்புகளின் வரலாறு

எதன் ஒரு தோற்றமும் நினைத்த பொழுதே உடனடியாக மலர்ந்து விடுவதில்லை. அதற்குரிய சிறந்த விதையும் தேவையான சூழலும் காலமும் இணையும் பொழுதுதான் முளைவிடத் தொடங்குகின்றது. ஒரு விதை மீண்டும் கனியாவதற்குப் பல படி நிலைகளைக் கடப்பது போல மொழிபெயர்ப்பின் தோற்றத்திலும், முழுமையான வடிவிலும் பல படிநிலைகளைக் காண்கிறோம். இந்நிலை அனைத்து மொழிகளுக்கும் பொதுவானதே.

முழுமை மொழிபெயர்ப்பின் முதற்படி நிலையாக, பிற மொழிச் சொற்கள் உட்புகுதலைச் சுட்டலாம். இவை எழுத்துப் பெயர்ப்பாக (Transliteration) ஒலி மாற்றம் பெற்றும், பெறாமலும்

---

1. இவ்விரு கட்டுரைத் தரவுகள் 'Bibliography on Translations' - S.Sivakami நூலை அடிப்படையாகக் கொண்டன.

புகுந்த மொழியுள் இணைகின்றன. தமிழில் இன்று கிடைப்பனவற்றுள் தலை நூலான தொல்காப்பியத்துள் காணப்படும் சூத்திரம், காந்தருவம், உத்தி, வைசியன், ஆதி முதலான வட சொற்களை இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

இங்கு, "தமிழர்கள் துரானியர்களால் வென்றடக்கப் பட்டபோது அத்துரானிய பாஷைச் சொற்களிற் சில தமிழ்ப் பாஷையின் கண்ணே புகுந்திருத்தலும் இயல்பே. இனித் துரானியரை வடக்கிருந்து போந்த ஆரியர் வென்று துரத்தலும் அவர்கள் தெற்கே வந்து தமிழர்களுடன் கலப்பாராயினர். அப்பொழுதுஞ் சில துரானிய பாஷைச் சொற்கள் தமிழ்மொழியின் கண்ணே இடம் பெற்றிருத்தல் வேண்டும். எனவே தமிழ்ப்பாஷையின் கண் முதன்முதல் கலக்கப் புகுந்தது துரானிய பாஷையே" எனும் பரிதிமாற் கலைஞர் கருத்தும் (தமிழ்மொழியின் வரலாறு, ப. 4) எண்ணற்பாலது.

அடுத்தபடியாக இவ்வாறு உட்புகும் சொற்களுள் சில மொழிபெயர்க்கப்படுதலைச் சுட்டலாம். காலத் தொன்மை காரணமாகத் தொல்காப்பியத்துள் இங்ஙனம் மொழி பெயர்க்கப்பட்ட சொற்களையறிய இயலவில்லை. தொடரும் சங்க கால இலக்கியத்துள் இதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. பஞ்சபாண்டவரை 'ஐவர்' என்றும் கௌரவர்களை நூற்றுவர் என்றும் அவரது தந்தையாகிய திருதராட்டினனை, 'வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர் பெற்ற முகத்தவன் என்றும் (கலி : 25:3) கண்ணனைக் கொல்ல கம்சன் ஏவிய அரக்கனாகிய கேசியைக் 'கூந்தற் குதிரை' என்றும் (கலி : 103:53) கூந்தல் பெயரொடு கூந்தல் என்றும் (பரி: 3) மொழிபெயர்த்துள்ளனர்.

இங்ஙனம் சொற்கள் பிற மொழிகளில் ஊடுருவும் பொழுது கதைகளும், கருத்துகளும் வழக்கில் கலத்தல் இயல்பாகும். இவ்வாறு வழக்கில் கலப்பன அவ்வக்கால இலக்கியங்களிலும் ஏற்றம் பெறுகின்றன. சொற்களின் வழி மயிரிழையாக உட்புகும் பிறமொழிக் கதைக்குறிப்புகள், கதைகள், கருத்துகள் வழி விரிவடைந்து மொழிபெயர்ப்பாக நூல்கள் மலர்தற்கு வழிவகுக்கின்றன. சங்கஇலக்கியத்துள் காணப்படும் இராமாயண, பாரதக் கதைக்குறிப்புகள் இவண் எண்ணத்தக்கன.

சான்றாக,

கடுந்தெறல் இராமனுடன் புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை

நிலம்சேர் மதர்அணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப் பொலிந்தாங்கு
அறாஅ அருநகை இனிது பெற்றிடுமே *(புறம் 378:18-22)*

என வரும் **இராமாயணக் குறிப்பும்**,

அஞ்சீர் அசையியல் கூந்தல் கைநீட்டியான்
நெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவண்தன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம் *(கலி 101:18-20)*

கா எரியூட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருள்
பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்
*(சிறுபாண்: 238-241)*

என அமையும் **பாரதக் குறிப்புகளும்** நோக்கற்பாலன. வடமொழி மூலமான இராமாயணமும், பாரதமும் அன்றே வழக்கில் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தமையை இவை உணர்த்துகின்றன. சற்றேறக் குறைய தொல்காப்பியர் காலச்சூழலும் இஃதாதலின் மொழிபெயர்ப்பு பற்றிய சிந்தனை அவர்க்கெழுந்துள்ளது.

மொழிகளுக்கிடையே பிறமொழிகள் உட்புகுதற்கு வணிகம், அரசு, சமயம், போன்றன காரணிகளாவதை, தமிழை நோக்க உணர முடிகிறது. வணிகம் காரணமாகப் பிற நாட்டினர் பலர் தமிழகத்தில் உறைந்ததைப் **பட்டினப்பாலை**,

பல்லாய மொடு பதிபழகி
வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற்
சாறயர் மூதூர் சென்று தொக்காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம் பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம் *(213-218)*

எனக் காட்டுகிறது. பல்வேறு மொழி பேசும் நாட்டு வணிகர் காவிரிப்பூம்பட்டினத்தில் ஒருங்கே வாழ்ந்திருக்கின்றனர். இவர்கள் தங்கள் நாட்டிலிருந்து விற்பனைக்கு இங்குக் கொண்டுவந்த பொருட்களின் பெயர்கள் தமிழில் இடம் பெற்றிருத்தல் வேண்டும். இது போன்றே இங்கிருந்த அவர்கள் எடுத்துச் சென்ற அல்லது தமிழ் வணிகர் கொண்டுசென்ற பொருட்களின் பெயர்கள் அந்நாட்டு மொழிகளில் இடம் பெற்றன. உறீப்ரு மொழியில் உள்ள

துகி (மயில் தோகை); அஉறலத் (அகில்) கிரேக்க மொழியில் உள்ள சிக்கிபெரஸ் (இஞ்சி), பெப்பரி (பிப்பிலி) ஆகியவற்றை இதற்குக் காட்டாக்கலாம்.

அரசு தன் ஆணைகளில் பயன்படுத்துகையிலும், பிறமொழியினருக்கு, சமயத்தவருக்கு ஆதரவளிக்கும் பொழுதும் இதுபோன்ற சொற்கள் இடையிடுதற்கு வாய்ப்பமைகிறது. வடமொழியின் ஆதிக்கம் தமிழில் கால் கொள்வதற்கு அன்றைய தமிழக அரசுகளும், ஆங்கில மொழியின் ஆதிக்கம் நிலை பெற்றதற்குப் பிற்கால அரசுகளும் முதன்மைக் காரணமாதல் வெளிப்படை. சமயத்தின் வழிதான் வடமொழி அரசியல் செல்வாக்குப் பெற்றதும் நவிலற்பாலது. எனவே மொழி பெயர்ப்புகளின் பெருக்கத்திற்குப் பல்வேறு காரணங்கள் இருப்பினும், தமிழ் மொழியில் வணிகம், அரசு, சமயம் எனும் இம் மூன்றும் முதன்மை கொள்ளல் வெள்ளிடைமலை. இப் பின்புலங்களின் அடிப்படையில் தமிழில் மொழிபெயர்ப்புகள் தோன்றி வளர்ந்து வளம்பெற்றுள்ளன. காலந்தோறுமாகப் பெற்ற வளர்ச்சியை இனி நோக்கலாம்.

### தொன்மைக் காலம்

தொல்காப்பியம் முதலாகப் பதினெண் கீழ்க்கணக்கு ஈறாக உள்ள காலம் இவண் கருதப்படுகிறது. முன் சுட்டிய எண்ணங்கள் மொழிபெயர்ப்பிற்குத் தோற்றக்களனாக அமைய, தமிழ் மொழிக்கு இலக்கணம் வரையப் புகுந்த தொல்காப்பியர் சிந்தனையையும் இது ஆட்கொண்டது. மொழிபெயர்ப்பு பற்றிய இவரின் எண்ணங்கள் ஆழமானதாக அமைவதுடன் அன்றே பல நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டிருக்குமோ என்ற எண்ணமும் எழுகிறது. சொல்லதிகாரத்தும், பொருளதிகாரத்தும் பிறமொழி பற்றிக் கருத்துரைக்கிறார்.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே *(தொல் : 880)*

என்பது தொல்காப்பியர் எச்சவியலில் கூறும் முதற் நூற்பா. இது செய்யுட்களில் பயன்படுத்தக்கூடிய சொற்கள் நான்கனுள் ஒன்றாக வடசொல்லைக் குறிப்பிட்டிருப்பது சுட்டத்தக்கது. தன்னிடம் இல்லாத ஒன்றைத் தேவைப்படின், பிறரிடத்துக் கடன் பெறுவதுடன் இதனை ஒப்ப எண்ணலாம். வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு மொழி, தன் சொற்பெருக்கத்தை விரைவு படுத்த தொடர்பு கொள்ளும் பிற

மொழிகளின் சொற்களை ஏற்றல் இயல்பாதலின் தொல்காப்பியர் இவ்விதியை வரையறுத்துள்ளார் எனலாம்.

இதற்குக் குறிப்புரை வரைந்த தேவநேயப் பாவாணர், 'வடமொழியொன்றே முற்காலத்தில் தமிழகத்து வழங்கிய அயன்மொழி. அதனால் அதன் சொல் அம்மொழிப் பெயராலேயே வடசொல் எனப்பட்டது. அதுபோல் இப்பொழுது தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்களும் ஆங்கிலச் சொல், போர்த்துகீசிய சொல் என அவ்வம் மொழிப் பெயராலேயே அழைக்கப்படல் வேண்டும்' என்பார் (தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையம், கழக வெளியீடு, ப. 203). காலந்தோறும், பண்பாட்டுக் கலப்பால் இங்ஙனம் பிற மொழிச் சொற்கள் ஒரு மொழியினிடையே புகுதலைத் தடுத்தல் இயலாததாகும் என்பதே தொல்காப்பியர் மற்றும் பாவாணர் போன்றோரின் கருத்தாகத் தென்படுகிறது.

இவ்வாறு உட்புகுகின்ற சொற்களால் மொழியின் உயிரோட்டம் பாதிக்கப்படல் கூடாது என்ற எச்சரிக்கை யுணர்வில் சில வரையறைகளைத் தொல்காப்பியர் காட்டி யிருப்பதும் சுட்டத்தக்கது.

> வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ
> எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே *(தொல். 884)*

என நவிலுங்கால் வடசொற்களை அவ்வாறே பயன்கொள்ளாமல் தமிழ் எழுத்துகளால் வடவெழுத்துகளை நீக்கி எழுத வேண்டும்; அதாவது **எழுத்துப் பெயர்ப்பு** தேவை என வலியுறுத்துகிறார். பிற மொழியெழுத்துகள் கலத்தல் மொழியின் தூய்மைக்கும் வளர்ச்சிக்கும் பெருங்கேடு என்ற உணர்வே இதற்குக் காரணமாம். இக்கூற்றிற்குச் சான்றாகச் சேனாவரையர் வாரி, மேரு, குங்குமம், மணி போன்றவற்றைத் தருவர்.

> சிதைந்தன வரினும் இயைந்தன வரையார் *(தொல். 885)*

என மேலும் விளக்கிச் செல்வர் தொல்காப்பியர். வடசொற்களின் சிதைவாகக் கருதப்படும் பிராகிருதம் போன்ற சொற்கள் வரினும் **பொருத்தமுடையனவாயின் ஏற்றுக்கொள்ளலாம்** என்பது அவர் எண்ணம். அரமியம், தசம் போன்ற சொற்களைச் சேனாவரையர் சான்றாக்குவர். 'இயைந்தன வரையார்' என்பதன் வழி, ஏற்கப்படும் பிறமொழிச் சொற்களின் இன்றியமை

யாமையையும் சிறப்பையும் நோக்கிச் செயல்பட வேண்டும்; **அனைத்துச் சொற்களையும் தம் போக்கில் கலந்துவிட அனுமதித்தல் கூடாது** என்பனவும் வலியுறுத்தப்படக் காணலாம்.

தமிழ், பயன் கொள்ளும் பிற மொழிச் சொற்களுக் கிடையே ஓர் வரையறையை உருவாக்க வேண்டும் என்ற உணர்வு, தொல்காப்பியருக்கு நூல் மொழிபெயர்ப்பு பற்றிய எண்ணத்தைத் தோற்றுவித்திருக்கலாம். மரபியலில் வழி நூல்களின் வகைகளைக் குறிப்பிடும் பொழுது,

> தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
> அதர்ப்பட யாத்தலொடு அனை மரபினவே *(தொல். 1597)*

என அவற்றுள் ஒன்றாக மொழிபெயர்ப்பினைத் தருகிறார். இதற்கு உரை வரைந்த பேராசிரியர், 'மொழிபெயர்த்தென்பது பிற பாடையாற் செய்யப்பட்ட பொருளினைத் தமிழ் நூலாகச் செய்வது. அதுவும் தமிழ் நூலின் வழிநூலுக்கு மரபாம் என்றவாறு. அதர்ப் படவென்பது, நெறிப்பட வென்றவாறு; நெறிப்படுதலென்பது அவ்வாறு மொழிபெயர்த்துச் செய்யுங்கால் அது கிடந்தவாற்றானே செய்யப்படும். தொகுத்தும் விரித்தும் தொகை விரியாகவும் செய்ததனால் பயனில்லைத் தமிழர்க்கும் ஆரியர்க்கும் என்பது. மொழிபெயர்த்தெனவே பொருள் பிறழாமை பெற்றாம்' என விரித்துரைக்கிறார். இதன் வழிச் சில எண்ணங்கள் புலனாகின்றன.

1. மொழிபெயர்ப்பு மூலத்தினின்று சிறிதும் மாற்றம் பெறாது அமைதல் வேண்டும். உண்மை, முழு மொழிபெயர்ப்பின்றிச் சுருக்கமோ (abridgement), தழுவலோ (adaptation) ஏற்புடையன அல்ல.
2. நேருக்குநேர் மொழிபெயர்ப்பாகச் சிறிதும் பொருள் திரிபின்றி அமைய வேண்டும்.

பேராசிரியர் நோக்கில் தொல்காப்பியர் எண்ணங்களாக இவற்றைக் கருதலாம். இளம்பூரணர் இது பற்றிய தம் சிந்தனையை விரித்துரைக்கவில்லை.

வட சொற்களைத் தமிழ் எழுத்தில் தான் தரவேண்டும் என்ற வெளிப்படையான, தொல்காப்பியரின் கருத்தினை நோக்க, **'அதர்ப்பட யாத்தல்'** என்பது உட்பொருள் கொண்டதாகத் தோன்றுகின்றது. தமிழ்நெறி தழுவிய மொழிபெயர்ப்பாக அமைதல் வேண்டும் எனக் கருதினாரோ என்ற எண்ணம் இங்கெழுகிறது.

தொல்காப்பியர் எண்ணம் எதுவாயினும் மொழிபெயர்ப்பு பற்றி அவர் கருதியுள்ளார்; அவற்றின் தேவையை உணர்ந்தும் இருக்கிறார் என்பதில் ஐயமில்லை.

"எனவே மொழிபெயர்ப்பு என்னும் வழிநூல் வகையைக் கூறிய தொல்காப்பியர் காலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் இன்ன எனத் தெரியாவிடினும், வடமொழிச் சொற்களின் இலக்கியப் பயன்பாட்டையும் வடமொழி இலக்கணங்களிற் கூறப்படும் கருத்துகளையும் தொல்காப்பியரே எடுத்துக் கூறுகின்ற காரணத்தால் அவர் காலத்திற்கு முன்னரே மொழிபெயர்ப்பு இலக்கியம் தமிழகத்தே வழங்கி வந்தது என்பதும், அவ்வாறு மொழிபெயர்க்கப்பட்ட மொழிகளுள் வடமொழி பேரிடம் பெற்றிருந்தது என்பதும் தெற்றென விளங்குகின்றன. வடமொழி எனப் பொதுப்படக் கூறியிருப்பினும் அக்கால நிலையில் பிராகிருதம், பாலி என்னும் வடபுல மொழிகளும் அதனுள் அடங்கும் என்பதும் இங்கு நினைக்கத்தக்கது.

மொழிபெயர்ப்பின் தொழிற்பாடும் பங்களிப்பும் இல்லாத மொழியோ, நாகரிகமோ உலகில் இல்லை யெனினும், கி.மு. நான்கு அல்லது மூன்றாம் நூற்றாண்டளவில் மொழிபெயர்ப்பினை ஓர் இலக்கியவகையாக எடுத்துக்கூறி, மொழிபெயர்ப்பு முறைகள் சிலவற்றையும் இலக்கணமாக வரையறுத்துக் கூறிய ஓர் இலக்கணியாகத் தொல்காப்பியரைத் தவிர வேறு எவரையும் உலக அளவில் காண இயலவில்லை. தமிழ்க்கவிதையியலின் பரந்துபட்ட தொலைநோக்குப் பார்வைக்கு இதனையும் ஒரு சான்றாகக் காட்டலாம்" எனும் கருத்தும் (அ.அ. மணவாளன், தமிழிலக்கிய வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பின் பங்களிப்பு - ஆளும் தமிழ், பக். 3-4) நோக்கத்தக்கது.

இவர் காலத்தையொட்டிச் செல்லும் சங்கஇலக்கியத்துள் பிறமொழிச் சொற்களின் மொழிபெயர்ப்பும், பிறமொழிக் கதைகளின் இணைவும் காணப்படுவது முன்பே நவிலப் பட்டுள்ளது. இராமாயண, பாரதக் கதைக் குறிப்புகள் பரவலாகத் தென்படுவது உணர்தற்பாலது (அகம் 70: 14-17, கலி 101: 18-20). இவற்றுடன் தெய்வம், காரணம் போன்ற வட சொற்களும் இணைந்துள்ளன.

தொடரும் சங்க மருவிய கால நூல்களில் இவ் வட சொற்களின் கலப்பு மிகுதியாயின; கருத்துகளும் கதைகளும் கலந்தன (காண்க. அ. அ. மணவாளன், மேற்படி, பக். 25-33). வள்ளுவரின்,

*தெய்வம் தொழாஅள், கொழுநன்தொழுது எழுவாள்,*
*பெய்எனப் பெய்யும் மழை (குறள் 55)*

*சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்? மகளிர்*
*நிறைகாக்கும் காப்பே தலை (குறள் 57)*

என்பன போன்ற எண்ணங்கள் ஆரியரின் கருத்துப் பரவலுக்கு, தமிழகத்தில் அவர்தம் சிந்தனைகள் ஊடுருவியதற்குச் சான்றாகக் கொள்ளலாம். இதுபோன்ற வடவர் கொள்கைகளை இக்காலத் தெழுந்த நீதி நூல்களில் பயின்றுவரக் காணலாம். முதல் முழு மொழி பெயர்ப்பும் இக்காலத்தே மலர்ந்தது குறிப்பிடத்தக்கது.

பெருவாயின் முள்ளியார் படைத்த 'ஆசாரக் கோவை' கிடைக்கும் நூல்களுள் முதல் மொழிபெயர்ப்பு நூல் எனும் பெருமைக்குரியதாகிறது.

*ஆரெயில் மூன்றும் அழித்தான் அடி ஏத்தி*
*ஆரிடத்துத் தானறிந்த மாத்திரையான் ஆசாரம்*
*யாரும் அறிய அறன் ஆய மற்றவற்றை*
*ஆசாரக் கோவை எனத் தொகுத்தான்*

என்பது அந்நூலின் தற்சிறப்புப் பாயிரச் செய்தியாகும். இந்நூல் மக்கள் அன்றாடம் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்தொழுக வேண்டிய ஒழுக்க நெறிகளைத் தொகுத்துரைக்கிறது. வடமொழி நூலான 'ஆரிடம்' இதன் மூல நூலாகக் கருதப்படுகிறது. சுக்ரஸ்ம்ருதியில் இதன் கருத்துகள் காணப்படுவதாகத் தி. செல்வக் கேசவராய முதலியார் போன்றோர் குறிப்பர். பொதுவான கருத்தாக இந்நூல் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டினதாகக் கருதப்படுகிறது. ஏழாம் நூற்றாண்டிற்குரியதாக மு. அருணாசலம் கருதுவர். நூலின் காலம் உறுதிசெய்யப் படாவிடினும் இந்நூல் முதல் மொழிபெயர்ப்பு என்பதில் ஐயமில்லை.

அக்காலச் சூழலுக்கேற்ப நூல் செய்யுள் வடிவம் கொண்டுள்ளது. வடமொழியாளர் கருத்துகளை உட்கொண்டு

குரவர் உரையிகந்த செய்யார் விரதம்
குறையுடையார் தீர மறவார் - நிறையுவா
மேல் கோலும் தின்னார் மரங்குறையா ரென்பவே
நல்லறிவாளர் துணிவு *(17)*

என்பது போல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதனுள் வடசொற்களின் ஆட்சி மிகுதியாக உள்ளது. பதினெண்கீழ்க் கணக்கு

நூல்களான ஏலாதி, சிறுபஞ்ச மூலம், நான்மணிக்கடிகை போன்றவற்றிலும் இக்குறைப்பாட்டை உணரலாம்.

## இடைக்காலம்

பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான காலத்தை இங்குக் கருதலாம். மேற்காட்டிய நிலையில், தன் இடையீட்டைத் தொடங்கிய வடமொழி அரசியலில் இடங்கொண்டு சமுதாயத்திலும் தன்னாட்சியை நிலைநாட்டியது. தொடர்ந்து சுமார் பதினைந்து நூற்றாண்டுகள் தமிழ்மொழி பின் தள்ளப்பட்டு அதன் பெருமைகள் புறக்கணிக்கப்பட்டன; புதைக்கப்பட்டன. இக்காலக் கட்டத்தில் வடமொழி தமிழகத்தில் செல்வாக்குப்பெற்ற முறையினை அறிஞர் மு.வ. தெளிவாகக் காட்டுவார். தமிழ் பெற்ற மொழிபெயர்ப்புகள் இச்சூழலில் வடமொழியிலிருந்தமைக்கான காரணமாக, பின்புலமாக அக்கூற்று அமைதலின் முழுமையாக இங்கே மேற்கோளாகக் காட்டப்படுகிறது. தமிழ் இழிநிலையடைந்த வரலாற்றைப் புலப்படுத்தற்கும் அப்பகுதி இன்றியமையாததாகிறது.

"இந்தியாவில் இன்று பேச்சு வழக்கில் உள்ள மொழிகளில் தமிழ் மிகப் பழங்காலத்திலேயே பண்பட்ட மொழியாகும். வடமொழி இலக்கிய வளர்ச்சி பெற்ற காலத்திலேயே தமிழும் இலக்கிய வளர்ச்சி பெற்று விளங்கியது. மற்ற மொழிகள் எல்லாம் அதற்குப் பிறகு சிலபல நூற்றாண்டுகள் கழித்தே இலக்கியம் பெறத் தொடங்கின. அதனால் தமிழின் வளர்ச்சி பழமையுடையது. தவிர தமிழின் பழைய இலக்கியம் தமிழ் நாட்டின் நாட்டுப்புறப் பாடல்களிலிருந்து மலர்ந்த பாடல்கள். அந்தப் பாடல்களின் செய்யுள் வடிவமும் வேறு எந்த மொழியிலிருந்தும் கடன் வாங்கப்பட்டவை அல்ல. அவை மக்களிடையே வழங்கிவந்த நாட்டுப்பாடல்களிலிருந்து வடித்து அமைக்கப்பட்ட வடிவங்களே. அப்படிப்பட்ட பழமையும் தனிமையும் உடைய வளர்ச்சித் தமிழ் இலக்கியத்திற்கு இருப்பதைப் பிற்கால வடமொழி அறிஞர் மறந்து விட்டார்கள். மற்ற இந்திய மொழிகள் வட மொழியிலிருந்து கடன் பெற்று வளர்ந்தமை போலவே, தமிழும் வளர்ந்தது என்று தவறாகக் கருதிவிட்டார்கள். அதனால் தமிழுக்குத் தர வேண்டிய உரிமையை, சிறப்பினைத் தராமல் அதுவும் வடமொழிக்கே ஆதி முதல் கடன்பட்டது என்ற எண்ணத்தோடு தாழ்வாக நோக்கத் தொடங்கினார்கள். தமிழுக்கு எந்தப் பெருமையும் இல்லை. எல்லாப் பெருமையும் வட மொழிக்கே என்று வீண்வம்பு பேசத் தொடங்கினார்கள்.

இலக்கணக் கொத்து சுவாமிநாத தேசிகர் என்னும் வடமொழி அறிஞர், இதை நிறுவுவதற்காக ஒரு போலி முயற்சியிலும் ஈடுபட்டார். வடமொழி எழுத்துகளையும் தமிழ் எழுத்துகளையும் ஒப்பிட்டார். இரண்டுக்கும் பொதுவான எழுத்துகள் இத்தனை என்று கணக்கிட்டு அவை எல்லாம் வடமொழிக்கே சொந்தமானவை என்று கிறுக்கான முடிவு செய்துவிட்டார். பிறகு வடமொழியில் இல்லாத எழுத்துகளைத் தமிழில் எத்தனை சிறப்பு எழுத்துகள் உள்ளன என்று கணக்கிட்டார். 'எ', 'ஒ' என்ற இரண்டு உயிர்க் குறில் எழுத்துகளும் 'ற', 'ன', 'ழ' என்ற மூன்று மெய்யெழுத்துகளும் ஆகிய ஐந்துமே வடமொழியில் இல்லாதவை; தமிழில் மட்டும் இருப்பவை. இந்த ஐந்து எழுத்துகள் மட்டும் இருப்பதால் தமிழ் ஒரு மொழி என்று பெருமை கொண்டாட முடியுமா என்று ஒரு சூத்திரம் இயற்றிக் கிண்டல் செய்தார்.

ஐந்து எழுத்தால் ஒரு பாடையும் ஆம் என்று
அறையவும் நாணுவர் அறிவுடை யோரே

என்று எள்ளினார்....... இது அந்தக் காலத்து வடமொழி அறிஞரின் தவறான மனப்பான்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.........

தமிழ் மொழியில் நெடுங்காலமாக இருந்து வந்த அடிப்படைச் சொற்களாகிய நீர், மீன் முதலியனவும் வடமொழியின் வேர்ச் சொற்களிலிருந்தே அமைந்தவை என்று பொருத்தம் இல்லாத விளக்கங்கள் கூறினார்கள். இந்த நாட்டில் மிகப் பழங்காலம் முதல் இருந்து வந்த தமிழிலிருந்து வடமொழி பல சொற்களைக் கடன் வாங்கியிருக்கவும் கூடும் என்று எண்ணிப் பார்க்கவும் மறுத்துவிட்டு, தமிழில் உள்ள பல சொற்களும் வடமொழியிலிருந்து கடன் வாங்கப் பட்டவை என்ற கருத்தைப் பரப்பினார்கள். தமிழறிஞர்கள் அந்தக் கருத்தைக் கேட்டுத் தலைகுனிந்து நின்றார்கள். ஐரோப்பாவிலிருந்து கால்டுவெல் முதலான மொழித்துறை அறிஞர்கள் வந்து அவர்களின் கருத்துகள் உண்மை அல்ல என்று ஆங்கிலத்தில் நூல்கள் எழுதி உண்மையை வெளிப்படுத்திய பிறகே தமிழறிஞர் உள்ளத்தில் புதிய நம்பிக்கை பிறந்தது. இந்த நூற்றாண்டில் பர்ரோ முதலான ஆங்கிலேய அறிஞர்கள் மேலும் தொடர்ந்து ஆராய்ச்சிகள் செய்து வடமொழி அறிஞர்களின் ஒருதலைச் சார்பான கொள்கைகளைப் பொய்ப்படுத்தும் வரையில் அந்தப் பழைய போக்கு இருந்து வந்தது. முதுகுன்றம் முதலான பழைய ஊர்களின் தமிழ்ப் பெயர்களை விருத்தாசலம் முதலான வடசொற்களாக மாற்றிவிட்டுப் பிறகு,

வடமொழியிலிருந்தே தமிழ்ப் பெயர்கள் வைக்கப்பட்டன என வாதாடினார்கள். கோயில் தெய்வங்களுக்கு இருந்துவந்த தமிழ்ப் பெயர்களையும் அவ்வாறே மாற்றினார்கள். அவற்றிற்கு ஏற்றபடி பிற்காலத்தில் கதைகளும் எழுதினார்கள்...... இவ்வாறு வீணாக வடமொழி அறிஞர்கள் ஒரு பகையுணர்ச்சிக்கு வித்திட்டார்கள்.

தமிழ் நீச்சபாஷை என்று ஒதுக்கி, வடமொழி மட்டும் தேவபாஷை என்று உயர்த்திப் பேசினார்கள். எந்த நூலிலாவது உயர்ந்த கருத்து இருந்தால், அது வடமொழியில் இன்ன நூலிலிருந்து கடன் வாங்கப்பட்டது என்று சொல்லி அதன் பெருமையைக் குறைக்க முனைந்தார்கள். **திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் முதலான நூல்களும் வடமொழியில் உள்ள நூல்களின் மொழிபெயர்ப்பே என்று காரணப் பொருத்தம் இல்லாமல் தாழ்த்த முற்பட்டார்கள்.** தொல்காப்பியர் தமிழுக்கு எழுதிய இலக்கண நூலும் அவ்வாறு வடமொழியிலிருந்து ஏற்று எழுதப்பட்டது என்று கற்பனை செய்து, திரணதுமாக்கினி என்ற வடமொழிப் பெயர் அவர்க்கு இருந்ததாகவும் படைத்துக் கூறினார்கள்.....

சைன சமயமும் பௌத்த சமயமும் தமிழ் நாட்டில் பரவத் தொடங்கிய பிறகு, அந்தச் சமயங்களைச் சார்ந்தவர்களில் பலர் சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம் ஆகிய மொழிகளைக் கற்றவர்களாக இருந்தபடியால், வடநாட்டு மொழியின் சொற்கள் தமிழில் கலக்கத் தொடங்கின. வடமொழி இலக்கியங்களின் தாக்குறவு மெல்ல மெல்ல ஏற்பட்டது" (மு. வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, பக். 9-17).

தமிழகத்தில் வடமொழி வேரூன்றுதற்கு வழியமைத்துத் தந்த களங்களை ஔவை சு. துரைசாமி மிக விரிவாகப் பேசியுள்ளார் (சைவ இலக்கிய வரலாறு - கி.பி. 7 முதல் 10 வரை, பக். 20-34). அதனை அடிப்படையாகக் கொண்டு, கிடைக்கும் தரவுகளையும் இணைத்து நோக்குகையில்,

1. சங்க மருவிய காலத்திறுதியில் வடநாட்டிலிருந்து தமிழகம் புகுந்த பல்லவர் தம் வடமொழியைச் சிறப்பு செய்ய முனைந்தனர் (சமயமும் இதனுள் இணைய பின்வந்த பாண்டியர், சோழர்களாலும் முன்னுரிமையும், முதலுரிமையும் கொள்ளல் தொடர்ந்து நீடித்தது). இதனால் அரசர், அந்தணர், பெரியோர் என அனைவரின் செல்வாக்கும் வடமொழிக்காயிற்று.

2. கோயில்களில் வடமொழி வேதங்கள் போன்றவற்றால் ஆளுமை பெற்றது. மற்றும் அது இறைவனின் மொழி எனவும் ஏற்றம் கண்டது.

3. வடமொழிக் கல்லூரிகள் நிறுவப்பட்டுத் தனிச் சிறப்புடன் வளர்க்கப்பட்டன. காஞ்சிக்கடிகை இதில் குறிப்பிடத்தக்கதாகும்.

4. வடமொழியறிஞருக்குப் பொன்னும், பொருளும், நிலமும், ஊரும் மானியமாக வழங்கப்பட்டதைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. சதுர்வேதிமங்கலம், காலபோகம், பிரமதேயம், பாரத விருத்தி, பட்ட விருத்தி, புராண விருத்தி போன்ற குறிப்புகள் இதனை உணர்த்தும்.

5. சமயத்தை வளர்க்க உருவாக்கப்பட்ட மடங்கள் வடமொழியாளரையே தலைமையேற்று சிறப்பளித்தன.

6. தமிழ்ப் புலவராயிருப்பினும் வடமொழியறிந்திருந்தால் தான், புகழ் பெற முடிந்தது. எனவே தமிழில் தாம் படைத்த மூலத்தையே, வட மொழியின் பெயர்ப்பாக நவிலும் போக்கும் தோன்றியது.

7. கல்வெட்டுகளும், செப்பேடுகளும் தொடக்க காலத்தில் வடமொழியில் பொறிக்கப்பட்டதும் நினைக்கத்தக்கது. மகேந்திர வர்மனின் முன்னோர் இதில் குறிப்பிடத்தக்கவர் (மகேந்திர வர்மன் முதலில் தமிழில் அளிக்க, நந்திவர்மன் தன் காலத்தில் தமிழ்க் கல்வெட்டுகளுக்கு அதிகச் சிறப்பளித்தான்).

8. பிறமொழி மற்றும் புறச் சமயத்தவரின் ஆளுமைக்குத் தமிழகம் வந்தது முழு முதற் காரணமாம்.

9. வீரசோழியம், தண்டியலங்காரம், பிரயோக விவேகம் போன்ற வடமொழி மொழிபெயர்ப்பு, தழுவல் இலக்கணங்கள் தமிழில் தோன்றி வடமொழியைச் சிறப்பித்ததுடன் தமிழில் அதனைப் பயன்கொள்ளும் வழிமுறைகளையும் வகுத்தன.

10. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்று வடமொழியையும் தமிழையும் கலந்து எழுதும் மணிப்ரவாள நடையையும் உருவாக்கினர். இதில்

வைணவர்களும் சமணர்களும் முன்னின்றனர். பின்பழகிய பெருமாள் ஜீயரின் ஆறாயிரப்படி 'குருபரம்பராப்பிரபாவம்' எனும் வைணவ ஆழ்வார் மற்றும் ஆச்சாரியர்களின் வரலாற்றைக் கூறும் நூலும், சமணப் பெரியோரின் வரலாறுரைக்கும் 'ஸ்ரீ புராணமும்' இதற்குச் சிறந்த சான்றுகளாகும். இம்மணிப்ரவாள நடைக்காக இவர்கள் கிரந்த எழுத்தைப் பயன்படுத்தினர். 16-ஆம் நூற்றாண்டோடு இம்மரபு ஒழிந்தது குறிப்பிடத்தக்கது.

11. அத்திகிரி மகாத்மியம், அம்ருதாஸ்வாதினி, கீதார்த்த சங்கிரகம், உரூபசொரூப அகவல், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், சப்தகாதை, அஷ்டப்பிரபந்தம் எனத் தமிழ் நூல்கள் வடமொழிப் பெயர் பெற்ற விந்தையும் உணர்த்தற்பாலது.

மேற்கண்டனவற்றை ஆழ்ந்து நோக்குங்கால் தமிழ் மொழியின் முதன்மை மொழிபெயர்ப்புகளும், சென்ற நூற்றாண்டுவரை அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட நூல்களும் வடமொழியாய் நிற்பதன் காரணம் எளிதில் புலனாகும். வடசொற்களும் தமிழோடு தமிழாய் ஒன்றிக் கலந்ததன் அடிப்படையும் அறியலாகும். இனி இக்காலப் பகுதியில் அமைந்த மொழி பெயர்ப்புகளை நோக்கலாம். இக்காலக் கட்டத்தில் எழுந்த மொழிபெயர்ப்புகளுக்குத் தமிழகத்தில் நிலவிய சமயங்களே பொறுப்பாதலால் அச்சமயங்களின் அடிப்படையில் அவறறைப் பகுத்துணரல் ஏற்புடையதாம்.

### சமணம்

சமண சமய மொழிபெயர்ப்பில் காப்பியங்கள் முதலிடம் பெறுகின்றன. தமிழில் இக்காலத்தில் எழுந்த காப்பியங்கள் மிகுதியும் மொழிபெயர்ப்பாக அன்றித் தழுவலாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. இடைக்காலத்தின் தொடக்கத்தில் சமணரின் ஆளுமை தமிழகத்தில் நிலவியதால் அடுத்துத் தோன்றிய மொழி பெயர்ப்புகளும் சமணஞ் சார்ந்த நூல்களாயின.

கொங்குவேளிரின் 'பெருங்கதை'யுடன் இது தொடங்கு கின்றது. வத்தவ நாட்டு, கௌசாம்பி நகர அரசன் உதயணனின் கதையை ஐந்து காண்டங்களில் பேசுகிறது இக்காப்பியம். கி.பி. ஆறாம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் இந்நூலின் முன் பகுதியும் பின்பகுதியும் இன்று கிடைக்கவில்லை. இயற்றிய புலவரின் பெயரால்

'கொங்குவேள் மாக்கதை' என்றும் வழங்கப்பெறும். குணாட்டியர் பைசாச மொழியில் 'பிருகத்கதா மஞ்சரி'யென எழுதியதைக் கங்க நாட்டரசன் துர்விநீதன் வடமொழியில் 'உதிதோதய காவ்யம்' என மொழிமாற்றம் செய்தான். அதனை மூலமாகக் கொண்டு கொங்குவேளிர் 'பெருங்கதை' படைத்ததாக உ.வே. சாமிநாதையர், இதன் தம் பதிப்பில் மொழிந்துள்ளார். முழுமையாக நூலைப் பெறவியலா விடினும் கதையமைப்பாலும் பொருட் சிறப்பாலும் சொல் வளத்தாலும் இன்றும் போற்றப்படுகின்றது. இதன் வழிநூலாக 367 விருத்தப் பாக்களில் 'உதயண குமார காவியம்' என்றொரு நூல் எழுந்துள்ளமையும் சுட்டத்தக்கது.

அடுத்து எழுந்த நூல்களுள் சீவக சிந்தாமணி குறிப்பிடத் தக்கது. கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் திருத்தக்க தேவரால் தமிழுக்கு அளிக்கப்பட்ட சீவகன் கதையாகும் இந்நூல். தமிழில் காப்பியத் திற்கு இதுவரை பயிற்சியில் இருந்த ஆசிரியப்பாவினை மாற்றி விருத்தப்பாவினைப் பயன்கொளச் செய்த முதல்வர் திருத்தக்க தேவர். இக்காப்பியத்தின் மூலம் வட மொழி மகாபுராணம் உத்தர பாகத்தில் உள்ள சீவக சரித்திரமாகும். எண்மரை மணந்து இறுதியில் முக்தியடைந்த சீவகனின் கதையை நவில்வதால் மண நூல் என்றும், முக்திநூல் என்றும் சிறப்பிக்கப்படும் பெருமை யுடையது. இவன் கதை வடமொழி கத்திய சிந்தாமணியிலும் க்ஷத்திர சூடாமணியிலும் காணப்படுவதாம். இவற்றின் துணையையும் திருத்தக்கதேவர் பெற்றிருக்கலாம். 13 இலம்பகங்களில் 3145 பாடல்கள் கொண்ட இக்காப்பியத்திற்கு நச்சினார்க்கினியர் உரை பகர்ந்திருப்பது நவிலத்தக்கது.

வடமொழியில் வழங்கும் 'ஸ்ரீபுராணம்' எனப்படும் மகாபுராணம் என்பது மிகப் பழமைவாய்ந்த நூலாகும். இராமாயண, மகாபாரத இதிகாசங்களைப் பின்பற்றி எழுதப் பட்ட இந்நூல் சமண முனிவர் பலரின் வரலாறு தெரிவிப்பது. தமிழில் எழுந்துள்ள பல சமண நூல்களுக்கு இந்நூல் மூலமாகும். சூளாமணி, யசோதர காவியம், மேருமந்தர புராணம் போன்றவற்றிற்கு இதுவே மூலமாக அமைகின்றது.

மண்ணுலக மன்னவனான வீரன் திவிட்டன் தன்பகை யொழித்து விண்ணுலக மங்கை சுயம்பிரபையை மணந்த வரலாற்றைத் தோலாமொழித்தேவர் (10-ஆம் நூ) சூளாமணி எனும் காப்பியமாகப் படைத்துள்ளார். இந்நூல் 12 சருக்கங்களையும் 2330 விருத்தங்களையும் கொண்டது.

சிற்றின்பத்தின் இழிவையும் தவ ஒழுக்கத்தின் உயர்வையும் இயம்பும் யசோதர காவியம் 'உயிர்க்கொலை தீது' எனும் அறத்தை உணர்த்த தோன்றியது. எளிய நடையில் 320 பாடல்கள் மட்டும் கொண்ட இந்நூல் ஆசிரியர் பெயர் அறியுமாறில்லை. இலக்கியச் சுவை குறை காரணமாகப் பயிற்சியும் பெறவில்லை.

மேரு, மந்திர என்ற இரு உடன் பிறந்தார் வரலாற்றைத் தரும் இதனை வாமனாசாரியர் படைத்துள்ளார் (14-ஆம் நூ). இவரே நீலகேசிக்கும் உரையெழுதியுள்ளார். 13 சருக்கங்களில் 1405 பாடல்களில் இவ்விரு இளவரசரும் பல முற்பிறவிகளில் பெற்ற வரலாற்றைக் கூறி இறுதியாக முக்தி பெற்றமையைத் தருவது இந்நூல். வாழ்வியல் அறத்தைச் சிறப்பிக்கும் இது சமண சமய சித்தாந்தத்தை முழுமையாக இயம்புகிறது. இதன் வழிநூலாகப் பிற்காலத்தில் மேருமந்திர மாலை என்றொரு அம்மானைப் பாடல் எழுந்துள்ளமையும் சுட்டத்தக்கது. மேற்காட்டியுள்ள நூல்களின் பொருண்மை/பாடுபொருள் வட மொழியில் பிறவிடத்தும் காணப்படுதலினால் இவற்றை மொழிபெயர்ப்புகள் அன்று தழுவல்களே என மு. அருணாசலம் போன்றோர் உரைப்பர். மொழிபெயர்ப்பாயினும் தழுவலாயினும் இவற்றிற்குரிய மூலம் வடமொழியென்பதில் கருத்து வேறுபாடில்லை.

15-ஆம் நூற்றாண்டில் மலர்ந்த தமிழ் 'ஸ்ரீபுராணம்' சமணரின் மணிப்ரவாளப் படைப்பிற்குச் சான்றாக முன்பே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. வடமொழி 'மகாபுராண சங்கிரகத்'தின் நேரடி மொழிபெயர்ப்பான இதன் ஆசிரியர் பற்றிய குறிப்பில்லை. வடமொழியில் இதனைக் கவிபரமேசுவரர் என்பவரும் அவருடைய சீடரான குணபத்திரர் என்பவரும் இணைந்து பாடியுள்ளனர். வடமொழி மூலம் செய்யுள் வடிவங் கொள தமிழ் நூல் உரைநடையால் இயன்றது. மூலம் போலவே பூர்வம், உத்தரம் என்ற இருபகுதிகளையுடையது. பூர்வபுராணம் என்ற பகுதி ஆதிநாதர் புராணம் கூறுவது. பிற்பகுதியாகிய உத்தரபுராணம் என்பது அஜித சுவாமி தொடங்கி ஸ்ரீவர்த்தமானர் வரையிலுமான 23 தீர்த்தங்கரரின் வரலாறு கூறுவது. இங்கு இராமாயண, பாரத, பாகவதக் கதைகள் பலவேறுபாடுகளுடன் சொல்லப்பட்டுள்ளன. புராணக் கதைகளில் சிபி, பரசுராமன், மகாபலி முதலியோர் வரலாறுகள் உள்ளன.

வைசியபுராணம் 35ஆம்சருக்கம் தமிழில் வளையாபதியாக மொழிமாற்றம் கண்டுள்ளது. ஆசிரியர் பெயரறியாத இந்நூல்

முழுமையாகக் கிடைக்கவில்லை. பிற குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை நவகோடி நாராயணன் எனும் வைசியன் மணந்தான் என்பதற்காக அக்குலத்தைச் சார்ந்தோர் வெறுக்க அவனும் அயல் நாடுசென்று விடுகிறான். அப் பெண்ணிற்குப் பிறந்த மகன் பல்லாண்டுகட்குப் பின்னர், புகார் நகரம் புகுந்து தன் தந்தையை அறிந்து அவரைத் தன் தாய்பால் சேர்க்கிறான் என்பது இந்நூற்கதை. புறத்திரட்டிலும் யாப்பருங்கலம், சிலப்பதிகாரம், தொல்காப்பியம் ஆகிய நூல்களின் உரையிலுமாக இந்நூலின் 72 பாடல்கள் கிடைக்கின்றன.

இவை தவிர கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுந்த அருங்கலச் செப்பு எனும் சமய நூலும் சமணர் மொழிபெயர்ப்பே. வடமொழியில் சமந்திர பத்ராசாரியர் தந்த 'இரத்தின கரண்டக சிராவகாசாரம்' என்ற நூலின் மொழிபெயர்ப்பாகும் இது. அருகன் துதியோடு தொடங்கி 180 குறட்பாக்களைக் கொண்டதாய் அமைகிறது. சமண சமயத்தில் கூறப்படும், இல்லறத்தார் (சிராவகர்-சாவகர்) மேற்கொண்டொழுகத்தக்க அறங்களைப் பொதிந்து வைத்த பேழை போன்றமையால் அருங்கலச் செப்பு என்று பெயர் பெற்றது. சமண சமயத்திற்கு எனச் சிறப்பாக உரிய அறங்களை மட்டும் இந்நூல் பேசுகிறது. சமணர் தமிழிலக்கிய வரலாற்றில் சிறப்பானதோரிடம் கொண்டுள்ளமையை இம்மொழிபெயர்ப்புகளும் (தழுவல்களாகச் சில கருதப்பட்ட போதிலும்) உணர்த்தும்.

### பௌத்தம்

தமிழகத்திற்குள் நுழைந்த புறச் சமயங்களில் சமணம் போன்று பௌத்தம் பரவவில்லை. இங்கு நாதகுத்தனார் படைத்த குண்டலகேசி, தம்மபதம் ஆகியன குறிக்கத்தக்கன. பாலிமொழி (வடமொழியின் திசை மொழிகளுள் ஒன்று)யில் உள்ள தேரி காதையின் மொழிபெயர்ப்பாகும் குண்டலகேசி அழிந்துபட்ட நூல்களுள் ஒன்று. நீலகேசியின் உரை மூலம் சில செய்யுட்களும், கதையும் கிடைக்கின்றன. நீலகேசியின் எதிர்நூலான இந்நூல் பௌத்த சமயத்தின் பெருமையை நிலைநிறுத்த எழுந்ததாகும். இக்கதைத் தலைவி பத்தரை (அங்குத்தர நிகாயா) புத்தர் காலத்து உடன் வாழ்ந்தவள். இராசகிருகம் நகர அமைச்சனின் மகளான இவள் அரசனின் புரோகிதன் மகனின் பால் காமுற்று கொலைத் தண்டனையிலிருந்து அவனை மீட்டு மணந்து கொண்டவள். அக்கயவனின் உண்மை உணர்ந்தபோது, 'தற்கொல்லியை

முற்கொல்ல வேண்டும், என்பதற்கிணங்க அவனைக் கொன்று முதலில் சமணஞ் சார்ந்தவள், பின் சாரிபுத்தரால் வாதத்தில் தோல்வி கண்டு பௌத்த சமயம் தழுவியவள். இவையே இந்நூற்பொருளாக உணர முடிகிறது.

பௌத்த சமயக் கருத்துகளடங்கிய, புத்தரின் அறிவுரைகளைப் பகரும் 'தம்ம பதம்' தற்காலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட பெருமையுடையது. புத்தர் பாலி மொழியில் அருளிய 'தம்ம பதா'வின் மொழிபெயர்ப்பாகும் இதனைக் காமராஜ ஐயர் (1951), ப. ராமஸ்வாமி (1971), அ.லெ. நடராஜன் (1979) ஆகியோர் தமிழில் தந்துள்ளனர். தற்காலத்திய மொழி பெயர்ப்பாயினும், பொருளிணைவு கருதி இங்கு இணைக்கப் பட்டுள்ளது. இந்நிலை பின்வரும் இராமாயணம் முதலானவற்றிற்கும் பொருந்தும்.

தோற்றப்பழமையாலும், வழக்கு அருகியமையாலும், ஒரு சாராரிடம் மட்டும் என பொதிந்திருந்ததனாலும் போதிய பாதுகாப்பின்மையாலும் தமிழில் எண்ணற்ற தமிழ் நூல்கள் மறைந்தொழிந்தன. அவற்றுள் மொழிபெயர்ப்புகளும் அடங்குவதை யுணர முடிகிறது.

சைவ, வைணவ இலக்கியங்களைப் பொறுத்த வரையில் அவற்றில் எழுந்துள்ள மொழிபெயர்ப்புகளை 1. இராமாயணம், 2. பாரதம், 3. புராணங்கள், 4. தலபுராணங்கள், 5. எஞ்சிய வைணவ யிலக்கியம், 6. எஞ்சிய சைவ இலக்கியம் எனப் பகுத்துணரல் அவற்றின் மிகுதி நோக்க எளிதாகிறது. மொழிபெயர்ப்பில் இவைபெறும் இடம் நோக்கி வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

**இராமாயணம்**

சங்கம் தொடங்கி இடைறாது தமிழிலக்கியத்துள் இடம் பெற்றிருக்கும் இராமாயண, பாரதக் கதைக்குறிப்புகள், அவற்றின் செல்வாக்கை நிலைநிறுத்துகின்றன. கி.பி. பத்தாம் நூற்றாண் டளவினதாகக் கருதப்படும் கம்பராமாயணம் இராமாயண வரலாற்றில் தனிச்சிறப்புடன் ஒளிரும் தழுவலாகும். இதற்கு முன்பே தமிழில் இராமாயண மொழிபெயர்ப்புகள் இருந்தமையை உணர முடிகிறது. இலக்கண, இலக்கிய உரையாசிரியர் அவற்றை எடுத்தாண்டுள்ளனர். யாப்பருங்கல விருத்தியால் பஃறொடை வெண்பாவால் ஆனதோர் இராமாயணமும், புறத்திரட்டால் ஆசிரியப்பாவால் யாக்கப்பட்ட இராமாயணமும் அறிய வருகின்றன. கம்பன் காவிய ஒளியால் இவை புறத்தே ஒதுக்கப்பட்டன போலும்.

கற்பனை வளத்தாலும் காப்பியத்தை நடத்திச் செல்லும் திறத்தாலும், சொல் பொருள் அழகாலும், உயர்ந்த எண்ணங்களின் செறிவாலும் இந்தியாவில் சிறப்பாகக் குறிக்கப்படும் மூன்று இராமாயணங்களுள் ஒன்றாகும் (ஏனைய வால்மீகி ராமாயணம், துளசி ராமாயணம்) பெருமை பெற்றுள்ளது.

தொல்காப்பியர் கருத்துப்படி வடசொற் கிளவிகளின் வடவெழுத்தினை ஒழித்து இலக்குவன், வீடணன், அனுமன் இந்திரசித்து, தயரதன், சூர்ப்பணகை எனத் தமிழ்ப்படுத்தியும்; அரசர்க்கு அரசன், மன்னர் மன்னன் (ராஜராஜன் 168, 173), கலைக்கோட்டு மாமுனி (ருசிய சிருங்கர் 215) கனகன் (இரணியன் 6222), மானுடமடங்கல் (நரசிம்மம், 890, 6319), உயிருக்கு நேயம் (ஜீவகாருண்யம் 6385), அருளின் வேலை (கருணைக்கடல் 6415), வேள்வியின் பகைஞன் (6552), மாபெரும் பக்கன் (6554), மகரக்கண்ணன் (8408), நேமிப்புள் (சக்கரவாகம் 6834) குடப்பெருஞ் செவிக்குன்றம் (கும்பகருணன் 9815), சூரியன் பகை (பானுகோபன் 6553), வச்சிரத்து எயிற்றவன் (வச்சிரநந்தன் 6098) அரிமகம் (அசுவமேதயாகம் 80) போன்று மொழிபெயர்த்தும் தமிழ் மரபிற்கேற்ப கதையை ஆற்றுப்படுத்தியும் தம் இராமாயணத்திற்குக் கம்பர் ஏற்றந் தந்துள்ளார். தம் காலத்தில் வழக்கில் வழங்கிய கதைகளும் கம்பருக்குத் துணை நின்றிருக்கலாம். ஆயின் கம்பர் காப்பியத்தின் தற்சிறப்புப் பாயிரத்தில்,

> தேவபாடையின் இக்கதை செய்தவர்
> மூவர் ஆனவர் தம்முளும் முந்திய
> நாவினான் உரையின்படி, நான்
> தமிழ்ப்பாவினால் இது உணர்த்திய பண்பு அரோ (10)

என மொழிந்துள்ளார். இராமகாதை படைத்த வால்மீகி, வசிட்டர், போதாயனர் ஆகிய மூவரில் முன்னவரை மொழி பெயர்த்துள்ளதாகக் கூறுகிறார்.

இந்நூல் சில நூற்றாண்டுகட்கு முன்பே கேரளம், கர்நாடகம், ஆகிய அண்டை மாநிலங்களில் புகழ் பெற்றிருந்தமையை அங்குக் கிடைக்கும் கல்வெட்டுகள் உறுதிசெய்கின்றன. மலையாள முதல் நூலான எழுத்தச்சனின் ராமாயணம் கம்பராமாயணத் தாக்கத்துடன் படைக்கப்பட்டதாகும்.

6 காண்டங்களில் 118 படலங்களில் 10368 பாடல்களால் இயன்றது இவ் இராமாயணம். இதனுள் எண்ணற்ற இடைச் செருகல் பாடல்களும் (1293) எல்லையற்ற பாடபேதங்களும்

நிறைந்துள்ளதைப் பதிப்பாசிரியர் காட்டியுள்ளனர். கம்பர் 'இராம காதை'யை (கம்பர் இட்ட தலைப்பு) வான்மீகி ராமாயணத்தின் தழுவலாகப் பலர் கருதினும் கு. திருமேனி (கம்பனுக்குக் கதை கொடுத்தவர் வான்மீகரா? - 1966) போன்றோரால் கம்பருக்கு முன் வழங்கி வந்த இராமாயணக் கதைகளே மூலமாகக் கருதப்படுகின்றன. ஆதி காவியத்திலிருந்து பெருமளவு வேறுபடுவதே இக்கருத்திற்குக் காரணமாகும்.

கம்பர் தமிழ்ப்பண்பிற்கு ஏற்பக் கதைமாந்தரின் செயல்களையும் இயல்புகளையும் மாற்றியமைத்திருப்பதும், புதிய நிகழ்வுகளை, கதைகளை இணைத்திருப்பதும் இவண் எண்ணத்தக்கன. சீதையைக் கவர்ந்து செல்லும் பொழுது அவளைத் தீண்ட அஞ்சி இராவணன், அவள் தங்கியிருந்த குடிலுடன் நிலத்தைக் கீண்டி எடுத்துச் சென்றதும்; வாலியின் மறைவின் பின் தாரை விதவைக் கோலம் பூண்டதும் குறிப்பிடத் தக்க சான்றுகளாம். மற்றும் சீதையின் மணவிழாவினை, தமிழ் அகமரபினைப் பின்பற்றி, இராமன்-சீதையின் களவு நிலையின் பின்பே அமைத்துள்ளமையும் சுட்டுதற்குரியது. கம்பரின் தனிச்சிறப்பாக விளங்குபவற்றுள் இரணியன் வதைப் படலமும் ஒன்றாகும். திருமாலின் நரசிம்ம அவதாரத்தைச் சங்கப்பாவும் (பரி.4:10-21), சிலம்பும் (17:34) பாராட்டக் கம்பர் அதனை விரிவாக்கிக் காப்பியத்தின் ஆணிவேரான ஆணவத்தின் வீழ்ச்சியைப் புலப்படுத்துவதாக அமைத்து முதன்மைக் கதையுடன் அழகுற இணைத்துள்ளார். அவர் கண்ட 'இன்பக் கனவுலகு' அயோத்தியாக மலர்ந்துள்ளது. தமிழிலக்கிய உலகில் என்றும் அழியாததோரிடத்தை, தலைமையிடத்தைக் கம்பர் கொண்டுள்ளதைத் திறனாய்வாளர் பலரும் ஏற்றுக் கொள்வர்.

இராமன் முடிசூடலுடன் கம்பர் தம் காப்பியத்தை நிறைவு செய்துள்ளார். எஞ்சிய பகுதியான உத்தர காண்டத்தைப் பின்வந்த ஒட்டக்கூத்தர் (12-ஆம் நூ) மொழிபெயர்த்து நிறைவு செய்தார். 30 படலங்களில் 1532 பாடல்களின் அமையும் இந்நூலைத் தொடக்க காலத்தில் கம்பராமாயணத்துடன் இணைத்துப் பதிப்பிக்கும் வழக்கமிருந்த போழ்திலும் அதனளவு வெற்றியை இது பெறவில்லை.

இவை தவிர பல வடிவங்களிலும் இராமாயணம் பலரால் பாடப் பெற்றுள்ளது. நாராயணசாமி ஐயரின் இராமாயண அகவல், ராஜசேகர முதலியாரின் இராமாயண ஓரடிக் கீர்த்தனை, தஞ்சை சுப்பிரமணிய முதலியாரின் இராமாயண வெண்பா (20-ஆம் நூ)

ஏற்றப்பாட்டில் இராமாயணம், நலங்கு மெட்டு இராமாயணம் என்பன சான்றுகள். பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த அருணாசலக் கவிராயரின் 'இராமநாடகக் கீர்த்தனை', கம்பருக்குப் பின்னெழுந்த ராமாயணங்களுள் மிக்க புகழ் பெற்றதாகும். கம்பரைப் பின்பற்றி யுத்த காண்டம் வரையிலுமே செல்லும் இந்நாடகம் கொச்சகம் 6, வெண்பா 2, வசனம் 1, கலித்துறை 1, விருத்தம் 268, தோடையம் 1 (நாடகத்தின் முன் மொழிப்பாட்டு); திபதை 60, தரு 258 ஆகியவற்றால் இன்னடை பயில்வது. நாடக வடிவம் பெறினும் அங்கம், களம் முதலான பிரிவுகள் நாட்டார் நாடக இயல்புபடி இடம் பெறவில்லை. இவற்றின் பணிகளைக் கதைப்போக்கின் இடையிடையே சுட்டப்பட்டிருக்கும் உட்தலைப்புகள் செய்து விடுகின்றன. தெரிந்த கதை, எளிய நடை, திறமையான கதைக் கோப்பு இவற்றால் சிக்கலற்றுத் தெளிவான போக்கில் இந்நூல் அமைந்துள்ளது.

குணாதித்தன் சேய் என்பவரால் 'காகுத்தன் கதை' எனும் பெயரில் 12ஆம் நூற்றாண்டிலும், 'இராமாயண வெண்பா' எனும் பெயரில் 15ஆம் நூற்றாண்டிலும் இராமாயணம் படைக்கப் பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. எனினும் இவை பற்றிய பிற செய்திகள் அறிய இயலவில்லை. 14ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாக ஒரு சமண சமய இராமாயணமும் இருந்ததை 'ஸ்ரீபுராணம்' உணர்த்துகிறது. இவற்றின் பின் தோன்றிய குயில் ராமாயணம் எனும் நூல் 1969இல் சரசுவதி மகால் நூல் நிலையத்தால் அச்சிடப்பட்டுள்ளது. கோகிலராமாயணம் எனவும் வழங்கும் இந்நூல் 128 பாடல் கொண்டது. ஆ. தருமலிங்க முதலியாரால் 'அமிர்த ராமாயணம்' என ஒன்றும் பிற்காலத்தில் தோன்றியுள்ளது.

நாட்டுப்புற இலக்கிய வகைகளிலும் ராமாயண ஏலப்பாட்டு (ஸ்ரீநிவாசயங்கார்); ராமாயணச் சிந்து (சடகோப ஐயங்கார்), ஸ்ரீராமர் தாலாட்டு, ஸ்ரீராமர் வனவாசம்-அம்மானை (இராமலிங்கம்பிள்ளை), உத்தர ராமாயணக் கீர்த்தனை (அநந்த பாரதி ஐயங்கார்) என இடம் பெற்றுள்ளது. இத்தகையன பெரும்பாலும் பிற்காலத்தைச் (17-19) சார்ந்தனவாக அமைகின்றன. கம்பரின் இராமாயணம் தோன்றிய சில நூற்றாண்டுகளின் பின் தக்கை ராமாயணம் என நாட்டுப்புறப் பாடலமைப்பில் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது நவிலத்தக்கது.

தங்களைக் கவர்ந்த இராமாயணக் கதைப் பகுதியைக் கொண்டு, தங்களுக்கு விருப்பம் போல் கதையினை மாற்றியும் இணைத்தும் அமைக்கின்றனர். நாடக வடிவினை மிகுதியாகக் கையாண்டுள்ளனர். ஏகை சிவசண்முகம் பிள்ளை எழுதிய 'சம்பூர்ண இராமாயணம்' பல நாடக மன்றங்களால் நடிக்கப் பெற்ற பெருமையுடையதாகும். இருபதிற்கும் மேற்பட்ட நாடக வடிவங்களை இக்கதை கொண்டுள்ளது. இராம நாடகம் (கந்தப்பிள்ளை, அனந்தபாரதி, இலங்கா தகனம் - சங்கரதாஸ் சுவாமிகள்) சான்றாம். முதன்மைக் கதை மட்டுமின்றி, துணைக் கதைகளும் இத்தகு மாற்று வடிவங்களைப் பெற்றுள்ளன. அவற்றுள் அகலிகை வரலாறு சிறப்பிடம் பெறுகிறது. வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் அகலிகை வெண்பாவைச் சான்றாகச் சுட்டலாம்.

இவை தவிர, வான்மீகி, துளசி, காளிதாசன் போன்றோரின் இராமாயணப் படைப்புகள் நேரடி மொழிபெயர்ப்பாகவும் பலரால் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் வால்மீகி ராமாயணம் சமய நோக்கில் மிகுந்த செல்வாக்குப் பெற்று மிகுதியாக மொழிபெயர்ப்புப் பெற்றுள்ளது. அவை செய்யுள் அல்லது உரைநடை வடிவம் கொண்டு குறிப்பிட்ட பகுதியாக அல்லது முழுமையாக உள்ளன. அவற்றுள் இராஜகோபாலாச்சாரியின் மொழிபெயர்ப்பு (1956) பலராலும் பாராட்டப் பெற்றது. சாகித்திய அக்காதெமி பரிசில் பெற்ற சிறப்பும் கொண்டது. எம். தாதா தேசிக தாதாச்சாரியார் (1878-1901), எஸ். எம். நடேச சாஸ்திரி (1901-1912), ஸ்ரீனிவாச ராகவாச்சாரி (1901-1902) அண்ணங்கரா சாரியார் (1941), பி.எஸ். கிருஷ்ணசாமி ஐயர் (1960-1972) போன்றவரின் மொழிபெயர்ப்புகளும் குறிப்பிடத்தக்கன. கே.வி. அருணகிரி முதலியார் (1909) கே. மகாதேவன் (1953) போன்றோர் சுருக்கமொழிபெயர்ப்புகளைத் தந்துள்ளனர். மற்றும் சுந்தரகாண்டமும் (வி. ரங்காச்சாரியார் 1902, வேங்கடநரசிம்மா சாரியார் 1901) உத்தர காண்டமும் (சிற்றம்பலதேசிகன் 1815) தனித்தனியே பலரால் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

சுருக்கமாகவோ, பகுதியாகவோ, அன்றித் தொகுப்பாக ராமாயண நீதி ரத்னாவளி (ராமனாத ஐயர்-1886, ஆர். சிவசங்கர பாண்டியன் 1886) வால்மீகி ராமாயணக் கிளைக்கதைகள் (தி. வேங்கடராம ஐயங்கார் 1906) என்பன போன்றும் மொழி பெயர்ப்புகள் எழுந்துள்ளமை குறிப்பிடற்பாலது.

துளசி ராமாயணத்தை ஸ்ரீனிவாசாசாரியார் (இராம சரிதமானஸ் என்னும் துளசி ராமாயணம்-1916), அம்புஜம்மாள் (1942); எஸ். ஜகந்நாராயணன் (1971-1972 5 பகுதிகள்) ஆகியோர் மொழிபெயர்த்துள்ளனர். தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார் 1967இல் சுருக்க மொழிபெயர்ப்பை வெளியிட்டுள்ளார்.

வே. பாலகிருஷ்ண முதலியார் (1903), எ.கே. கணேசன் (1976) பெயரறியப்படாத பிறிதொருவர் (1914) வடமொழி அத்யாத்ம ராமாயணத்தை மொழி பெயர்த்துள்ளனர். இவற்றுள் முன்னவரின் மொழிபெயர்ப்பு சீதாராம சாஸ்திரிகள் தெலுங்கில் செய்திருந்த மொழிபெயர்ப்பைத் தமிழாக்கம் செய்ததாகும். கணபதி சாஸ்திரி, அ. சுப்பிரமணிய பாரதி, ராஜா சாஸ்திரி ஆகிய மூவரும் இணைந்து வான்மீகியின் ஆனந்த ராமாயணத்தை 1910இல் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர்.

காளிதாசரின் ரகுவம்சம் சிறுகளத்தூர் ராமஸ்வாமி சாஸ்திரி (1884); அரசகேசரி (1887), எம்.எஸ். நடேச சாஸ்திரி (உரைநடை-1901), வி.எஸ். வெங்கடராகவாசாரி (1952), எஸ்.ஏ. ராமஸ்வாமி (1965), க.ரா. ஜமதக்னி (1969) ஆகியோரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இராமாயண மொழிபெயர்ப்புகளையும், தழுவல்களையும் தன்னுள் பேரளவில் கொண்டுள்ள தமிழ் மொழி இராமாயண வரலாற்றில் வியப்பானதொரு வளர்ச்சியையும் அளித்துள்ளது. அதனை அளித்தவர் தி. வேங்கட கிருஷ்ணையங்கார் ஆவார். அவர் 6000 பாடல்களில் வான்மீகி, கம்பர், துளசி ஆகியோரின் இராம கதைகளை இணைத்துப் புதிதாக 'இராகவ காவியம்' என உருவாக்கி 1975இல் வெளியிட்டுள்ளார்.

இதுபோன்று உரைநடையில் இம்மூவர் ராமாயணங் களையும் இணைத்து எஸ். ஜகந்நாராயணன் 'திரிவேணீ ராமாயணம்' எனும் பெயரில் 1977 இல் வெளியிட்டுள்ளதும் குறிக்கத்தக்கது.

கே.எஸ். ஸ்ரீநிவாஸனின் 'காவிய ராமாயணம்' கம்பரையும் வான்மீகியையும் இணைத்துச் சுவைக்க உதவுகிறது. ஆர். அய்யாசாமி குழந்தைகளுக்காகப் பாடிய பாலராமாயணமும் இத்தகையதே.

இன்றும் இலக்கியப் படைப்புகள் அனைத்து வகைகளிலும் இராமாயணக் கதைகள் அல்லது கதை மாந்தர் தொடர்புறுவன அவ்வப் பொழுது பரவலாக எழுந்து கொண்டே உள்ளன.

இவற்றினை விரிக்கின் பெருகும். வழக்கில் வழங்கும் பழமொழிகளிலும் இதன் ஆளுமை அனைவரும் உணர்ந்ததே. இவற்றால் தமிழ் மொழியில், தமிழரிடையே பிரிக்கவியலாவாறு இராமாயணம் இரண்டறக் கலந்துள்ளமை தெளிவாகும். புலவர் குழந்தையின் 'இராவண காவியம்' போன்ற எதிர் நூல்கள் எழினும் இதன் புகழ் மங்கவில்லை என்பதும் உணரத்தக்கது.

**மகாபாரதம்**

வடமொழி மொழிபெயர்ப்புகளில் இராமாயணத்திற்கு அடுத்த நிலையில் சிறப்புறுவது பாரதப் பெயர்ப்புகளாகும். இராமாயணம் போன்று சங்கம் தொட்டு இடையறா ஆட்சியைத் தமிழிலக்கியத்துள் பாரதமும் பெற்றுள்ளது. புறநானூற்றில் முரஞ்சியூர் முடிநாகராயர், சேரன் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை,

அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம்பதின்மரும் பொருது களத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்
(2 : 13-16)

எனப் பாராட்டுதல் குறிப்பிடத்தக்கது. பாரதப் போரோடு தமிழ் மன்னரை இணைத்து நோக்குமளவிற்குப் பாரதக் கதையோடு தமிழர் ஒன்றியதை இது உணர்த்துகிறது.

கி.பி. 7ஆம் நூற்றாண்டளவில் இதற்கு முதல் மொழி பெயர்ப்பு தோன்றியதாகத் தெரிகிறது. சங்கஇலக்கியத் தொகைகளுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடிய, 'பாரதம் பாடிய பெருந்தேவனார்' அம்மொழிபெயர்ப்பாசிரியராகக் கருதப்படுகிறார். பாண்டியர் செப்பேட்டில் காணப்படும் 'பாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' எனும் தொடர் இப்பாரதத்தைக் குறிப்பதாக எண்ணுவர். இந்நூல் மறைந்துபோன நூற்பட்டியலில் இடம் பெறுகிறது. வீரசோழியம், தொல்காப்பியம் இவற்றின் உரையிலும், புறத்திரட்டிலும் இதன் ஒருசில பாடல்கள் கிடைக்கின்றன.

அடுத்து 9ஆம் நூற்றாண்டில் மற்றொரு 'பாரதவெண்பா' பற்றிய குறிப்பு கிடைக்கிறது. இதனைப் பாடியவரும் 'பெருந் தேவனார்' என்றே அழைக்கப்படுகிறார். செய்யுளும் உரைநடையும்

விரவிவரும் இந்நூலும் முழுமையாகக் கிடைக்கவில்லை. உத்யோக, பீஷ்ம, துரோண, சுவர்க்க, ஆரோகண பருவங்களின் 1169 பாடல்கள் மட்டுமே இன்று கிடைக்கின்றன. இவற்றை 1950 இல் தஞ்சை, சரசுவதி மகால் வெளியிட்டுள்ளது. பாடற்பகுதி நல்ல செந்தமிழில் சிறக்க, உரைநடைப்பகுதி வடசொற்களுடனும், தொடர்களுடனும் இயல்கிறது. சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர் காப்பியம் முழுமையும் விருத்தத்தால் படைப்பதற்கு இவர் ஆங்காங்கே ஒருசில விருத்தங்களைப் படைத்துத் தோற்றுவாய்த் தந்துள்ளார் என்பர். முன்சுட்டிய பாரதவெண்பா இந்நூலுக்கு முன்னோடியாக இருந்திருக்கலாம் எனவும் மொழிவர். தொண்டைமண்டலச் சதகம் இவர் பன்னீராயிரம் பாடல் பாடியதாக நவிலும். 13ஆம் நூற்றாண்டில் மற்றொரு பாரத மொழிபெயர்ப்பு எழுந்துள்ளதைக் கல்வெட்டொன்று அறிவிக்கிறது.

கிடைக்கும் மொழிபெயர்ப்புகளுள் 14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வில்லிபுத்தூராழ்வாரின் 'வில்லி பாரதம்' முழுமையானதில் முதலாவதாக அமைகிறது. அகஸ்திய பட்டரின் வடமொழி பாரதத்தை வில்லி மொழிபெயர்த்துள்ளார். எனினும் வியாசர் பாரதமே மூலநூல் என்பது மரபு. பத்துப்பருவங்களில் 4345 விருத்தப்பாவில் இப்பாரதம் அமைகிறது. பதினெட்டாம் நாட் பாசறைப் போருடன் நிறைவுறுகிறது. கம்பருக்குச் சடையப்ப வள்ளல் அமைந்தது போல் இவருக்கு வரபதி ஆட்கொண்டான் எனும் கொங்கர் குலத் தலைவர் இப்பாரதம் படைக்க ஆதரவு நல்கியுள்ளார். பிற்காலத்தில் 18-ஆம் நூற்றாண்டில் அட்டாவதானம் அரங்க நாத கவிராயரென்பவர் 2477 பாடல்கள் பாடி எஞ்சிய வில்லிபாரதத்தை நிறைவு செய்துள்ளார். வில்லியின் பாரதம் வடசொற்களை மிகுதியாகப் பயன் கொண்டுள்ளது. அவ்வடசொற்களைத் தனிமொழியாகவும், தொடர் மொழியாகவும் மூலமே விளங்காதபடி திரித்தும் மொழிபெயர்த்தும் பாடுகிறார் என்பர் மு. அருணாசலம் (தமிழ் இலக்கிய வரலாறு - 14ஆம் நூற்றாண்டு). வில்லியின் இப்பாரதத்தை அவர் மகனார் வரந்தருவாரும் பாடி நிறைவு செய்தார் எனும் கருத்தும் நிலவுகிறது. ஆனால் அப்பகுதி கிடைக்கவில்லை.

சென்ற நூற்றாண்டில் நல்லாப்பிள்ளை, முருகப்பிள்ளை என்ற இருவர், வில்லிபாடிய பாரதம் மிகச் சுருக்கமாக உள்ளதாகக் கருதி அவர் பாடிய பாடல்களை அப்படியே வைத்துக்கொண்டு, நாட்டுப்படலம், நகரப்படலம் என்ற பகுதிகளையும் அமைத்து,

புதியனவாகப் பதினாயிரம் பாடல்கள் பாடி, முதல், இடை, கடையில் சேர்த்து விரிவாக்கியிருக்கிறார்கள். நல்லாப் பிள்ளை பாரதம் என இது வழங்கும். ஆக, தமிழின் முழுமையான பாரதக்கதை 18 பருவங்கள், 132 சருக்கங்கள் 15300 பாடல்கள் பெற்றுள்ளது. தமிழிலக்கிய வரலாற்றில் இம்முயற்சி குறிப்பிடத்தக்க தொன்றாம். காலம் மற்றும் ஆசிரியரும் அறியாத 'மாவிந்தம்' எனும் நூலும் 1378 விருத்தங்களில் பாரதக் கதையைப் பகருகிறது.

பாரதத்துள் காணப்படும் கிளைக்கதைகளும் மொழி மாற்றம் பெற்றுள்ளன. நளன் கதை பாடியோரில் 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த புகழேந்தியும், 16ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அதிவீரராமபாண்டியரும் குறிப்பிடத்தக்கவராவர். நளவெண்பா என முன்னவராலும், நைடதம் எனப் பின்னவராலும் படைக்கப்பட்டது. 424 வெண்பாக்களால் இயன்ற புகழேந்தியின் நளவெண்பா மிகவும் புகழ் பெற்ற காப்பியமாகும். 'வெண்பாவிற்குப் புகழேந்தி' என்ற பெருமை பெற்றதற்கு இச்சிறு நூலே காரணமாம். சுயம்வரகாண்டம், கலிதொடர்காண்டம், கலிநீங்கு காண்டம் என மூன்று காண்டங்களாக அமைந்துள்ளது. மகாபாரதத்தில் உள்ள கிளைக்கதை நளோபாக்கியானத்தைத் தழுவி தமிழில் புகழேந்தி மொழிந்துள்ளார்.

அதிவீரராம பாண்டியர், ஹர்ஷ சக்கரவர்த்தி பாடிய வடமொழி பஞ்சகாவியங்களுள் ஒன்றான நைஷதம் எனும் (நிஷத நாட்டு மன்னன் சரிதம்) நூலை நைடதமாக மொழிபெயர்த்தார். 'நைடதம் புலவர்க்கு ஔடதம்' எனும் பழமொழி இதன் பெருமையை உணர்த்தும். 28 படலங்களும் 1173 பாடல்களும் அமைந்தது.

நல்லூர் வீரை ஆசு கவிராயர் பாடிய அரிச்சந்திர புராணம் எனும் நூல். கி.பி. 16இல் எழ, கி.பி. 15இல் அரிச்சந்திர வெண்பா எழுந்துள்ளது. இந்நூல் முன்னவருக்கு வடமொழியில் அரிச்சந்திரன் கதையை மொழிபெயர்க்கப் பெரிதும் துணை நின்றுள்ளது. வெண்பா நூல் முன்பின் இடைப் பகுதிகள் சிதைவுடன் 304 வெண்பாக்களுடன் மட்டுமே இன்று கிடைக்கின்றது. இதுவும் உரையிடையிட்டப் பாட்டுச் செய்யுளாகும் (சம்பு காவியம்). இதில் ஒவ்வொரு வெண்பாவையடுத்தும் உரைநடையமைந்துள்ளது. வடமொழி அரிச்சந்திரன் கதையை யொட்டிச் சில இடங்களில் விரித்தும், சிலவிடங்களில் சுருக்கியும் நூல் படைத்துள்ளார்.

ஆசுகவிராயரின் நூல் காப்பிய வடிவில், விருத்தப்பாவினால் ஆனது. முழுமையும் கிடைப்பது. பத்துக் காண்டங்களும் 1215 பாடல்களும் கொண்டது. தமிழகத்தில் மிக்க புகழுடன் விளங்கிய நூலுமாகும்.

17ஆம் நூற்றாண்டில் மதுவைப்பட்டி திம்மையனின் விருப்பத்திற்கிணங்க அம்பலத்தாடுமையன் என்னும் புலவர் சந்தனு அரசனின் வரலாற்றை 'ஆதிபருவத்தாதி பருவம்' எனும் பெயரில் மொழியாக்கம் செய்துள்ளார். 'ஆதிபருவத்தந்தாதி' எனவும் வழங்கப்படும் இந்நூல் 1951இல் வெளியிடப்பட்டுள்ளது.

7500 அடிகளில் அமையும் வைகுந்த அம்மானை, தருமர் அசுவமேதயாக அம்மானை - அருணாசலம் செட்டியார், நளச்சக்கரவர்த்தி அம்மானை - ஏகாம்பர முதலியார், மகாபாரதக் கும்மி - ராமசாமி கவிராயர், தருமர் அசுவமேதயாகப் புராணம் - சரவணக் கவிராயர், அர்ச்சுனன் தபசு - இராமானுஜ சுவாமி, துரோபதை குறவஞ்சி நாடகம், பஞ்சபாண்டவர் வனவாசம் - புகழேந்திப் புலவர், அர்ச்சுனன் வில்வளைப் பென்னும் துரோபதை மாலையீடு நாடகம், அரக்கு மாளிகை நாடகம், கீசகசம்மார நாடகம் எனப் பல மகாபாரதக் கதைகள் நாட்டுப்புறவியலிலும் மலர்ந்துள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பாரதக் கதைகள் பல நாடகங்களாக உருவாக்கப்பட்டுள்ளன. அரக்கு மாளிகை நாடகம், அரிச்சந்திரன் விலாசம் (1867); சூது துகிலுரிதல் நாடகம் (1870); தமயந்தி நாடகம் (1877); நளவிலாசம் (1882), ஸ்ரீமகாபாரத விலாசம் (1882); அர்ச்சுனன் தபசு நாடகம் (1891); அரவான் களபலி நாடகம் (1897); கிருஷ்ணன் தூது நாடகம் (1897); அரிச்சந்திரன் நாடகம் (1898) எனப் பல சான்றுகளாகும். இராமாயணக் கிளைக்கதைகளில் அகலிகை கதை தனித்துச் சிறப்புறுவது போன்று பாரதத்தில் அரிச்சந்திரன் கதையும், நளன் கதையும் புகழ் பெறுகின்றன.

இருபதாம் நூற்றாண்டில் பாரதியின் பாஞ்சாலி சபதம், இந்திய விடுதலைப் போராட்டக் காலச் சூழலை முன்கொண்டு நாட்டுப்பற்றைச் சிறப்பித்த புகழ் கொண்டது. சபாபதி முதலியாரின் பாரத விலாசம், வைரக்கண் வேலாயுதப் புலவரின் பாரத விலாசம் - நச்சுப் பொய்கை, வை. இராமலிங்கம் பிள்ளையின் நளச் சக்கரவர்த்தி விலாசம் என்பன பிற.

நேரிடையான வியாசர் பாரத மொழிபெயர்ப்புகளாகவும் பல எழுந்துள்ளன. அவை முழுமை நிலையிலும் பகுதிகளாகவும்

அமைகின்றன. செய்யுள் வடிவத்தையும் உரைநடையையும் மேற்கொண்டுள்ளன. எம். தாதா தேசிக தாதாசாரியார் (1878-1880) 14 பகுதிகளில் உரை நடை வடிவில் மொழிபெயர்த்துள்ளார். உவே. ஸ்ரீநிவாஸாசாரியரும் பல பகுதிகளில் 'மஹா பாரதம்' என (1901-1913) மொழிபெயர்த்துள்ளார். டி. ராமானுஜ நாயுடுவின் மொழிபெயர்ப்பு 1899இல் வெளிவந்துள்ளது. தற்காலத் தெழுந்தனவற்றுள் ஏ.எல். நடராசன் (1964, 65); கிருபானந்த வாரியார் (1965); ராஜகோபாலாசாரியார் (1973); மிழலைத் தொண்டன்; சரசுவதி ராம்னாத் முதலானோர் மொழிபெயர்ப்புகள் சுட்டத்தக்கன. தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட பி.ஆர். சோப்ராவின் மகாபாரத வசனம் இந்தி மொழியிலிருந்து வெங்கட்டால் தமிழில் பெயர்க்கப்பட்டதும் இணைத்து நோக்கற்பாலது. இம் மொழிபெயர்ப்பு மிகுந்த வரவேற்பைப் பெற்றதும் குறிக்கத்தக்கது.

முத்துசாமி முதலியார் (ஆதிபர்வம், சபாபர்வம் - உரைநடை) - 1855, சரவண பண்டிதர் (அசுவமேத பருவம்) - 1881, சண்முகம் பிள்ளை (ஆதிபர்வம் முதல் பீஷ்ம பர்வம் வரை) - 1890, காந்தடை ஸ்ரீனிவாசராகவாசாரியார் (விராடபர்வம்) - 1903, பாரத சாமாச்சாரியார் (சாந்தி பர்வம்) - 1907, பி. கணபதி சாஸ்திரி (சாந்தி பர்வம்) - 1911, அ. வேங்கடேசா சார்யார் (விராட பர்வம்) - 1911, கிருஷ்ண சாஸ்திரி (சாந்தி பர்வம் - உத்யோக பர்வம்) 1914, 1928 போன்றோர் சில பகுதிகளை மட்டும் மொழி பெயர்த்துள்ளனர்.

நளச்சக்கரவர்த்தி சரிதை (1869), அரிச்சந்திரன் சரிதை (கிருஷ்ணமா சாரியார் - 1884), நளோபாக்கியானம் (ச.ம. நடேச சாஸ்திரி - 1931) சாவித்திரி (திருப்புகழ்மணி - 1964) போன்றனவும், மகாபாரத நீதி ரத்னாவளி (என். கிருஷ்ணசாமி ஐயர் - 1888), மகாபாரத வினா விடை (ஆ.ஸி. கஸ்தூரி ரங்கய்யர் - 1908), விதுரநீதி (டி.ஆர். கிருஷ்ணாசாரியார் - 1917) போன்றனவும் இங்குச் சுட்டத்தக்கன. மற்றும் சுப்பராயலு நாயுடுவின் சுருக்க மொழி பெயர்ப்பும் (1871, 1880) குறிக்கத்தக்கது.

இந்து மதத்திற்குப் பெருமை தருவதாக, பாரதத்துள் ஒரு பகுதியாக, கிருஷ்ணன் அர்ச்சுனன் வழி, உலகோர்க்குப் போர்க் களத்தில் பகர்ந்த அறிவுரைகளின் தொகுதியாக விளங்கும் **பகவத் கீதையின் மொழிபெயர்ப்புகள்** தனித்து எண்ணப்பட வேண்டியனவாகும். 13ஆம் நூற்றாண்டில் ஸ்ரீபட்டனார் எனும் வேதபட்டாசுரனால் முதன்முதலில் பகவத் கீதை தனித்து

மொழிபெயர்க்கப்பட்டது. பட்டர் தம் நூலுக்குப் பரமார்த்த தரிசனம் (யாவற்றுக்கும் மேலான பரம்பொருளின் காட்சி) எனப் பெயரிட்டுள்ளார். இந்நூலுக்குப் பழைய உரையொன்றும் உள்ளது. உரையாசிரியர் பெயர் அறிய இயலவில்லை. நூலின் 3 காண்டங்களில் 18 அத்தியாயங்களில் வடமொழி தலைப்பையே பெற்று முற்றிலுமாக மூலத்தை ஒட்டியே செல்கின்றது. 545,569,570 என மொத்தப் பாடல் எண்ணிக்கைகளில் வேறுபாடு காணப்படுகிறது. பல்வகைப் பாக்களாலும், சந்தங்களாலும் அமைந்துள்ள இந்நூலை வடமொழியறியாத வேதாந்த மார்க்கத்தார் சிலர் மட்டுமே வழக்கில் வைத்திருப்பதாகக் குறிப்பர்.

சுமார் 40 மொழிபெயர்ப்புகள் பகவத்கீதைக்கு எழுந்துள்ளமை நவிலத்தக்கது. சமயச்சார்பு அடிப்படைக் காரணம் என்பது வெளிப்படை எஸ். முத்து ஐயரும் (1907), ஆர்சி. நாமதேவும் (1957) வெண்பா வடிவினை இதற்கு அளித்துள்ளனர். திருவாமாத்தூர் திருவேங்கடநாதரும் (19நூ), அ. ராமசாமி பிள்ளையும், 'கீதாசாரத் தாலாட்டு, பாடியிருப்பதும் நவிலத்தக்கது. வீர சுப்பையா சுவாமி (1913-1915)8 பகுதிகளாகப் பகவத் கீதையை மொழிபெயர்த்து உரை தந்துள்ளார். பெரும்பாலும் செய்யுள் வடிவில் மொழிபெயர்த்துள்ளோர் உரையுடன் தருவது குறிப்பிடற்பாலது.

இதன் ராஜாஜியின் தமிழ் வடிவம் 'பகவத் கீதை கைவிளக்கு' என (1958) வெளிப்போந்துள்ளது. மற்றும் பாரதியார் (1955), சுத்தானந்த பாரதி (1942), சித்பவானந்தர், என். சுப்ரமணியம் (1949), காமாக்ஷிதாசன் (1972), பூவை. கலியாணசுந்தர முதலியார், கண்ணதாசன் (1977), ஹா.கி. வாலம் (1964) போன்றோர் மொழிபெயர்ப்புகளும் சுட்டத்தக்கன. கு. குமார சுவாமி (1968), கே. வடிவேலு செட்டியார் (1924) போன்றோர் உரைநடை வடிவமும் அளித்துள்ளனர்.

**புராணங்கள்**

புராணங்கள் பொதுவாக வேத ஆகமங்கள் விதித்த வற்றையும் விலக்கியவற்றையும் கதைகள் மூலமாக மக்களுக்கு உணர்த்தி நன்னெறி புகட்டுவதற்காக எழுந்தவை. கதைகளோடு விதிகளும் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கும். புராணங்களில் எண்ணற்ற விரதங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றின் இலக்கணம், பயன், முன் கடைப்பிடித்துப் பலன் அடைந்தவர், அவர்

வரலாறு போன்றனவும் விளக்கம் பெற்றிருக்கும். மக்களை நல்வழிப்படுத்தலே புராணங்களின் நோக்கம். மனித இயல்பைக் கடந்த செய்திகள் பலவும் இதனுள் இணைந்துள்ளன. இப்புராண மொழிபெயர்ப்புகள் 13ஆம் நூற்றாண்டு தொடங்கி 19ஆம் நூற்றாண்டு வரை பரவலாகக் காணப்படுகின்றன.

14இல் எழுந்த கச்சியப்ப சிவாச்சாரியாரின் முருகப் பெருமான் வரலாறுகூறும் கந்தபுராண மொழிபெயர்ப்பு புகழ் பெற்றது. 6 காண்டங்களில் 10345 பாடல்களில் பாடியுள்ளார். சமயத் தத்துவ விளக்கம் சிறப்பிடம் கொள்கிறது. பாலமுருகன் விளையாடல்களுடன் சிவனின் பெருமை பேசும் கிளைக் கதைகளும் இடம்பெற்றுள்ளன. வடமொழி ஸ்காந்த புராணத்தின் ஆறு சங்கிதைகளுள் ஒன்றான சங்கர சங்கிதை இதன் மூலமாகும். இந்நூல் கதை மாந்தராலும், கதைப் போக்காலும், நிகழ்வுகளாலும் பெரிதும் இராமாயணத்தை ஒத்தமைவதாகும். சைவ சமயத் தத்துவம் கூறும் தமிழ் நூல்களுள் இதுவே முதலானதும் சிறந்ததும் ஆகும் என்று நவில்வர்.

இதே நூற்றாண்டின் இறுதியில் சம்பந்தசரணாலயர் எனும் புலவர் 'கந்தபுராணச் சுருக்கம்' ஒன்றைப் பாடினார். 1048 பாடல்களை இச்சுருக்கம் கொண்டுள்ளது. மற்றும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கோடீசுவர ஐயர் என்பவர் 'கந்தபுராணக் கீர்த்தனை' எனும் பெயரால் இந்நூல் முழுமையையும் இசைத்தமிழ் நூலாகப் பாடிப் பலவிடங்களிலும் இசைக் கச்சேரியும் செய்து வந்தது குறிப்பிடத்தக்கது.

கந்தபுராணத்தின் இறுதிப் பகுதியாகிய உபதேசகாண்டம் 15ஆம் நூற்றாண்டில் இருவரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. முன்னவர் ஞானவரோதயர். இப்புராணம் 85 பகுதிகளில் 2602 பாடல்கள் தருகிறது. இந்நூல் முழுமையும் சில மான்மியங்களைக் கதைகளாய் விரித்துரைப்பது. விபூதி, உருத்திராக்கம், ஐந்தெழுத்து, சிவ தருமம், சிவ விரதம், சிவபுராணம் ஆகியவற்றின் பெருமைகளும், சிவத்துரோக பலனும் கூறுகின்றது. சிவபூசை மான்மியம் (821 பாடல்கள்), வேதாந்த ஞானம், மூர்த்தி மான்மியம் போன்றவை சிறப்பான பகுதிகளாம்.

கச்சியப்பரின் மாணவராகிய கோனேரியப்பர், தம் குருவின் விருப்பப்படி உபதேச காண்டத்தை 4368 பாடல்களில் பாடி நிறைவு செய்தார். முன்னவரும் கச்சியப்பரின் மாணவரே. இந்நூலுக்கு

உரையும் உண்டு. இரண்டிலும் இதுவே முதலாவதாகப் (1887) பதிப்பிக்கும்பேறு பெற்றது. "வடமொழி மூலத்தோடு ஞானவரோதையர் நூலையும் கோனேரியப்பர் நூலையும் ஒப்பு நோக்கின், முந்தியது மூலத்தையொட்டிச் செய்யப்பட்டதாகத் தோன்றும். வாக்கை நோக்கின் கந்தபுராணத்தோடு உடன் வைக்கத்தக்கது கோனேரியப்பர் மொழிபெயர்ப்பே" என்பர்.

புராணங்கள் மொழிபெயர்ப்பில் 16ஆம் நூற்றாண்டு மிக்க சிறப்புடையது. உடன் பிறந்தார் பாண்டியர் மூவர், புராண மொழிபெயர்ப்பில் ஈடுபட்ட பெருமையும் கொண்டது. இவர்களுள் மூத்தவரான வரகுணராம பாண்டியர் (குலசேகர பாண்டியர்) இலிங்கபுராணத்தையும், வாயு சங்கிதையையும் மொழிபெயர்த்துள்ளார். இலிங்க புராணம் பூர்வ காண்டம், உத்தர காண்டம் எனும் இரு பெரும் பிரிவுகளில் 154 அத்தியாயங்களில் 2506 பாடல்கள் கொண்டது. அட்டாங்க யோகம் இதனுள் விரிவாகவும், சிறப்பாகவும் பேசப்பட்டுள்ளது. தானங்களின் பெருமை பகரும் 16 அத்தியாயங்கள் முழுமையும் அவ்வாறே உத்தரகாமிய ஆகமத்துள் இடம் பெற்றிருப்பது சுட்டத்தக்கது. சரியை, கிரியை பகுதிகள் பலவற்றைப் பேசும் சாத்திர நூலாக அமையும் இந்நூல் வடமொழி நூலின் சுருக்கமே.

புராணங்கள் பதினெட்டில் சிவபுராணம் பத்தாகும். அப்பத்தில் முதலாவது சைவபுராணம். இதில் உள்ள 12 சங்கிதைகளுள் ஒன்றே மற்றொரு மொழிபெயர்ப்பான வாயுசங்கிதை ஆகும். இதுவும் பூர்வ காண்டம், உத்தர காண்டம் எனும் பெரும் பிரிவுகளில் 60 அத்தியாயங்களில் 1334 பாடல்களால் இயன்றது. (சம்ஹிதை என்பது 'தொகுப்பு' எனும் பொருள்படும். இவ் வடசொல்லே சங்கிதை எனத்தமிழில் குறிக்கப்பட்டுள்ளது) இந்நூல் தரும் பிரமவமிச வரலாற்றில் பல இருடிகள், அவர்கள் மனைவியர், புதல்வர் முதலான வமிச பரம்பரை யெல்லாம் வேறெங்கும் காணாத அளவு மிகவும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது குறிப்பிடற்பாலது. இவ்விரு நூல்களிலும் நூலாசிரியரின் சிவபக்தி நன்கு வெளிப்பட்டுள்ளது.

வரகுணராம பாண்டியரின் இளவலான வரதுங்கராம பாண்டியர் சிவபுண்ணியக் கதைகளைக் கூறும் 'பிரமோத்தர காண்டத்தை மொழிபெயர்த்தார். இதன் மூலம் வடமொழி ஸ்கந்தபுராணத்தின் மூன்றாம் பிரிவாகிய பிரமாண்ட புராணத்தின்

பிரமோத்தர காண்டமென வழங்கும் மூன்றாம் பகுப்பாகும். 22 அத்தியாயங்களும் 1323 பாடல்களும் கொண்டது. இந்நூலுக்குப் பெருமை தருவது 'சிவகவசம்' பகுதியாகும். சைவ சமயத்தில் சரியைக்கான சாத்திரப்பகுதி கூறும் புராணங்களுள் இது தலையாயது.

வரகுணராம பாண்டியரின் மற்றொரு இளவலான அதிவீரராம பாண்டியர், பாரதத்தின் கிளைக்கதையாக நைடதத்தை மொழிபெயர்த்தது முன்பே சுட்டப்பட்டுள்ளது. இவர் மொழிபெயர்த்த புராணங்கள் காசி கண்டமும், கூர்ம புராணமும் ஆகும். காசி கண்டம் சங்கர சங்கிதையின் பன்னிரு பிரிவுகளுள் ஒன்றாம். பூர்வ, உத்தர காண்டப் பகுதிகளின் 100 சிறு பிரிவுகளில் 2526 பாடல்கள் உள. சிவனின் 108 திருநாமங்களை வரிசைப் படுத்துகையில் திருமாலின் திருநாமங்களையும் இணைத்திருப்பதும், பாகவரைப் பழிப்பதும் சைவநெறியைப் பழிப்பதும் பதிதர் செய்கை' என்று மொழிந்திருப்பதும் சமயப் பொறைக்குச் சான்றாம். நூலுள் 'வச்சிரபஞ்சர கவசம்' என்ற பெயரில் இடம்பெற்றிருக்கும் 'சக்திகவசம்' நூலை மக்களிடையே சிறப்புறச் செய்துள்ளது. சிவாட்டகத்திற்கும் இப்பெருமையுண்டு.

திருமால் கூர்மாவதார மெடுத்த காலை அவ்வடிவோடு சிவனுடைய பெருமையை முனிவர்களுக்கு உரைத்த காரணத்தால் கூர்ம புராணம் எனப் பெயர் பெற்றது. பூர்வ, உத்தர காண்டம் எனும் பகுப்பில் 9 அத்தியாயங்களில் 3717 பாடல்களும் உடையன. பொதுவாகப் பிற சைவ புராணங்களின் பொருட் கூறுகளை இதுவும் கொண்டது. இராமன் கண்ணன் அவதார வரலாறுகளும் மிக விரிவாக இங்கு இயம்பப்பட்டுள்ளன. இராமன் வரலாறு முழுமையிலும் கம்பராமாயணக் கருத்தும் சொல்லும் தொடரும் மிக அதிகமாய்ப் பயின்று வரக் காணலாம்.

மாக மாதத்தில் (மாசி) நீராடுவதன் புண்ணியத்தைப் பாடும் மாக புராணத்தையும் இவ்அதிவீரராம பாண்டியர் மொழிபெயர்த்தார் என்ற கருத்தும் அதற்கு எதிர்ப்பும் உண்டு.

18ஆம் நூற்றாண்டைச் சார்ந்தக் கச்சியப்ப முனிவர் பார்க்கவ புராணத்தை விநாயக புராணமாக மொழிபெயர்த்ததும் குறிப்பிடத்தக்கது. விநாயகருக்குள்ள ஒரே புராண நூல் இதாகும். திருவாவடுதுறை ஆசிரியரான இக்கச்சியப்பர் இந்நூலை உபாசனா காண்டம், லீலா காண்டம் எனும் இரு பெரும் பிரிவுகளில் 91

படலங்களில் 6225 விருத்தங்களில் பாடியுள்ளார். குளத்தையூர் வள்ளல் சிதம்பரபூபன் வேண்டுதலின் பேரில் இப்புராணம் மொழிபெயர்க்கப்பட்டது. மயூரேசர் திருவவதாரப் படலத்துள் இணைத்துள்ள 'விநாயகர் கவசம்' குறிப்பிடற்பாலது.

இவை தவிர, எழுந்துள்ள எண்ணற்ற புராண மொழி பெயர்ப்புகளுள் துரைசாமி மூப்பனாரின் கருட புராணம் (1883); ஈக்காடு ரத்தினவேலு முதலியாரின் ஸ்ரீசைவ புராண மென்னும் ஸ்ரீசிவமஹாபுராணம் (1900); வி.ஆர். சுப்பிரமணிய ஐயரின் திரிபுர ரகசியம் (1914); ஆலால சுந்தரம்பிள்ளையின் தேவிபாகவதம் (1908, 1915); துர்க்காதாஸ் எஸ். கே. ஸ்வாமியின் ஸ்ரீதேவி பாகவதம் (1967, 72, 75); பி. இராமாநுஜ நாவலரின் பத்மோத்ரபுராணம் (1870); தி.ஈ. ஸ்ரீனிவாசராகவாச்சாரியின் விஷ்ணுபுராணம், வேதாந்த ராமானுஜாச்சாரியாரின் ஸ்ரீவிஷ்ணு புராணம் (1925), வேதமலையப்ப பிள்ளையின் மச்சபுராணம் (1900) ஆகியனவும் குறிப்பிடத்தக்கன.

நாராயண பட்டரின் ஸ்ரீநாராயணீயம், எச். பார்வதி (1974); சச்சிதானந்தம் (1962); பத்மநாபன் (1978) போன்றோராலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. எம்.எஸ். விஜயராகவனும், பி.ஆர். வேங்கட தீக்ஷிதரும் இணைந்து மற்றொரு மொழிபெயர்ப்பு (1981) தந்துள்ளனர். பலரின் மொழிபெயர்ப்புகளைப் பெற்ற புராணமாக இது விளங்குகிறது.

புராணங்களின் மொழிபெயர்ப்பில் குறிப்பிட்ட ஒரு பகுதியை மட்டும் மொழிபெயர்க்கும் பாங்கும் அமைகிறது. கூர்ம புராணம் உத்தர காண்டத்து 112ஆவது அத்தியாயமான ஈசுர கீதையையும் (338 பாடல்கள்) சூதசங்கிதையின் யக்ஞ வைபவ காண்டத்தில் உபநிடதப் பொருளைக் கூறும் பிரமகீதையையும் (547 பாடல்கள்) 15ஆம் நூற்றாண்டில் தத்துவராயர் மொழிபெயர்த்தது எடுத்துக் காட்டாகும். முன்னூலுக்குச் சிவப்பிரகாசம் என்ற பெயரும் உண்டு. இவரே சூதசங்கிதையின் முக்திக் காண்டத்தில் உள்ள சசிவர்ணத்தின் கதையைச் 'சசிவன்னபோதம்' ஆகவும் மொழிபெயர்த்துள்ளார்.

தமிழிலக்கியப் பரப்பில் பேரிடங்கொள்ளும் தலபுராணங்கள் பற்றியும் இவண் எண்ணலாம். கி.பி. 13இல் பெரும் பற்றபுலியூர் நம்பிகளின் நம்பி திருவிளையாடல் தொட்டு இன்றுவரை சுமார் 1000 தலபுராணங்கள் எழுந்துள்ளன. (காண்க.

அ. மாதவன், தமிழில் தலபுராணங்கள்) அவை தம்மை வடமொழியின் மொழிபெயர்ப்பாக மொழிதல் சுட்டத்தக்கது. ஆயின் உண்மையில் அவை மொழிபெயர்ப்பன்று என்பதே ஆய்வாளர் பலரின் துணிபாகும். பின் ஏன் இவ்அவல நிலை என்ற வினாவிற்கு விடையாக, 'தலமான்மியங்களைப் பதினெண் புராணங்களினொன்றினோடு இயைத்துரைப்பது அவற்றின் பெருமையை மிகுத்துக் காட்ட வேண்டுமென்னும் கருத்தினாலாம். யாதானும் ஒரு தமிழ் நூல் ஆரியத்தினின்று மொழிபெயர்க்கப் பட்டதனால் மட்டும் யாவரும் ஒத்துக் கொள்ளத்தக்க பெருமையுடையதாம். அதுவும் வேத ஆகம புராண இதிகாசங்களில் ஒன்றைச் சார்ந்ததாகவும் பின் நிகழப் போகிற வரலாறுகளை முன்னரே கூறிவைத்ததாகவும் இருக்க வேண்டும் என்னும் இத்தகைய போலிக் கொள்கைகள் பிறருடைய பழக்கங் காரணமாகவே சென்ற சில நூற்றாண்டுகளிலிருந்த மக்களிடையே தோன்றின' என்பர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் (செந்தமிழ்ச் செல்வி, தொகுதி-5, 1927-28, பக். 16-17).

"தலபுராணம் எழுதியவர்கள் சிறந்த மனோதத்துவ நிபுணர்கள் என்றே சொல்ல வேண்டும். வெறுங் கதையாகப் புனைந்தால் மக்களுக்குப் பற்றுதலும் நம்பிக்கையும் மனநிறைவும் ஏற்பட மாட்டா; ஆகவே வடமொழியில் பிரமாண்டத்தில் அல்லது ஸ்காந்தத்தில் அல்லது பவிஷ்யோத்தர புராணத்தில் இது உள்ளது என்று சொல்லி வைத்தார்கள். அங்கு இருக்கிறதா என்று யாரும் பார்த்ததில்லை (இல்லை என்பதே உண்மை). பிற்காலத்தில் இவர்கள் மிகவும் சாமர்த்தியமாகக் கதைகளை வடமொழியில் எழுதியும் வைத்தார்கள். இதற்கு உதாரணமாகத் தென்குடித்திட்டை என்ற பாடல் பெற்ற தலத்தின் புராணத்தைக் குறிப்பிடலாம். 2170 சுலோகங்கள் 40 அத்தியாயங்களாக உள்ளன. இது சனற் குமார சம்மிதையில் இருப்பதாகச் சொல்லப் பட்டது. இந்தப் புராணத்தின் முக்கிய நோக்கம் 120 வகைப்பட்ட பஞ்சாட்சர மந்திரத்தையும் அவற்றுக்குரிய யந்திரம் மூர்த்திகள் சிவபெருமானுடைய உறுப்புகள் முதலிய செய்திகளையும் சொல்வதாகும். இது செய்யப்பெற்ற காலம் 14ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் இருக்கும். எனவே பிற்காலத்தில்தான் வடமொழித் தலபுராணங்கள் பெரும் பகுதி எழுதப்பட்டன என்பதற்கு இது சான்றாகும் என மு. அருணாசலம் குறிப்பார் (16ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாறு).

இத்தல புராணங்களில், 'ஒரு தலத்தில் இந்திரன் முதலான தேவர் சிலர், பிரமன் முதலான மூர்த்திகள், சரசுவதி, இலக்குமி

முதலான சக்திகள், அகத்தியர் துர்வாசர் முதலான முனிவர்கள், சூரியன், சந்திரன் போன்ற கோள்கள் ஆகியோர் பலரோ சிலரோ வந்து தங்கள் தங்கள் பெயரால் இலிங்கம் அமைத்துத் தடாகம் அமைத்து வழிபட்டுப் பேறு பெற்றார்கள் என்ற பல செய்திகள் வடமொழிப் புராணங்களில் புனைந்து சேர்க்கப்பட்டன. அன்றியும் தமிழ்ச் செய்திகள் பலவற்றை வடமொழியில் சொல்ல முயன்றபோது தமிழ்ப் பெயர்களை மிகவும் விசித்திரமாக அமைத்துக் கொண்டார்கள்" என்பதும் இங்கு நவிலற்பாலது (மேற்படி. ப. 37).

இவ்வளவு முயன்று ஏன் தலபுராணப் படைப்பில் தமிழர் மிகுதியாக ஈடுபட்டார்கள் என்ற வினாவிற்கு விடையாக ஆ. வேலுப்பிள்ளை இரு கருத்துகள் கூறியுள்ளார். ஒன்று, 'பல்லவர் காலச் சைவ, வைணவ எழுச்சியால் குன்றுதலுற்ற சமண பௌத்த மதங்கள், சோழப் பெருமன்னர்களின் பரந்த மனப்பான்மை காரணமாக மீளவும் தலையெடுக்கலுற்றன. அவற்றின் வளர்ச்சியைத் தடைசெய்து சைவம் பெற்றுவிட்ட வெற்றியை நிலைநிறுத்த வட இந்தியாவில் முன்பு புராணங்கள் தோன்றியது போலத் தமிழ் நாட்டிலும் சோழர் காலத்தில் புராணங்கள் சில தோன்றின' என்பதாம். மற்றொன்று 'விசய நகர நாயக்கர் காலத்தில் தமிழிலே தல புராணங்கள் பல தோன்றின. இஸ்லாமியர் படையெடுப்பினாலே கோயில்கள் அழியும் நிலை தோன்றியதால் கோயில்களின் பெருமைகளை எடுத்துக் கூறிக் கோயில்களுக்கு ஆதரவாக மக்களைத் திரட்ட வேண்டிய தேவை அக்காலத்தில் நிலவியது. இறைவனடியார்களின் வரம்பு கடந்த கற்பனையில் தலபுராணக் கதைகள் தோன்றின' என்பதாகும் (தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப. 90, 136).

மேற்கண்டனவற்றிலிருந்தும் தலபுராணங்கள் தம்மை வடமொழி மூலம் என்று கூறிக் கொள்வது கற்பனை; அப்படியே மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும் அவற்றை வடமொழியில் யாத்தவர் தமிழகத் தமிழ்ப் புலவரே என்பன வெளிப்படுகின்றன. எனவே இம்மொழிபெயர்ப்புகளை விரித்துரைக்காது, குறிப்பிட்ட ஒரு சில கருத்துகள், மட்டும் இங்குச் சுட்டப்படுகின்றன. 19ஆம் நூற்றாண்டில் மட்டும் 104 தலபுராணங்கள் எழுந்துள்ளன. ஒரே தலத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட புராணங்கள் தோன்றியுள்ளன. சான்றாகப் பெரும்பற்ற புலியூர் நம்பி திருவிளையாடற் புராணம் தோன்றியதன் பின் வீமநாத பண்டிதரால் கடம்பவன புராணம்,

அனதாரியப்ப புலவரால் சுந்தரபாண்டியம், பரஞ்சோதி முனிவரால் திருவிளையாடற் புராணம் எழுந்துள்ளமையை நவிலலாம்.

19ஆம் நூற்றாண்டில் மீனாட்சி சுந்தரம் பிள்ளை 22 தலபுராணங்களைப் பாடிய பெருமை பெற்றுள்ளார். திருநெல்வேலித் தலபுராணம் கிடைப்பனவற்றுள் மிகப் பெரியதாகும். கச்சியப்ப முனிவரின் தணிகைபுராணம், பசுமலை ஞானப்பிரகாசரின் தந்திவன புராணம், சைவ எல்லப்ப நாவலரின் செவ்வந்தி புராணம், அருணாசல புராணம், சுந்தரலிங்க முனிவரின் திருப்பெருந்துறைப் புராணம், வென்றிமாலைக் கவிராயரின் திருச்செந்தூர்த் தல புராணம், உமாபதி சிவாசாரியாரின் கோயிற் புராணம் போன்றன சிறப்புடையன.

இத்தல புராணங்கள் அனைத்தும் குறிப்பிட்ட தலத்தின் பெருமை, அங்கு வீற்றிருக்கும் இறைவன், தன்னை வந்து அடைக்கலம் புகும் தேவர், மானிடர், மாக்கள், பறவைகள் ஆகியோருக்கு அருள் புரிதல் ஆகியனவற்றைச் சிறப்பிக்கின்றன. உடன் அங்கு விளங்கும் புனித நீர்த்துறையின் பெருமையும் நவிலப்படுகிறது. தலம், இறைவன், புனித நீர் இம்மூன்றும் தலம் என்பதனுள் உள்ளடங்கிய நிலையில் தலபுராணம் எனப் பெயர் அமைகிறது.

இங்கே குறிக்கப்பட்டுள்ள இடைக்கால வரையறையுள் மற்றும் பல, சமய மொழிபெயர்ப்புகள் தோன்றியுள்ளன. அவற்றுள் பாகவதம் சிறப்பிடம் கொள்கிறது. கி.பி. 16ஆம் நூற்றாண்டில் தோன்றிய செவ்வை சூடுவாரின் ஸ்ரீபாகவத புராணம் என்னும் இதிகாசபாகவதமும், ஏறக்குறைய உடன் காலத்தவரான அருளாளதாசரின் மகாபாகவதம் அல்லது புராண பாகவதமும் குறிப்பிடத்தக்கன. இதிகாச பாகவதம் வடமொழியில் வியாசரால் 18,000 சுலோகமாகச் செய்யப்பட்டது. 12 ஸ்கந்தமாகப் பிரிக்கப்பட்டது. இதனைச் செவ்வை சூடுவார் அப்படியே 155 அத்தியாயங்களில் 4973 பாடல்களில் மொழிபெயர்த்துள்ளார்.

செவ்வை சூடுவார் சிறந்த பக்தியோடும் புலமையோடும் புராணத்தை மட்டும் சொல்லிக் கொண்டு போகிறார். அலங்காரங்களிலோ, வருணனைகளிலோ காவியரசம் வேண்டுமென்பதிலோ அவர் கருத்தைச் செலுத்தவில்லை. இவர் சொல்லும் கதைகள் வரலாற்று முறையாக இல்லை ஆங்காங்கு முனிவர்கள் வினாவ சூதர் சொல்வதாகக் கதையை யமைத்

திருக்கிறார். சென்ற நூற்றாண்டு வரை தமிழ் மக்களிடையே செல்வாக்கு பெற்றிருந்தது என்பர்.

நெல்லிநகர்வரதராசஐயங்கார் தம் பாகவத மொழிபெயர்ப்புப் பெருமையால் அருளாளதாசர் ஆனார். வாசுதேவன் கதையை முதன்மைப்படுத்தி, மொழிவதால் இந்நூலுக்கு வாசுதேவகதை யென்றும் பெயருண்டு. 132 படலங்கள் 9147 விருத்தங்களால் ஆனது. உபதேசப்படலம் இப்புராணத்தின் சிறப்பான பகுதியாகும். பாதாதிகேசம், ஊசல், திருப்பள்ளியெழுச்சி என்பன நூலுள் இணையும் சில பிரபந்தங்களாகும்.

பிற்காலத்திலும் பல மொழிபெயர்ப்புகள் பாகவதத்திற்கு எழுந்துள்ளன. கடலங்குடி நடேச சாஸ்திரி (1913), வேணுகோபாலா சாரியார் (1926), அண்ணாவி (1966), ஹா.கி. வாலம் (1969), கார்த்திகேயன் (1969) போன்றார் பெயர்ப்புகள் சுட்டத்தக்கன. பிற இதிகாசங்களைப் போன்று இப்படைப்பிற்கும் சுருக்க, பகுதி, உரைநடை மொழிபெயர்ப்புகள் பின்னும் சில உள. அவற்றுள் அஸி. கஸ்தூரி ரங்கய்யரின் 'பாகவத வினா விடை' (1910); ஆர். சிவராம சாஸ்திரியின் 'பாகவத தமிழ் வசனம்' (1909), ஏ.வி. நரசிம்மாச் சாரியாரின் 'பாகவதம்' (1915) என்பன குறிக்கத்தக்கன.

ஆசிரியர் பெயர் அறியப்படாத நிலையில் சர்வ ஞானோத்தர ஆகமம், தேவி காலோத்தர ஆகமம் ஆகியன 14ஆம் நூற்றாண்டில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 15ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கண்ணுடை வள்ளல் வடமொழி குக பத்ததியினை 'நியதிப் பயன்' எனும் மொழிபெயர்ப்பாக 103 கட்டளைக் கலித்துறைகளில் யாத்துள்ளார். இந்நூல், ஆசிரியரின் குரு ஞானசம்பந்தரை முன்னிறுத்தி வினாவிடை யமைப்பில் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. 16ஆம் நூற்றாண்டில் புராணத் திருமலைநாதர் சரபோபநிடதத்தை 'சரபபுராணம்' என மொழிபெயர்த்துள்ளார்.

வீரை கவிராச பண்டிதர் ஆதிசங்கரரின் சௌந்தர்ய லகரியையும் ஆனந்த லகரியையும் இதே காலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவ்விரு நூல்களுக்கும் தற்கால மொழி பெயர்ப்புகளும் உள. கண்ணதாசன், ஹா.கி. வாலம் மொழிபெயர்ப்புகள் அவற்றுள் குறிப்பிடத்தக்கன. 17ஆம் நூற்றாண்டில் சிவப்பிரகாசர் வீர சைவ காப்பியமாகப் பிரபுலிங்க

லீலை எனும் தழுவலைத் தந்துள்ளார். உருவகக் காப்பியமாகவும் இது அமைந்துள்ளது சுட்டத்தக்கது. மற்றும் சதமணிமாலை, சித்தாந்த சிகாமணி எனும் மொழிபெயர்ப்புகளைத்தர 18ஆம் நூற்றாண்டில் சிவஞான முனிவர் சித்தாந்தப் பிரகாசிகை, சுலோக பஞ்சகம், தர்க்க சங்கிரக அன்னம் பட்டீயம், சிவதத்துவ விவேகம் ஆகியவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இதே காலப்பகுதியில் வீரைநகர் ஆளவந்தார் ஞானவாசிட்டம் நூலை மொழிபெயர்க்க ஆறுமுக அடிகள் நிட்டானுபூதியை மொழிபெயர்த்துள்ளார்.

## பிற மொழிபெயர்ப்புகள்

இதுகாறும் கண்டன சைவ, வைணவ சமய பக்திச் சார்புடன் அமைந்தவையாகும். இவை தவிர அறிந்துகொள்ள வேண்டியதொரு மொழிபெயர்ப்பாக அமைவது 15ஆம் நூற்றாண்டு எழுந்த ஆதிவராக கவியின் காதம்பரி காப்பியமாகும். இந்நூல் ஹர்ஷர் அரசவைப் புலவரான பட்டபாணர் வடமொழியில் உரைநடையில் எழுதிப் புகழ் பெற்ற நூலாகும். காந்தருவ பெண்ணாகிய காதம்பரி என்பவளை உச்சயினி நகரத்தரசன் சந்திராபீடன் மணம் புரிந்து கொண்ட வரலாறு இதனுள் விரித்துரைக்கப்படுகிறது. பூர்வ காதம்பரி, உத்தர காதம்பரி எனும் இதன் இரு பிரிவுகளில் இறுதி பட்டபாணரின் புதல்வரால் படைக்கப்பட்டதென்றும் புகல்வர். இதனை ஆதிவராக கவி செய்யுளாக மொழிபெயர்த்துள்ளார். நூல் முழுமையும் எளிய நடையில் அமைந்துள்ளது. படலப் பிரிவுகளில்லை. பூர்வ காதம்பரி, உத்தர காதம்பரி என்ற பெரும் பிரிவுகளில் பாயிரம் உட்பட 1232 பாடல்களில் சுருக்கமாகப் பாடியுள்ளார். பல சந்தப் பாடல்களாகும். இக் காதம்பரியைப் பிற்காலத்தவர் சிலரும் மொழிபெயர்த்துள்ளனர். வை.மு. கோபால கிருஷ்ணன் சந்திரபீட சரிதம் (1918) என்று மொழிபெயர்த்துள்ளார். காதம்பரி என எம். துரைசாமி ஐயங்கார் (1923); ஆர்.வி. கிருஷ்ணமாச்சாரி (1925); சடகோபாச்சார்லு (1887) ஆகியோர் மொழி பெயர்த்துள்ளனர்.

வடமொழிச் சார்புடன் வீரசோழியம், தண்டியலங்காரம் முதலான இலக்கண நூல்கள் எழுந்துள்ளமையும் குறிப்பிடற்பாலன.

**இந்திய மொழிகளிலேயே முதன் முதலில் தமிழில் தான் பைபிள் மொழிபெயர்க்கப்பட்டது.** 1774இல் ஜேபி. பெப்ரீஷியஸ் இதனை மொழிபெயர்த்து வெளியிட்டார் என்பதும் இங்கு இன்றியமையாத தகவலாகும். ஜீகன் பால்கு ஐயர் 1708இல் தொடங்கி இம்மொழிபெயர்ப்பினை 1711இல் நிறைவு செய்தார் என்பர்.

இடைக் காலத்துத் தோன்றிய மொழிபெயர்ப்புகளைக் கண்ணோட்டமிடின் கீழ்க்கண்ட எண்ணங்கள் வெளிப்படுகின்றன.

1. உண்மை மொழி பெயர்ப்புகளை விடத் தழுவல்களே மிகுதி. புராணங்கள், இதிகாசக் கதைகள் தழுவல்களாகவும், சமயத் தத்துவ விளக்க நூல்கள் மொழிபெயர்ப்பாகவும் காணப்படுகின்றன.

2. ஒரே இலக்கியத்தைப் பலரும், பலவிதமாக (சுருக்கம், தழுவல், உரைநடை) மொழிபெயர்த்துள்ளதையும் காண முடிகிறது. இதனால் பல நூல்களின் மொழிபெயர்ப்பு 20ஆம் நூற்றாண்டு வரையிலும் தொடர்வதைக் காண முடிகிறது.

3. பக்திச் சார்புடன், சமயப்பரப்புதல் நோக்கத்தோடு அல்லது நம்பிக்கையின் காரணமாக இராமாயணம், கீதை போன்றவற்றின் மொழிபெயர்ப்புகளில் சில எழுத்துப் பெயர்ப்புகளோடும் அமைகின்றன.

4. மொழிபெயர்ப்புகளுக்கு வழி நூல்களும் எழுந்துள்ளமை நோக்கத்தக்கது. சான்றாகக் கந்தபுராணக் கீர்த்தனையைச் சுட்டலாம்.

5. அதிவீரராம பாண்டியர், சிவஞான முனிவர், கச்சியப்ப சிவாச்சாரியார், சிவப்பிரகாசர் போன்றோர் குறிப்பிடத்தக்க மொழிபெயர்ப்பாசிரியர் ஆவர்.

6. காலந்தோறும் பல மொழிச் சொற்களும் இடை புகுவதை உறுதி செய்யமுடிகிறது. பௌத்த சமயத் தொடர்பால் உய்யானம், விகாரை, தூபி, வேதிகை, போதி, சீவரம் போன்ற சொற்கள் தமிழில் கலந்தன. துரை, ராவுத்தர் போன்றனவும் இடைகலந்த பிற மொழிச் சொற்களே. வடசொற்களோ எண்ணிறந்தன.

7. இடைக்கால மொழிபெயர்ப்புகளில் வடமொழியின் ஆதிக்கத்திற்குச் சமயங்கள் முதற் காரணியாய் துணைநின்றுள்ளன.

8. தமிழ் மொழிபெயர்ப்பு வரலாற்றில் முதல் மொழி பெயர்ப்பு தோன்றியது தொட்டு நூற்றாண்டு தோறும் குறிப்பிடத்தக்க மொழிபெயர்ப்புகளும், மொழி

பெயர்ப்பாளரும் தோன்றியுள்ளதை இக்காலமும் உறுதி செய்கிறது.

*பிற்காலம்*

கி.பி. 19ஆம் நூற்றாண்டு தொடங்கி விடுதலைக்கு முற்பட்ட காலம் வரையிலும் இதனுள் நோக்கலாம். தற்காலத்தில் மொழிபெயர்ப்பு அடைந்துள்ள வளர்ச்சிக்கு அடித்தளமிட்டும், முழுநிலை வளர்ச்சிக்கு முற்பட்டக் காலத்தை இணைக்கும் பாலமாகவும் இக்காலம் அமைதல் இதன் சிறப்பு. மொழிபெயர்ப்புகளில் வடமொழியின் தனியாட்சி ஐரோப்பியர் வருகையால் மாற்றங் கண்டது. மிகுதியும் சமய இலக்கியங்களை மொழிபெயர்த்தல் என்ற நிலை மாறிப் புதிய துறைகளிலும் மொழிபெயர்ப்பு மலரத் தொடங்கிற்று.

வணிகம் காரணமாகவும் சமயப் பரப்புதலுக்காகவும் தமிழகம் புகுந்த வெளிநாட்டவரால் ஆங்கிலம், பிரெஞ்ச் போன்ற மொழிகளும் அரசியல் சூழலால், அரபு, உருது, தெலுங்கு என்பனவும் தமிழில் இடம்பெறலாயின. இக்காலக் கட்டத்தில் வங்கம், மராத்தி போன்ற பிற இந்திய மொழிகளினின்றும் மொழி பெயர்ப்புகள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஐரோப்பியக் கல்வி இதற்கு உறுதுணை யாயிற்று.

ஆங்கிலேயர் ஆட்சியில் மெக்காலே என்பாரின் முயற்சியால் ஆங்கிலக் கல்வி தமிழருக்குக் கிடைத்தது. சென்னை மாநிலத்தில் 1857இல் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டு, சாதிசமய வேறுபாடின்றி ஆண், பெண் இருபாலாருக்கும் கல்வி அளிக்கப்பட்டது. இயற்றமிழ், காலத்திற்கேற்ற புதிய போக்கில் வளரத் தொடங்கியது. ஆங்கிலத்தில் வளர்ந்துள்ள புதிய துறைகள் தமிழில் இல்லை என்பதை உணர்ந்த பலர் அக்குறைகளில் ஒன்றையோ சிலவற்றையோ நீக்குவதைத் தங்களின் நோக்கமாகக் கொண்டனர். ஆங்கிலக் கல்வியுடன் தமிழ்க் கல்விக்கும் வாய்ப்பளித்தமை இங்கு இணைத்து நோக்கற்பாலது. இதற்கு மிகவும் முயன்று உழைத்தவர் பூர்ணலிங்கம் பிள்ளையும் பரிதிமாற் கலைஞரும் ஆவர்.

பாடநூல்களைத் தமிழாக்குவோருக்குப் பரிசளிக்கப் பச்சையப்பர் அறநிலையத்தார் சென்னைப் பல்கலைக் கழகத்தாரிடம் ஒரு தொகையைத் தந்துதவினர். அறிவியலைத் தமிழில் தர முனைந்தபோது தமிழ்ச் சொல்லாக்கத்தின் தேவை யுணரப்பட்டது. எனவே இது பற்றிய கருத்துரைகளும் தோன்றின. சமயப்

பரப்பாளராக இலங்கை சென்ற மருத்துவர் கிரின், தமிழில் புதிய சொல்லாக்கங்களை உருவாக்கும் நெறிமுறைகளை வகுத்திருப்பதும் நவிலத்தக்கது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் உரைநடையிலக்கியங்கள் தமிழில் தோன்றலாயின. அவற்றிற்குப் பின்புலமாக மொழிபெயர்ப்புகள் அமைந்தன. 'தமிழ் நாட்டில் வளர்வதற்குள் மற்ற நாடுகளில் பலவகைக் கதைகள் பெருகி வெளியாகிவிட்டன. அவற்றைப் படித்த தமிழர், அவற்றைத் தமிழில் மொழிபெயர்க்கத் தலைப்பட்டனர். மொழிபெயர்ப்புக் கதைகள் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தன. ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷியா, வங்காளி முதலிய மொழிகளின் கதைகளே பெரும்பாலும் தமிழர் கற்கும் கதைகளாக இருந்தன. அதனால், தமிழ்மொழியில் இந்தப் புதிய இலக்கிய வகை தனக்கென ஒரு பெற்றியோடு வளர்வதற்கு முன்பே பிறநாட்டுக் கதைகள் வந்து வழிவகுத்தன என்று கூறலாம். அவற்றின் செல்வாக்கே தமிழ் நாவல்களில் மிகுந்தது எனலாம்" என்பது இவ்வுண்மையை உணர்த்தும் (மு. வரதராசனார், இலக்கிய மரபு, ப. 160).

"சரித்திரத் தொடர்பு காரணமாக, மேல்நாட்டு இலக்கியங்களில் நமக்குத் தெரிய வந்தது ஆங்கில இலக்கியம். ஆங்கில மொழி வாயிலாகத் தெரிந்த முக்கிய ஐரோப்பிய மொழி இலக்கியங்களில் நமக்கு ஓரளவு பழக்கம் உண்டு. இந்தச் சாளரத்தின் ஊடே பிரெஞ்சு, ரஷ்ய, ஜெர்மானிய, இத்தாலிய, ஸ்காண்டிநேவிய ஆசிரியர்களைப் பற்றி ஓரளவு அறிந்தோம். ஆனால் மற்ற மேலை நாட்டு மொழி இலக்கியங்களைப் பற்றி நமக்குத் துளியும் தெரியாது" என்ற தம்பி சீனிவாசனின் கருத்தும் (யூகோஸ்லாவியச் சிறுகதைகள் முன்னுரை) கூறத்தக்கது.

19இன் இறுதிக்குள் பல உலகப் புகழ் பெற்ற நூல்களும், படைப்பாளரின் படைப்புகளும் ஒன்றிற்கு மேற்பட்ட மொழி பெயர்ப்புகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் ஆங்கில நாடகவாசிரியர் சேக்ஸ்பியர் முன்னிற்பது சுட்டற்பாலது. கிரேக்க ஈசாப் நீதிக்கதைகள் (1853- ஏ. திருவேங்கடம்); பாரசீகக் கதைகள் (1840-ஜேசுதாசன் பிள்ளை); அரபிக் கதைகள் (1875- அண்ணாசாமி முதலியார்); வடமொழி பஞ்ச தந்திரக் கதைகள் (1826- தாண்டவராய முதலியார்) தெலுங்கு கதா ரத்னாவளி (1893, எஸ். முத்துஸ்வாமி), ஜான் மில்ட்டனின் பேரடைஸ் லாஸ்ட் (1863-அ. வேதக்கண்); ஜான்

பனியனின் பில்கிரிம்ஸ் பிராகரஸ் (எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை) என இப்பட்டியல் நீளக் காணலாம்.

சேக்ஸ்பியரின் ஹாம்லெட் (1869- வி. விசுவநாதப் பிள்ளை); மெர்ச்சன்ட் ஆப் வெனிஸ் (1870- வி. விசுவநாதபிள்ளை); மாக்பெத் (1872 - வி. விசுவநாத பிள்ளை), லியர்மன்னன் (1877), ரோமியோ அண்ட் ஜுலியட் (1877), கிம்பலின் (1878), ஒத்தல்லோ (1878), டெம்பெஸ்ட் (1880 - வி. விசுவநாதபிள்ளை), ஆஸ் யூ லைக் இட் (1887 - நடேச சாஸ்திரி), விண்டர்ஸ்டேல் (1887 நடேசசாஸ்திரி), டுவெல்த் நைட் (1892 - நடேச சாஸ்திரி), மெஸர் பார் மெஸர் (1893 - நடேச சாஸ்திரி), மிட் ஸம்மர் நைட்ஸ் டிரீம் (1893 - நாராயணசாமி ஐயர்), ஆஸ் யூ லைக் இட் (1893 - நடேச சாஸ்திரி) என அவரின் பெரும்பான்மை நாடகங்கள் தமிழுக்கு அப்பொழுதே கிடைத்து விட்டன. சேக்ஸ்பியரை முதலில் தமிழுக்கு அறிமுகப்படுத்திய வராகவும், தொடர்ந்து அதில் ஈடுபாடு காட்டியவராகவும் வி. விசுவநாதபிள்ளை காணப்படுகிறார். இச்சிறப்பினை நடேச சாஸ்திரி தொடர்கிறார்.

இக்காலக்கட்டத்தில் எழுந்துள்ள பிறமொழிபெயர்ப்பு களில் வடமொழி நாடகங்களும் சிறப்பிடம் கொள்கின்றன. காளிதாசரின் இரகுவம்சம் (1874 - மொழிபெயர்ப்பாளர் அறிய இயலவில்லை, 1884 சிறுகளத்தூர் ராமஸ்வாமி சாஸ்திரி), சாகுந்தலம் (1876 - இராமச்சந்திரன்), மாளவிகாக்கினிமித்திரம் (1880 - ஸ்ரீனிவாசராகவாச்சாரியார்), மேகதூதம் (1897, எஸ்.ஏ. குமாரசாமிப் பிள்ளை), ஹர்ஷரின் ரத்னாவளி (1878 - தி.ஈ. சீனிவாசராகவாச்சாரியார்) பவபூதியின் மாலதிமாதவம் (1899 - எம்.சி. சடகோபாசாரி), விசாக தத்தரின் முத்ரா ராக்ஷஸம் (1885 - எஸ்.எம். நடேச சாஸ்திரி) பில்ஹணரின் வில்ஹணீயம் (1875 - வ. கணபதிப்பிள்ளை) சூத்திரகனின் மிருச்சகடிகம் (1887 எஸ்.எம். நடேச சாஸ்திரி) என மக்களிடையே செல்வாக்குப் பெற்றவை மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

இக்காலப்பகுதியில் படைப்பிலக்கியங்களில் நாடக மொழிபெயர்ப்புகள் அதிகமான இடத்தைப் பெற்றுள்ளமை நோக்குதற்குரியது. தமிழர் அன்று நன்கு அறிந்திருந்த பிறமொழிகளான வடமொழியிலும் ஆங்கிலத்திலும் நாடகம் உயரிய இடத்தைக் கொண்டிருந்த போழ்து தமிழில் அதன் தோற்றம் இன்மை அவரிடையே பெரும் பாதிப்பைத் தோற்றுவித்ததை இது

வலியுறுத்துகிறது. இந்நாடகங்கள் மற்றும் பலராலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதையும் (Bibliography on Translations pp. 153-159) இணைத்துக் கருதுமிடத்து, நாடகமெனும் புதியதொரு இலக்கிய வகையைத் தமிழ் பெற்று சிறக்க வேண்டும் என்ற ஆவல் மீதூர்ந்த நிலையை உணர முடிகிறது. இதனால் தான் சேக்ஸ்பியரின் நாடகங்கள் பலராலும் பலவடிவிலும் தரப்பட்டன (மேற்படி, பக். 140-147).

நிலவைப் பற்றிய சில உண்மைகள் (1885), முத்துக்களும் கடல் வாழ் அதிசயங்களும் (1899), அண்ட பிண்ட வியாக்கியானம் (1874), ஆங்கில மருத்துவ நூல் சுருக்கம் (1871) என அறிவியல் மொழிபெயர்ப்புகள் சில தென்படினும் தொடர்ந்து வளம் பெற்றதைக் காண இயலவில்லை. மருத்துவ நூல்களில் மட்டும் ஓரளவு காணமுடிகிறது. 1885இல் வட்டுக்கோட்டை வித்தியாசாலை உபாத்தியாயர் வைரவநாதரின் குமாரர் விசுவநாதர் 'வீச கணிதத்தை' மொழிபெயர்த்தார் என்பர் (மொழிபெயர்ப்பு - பண்பும் பயனும், ப. 23). இந்தியச் சரித்திரக் குறிப்புகள் (1884), அமெரிக்கக் கண்டத்தைக் கண்டுபிடித்ததைக் குறித்த சரித்திரம் (1851); உலகச் சரித்திரம் (1880), உலகப் பூகோளம் (1877) என்பனவாகச் சில மொழிபெயர்ப்புகள் பாடத்திட்டத்தின் அடிப்படையில் எழுந்துள்ளமையும் நவிலத்தக்கது.

தொடர்ந்து இருபதின் தொடக்கம் வங்காளி முதலிய பிற இந்திய மொழிகளின் இலக்கியங்களையும் தமிழில் தர முனைந்துள்ளது. இப்பகுதியில் அறிமுகமானோரில் பாரசீகக் கவிஞர் உமர்கய்யாம், ரஷ்ய மொழியறிஞர் டால்ஸ்டாய், பிரெஞ்ச் மோலியர், மாப்பஸான், கிரேக்கக்கவி ஹோமர், ஆங்கில ஆசிரியர் டென்னிசன், வங்கம் தந்த ரவீந்திரநாத் தாகூர், பங்கிம் சந்திரர், சரத் சந்திரர் முதலானோர் குறிப்பிடத்தகுந்தவராவர்.

நாடகங்களுக்கு இணையாகச் சிறுகதைகளும், புதினங்களும் மிகுதியாக மொழிபெயர்க்கப்படலாயின. உலகப் புகழ்பெற்ற பிறமொழிக் கதையிலக்கியங்கள் தமிழில் வருவிக்கப்பட்டன. **பு.வே. சபாபதி முதலியார் மொழிபெயர்த்த வெண்டாமரையாள் (Soldier's wife) என்ற புதினம், 1901இல் கதா மஞ்சரியில் வெளிவந்து முதல் மொழிபெயர்ப்புப் புதினமாகும் சிறப்புப் பெற்றது** (தாமரை, ஜூன் 1979, பக். 42) டேனியல் டீபோவின் இராபின்சன் குருசோ, சர்வால்டர் ஸ்காட்டின் ஐவன்கோ,

அலெக்ஸாண்டர் டூமாஸின் லாகம்டே, விக்டர் ஹியூகோவின் லெஸ்மிஸரபில்ஸ் என்பனவும் வங்கமொழிப் புதினங்களும் (ஆனந்தமடம் - மகேச குமார சர்மா - 1906; சந்திரசேகரன் - சி. திருச்சிற்றம்பலம் - 1908; கிருஷ்ண காந்தன் உயில் - த.நா. குமாரஸ்வாமி - 1938; தேவி சந்த்வியானி - சுவர்ணாம்பாள் - 1939, பிரபாவதி - ஸ்ரீசைலதாதாசாரியார் - 1909, ஸவிதா - அ.கி. ஜயராமன் - 1928, விஷவிருக்ஷம் - த.நா. குமாரஸ்வாமி - 1937 என்பன சில சான்றுகள்) குறிக்கத்தக்கன. இந்திச் சிறுகதையாசிரியர் பிரேம்சந்த் கதைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக ஜைலனி மொழிபெயர்த்த பிரேமபஞ்சமி (1940), கே.எஸ். சீனவாசா சார்யாவின் பிரேம்சந்தின் சிறந்த சிறுகதைகள் (1942) ஆகியவற்றைச் சுட்டலாம்.

இங்குக் குறிப்பிடப்பட வேண்டிய பிறிதொன்று சமய மொழிபெயர்ப்புகளாகும். இந்து, கிறித்தவ சமயங்களில் பல தோன்றியுள்ளன. விவிலிய மொழிபெயர்ப்புகள் கிறித்துவ சமயத்தில் சிறப்பிடங்கொள்ள, இராமகிருஷ்ணர் விவேகானந்தர் அறிவுரைகள் இந்து சமய நூல்களில் சிறப்புப் பெற்றுள்ளன. இவற்றை நோக்க இசுலாமிய சமயமொழிபெயர்ப்புகள் இக்காலக் கட்டத்தில் குறைவே. **ஸ்ரீதர் நாயக்கர் மொழிபெயர்த்த பாபு தேவேந்திர நாத தாகூரின் 'பிரும்ம தருமம்' என்ற சமய நூலே வங்காள மொழியின் முதல் தமிழ்ப்பெயர்ப்பு** என்பதும் குறிப்பிடத்தக்கது. (பெ. பானுமதி, வங்கமொழிப் புதினங்கள் சிறுகதைகளின் தமிழ்மொழிபெயர்ப்பு - ஒருதிறனாய்வு, ப. 9).

இப்பகுதியில் வி.விசுவநாதபிள்ளை, நடேச சாஸ்திரி போன்றோருடன் தநா. சேனாபதி, தநா. குமாரசாமி, க. பவானந்தம் பிள்ளை போன்றோர் மொழிபெயர்ப்பில் மிகுந்த பங்கேற்றுள்ளனர். பம்மல் சம்பந்த முதலியார், ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார் ஆகியோர் மேனாட்டார் படைப்புகளைத் தழுவல்களாகத் தந்துள்ளனர். ஓரளவிற்கு உலக இலக்கியங்களைப் பற்றிய அறிமுகம் தமிழருக்குக் கிடைத்துள்ளது எனலாம்.

பலதுறை, பலமொழி நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன என்பதுடன் உரைநடையிலும் மொழிபெயர்ப்புகள் தோன்றின; அவை தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு வளமூட்டின என்பதும் உணர்த்தற்பாலது. மொழிபெயர்ப்புகளின் தேவையை மிகுதியாக உணர்ந்த காலமாகவும் இஃதமைகிறது. தமிழில் வடமொழி பெற்ற செல்வாக்கில் ஆங்கிலம் இடைபுகுந்திருப்பினும் மொழிநடையில்

வடசொல்லாட்சி அமைதல் தவிர்க்க இயலாதாயிற்று. இதனால் பல மொழிபெயர்ப்புகளில் அந்நியத் தன்மை காணப்பட்டது; தொடரமைப்பிலும் எளிமை புறக்கணிக்கப்பட்டது. ஆயின் இவை பின்வந்தோரால் உணரப்பட்டு எளிமையும், தெளிவும் பேணப்பட்டன. தமிழ் மொழிபெயர்ப்பின் விரைந்த வளர்ச்சிக்கு இக்காலம் சிறந்த அடித்தளமாக விளங்கியது என்பதில் ஐயமில்லை.

**தற்காலம்**

தனித்துறையாகச் சிறப்புறுமளவிற்கு இன்று மொழிபெயர்ப்பு பெருமை பெற்றுள்ளது. தேவை மற்றும் விருப்பம் காரணமாக மொழிபெயர்ப்புகள் பெருகி வருகின்றன. 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றிய விழிப்புணர்ச்சி தொடர்ந்து வலிமையுடன் செயல்படுவது இதற்குக் காரணமாம். உலகு அறிவியலில் கண்டுள்ள வளர்ச்சியும் பிறிதொரு குறிப்பிடத்தக்கக் காரணமாகும்.

விடுதலைக்குப் பின் தோன்றிய மொழிபெயர்ப்புகளின் நிலையை, '1935க்குப் பிறகு 1950 வரையில் சரசரவெனப் பல உலக இலக்கிய நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்று ஓரளவுக்கு வாசகர்களிடையே ஓர் ஆர்வத்தினைத் தூண்டின. அப்போதுங்கூட இலக்கிய வேகத்தை உண்டாக்கித் தாங்கக் கூடிய அளவுக்கு மொழி பெயர்ப்புகள் வந்ததாகச் சொல்வதற்கில்லை. ...பிளேட்டோ, ரூஸ்ஸோ, டால்ஸ்டாய் மற்றும் பங்கிம் சந்திரர், ரவீந்திரநாத் தாகூர், பிரேம் சந்த், சரத்சந்திர சட்டர்ஜி, வி.ஸ. காண்டேகர் முதலியவர்களுடைய நூல்கள் தமிழில் மளமளவென்று இலாபத்தைக் கருதாமல் மொழிபெயர்க்கப்பெற்றுத் தமிழ் இலக்கியத்திற்கு வலிமை தந்தன. 1950இலும் அதற்குப் பின்னரும் சோவியத் அரசாங்க ஸ்தாபனமும், அமெரிக்க அரசாங்க ஸ்தாபனமும் ஏற்பட்டு போட்டி போட்டுக் கொண்டு இதில் ஈடுபாடு காட்டின. அதன் விளைவாக, மொழிபெயர்ப்பாளரின் ரசனையின்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களுக்குப் பதிலாகப் பணம் தரக்கூடிய நூல்களை மொழிபெயர்ப்பதில் ஈடுபட்டனர்... இதுவே, நல்ல தரமான இயக்கம் என்று சொல்லும்படியான அளவிற்கு 1956க்குப் பின் சாகித்திய அக்காதெமி, இந்திய அரசாங்கத்தின் சார்பில் ஏற்பட்டு மொழிபெயர்ப்பில் செயல்படத் தொடங்கியது. இதற்கிடையில் சிறிதுசிறிதாக இரஷ்ய, அமெரிக்க அரசாங்கங்கள் மொழிபெயர்க்கப்படும் பணியைச் சுருக்கிக் கொண்டார்கள். 1960க்குப்பின் அவர்கள் நூல்கள் அதிகமாக

வெளிவரவில்லை' என்று பொதுவான நோக்கில் கருத்துரைப்பர். (க.நா. சுப்ரமண்யம், சுதந்திரத்திற்குப் பிறகு மொழிபெயர்ப்புகள், சுடர் 1972, பக். 41-46).

மொழிபெயர்ப்பின் இன்றைய வளர்ச்சிக்குக் காரணிகளாகக் கல்வி, இதழ்கள், நிறுவனங்கள், பதிப்பகங்கள் அமைகின்றன. இவற்றின் பணியினைத் தனித்தனியே நோக்கலாம்.

**கல்வி**

மொழிபெயர்ப்பில் ஓர் விரைவினைத் தூண்டிய காரணி இது. கல்வித் திட்டங்களின் நிறைவேற்றத்திற்குத் தேவையான நூல்கள் தமிழில் இன்மை காரணமாக, அவற்றை நிறைவு செய்தற் பொருட்டு மொழிபெயர்ப்புகள் தோன்றலாயின. தாய்மொழி வழிக் கல்வித்திட்டம் வெற்றிபெறுதற்கு இதன் இன்றியமையாமை உணர்ந்த அரசு தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வழிப் பலரையும் அவரவர் துறைகளில் மொழிபெயர்க்கத் தூண்டியது. எனவே கல்வித் துறைகள் பலவற்றிலும் மொழிபெயர்ப்புகள் மலிந்தன. அறிவியல், மருத்துவம், தொழில்நுட்பம், கலைகள், வரலாறு, அரசியல், புவியியல் எனப் பலதுறைகளிலும் மொழி பெயர்ப்புகள் வளம் பெற்றமைக்கு இது முதற்காரணமாகும். இதன் வளர்ச்சியாக முதற்கண் மொழிபெயர்ப்புகள் பரவலாக, நிகழ்காலத்தில் அவ்வவ் துறைகளில் தமிழில் மூலநூல்களே உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

தேர்ந்த அறிஞரைக் கொண்டு அவ்வவ் துறை சார்ந்த துறைச் சொற்களைத் தனித்து, நூலாக்கத்திற்கு வாய்ப்பாக மொழிபெயர்த்துத் தந்தமையும் கல்வித் துறையின் பாராட்டத் தகுந்த பணியாகும். பாடநூல்களின் தேவை இத்தகு மொழி பெயர்ப்புகளுக்கு மிகப்பெரிய உந்துதலாக அமைந்தது. இவை பெரும்பாலும் ஆங்கில நூல்களிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டன. மிக வேகமாக வளர்ந்து வரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்கள் உடனுக்குடனாகத் தமிழ் மாணாக்கர் மட்டுமின்றி ஆர்வமுடைய பிறரும் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக நாளும் இத்துறையில் மொழிபெயர்ப்புகள் மலர்ந்து கொண்டேயுள்ளன.

பிறமொழியிலக்கியங்களை மொழிபெயர்க்கவும், அது போன்றவற்றைத் (மடல், கட்டுரை) தமிழில் உருவாக்குவதற்கும் 'கல்வி' உறுதுணை நின்றதும் வெள்ளிடைமலை. தமிழ்மொழியின் வளர்ச்சியிலும் இதனால் மொழிபெயர்ப்புப் பங்கேற்றுள்ளது

என்பதில் மிகையில்லை. மொழிபெயர்ப்பிற்கெனக் கல்வித் திட்டங்கள் அவற்றிற்குரிய பாடநூல்களைத் தருவதிலும், புதியபுதிய மொழிபெயர்ப்பாளரை உருவாக்குவதிலும் அக்கறை கொண்டுள்ளது. இதற்கென உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பட்டய வகுப்புகளை நடத்தியது; பல பல்கலைக் கழகங்களில் முதுகலை வகுப்புப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாகவும் கற்பிக்கப்படுகிறது.

**இதழ்கள்**

தமிழ் உரைநடையிலக்கியங்களின் வளர்ச்சியில் இதழ்கள் பெரும் பங்கேற்றன. அவை மொழிபெயர்ப்புகளுக்கும் இடமளித்துச் சிறப்பித்துள்ளன. இம்முயற்சி முன் நூற்றாண்டிலும் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. 'ஜனவிநோதினி' இதழ் வரலாறு, சமூகம், அறிவியல் கட்டுரைகளை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டது. நாராயணசாமி ஐயரின் நடுவேனிற் கனவு விவேக சிந்தாமணியிலும், நடராஜ ஐயரின் 'விக்கிரமோர்வசி நாடகம்' ஞானபோதினி இதழிலும் முதற்கண் வெளிவந்ததாக அறிய முடிகிறது.

பல மொழிபெயர்ப்பிலக்கியங்கள் முதன்முதலில் இதழ்களில் வெளிவந்துள்ளன. அ.கி. ஜயராமனின் மொழிபெயர்ப்புகளான 'அனுராதா', 'கர்வபங்கம்', இரண்டும் சுதேச மித்திரனில் வெளிவந்தவை. 'ஒரு காதற் கதை' ரா. கிருஷ்ணசாமி நடத்திய சங்க நாதம் என்னும் இதழிலும், 'கனவு முடியவில்லை' காண்டீபம் இதழிலும் தொடராக வெளிவந்தவை. இவை போன்றே 'சுபதா' சுதேசமித்திரன் வாரப் பதிப்பிலும், உபாத்தியாயர் மனைவி 'கலைமகள்' இதழிலும், சாவித்திரி 'ராணி' வார ஏட்டிலும், ரா. வீழிநாதனின் மொழிபெயர்ப்பான 'அருவிக்கரை ஆசிரமம்' கல்கி வார இதழிலும் வெளிவந்த ஒரு சிலவாகும்.

இன்றும் பல இதழ்கள் ஒரு சில பக்கங்களை மொழி பெயர்ப்பிற்கென ஒதுக்கியுள்ளமையும் அறிதற்பாலது. குமுதம், குங்குமம் போன்ற பொதுமக்கள் விரும்பிப் படிக்கும் இதழ்களும் மொழிபெயர்ப்புக் கதைகளுக்கு இடமளிப்பது, பாமரரும் போற்றும் வண்ணம் மொழிபெயர்ப்புக்கலை வளர்ச்சி யடைந்துள்ளதை உணர்த்துகிறது. நீண்ட நெடுங்காலமாக மஞ்சரி மாத இதழ் மொழிபெயர்ப்புக் கதைகளை அதிகவளவில் வெளியிட்டு வருகிறது. கலைமகள் போன்றவற்றிலும் அவ்வப்போது மொழிபெயர்ப்புகளைக்

காணலாம். பிறமொழி யிலக்கியங்களை அறிந்து கொள்ள விழைவோருக்கு நல்வாய்ப்பாக இஃதமைகிறது; அதன்வழி அம்மொழியாளர் பற்றிய பன்னோக்கு அறிமுகமும் கிட்டுகிறது.

முழுநிலையில் மொழிபெயர்ப்பாக அமையும் இதழ்கள் பற்றியும் இவண் சுட்டத்தக்கது. சூரியர் அறிவியல் செய்திகளை யளிக்கும் மொழிபெயர்ப்பிதழ். உலகளாவிய நிலையில் இஃது வெளிவருவதாகும். இதனால் தமிழரும் அறிவியலின் வளர்ச்சியை, புதிய கண்டுபிடிப்புகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடிகிறது.

'சோவியத் நாடு', நட்பு நாடான ரஷ்யா பற்றிய அரசியல், பொருளாதார, சமூக, தொழில், அறிவியல் செய்திகளை உணர்த்தியது. சோவியத் ஒன்றியத்தின் இளைஞர் நிலை காட்டும் இதழாகப் 'புதுப்புனல்' அமைந்தது. இவ்விரண்டிலும் சோவியத் இலக்கியங்களும் இடம்பெற்றன. ஒரு நாட்டின் பல் கோணப் பார்வைக்கு இவை பெரிதும் உதவுகின்றன. இவை தற்பொழுது வெளிவருவதில்லை.

மொழிபெயர்ப்புக் காலாண்டிதழாகத் 'திசை எட்டும்' என்பது இன்று பூத்துள்ளது. 2003 சூலை முதல் குறிஞ்சி வேலனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இவ்விதழ் மொழிபெயர்ப்பாளருக்கு ஊக்கம் தருவதாகவும், பன்மொழி இலக்கியங்களை, படைப்பாளிகளை அறிமுகப்படுத்துவதாகவும் அமைந்து சிறக்கிறது. இவ்விதழ் 'இந்தியச் செப்பு மொழிகள் இருபத்தைந்திலிருந்தும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இலக்கிய நூல்களில் சிறந்த படைப்பிற்கு 'நல்லி - திசை எட்டும்' என மொழிபெயர்ப்பு இலக்கிய விருது ஒன்றினை 2004இலிருந்து ஒவ்வொரு ஆண்டும் வழங்கவிருப்பதும் குறிக்கத் தக்கது. இவ்வாண்டு இப்பரிசினைப் பெங்காலி, ஹிந்தி மற்றும் ஆங்கிலம் வழியாகத் தமிழுக்கும் தமிழிலிருந்து பெங்காலி மற்றும் ஆங்கிலத்துக்குமாக 40 நூல்களை மொழிபெயர்த்துள்ள சு. கிருஷ்ணமூர்த்தி பெற்றுள்ளார். பெங்காலியில், ஜெயாமித்ரா படைத்த சிறையனுபவங்களை இவர் 'கொல்லப்படுகிறது' எனத் தமிழ்ப்படுத்தி இப்பரிசை வென்றுள்ளார். (தினமணி கதிர் 1-8-2004).

இந்தி, கன்னடம், மராட்டி, ஒரியா, வங்காளி, தெலுங்கு ..... எனப் பன்மொழிகளின் படைப்புகளை ஒருங்கே சுவைக்கத் தரும் இவ்விதழிலிருந்து ஒரு மைதிலி மொழிக் கவிதையை எடுத்துக்

காட்டாகத் தரலாம். சுஸிமிதா பாடுக் எழுதிய அக்கவிதை, ஆயுதம் என்ற பெயரில்,

கொஞ்சம் தாமதம்தான்
யோசிக்க முடிந்தது
அதனால் சிறிது
மகிழ்வும் கிடைத்தது
தகுதியான எழுத்தினை
குறைவாக எழுதினாலும் போதும்
அதனால் நான்கு நாட்களுக்கு
துன்பம் வராமல் நீங்குகிறது.

மகிழ்வையும் உயிர்ப்பையும்
மலரச் செய்வதற்கே
யோசித்தலும் எழுதுதலும்
மிகவும் தேவையாக இருக்கிறது
மிகவும் தேவையாக இருக்கிறது
அவரவர்களின் போருக்கான
அவரவர்களின்
ஆயுதம்

எனப் பல்லவி குமாரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

### நிறுவனங்கள்

தமிழ் மொழிபெயர்ப்பு வரலாற்றில் நிறுவனங்களின் பணி இன்றியமையாததோரிடத்தை வகிப்பது தனித்துச் சிறப்பிக்கப்பட வேண்டியதாகும். மைய, மாநில அரசு நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் இதில் பெரிதும் ஈடுபாடு காட்டுகின்றன. மொழிபெயர்ப்புத் துறைக்கான அவற்றின் பங்கினை இங்குச் சுருக்கமாகக் காணலாம்.

### உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

மொழிபெயர்ப்புத் துறைக்குப் பெரியதொரு உந்துதலாக விளங்குவது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். முதுகலைப் பட்டயக் கல்வி, பயிற்சிப் பட்டறை, கருத்தரங்கு, சொற்பொழிவு என்பன ஒருபாலாக, மொழிபெயர்த்தல், மொழிபெயர்ப்புகளை வெளியிடல், மொழிபெயர்ப்பு தொடர்பான நூல்களை, கருத்தரங்கக் கட்டுரைகளை வெளியிடல் என்பன மறுபுறம் அமைந்து இந்நிறுவனத்தின் மொழிபெயர்ப்புப் பணியின் பன்முகங்களைக்

காட்டுகின்றன. மொழிபெயர்ப்பினைக் கற்றுக் கொள்ளவும், அதில் பட்டறிவு பெறவும் பட்டயக் கல்வியும் (1979 முதல்) அவ்வப்போது நிகழ்ந்த பயிற்சிப் பட்டறைகளும் (21-1-1991 முதல் 1-2-1991 வரை, 16-9-1991 முதல் 27-9-91 வரை) பெரிதும் துணையாயின. மொழிபெயர்ப்பு பற்றிய அளவிடலுக்கும், அதன் கொள்கை, கோட்பாடு, சிக்கல்கள், தீர்வுகள் முதலானவற்றை விளக்குவதற்கும் கருத்தரங்குகளும், சொற்பொழிவுகளும் இடனாகின. இவற்றின் விளைவாக On Translation (1999). Translation - Theory and Application (2001) என இரு தொகுப்பு நூல்கள் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவன அரையாண்டிதழான தமிழியலில் (JOTS - Journal of Tamil Studies) கமில் சுவலபிலின் தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரத்தின் வேற்றுமை மயங்கியல் வரையிலான முதல் மூன்று இயல்கள், திருமுருகாற்றுப்படை ஆகியவற்றின் மொழிபெயர்ப்புகள் இடம் பெற்றுள்ளன.

நிறுவனக் கல்விப் பணியாளர்கள் மேற்கொண்ட திட்டப் பணிகளின் வாயிலாகப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. Bibliography On Translations (1983) தமிழில் வெளிவந்துள்ள, தமிழிலிருந்து பிறமொழிகளுக்குச் சென்றுள்ள நூல்களின் தொகையைத் தொகுத்து அளித்துள்ளது. துறைவாரியாகவும், மொழிவாரியாகவும் தொகுக்கப்பட்டுள்ள இந்நூலால் உலக அரங்கில் தமிழ் பெற்றுள்ள செல்வாக்கினை ஓரளவு அறுதியிடலாம். நிறுவன மொழிபெயர்ப்பியல் வகுப்பில் இணைந்து கற்ற சு. சண்முக வேலாயுதம் அப்பட்டய மாணாக்கர்க்காக உருவாக்கிய 'மொழிபெயர்ப்பியல்' பாடநூல் குறிப்பிடத்தக்க (1985) முன்னோடி நூலாகும்.

இவை தவிர தொல்காப்பியத்தின் மொழிபெயர்ப்பாகத் தெ. ஆல்பட்டின் Tolkāppiyam - Morphology & Phonology - An English Translation (1986); அ.அ. மணவாளனின் அகத்திணையியல், புறத்திணையியல் மொழிபெயர்ப்பான Porulatikāram of Tolkāppiyam - An English Version (1998), ச.வே. சுப்பிரமணியனும் ஜே. வாசக்கும் இணைந்து உருவாக்கிய 'A Tamil Reader - Introducing Sangam Literature' (1989), பெ.நா. அப்புசுவாமியின் தேர்ந்த 120 சங்கப்பாடல்களில் மொழிபெயர்ப்பான ' A Tamil Verse in Translation' (1987), பாரதிதாசனின் நூற்றாண்டு வெளியீடாக, தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆங்கிலம் என நான்கு மொழிகளில்

வெளியிடப்பட்ட அவரது நூறுபாடல்களின் மொழிபெயர்ப்பு (1994), அ. தட்சிணாமூர்த்தியின் நற்றிணையின் முழுமையான மொழிபெயர்ப்பு, அ.ந. பெருமாளின் தமிழக நாட்டுப்புறக் கலைகளின் ஆங்கிலப் பெயர்ப்பு (Folk Arts of the Tamils - 1983), பழமொழி நானூறு தெலுங்கு மொழிபெயர்ப்பு - உமா (2002) என்பன மட்டுமின்றிக் கு. மீனாட்சியின் அஷ்டத்யாயி தமிழ்ப் பெயர்ப்பு மூன்று தொகுதிகள் (1998), தி.வ. தெய்வசிகாமணி (தெசிணி) மொழிபெயர்த்த பிறமொழிக் கவிதைகளின் தொகுப்பு (தெசிணியின் தமிழாக்கப் பாடல் திரட்டு - 2003) எனப் பிறவும் வெளியிடப்பட்டுள்ளன.

இவைமட்டுமின்றி அனவரத விநாயகம் பிள்ளையின் நாலடியார் மூலமும் உரையும் ஆங்கில மொழிபெயர்ப்புடன், Kuruntogai - M. Shanmugam Pillai & David E. Ludden, Tamil Heroic Poems - G.U. Pope, Nala Venba - M.C. Langton, Cilappatikaram - V.R. Ramachandra Diksidar, காதம்பரி - வாழவந்த பெருமாள், உத்தர ராமசரிதம் - க. சந்தானம், மிருச்சகடிகம் - எஸ்.ஏ. பாலகிருஷ்ண ஐயர், பாஸ மகா கவியின் இரட்டை நாடகங்கள் மாளவி காக்னிமித்திரம் - எஸ்.எஸ். தேசிகன் எனப் பல நூல்களின் மறுபதிப்புகளையும் இந்நிறுவனம் வெளியிட்டு மொழிபெயர்ப்புத் துறைக்குத் தொண்டாற்றி வருகிறது. இவை தவிர மற்றும் சில வழிமுறைகளிலும் மொழிபெயர்ப்புத் துறை வளர்ச்சிக்கு இந்நிறுவனம் துணை நிற்பதை அன்னிதாமசு விரிவாகக் காட்டியுள்ளார் (உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மொழிபெயர்ப்புப் பணி - On Translation, பக். 191-210).

**சாகித்திய அக்காதெமி**

1954ஆம் ஆண்டு மார்ச் 12இல் நடுவணரசால் 'சாகித்திய அக்காதெமி' எனும் தேசிய இலக்கியக் கழகம் உருவாக்கப்பட்டது. இந்தியாவில் இலக்கிய வளம் பெற்ற மொழிகள் அனைத்தினின்றும் முதன்மையான நூல்களைத் தேர்ந்து அவற்றைப் பிற இந்திய மொழிகளில் தருவது இதன் பணிகளுள் ஒன்றாக அமைவது குறிப்பிடத்தக்கது. இலக்கியச் சிற்பிகள் எனும் வரிசை இதில் குறிப்பிடத்தக்கது. ஆண்டு தோறும் சாகித்திய அக்காதெமியின் பரிசு பெறும் அனைத்து மொழி நூல்களும் பிற இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் சிறப்பினைப் பெறுகின்றன. இவ்வகையில் இருநூறுக்கும் மேற்பட்ட நூல்கள் (புதினம், சிறுகதை, கவிதை, நாடகம், இலக்கிய வரலாறு, இந்திய இலக்கியச் சிற்பிகள்) தமிழில்

வெளி வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதுபோன்று தமிழ்ப் படைப்புகளும் இந்திய மொழிகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இதில் 'Ancient Indian Literature - An Anthology' எனும் ஆங்கிலத் தொகுப்பு (2000) பாராட்டப்பட வேண்டியதாகும். பாரதி பாடல்களின் இந்தி மொழிபெயர்ப்பு (ஆனந்திராமநாதன் 1966) சிறுகதைக் களஞ்சியத்தின் வங்காள மொழிபெயர்ப்பு (விஷ்ணுபத பட்டாசார்யா 1974) என்பன பிற சில சான்றுகள்.

1989ஆம் ஆண்டு முதல் இந்திய அரசால் அங்கீகரிக்கப் பட்ட 22 மொழிகளுக்கும் மொழிபெயர்ப்புப் பரிசுகள் வழங்கப்படுகின்றன (பின்னிணைப்பு காண்க).

இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கு வழிகாட்டும் வகையில் மொழிபெயர்ப்பாளர்களுக்கு 1986 முதல் பயிற்சிப் பட்டறைகளையும் சாகித்திய அக்காதெமி நடத்தி வருகிறது. மொழிபெயர்ப்புப் பணியினைத் துரிதப்படுத்துவதற்காகவே பெங்களூர், சாந்திநிகேதன், புதுதில்லி, அகமதாபாத் ஆகிய இடங்களில் மொழிபெயர்ப்பு மையங்களை நிறுவியுள்ளது. அங்கு மொழிபெயர்க்கப்படும் நூல்களையும் உடன் வெளியிடும் பணியையும் மேற்கொண்டுள்ளது. இந்திய மொழிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1957 முதல் 'இந்தியன் லிட்டரேச்சர்' என இரு திங்களிதழாக வெளியிடுவதும் குறிக்கத்தக்கது. சாகித்திய அக்காதெமியின் ஒரு புதிய திட்டமாகக் 'கவி - அனுவாதக்' 2001 முதல் நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சியில் ஒரு மூல மொழிக் கவிஞர் தம் படைப்பை வாசிக்க அந்நிகழ்ச்சி நடைபெறும் இடத்தைச் சேர்ந்த மொழியில் மொழியாக்கம் பெற்று மூலமும் மொழியாக்கமும் நேரிடையாகச் சுவைஞர்க்குப் படித்துக் காட்டப்படுகிறது (திசை எட்டும் - சனவரி - மார்ச் 2004, சாகித்திய அக்காதெமி ஒரு புரிதல் - மு.ரா. குறிஞ்சிவேலன்). இங்ஙனம் தமிழ் மொழிபெயர்ப்பு வரலாற்றில் சாகித்திய அக்காதெமி இன்றியமையாததொரு இடத்தைப் பிடித்துள்ளது.

### நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

நடுவணரசின் கல்வி அமைச்சகத்தின் கீழ் தனி உரிமை பெற்ற தேசிய நிறுவனமாக 1957ஆம் ஆண்டு நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா தோன்றியது. நாட்டு மக்களிடையே புத்தக உணர்வை மேலும் மேலும் இயக்கமாக வளர்ப்பதே அதன் நோக்கம். இது

வெளியிடும் இலக்கிய மொழிபெயர்ப்புகளில் அந்நூல் பற்றியதொரு பொது மதிப்புரை ஒன்று அமைந்திருத்தல் சிறப்பாகும். இந்தியா - நாடும் மக்களும், நாட்டு வரலாறு, இலக்கியம், அறிவியல், இன்றைய உலகம், உலகின் முதன்மையான நூல்கள், இந்திய நாடோடி இலக்கியம், கலை என்பன போன்ற பிரிவுகளால் இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் நூல்களைப் பரிமாற்றம் செய்வது இந்நிறுவனத்தின் முதன்மையான குறிக்கோளாகும்.

நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வெளிவரும் ஆக்கபூர்வமான படைப்புகளைப் பிறபகுதிகளுக்கும் பரப்பும் இவ்வரிசை நூல்கள் தேசிய ஒருமைப்பாட்டுக்கு உந்துசக்தியாக விளங்குவதால் குறிப்பிடத்தக்கவையாகின்றன. ஒரு மாநில மொழியில் வெளியாகும் பிரபலமான படைப்புகள் குறிப்பாகச் சிறுகதைகள், புதினங்கள், பிறமொழிகளில் மொழிபெயர்க்கப் படுகின்றன. சமகால இலக்கியம் மட்டுமே இவ்வரிசையின் கீழ் வெளியிடப்படுவதால் பழைய இலக்கியங்கள் 'செவ்விலக்கியம்' எனும் வரிசையில் வெளிவருகின்றன (நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா - தமிழ்ப் புத்தகங்கள் - நூற்பட்டியல் 2003, பக் 6-7).

இவ்வகையில் தமிழ்மொழிக்கும் பல சீரிய நூல்கள் கிடைத்துள்ளன. இந்தியாவின் தேசியப்பண்பாடு - சு. தட்சிணாமூர்த்தி; தென்னிந்தியக் கோவில்கள் - சு. வேங்கடராமன்; மூலிகைகள் - இராமசுந்தரம், நமது சுற்றுச்சூழல் - சு. விநாயகம், மனித உரிமைகள் - மா. சேதுராமலிங்கம், நமது நீர்வளங்கள் - இளம் பாரதி, வானிலை மாற்றங்கள் - ருத்ர துளசிதாஸ் என்பனவற்றைச் சான்று காட்டலாம்.

புகழ்பெற்ற இலக்கியங்களுடன் (அக்னி நதி - சௌரி, உர்துக்கதைகள் - ரா. வீழிநாதன், கடந்த காலம் - ராஜம் கிருஷ்ணன், பன்கர் வாடி - உமாச்சந்திரன், தர்பாரி ராகம் - சரஸ்வதி ராம்னாத்), குழந்தை இலக்கியத்திற்கும் இது 'நேரு குழந்தைகள் புத்தகாலயம்' வழி மிகுந்த சிறப்பளிக்கிறது. 'குழந்தைகள் தாமாகவே ரசித்துப் படிக்கக் கூடிய வகையில் தரமான செய்திகளைக் கொண்ட குழந்தை இலக்கியத்தை வழங்கும் வரிசை இது. குழந்தைகள் தங்கள் தாய் மொழியிலேயே படிக்கும் வகையில் பல்வேறு துறைகளைப் பற்றிய நூல்களைப் பல இந்திய மொழிகளில் வெளியிடும் இவ்வரிசை, ஒற்றுமை உணர்வை வளர்ப்பதிலும் துணை நிற்கிறது (மேற்படி). அஞ்சல் தலைகளின் கதை (வீ.மு. சாம்பசிவன்), ஆமை - முதலை உலகம் (சு. விநாயகம்) இளம் இந்திய வீரர்கள் (ஆனந்தம் கிருஷ்ணமூர்த்தி), ஒலிம்பிக் விளையாட்டுக்களும் ஒலிம்பிக்

வீரர்களும் (என்.வி.ராஜகோபாலன்), காட்டிலே ஒரு போட்டி (அகிலா சிவராமன்), தோடரும் மலையாடும் (க.வே.சு. மணியம்), நாடகம் போடுவோம் (பூர்ணம் விசுவநாதன்) நீருக்கடியில் விந்தை உலகம் (தெசிணி) என்பன எடுத்துக் காட்டாகின்றன.

இந்தியாவில் வெளியாகும் நூல்கள் பற்றிய விபரங்களை The Book in India எனும் காலாண்டிதழ் மூலம் பிற நாடுகளுக்கு இந்நிறுவனம் பரப்புவதும் சுட்டத்தக்கது (மேற்படி).

**ஆசியவியல் நிறுவனம் (Institute of Asian Studies)**

தமிழ் இலக்கிய இலக்கண வளங்களை உலக அரங்கிற்குக் கொண்டு செல்வதில் ஆசியவியல் நிறுவனம் ஆற்றியுள்ள பணிகள் பாராட்டிற்குரியன. Tolkāppiyam in English (V. Murugan 2001), Paripāṭal (K.G. Seshadri, 1996), Kalittokai (V.Murugan, 1999) எனப் பழந்தமிழ் இலக்கியங்கள் ஆங்கிலவாக்கம் பெற்றுள்ளன. சங்ககாலம் தொடங்கி இக்காலப் புதுக்கவிதை வரையிலுமாகத் தேர்ந்த கவிதைகளின் மொழிபெயர்ப்பை வெளியிடும் நோக்கில், அதன் முதல் தொகுதி 'Tamil Poetry through the ages' என எட்டுத்தொகையை மட்டும் கொண்டு (S.M. Ponnaiah, 1997) வெளிவந்துள்ளது.

நாட்டுப்புற இலக்கியத்தை - கதைப்பாடல்களைச் சுவடியிலிருந்து பதிப்பிப்பதுடன் அவற்றை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிடுவதில் இந்நிறுவனம் பெரும் ஈடுபாடு காட்டுவது கூறத்தக்கது. இவ்வகையில் சுமார் பதினைந்து நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் The Dateless Muse - V. Murugan, 1988 The First Freedom Fighter - The Story of Pūlittēvan - V. Gowri Shankar - 1993, A Tale of Nemesis - (நீலியட்சகானம்) - G.S. Bala Krishnan - 1996, The Epic Eternal - (இராமகாதை) - K.G. Seshadri - 1996 என்பவற்றைச் சான்றாக்கலாம். இங்கு இந்நிறுவனம் வெளியிட்டுள்ள டாக்டர் எம். ராதிகா மொழிபெயர்த்த Varma Cūttiram (A Text on Martial Art) என்பது தனித்துச் சுட்டப்பட வேண்டியதாகும். தமிழரின் வர்மக்கலையை விளக்கி நிற்கும் இந்நூலின் சுவடிகள் ஜப்பானிலிருந்து பெறப்பட்டவையாகும்.

வி.முருகனின், மத்தளவியல் மொழிபெயர்ப்பான The Art of Drumming (1988); கமில் சுவலபிலின், என் சரித்திர (உ.வே.சா.) மொழிபெயர்ப்பான 'The Story of my life, (1990, 1994) என்பனவும் இங்குக் குறிக்கப்பட வேண்டியனவாம். நாயன்மார்களின் பன்னிருதிருமுறையை 20 தொகுதிகளாகவும், ஆழ்வார்களின்

நாலாயிர திவ்விய பிரபந்தத்தை 6 தொகுதிகளாகவும் வெளியிட இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதன் எண்ணம் நிறைவேறும் பொழுது தமிழின் இடைக்காலமான பக்தியியக்கப் படைப்புகளின் பெருமையை வெளியுலகு நன்குணரும்.

### தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழக அரசால் 1981இல் உருவாக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகத் திட்டப்பணிகளுள் மொழிபெயர்ப்பும் இடம் பெற்றிருத்தல் சுட்டத்தக்கது. "தமிழ் இலக்கிய நூல்களைப் பிற மொழிகளிலும் பிறமொழி இலக்கிய, அறிவியல் நூல்களைத் தமிழிலும் மொழிபெயர்த்தல், தமிழ் மொழியிலிருந்து பிறமொழிகளில் பெயர்க்கப்பட்ட மொழிபெயர்ப்பு நூல்களையும், பிறமொழிகளிலிருந்து தமிழில் பெயர்க்கப்பட்ட இலக்கியம், அறிவியல், பிற துறைகளின் மொழிபெயர்ப்பு நூல்களையும் மதிப்பீடு செய்து மொழிபெயர்ப்பு நுணுக்கங்களை ஆய்வு செய்தல்; பல்கலைக்கழக, கல்லூரி ஆசிரியர்களிடம் மொழிபெயர்ப்பு நுணுக்கங்களையும் திறனையும் வளர்த்தல், மொழிபெயர்ப்பு நூலகம் உருவாக்குதல்; மொழிபெயர்ப்பு நுணுக்கங்களையும் துறைசார்ந்த செய்திகளையும் மாணவர்களுக்குக் கற்பித்தல்; மொழிபெயர்ப்பு தொடர்பான ஆய்விற்குத் துணை செய்தல்'' (தமிழ்ப் பல்கலைக்கழகம், ஆண்டறிக்கை 2001) ஆகிய குறிக்கோள்களுடன் மொழிபெயர்ப்புத் துறை ஒன்று இதனுள் செயல்பட்டு வருகிறது.

இதன் வாயிலாகப் பத்துப்பாட்டு (ஜே.வி. செல்லையா, 1985), சிலப்பதிகாரம் (ஆர்.எஸ். பிள்ளை 1989) மணிமேகலை (பிரேமா நந்தகுமார், 1989), பாரதியார், திருக்கோவையார், பெரியபுராணம் (தி.என். ராமச்சந்திரன், 1989, 1990), எனும் தமிழ் இலக்கியங்கள் ஆங்கிலத்தில் மொழிமாற்று கண்டுள்ளன. எட்கர் தர்ஸ்டனின் Castes and tribes of southern India எனும் அரிய ஆங்கில நூல் தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் (க. இரத்தினம், 1987 - 1991), பெர்டோல் பிரெக்ட்இன் நாடகக்கலை (மு. இராமசுவாமி, 1985) எனப் பிறமொழிபெயர்ப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன.

மொழிபெயர்ப்பாளருக்குத் துணை நிற்கும் வகையில் பல துறைகளுக்கும் துறைச் சொல்லகராதிகள் வெளியிட்டுள்ளது இதன் தனிச்சிறப்பாகும். சமூகவியல் மற்றும் மானிடவியல் கலைச்சொல் விளக்க அகராதி (தா. இராபர்ட் சத்திய ஜோசப், 2002) மருத்துவக் கலைச் சொற்கள் (நே. சோசப், 2002), உயிரியல் கலைச்சொல் விளக்க

அகராதி (சி. ஏசுதாசன், 2000), வேளாண்மையியல், மண்ணியல் கலைச்சொற்கள் (இராம. சுந்தரம், 1997) என்பனவற்றைச் சான்றுகளாகத் தரலாம். இந்நூல்கள் தமிழ்ச் சொல்லுக்கு இணையான ஆங்கிலச் சொற்களையும் உட்கொண்டமைகின்றன.

இப்பல்கலைக்கழகமும் மொழிபெயர்ப்புப் பணியை ஊக்குவிக்கவும் நெறிப்படுத்தவும் செயலரங்குகளையும் புத்தாக்கப் பயிற்சிகளையும் நடத்தி வருகிறது. ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர் வழி மொழிபெயர்ப்புத் துறைக்குத் தேவையான பல ஆய்வுகளை மேற்கொள்வதும் குறிக்கத்தக்கதாகும்.

தமிழ்நாடு அரசு

தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாகும் வகையில் தமிழ்நாடு அரசு பல செயல் திட்டங்களை நடைமுறைப் படுத்தியிருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழித் திட்டத்தைச் செயற்படுத்தும் பணிகளும் தமிழ்மொழி வளர்ச்சி குறித்தப் பணிகளும் 'தமிழ் வளர்ச்சி இயக்கக'த்தால் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் வழி, சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம் செயல்படுகிறது. பிறமொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும், தமிழிலுள்ள சிறந்த இலக்கியங்களைப் பிறமொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிட இத்திட்டம் வகை செய்கிறது. இதன்படி வெளியிடப்பெறும் மொழியாக்க நூல்களுக்கு ரூ. 25,000 அல்லது அச்சிடு செலவில் 60 விழுக்காடு தொகை, இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்படுகிறது.

நற்றிணை (ஏ.வி. சுப்பிரமணியன், 1989), கம்பராமாயணம் (7 தொகுதிகள் - பி.எஸ். சுந்தரம் 1989 - 1994) எனத் தமிழ் நூல்களின் மொழிபெயர்ப்புகளை வெளியிட்டும் வருகிறது. மற்றும் தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறை அலுவல்களும் தமிழிலேயே நடைபெற 'மொழிபெயர்ப்புத்துறை' ஒன்றும் தனித்துச் செயல்படுவது கூறத்தக்கது. ஆங்கிலத்தில் எழுதப்பெறும் இன்றியமையாக் கோப்புகள், அறிவிக்கைகள் முதலான பலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தளிப்பது இதன் பணியாகும். தாய்மொழி மூலம் கற்பித்தல் என்ற திட்டத்தின் காரணத்தால் அறிவியல், சமூகவியல், கலை, பண்பாடு முதலான பலதுறைகளிலிருந்தும் பாடநூல்கள் மொழிபெயர்க்கப்படத் தமிழ்நாடு அரசின் தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம் பணிபுரிகிறது. மெட்ரிக் தேர்வின்

பாடப்பகுதியாக அமைந்த தமிழ் இலக்கியங்கள் ஆங்கில மொழிபெயர்ப்புடன் தரப்பட்டமை இங்கு நினைத்தற்குரியது.

**தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்ட், இந்தியா**

போர்டு நிலையத்தாரின் நன்கொடையால் உருவாகி வளர்ந்த தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்ட், இந்தியா தன் நோக்கத்தை, 'தென்னிந்திய மொழிகளாகிய தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளிலும் அறிவும் கலையும் நிறைந்த நூல்களைக் குறைந்த விலைக்கு வெளியிடுவதை ஆதரிப்பதேயாகும். இந்நோக்கத்தை நிறைவேற்ற, 'போர்டு' நிலையத்தாரும் தென்னிந்தியப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் எழுவரும் சேர்ந்து சிந்தித்து, ஏராளமான பல்வகையான சிறந்த நூல்களைக் குறைந்த விலையில் விற்பனை செய்ய இந்த நிறுவனத்தை நிறுவினர். இதற்கென நிறுவப்பட்ட மூன்றாண்டுத் திட்டத்தின் முதல் வெளியீடு இது (கோன் - டிகி). கடுநடையுடைய நூல்களை வெளியிட மேற்கொள்ளவில்லை. ஆங்கிலக் கல்வி இல்லாத படித்த பாமரனுக்கும் பயன்படுமாறு எளிய நடையில் இன்பமும் பயனும் தரும் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்தலே இந்த நிறுவனத்தின் இலட்சியமாகும்.

இலக்கிய வளம் நிறைந்த மூலநூல்களைப் பதிப்பித்தல், கலை, விஞ்ஞானப் புத்தகங்களை வெளியிடல், உலகத்திலேயுள்ள மற்ற மொழி நூல்களை மொழிபெயர்த்தல் ஆகியவையே இந்நிறுவனம் செய்ய விரும்பும் பணிகளாகும். மலிவான இப்புத்தகங்களைத் திறமையான வகையில் தென்னிந்தியா முற்றிலும் பரப்பினால் இவை பட்டி தொட்டிகளிலுள்ள மக்கள் கரங்களிலும் தவழும். அப்போது, இந்நாட்டின் உயிர்நாடி போன்ற மக்களின் வாழ்வில் இன்ப ஒளி வீசும். அத்துடன் இந்தியப் பண்பாட்டை விளக்கும் நூல்களையும் பிறநாட்டு மொழிகளில் உள்ள நூல்களின் மொழிபெயர்ப்புகளையும் வெளியிடுவதன் மூலமாகக் குறுகிய வேறுபட்ட மனப்பான்மை தவிர்க்கப்படும்' (கோன்-டிகி, கே.எஸ். நாகராஜன், நூன்முகம்) என மொழிந்திருப்பது மொழிபெயர்ப்பின் தேவையை வலியுறுத்துவதுடன் அதற்காக அன்று மேற்கொண்ட முயற்சிகளையும் வெளிப்படுத்துகிறது.

இந்நிறுவனம் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் எனும் நான்கு மொழிகளிலிருந்தும் நாற்பது இளைஞரைத் தேர்ந்து அவர்களுக்குப் பயிற்சி முகாம் நடத்தியமை சுட்டத்தக்கது. பல சிறந்த உலக நூல்களை இந்நிறுவனம் தமிழுக்கு அறிமுகப் படுத்தியுள்ளது.

சான்றாகச் சி.ஆர். கண்ணன் மொழிபெயர்த்த தற்கால ஜெர்மானியச் சிறுகதைகள் (1968), மணவை முஸ்தபா மொழிபெயர்த்த பறக்கும் வகுப்பறை (1971), எஸ். சங்கரன் மொழிபெயர்த்த உலகப் பயணம் - ஐரோப்பா (1966), சௌரி தமிழாக்கம் செய்த ஏழாவது குதிரை (1966) முதலானவற்றைத் தரலாம்.

**யுனெஸ்கோ**

உள்நாட்டு நிறுவனங்கள் மட்டுமின்றி உலகளாவிய நிறுவனமான யுனெஸ்கோவும் தமிழ் மொழிபெயர்ப்பிற்கு உறுதுணை நின்றுள்ளமையைத் தம்பி சீனிவாசனின் ஏழு யூகோஸ்லோவியச் சிறுகதைகள், சி. குருமூர்த்தியின் ஆசிய நாடோடிக் கதைகள் போன்றவற்றால் உணரலாம். இதனை முன்னூலின் முன்னுரை 'This translation into Tamil by Thambi Srinivasan of an anthology of Yugoslav short stories is published with assistance of UNESCO as part of Unesco's Major Project for furthering Mutual Appreciation of Eastern and Western Cultural Values' என உணர்த்தும். பின் நூலின் முன்னுரையில் "இத்தொகுப்பு, யுனெஸ்கோவின் ஆசிய கலாசாரக் கேந்திரம் மற்றும் டோக்கியோ புத்தக வளர்ச்சிக் கழகத்தினரால் நிர்வகிக்கப்படும் ஆசிய கூட்டுறவு நூல் பிரச்சாரத் திட்டத்தின் கீழ், யுனெஸ்கோ ஸ்தாபனத்தாரின் ஒத்துழைப்புடன் வெளியிடப்படுகிறது. ஆசிரியர் குறிப்பில் குறிப்பிட்டுள்ளபடி, இதில் சேர்க்கப்பட்டிருக்கும் கதைகள் ஐந்து நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு மத்திய ஆசிரியர் குழுவினரால் ஆசியாவிலுள்ள யுனெஸ்கோவின் அங்கத்தினர் நாடுகளின் ஆலோசனைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன" எனக் கூறியிருப்பது உலகளாவிய நிலையில் மொழிபெயர்ப்பின் இன்றியமையாமை உணரப்பட்டிருப்பதை விளக்கும். நாடுகளிடையே ஒருமைப்பாடு வளரவும் மொழிபெயர்ப்பு துணைநிற்கும் என்பதை இதுபோன்ற செயல்பாடுகள் உணர்த்துகின்றன.

சி. ராஜகோபாலாச்சாரியாரின் அயோத்தியா காண்ட ஆங்கில மொழிபெயர்ப்பு யுனெஸ்கோவின் தொகுப்பிற்காகப் பெறபட்டது (Unesco Collection of Representative Works - Indian Series) என்பதும் அறியத்தக்கது. மற்றும் பிரேமா நந்தகுமாரின், நீண்ட முன்னுரையுடன் கூடிய பாரதி பாடல்கள் மொழிபெயர்ப்பினையும் இந்நிறுவனம் வெளியிட்டுத் (ஓங்கு தமிழ் அக். 2002, ப. 26) தமிழுக்கும் பாரதிக்கும் பெருமை சேர்த்துள்ளது.

ஆண்டுதோறுமாக இந்நிறுவனம் வெளியிடும் மொழிபெயர்ப்பு நூற்றொகையில் (International Bibliography of Translations - Index Translationum) உலக மொழிகளில் நிகழும் மொழிபெயர்ப்புகளின் பட்டியல் இடம் பெறுகிறது. இதன் வழி தமிழ் தந்ததும் பெற்றதுமான மொழிபெயர்ப்புகளையும் அறிய முடிகிறது.

***பதிப்பகங்கள்***

இருபதின் இடைப்பகுதி வரையிலும் மொழிபெயர்ப்பு களின் வெளியீட்டில், வளர்ச்சியில் பல பதிப்பகங்கள் இன்றியமையாத இடங்கொண்டுள்ளன. அவை தம்முடைய அடிப்படை நோக்கங்களில் ஒன்றாக மொழிபெயர்ப்பைக் கொண்டுள்ளமை புலனாகின்றது. அவற்றுள் சிலவற்றை இங்குக் கருதலாம்.

1901இல் தொடங்கி நூற்றாண்டு கண்ட அல்லயன்ஸ் கம்பெனியின் வெளியீடுகளில் அன்று முதல் இன்று வரை மொழிபெயர்ப்பும் சிறப்புறுகிறது. அன்றைய வெளியீடுகளுக்குக் கு.ப. ராஜகோபாலன் மொழிபெயர்த்த துர்க்கேசநந்தினி, மிருணாளினி, இரட்டைமனிதன், டால்ஸ்டாய் கதைகள், கா.ஸ்ரீஸ்ரீ. மொழிபெயர்த்த காண்டேகரின் எரிநட்சத்திரம், காண்டேகர் கதைகள், கண்ணீர், அ.கு. ஆதித்தர் பெயர்த்த கற்புக் கனல் (ரேப் ஆப் லுக்ரீஸ் 1947) என்பனவற்றைச் சான்றாக்கலாம். இப்பொழுது தெலுங்கின் எண்டமூரி வீரேந்திரநாத் எழுதியவற்றைக் கௌரி கிருபானந்தன் மொழிபெயர்க்கவும், உலக மொழி இலக்கிய வரிசையாக உலகமொழியின் புகழ் பெற்ற நூல்களை (சித்தார்த்தன், ராபின்ஸன் குடும்பம், டாம்சாயர், கலிவரின் பயணங்கள், அன்னகரீனா . . . . ) யும் கோட்டயம் புஷ்பநாத் (மலையாளம்) படைப்புகளையும் சிவன் மொழிபெயர்க்கவும் வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கா. அப்பாத்துரை மொழிபெயர்த்த பாலும் பழமும் (வாட்டர் பேபிஸ் - சார்லஸ் கிங்ஸ்லி), ந.சி. கந்தையா மொழிபெயர்த்த கலிவர் யாத்திரைகள் (கலிவர்ஸ் டிராவல் - ஜோனாதன் ஸ்விப்ட், 1950) என்பன ஆசிரியர் நூற்பதிப்புக் கழக மொழிபெயர்ப்புப் பணிக்குச் சான்றுகளாம். தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மிகுதியான மொழிபெயர்ப்புகளைப் பல மொழிகளினின்றும் பெயர்த்துள்ளது. நீ. கந்தசாமிப் பிள்ளை மொழிபெயர்த்த இரங்கற்பா (தாமஸ்கிரே, தி எலிஜி, 1961)

இரா. முத்துக்குமாரசாமி மொழிபெயர்த்த வேக்பீல்டு பாதிரியார் (தி விக்டர் ஆப் வேக் பீல்டு - ஆலிவர் கோல்டு ஸ்மித் 1962), கு. பரமசிவன் மொழிபெயர்த்த ஆலிவர்டுவிஸ்ட் (1957) போல்வன காட்டுகளாகும்.

இவை போன்றே அமுதநிலையம் வெளியிட்ட பி. அய்யாசாமி மொழிபெயர்த்த கதேயின் பாஸ்ட் (1952), ரா. வீழிநாதன் மொழிபெயர்த்த இரு நண்பர்கள் (1951), ஆனந்த தீர்த்தன் பெயர்த்த சொப்பன மாளிகை (வி.எம். இனாம்தார் - கன சின மனெ, 1953); ஸ்டார் பிரசுரம் வெளியிட்ட வி.ஆர்.எம். செட்டியார் மொழிபெயர்த்த கவிதை மின்னல் (பிபி. ஷெல்லி, 1952), ரகுநாதனின் சோவியத் நாட்டுக் கவிதைகள் (1965); கிறித்தவ இலக்கியச் சங்கத்தின் வெளியீடான வி.எஸ்.வி. இராகவனின் இராபின்சன் குரூசோ (1954) யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ் தந்த எம்.ஆர்.எம். அப்துல் ரஹீம் மொழிபெயர்த்த நகரத்தலைவர் (1953), ஏ.எம். அலி பெயர்த்த மாண்டி கிறிஸ்டோவின் மன்னன் (1956) என்பனவற்றை இப்பதிப்பகங்கள் மொழிபெயர்ப்புப் பணியில் காட்டிய அக்கறைக்குச் சான்றாக்கலாம்.

1948இல் தொடங்கப்பட்ட நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் (என் சி பி எச்) 1956 முதல் தமிழ் நூல் வெளியீட்டில் ஈடுபாடு கொண்டது. தொடக்க காலத்தில் சோவியத் யூனியனுடன் இணைந்து செயற்பட்டது. மொழிபெயர்ப்பில் சிறுவர் இலக்கியம், சோவியத் இலக்கியங்கள், அறிவியல் என்பனவற்றிற்கு மிகுந்த சிறப்பு அளிக்கப்பட்டது. மார்க்சிம் கார்க்கி, மிகயீல் கொர்ப்பச்சேவ் எனப் பொதுவுடைமைக் கட்சித் (கம்யூனிஸ்ட்) தலைவர்களின் படைப்புகள் தமிழாக்கம் கண்டன. தமிழகத்தில் பொதுவுடைமைக் கட்சியின் பரவலுக்கு இப்பதிப்பக நூல்கள் பெரிதும் துணை நின்றன என்பதில் மிகையில்லை. சோவியத் இலக்கியம் நேற்று - இன்று - நாளை, சோவியத் இலக்கியத்தில் மனித மதிப்புகள் எனச் சோவியத் இலக்கிய அறிமுகம் தமிழகத்திற்குக் கிடைக்க வழி செய்தது.

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி முழுமையாகக் காந்தியடிகளின் படைப்புகளைத் தமிழில் வழங்கியுள்ளமையும் சுட்டத்தக்கது.

இவை தவிர அன்று மொழிபெயர்ப்பு வளர வழிவகுத்த பதிப்பகங்களில் கலைமகள் காரியாலயம் (கிரௌஞ்ச வதம் - கே.எஸ். ஸ்ரீனிவாசாசார்யா, 1971), நவயுகப் பிரசுராலயம் (ஏழைப்பங்காளன் - எம்.எல். சபரிராஜன், 1952), மெர்க்குரி புத்தக நிலையம் (எண்பது நாளில் உலகம் - கே. பஞ்சாப கேசன், 1962) பழனியப்பா பிரதர்ஸ்

(அன்னை, ப. ராமஸ்வாமி, 1946), பாரி நிலையம் (ஆனந்த மடம், அ .கி. ஜெயராமன், 1972) எனப்பிறவும் மொழிபெயர்ப்புப் பணியில் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளன.

தமிழகத்தில் மட்டுமன்றித் தமிழகத்திற்கு வெளியே குறிப்பாக மும்பையிலிருந்து செயல்பட்ட வெளியீட்டு நிறுவனங்களான பாரதீய வித்யா பவன் (ராஜகோபாலாச்சாரியார் - பஜகோவிந்தம், 1971, சரஸ்வதி ராம்நாத் - ஜயதேவன் அல்லது கூர்ஜரத்தின் செல்வன், 1962), பியர்ல் பப்ளிகேஷன்ஸ் (வல்லிக்கண்ணன் - தாத்தாவும் பேரனும், எம்.எஸ். சிவசுவாமி - போரே நீ போ) என்பனவும் சுட்டத்தக்கன.

மொழிபெயர்ப்பின் இன்றியமையாமையும் கற்பார் அதற்குத் தரும் வரவேற்பும் இதற்குக் காரணமாகின்றன. இன்றும் வானதி பதிப்பகம், கண்ணதாசன் பதிப்பகம், அலைகள் வெளியீட்டகம் எனப் பல இத்துறைக்குச் சிறப்புச் செய்கின்றன.

### மொழிபெயர்ப்பு விமர்சனங்கள்

வளர்ந்து வரும் இன்றைய ஆய்வுச் சூழலில் தமிழ் மொழிபெயர்ப்பாளர்களின் மொழிபெயர்ப்புகளும் ஆய்வுக்குட்பட்டுள்ளன. தனியரின் மொழிபெயர்ப்புத் திறன் மற்றும் குறிப்பிட்ட ஒன்றினுக்கு எழுந்துள்ள பலமொழிபெயர்ப்புகளின் இயல்பு என இருநிலைகளில் இவ்வாய்வு அமைகின்றது. அவை தரும் கருத்துகளை இங்கு இணைப்பது தமிழ்மொழிபெயர்ப்பு வரலாற்றில், மொழிபெயர்ப்பின் இயல்பு; அதன் வளர்ச்சி நிலை; வகைமைகள்; அடிப்படைகள் எனப்பல கூறுகளை எளிதில் புரிந்து கொள்ள முடியும்; மொழிபெயர்ப்பாளராக விரும்புவோர்க்கு வழிகாட்டியாக அமையும் என்ற கருத்தினாலாம்.

**கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை:** தனியர் என்ற நிலையில் ஆசிய ஜோதியைத் தமிழுக்கு வழங்கிய கவிமணியின் மொழிபெயர்ப்பு முறைமையை இங்குக் காணலாம். பா. கார்த்திகேயனின் மொழிபெயர்ப்புத் திறனாய்வு (எட்வின் அர்னால்டும் கவிமணியும்) என்ற நூலின் கருத்துகளே இவண் எடுத்துரைக்கப்படுகின்றன. இப்பகுதியில் சுட்டப்படும் பக்க எண்கள் அந்நூலைக் குறிக்கும்.

கவிமணியின் நூலான ஆசியஜோதி எழுந்த சூழலை நோக்கும் பொழுது 'லைட் ஆப் ஏசியா' நூல் 'குமரன்' ஆசிரியர் முருகப்பாவினால் கவிமணிக்குத் தெரிய வந்தது என்பதும் அவரது வேண்டுகோளின்படி உயிர்க்கொலை மறுப்பு இயக்கத்திற்கு

ஆதரவாக அந்நூலின் ஒரு பகுதியைக் 'கருணைக் கடல்' என்னும் பெயரில் தமிழில் படைத்தார் என்பதும் அது குமரன் இதழில் வெளியிடப்பட்டது என்பதும் தெளிவாகின்றது. ஆசிய ஜோதி எத்திட்டப் பாங்குமின்றிப் பல்வேறு காலங்களில் பகுதி பகுதியாக எழுதப்பெற்று, பின்னர்த் தொகுத்து வெளியிடப் பெற்ற நூலாகும். கவிமணியின் முதல் கவிதைப் பகுதியான கருணைக் கடல் (1928) வெளிவந்ததற்கும் கடைசிக் கவிதைப் பகுதி வெளிவந்ததற்கும் (1947) இடைவெளி 19 ஆண்டுகளாகும். முதல் கவிதைப் பகுதிக்கும் தற்பொழுதுள்ள முறையில் நூல் வடிவம் பெற்று வந்தமைக்கும் (1952) இடைவெளி 24 ஆண்டுகள் ஆகும் (ப. 186).

லைட் ஆஃப் ஏசியா 4472 அடிகளைக் கொண்டுள்ளது; அவற்றுள் கவிமணி 902 அடிகளை மட்டுமே தம் நூலிற்காகக் கொண்டுள்ளார். அதிலும் ஏறத்தாழ 40 அடிகளை விடுத்துள்ளார். அதாவது மூலநூலினின்றும் 862 அடிகளே ஆசிய ஜோதியில் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே காதைப்பகுதிகளின் தொடர்பின்மை காரணமாக உரைநடையில் குறிப்பெழுதி அதனை நிறைவு செய்துள்ளார் (ப. 187).

கவிமணியின் மனம், சித்தார்த்தர் தம் மனைவியின் கால்களில் தலைபதித்து வணங்கிய நிகழ்ச்சியை ஏற்றுக் கொள்ளவில்லையாதலால் அதனைத் தம் படைப்பில் தவிர்த்துள்ளார் (ப. 180).

எட்வின் அர்னால்டின் 'லைட் ஆஃப் ஏசியா' ஊடே பரவலாகக் காணப்பெறும் பௌத்த சமயக் கருத்துகள், கொள்கைகள் ஆகியவற்றைத் தமிழில் தந்தால் நூல் பௌத்த சமயக் காப்பியமாக உருப்பெற்று விடும் என்று கருதி விடுத்திருக்கலாம்.

ஆசிய ஜோதியில் கருணைக் கடல் பகுதியை முதலிலும் பிற பகுதிகளைப் பல்வேறு காலகட்டங்களிலும் எழுதியமையாலும் திட்டப் பாங்கின்மையாலும் மூலநூல் அளவிற்கு முழுமையும் முறைமையும் அமையவில்லை (ப. 181). ஆசிய ஜோதி லைட் ஆஃப் ஏசியாவுடன் ஒத்துச் செல்லும் பாங்கு சிறுபான்மையாகவும் உறழ்ந்து செல்லும் பாங்கு பெரும்பான்மையாகவும் உள்ளது. இவ்உறழ்வு நிலை குன்றக் கூறல், மிகைபடக் கூறல், மாறுபடக் கூறல் என்னும் அடிப்படைகளில் அமைகிறது (ப. 187). தனிநிலையில் ஆசிய ஜோதி சிறப்பாக உள்ளது எனினும்— லைட் ஆஃப் ஏசியாவின் தழுவல் படைப்பு அல்லது மறுபடைப்பு (Transcreation) என்று கொள்ளுதலே ஏற்புடையது எனலாம். (188).

**தமிழுக்கு வந்த ஷேக்ஸ்பியர்:** தமிழகத்தில் செல்வாக்கு பெற்றுள்ள பிறமொழி நாடகவாசிரியர்களுள் ஷேக்ஸ்பியர் முதன்மையானவர் ஆவார். பலரால், பல காலத்தில் மொழிபெயர்க்கப் பட்ட சிறப்பினை அவரது நாடகங்கள் பெற்றுள்ளன. அவற்றைப் பற்றிய ஆய்வினைப் பழனி. அரங்கசாமி மேற்கொண்டு 'தமிழுக்கு வந்த ஷேக்ஸ்பியர்' என நூலாக்கம் தந்துள்ளார். ஒரு நாடகம் மொழிபெயர்க்கப்படும் பொழுது எத்தன்மைகள் பின்பற்றப் படுகின்றன; அதில் எழும் சிக்கல்கள் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன. ஓர் இலக்கிய மொழிபெயர்ப்பு எப்பொழுது சிறப்புறுகிறது என்பது போன்ற வினாக்களுக்கு இந்நூலுள் விடைகள் காணப்படுகின்றன. ஷேக்ஸ்பியர் தமிழ்மொழியில் பெற்றுள்ள வரவேற்பினை அறுதியிட உதவும் இந்நூற் கருத்துகளே இப்பகுதியில் அதன் பக்க எண்களுடன் எடுத்துரைக்கப்படுகின்றன.

தமிழில் பெயர்த்தெழுதப்பட்ட ஷேக்ஸ்பியர் நாடகங்களுள் விசுவநாத பிள்ளையால் பெயர்த்து எழுதப்பட்ட வெனிஸ் வர்த்தகன் என்னும் நாடகமே தமிழில் முதல் மொழிபெயர்ப்பு என்று உறுதியாக நம்பலாம் (ப. 38).

உயர்நிலைப் பள்ளி மாணவர்க்கென்று எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை 1896இல் தொகுத்த வாசகத்திரட்டு என்னும் தமிழ் உரைநடை நூலில் சாருமதி சரிதை என்னும் தலைப்பில் லீயர் மன்னன் கதை ஏழு பக்க அளவில் வெளியிடப்பட்டுள்ளது. அதே போன்று மெட்ரிக்குலேஷன் தேர்வுக்கென்று சென்னைப் பல்கலைக்கழகத்தினர் 1899இல் வெளியிட்ட தமிழ்ப்பாடப் புத்தகத்தில் மேக்பெத் நாடகத்தின் கதை காணப்படுகிறது. உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் தமிழ் மட்டுமே அறிந்த பொதுமக்களுக்கும் ஷேக்ஸ்பியர் இவ்வாறு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளார்.

ஆங்கில நாட்டு நாடகக் கவிஞரைத் தமிழகத்து மக்களுக்குத் தொடக்க நிலையில் அறிமுகப்படுத்திய இச்சிறுகதைகள் அனைத்திலும் கதையமைப்பு சிதையவில்லை. நாடகத்தில் காணப்படும் கிளைக்கதைகள் ஒரோவழி சிற்சில கதைச் சுருக்கங்களில் காணப்படுகின்றன. நாடகப் பாத்திரங்களின் பெயர்களும் மாற்றப்படவில்லை. மூலநாடகத்தில் வரும் இரட்டுற மொழிதல், சொல் அலங்காரம், புராணிக வரலாற்றுச் சுட்டுகள் (allusions) வஞ்சகப் புகழ்ச்சி, மறை பொருள் குறிப்பு (irony) ஆகியவை இடம் பெறவில்லை. ஷேக்ஸ்பியர் நாடகத்தின் திரண்ட

கதைச்சுருக்கங்களை அக்கால வழக்காற்றிலிருந்த மணிப்பிரவாளத் தமிழ் உரைநடையில் எழுதியுள்ளனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஷேக்ஸ்பியர் நாடகத்தினைச் சிறுகதை வடிவில் வெளியிட்ட இந்த உரைநடை ஆசிரியர்களுக்கு ஷேக்ஸ்பியரைத் தமிழகத்து மக்களுக்கு அறிமுகப் படுத்துவது ஒன்றுதான் தலையாய நோக்கம் என்று கூறலாம் (ப. 47).

1897இல் டி.ஆர். சலசலோசன செட்டியார் சிம்பலின் நாடகத்தைச் சிம்பலின் என மொழிபெயர்த்துள்ளார். மூலக்கதை மாற்றப்பட வில்லையாயினும் பாத்திரப் பெயர்களைத் தமிழ்ப் படுத்தியுள்ளார் (ப. 48).

விரும்பியவிதமே எனும் நாடகத்தினைப் பம்மல் சம்பந்த முதலியார் அச்சிட்டு வெளியிட்ட போது ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகத்தின் மொழிபெயர்ப்பு என்று கூறாது தமிழ் அமைப்பு என்று கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. அதற்கு இரு முக்கியக் காரணங்களை அவர், 'ஒன்று, ஷேக்ஸ்பியர் என்னும் மகா நாடகக்கவியின் நாடகங்கள் வேறெப்பாஷையிலும் சரியாக மொழிபெயர்ப்பது அசாத்தியமான காரியம் என்பது என் தீர்மானம். இரண்டாவது இதில் நாடகப் பாத்திரங்களின் பெயர்களையும் பட்டணங்கள் நதிகள் முதலியவைகளின் பெயர்களையும் தமிழ்ப் பெயர்களாக மாற்றிவிட்டேன்' என்று கூறியுள்ளார் (பக். 70-71).

தமிழ் மரபுக்கு ஒத்துவராதவை உள்ளிட்ட எந்த வகையிலும் பெயர்த்தெழுத முடியாதனவற்றைப் பம்மல் ஒதுக்கி விடுகிறார் (ப. 75). கலாச்சார வேறுபாடுகளைக் கொண்ட இலக்கியங்களைப் பிறமொழியில் பெயர்க்கும் பொழுது மொழிபெயர்ப்பாளன் தன் மொழியின் மரபுக்கும் பண்பாட்டுக்கும் ஏற்றவாறு மூல இலக்கியத்தைத் திருத்துவதற்கும் மாற்றி அமைப்பதற்கும் இவற்றைச் சான்றுகளாகக் காட்டலாம்...... தமிழகக் கலாச்சாரப் பின்னணியில் அதுவும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எந்த நாடக ஆசிரியனும் அந்த மாற்றத்தைச் செய்துதான் ஆக வேண்டும் (ப. 81).

விபுலாநந்தர் தாம் தமிழில் பெயர்க்கும் நாடகங்களுக்கு அக்காலத்தே புகழ் பெற்ற நாடகங்களின் பெயர்களுக்கேற்ப சரிதை (பெரும்புயற் சரிதை The Tempest), காதை (வேனிற் காதை As you like it) என அமைக்கிறார் — வெங்கட்ராம ஐயர் டெம்பஸ்ட்

மொழிபெயர்ப்பின் இறுதியில் நூற்பயன் தருகிறார் (ப. 63). மொழிபெயர்ப்புக் கலையில் Pun என்னும் சொல் விளையாட்டை எப்படிப் பெயர்க்க வேண்டும் (வெனிஸ் வர்த்தகன்) என்பதற்கு வேணுகோபாலாச்சாரியார் ஒரு முன்னோடி என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை (ப. 42).

ஆங்கிலப் பெயர்களை எடுத்துவிட்டுத் தமிழ்ப் பெயர்களைப் புகுத்தியவர் சிலர். ஆங்கிலப் பெயர்களையே தமிழ் ஒலிக்கு ஏற்றவாறு சிதைத்துப் பெயர்களைச் சிறிதே மாற்றியவர் சிலர். இந்த இரு சாராரையும் போலின்றி ஆங்கில எழுத்துக்களைத் தமிழில் புகுத்தி அம்மொழியின் ஒலிகளைத் தமிழில் கொணர்ந்த பெரிய நாயகம் செட்டியாரின் முயற்சி பாராட்டத்தக்கதாகும். இவர் ஜான் மன்னன் நாடகத்தில்,

| | | |
|---|---|---|
| France | - | fவ்ரான்ஸ் |
| Lady Falcon bridge | - | லேடி fவால்கன் பிரிட்ஜ் |
| Henry | - | என்றரீ |
| Dauphin | - | டாfபின் |

என்பன போன்று பெயர்கள் ஒலிக்கப்படுகின்றன (ப. 60).

இவர் மூலநூலை மொழிபெயர்த்து விட்டு எங்கெங்கு இலக்கியத் தமிழ் ஒப்புமையாகக் காட்டக் கூடிய இடங்கள் உண்டோ அங்கெல்லாம் அடிக்குறிப்பாக விளக்கங்கள் கொடுக்கிறார் (ப. 59).

ஷேக்ஸ்பியர் நாடகத்தினைக் (Measure for Measure - தன்னுயிரைப் போல் மன்னுயிரை நினை) கதை வடிவாகக் கொடுப்பதே நோக்கமாயிருந்தாலும் தமிழ்நாட்டுக்கு ஏற்ற கருத்துகளை வலியுறுத்தியும் தேவையான இடங்களில் தமிழ்வாசகர்களுக்குத் தெளிவாகப் புரிகின்றதும் ஷேக்ஸ்பியரில் இல்லாத இலக்கியக் குறிப்புகளைப் பண்டித நடேச சாஸ்திரியார் கையாண்டுள்ள துணிச்சலும் ஈண்டு பாராட்டத்தக்கனவாகும் (ப. 45).

நாடகத்தினைத் திருத்திய தோடன்றிப் புதுவதாகவும் சில அம்சங்களைச் சலசலோசன செட்டியார் தமது தழுவல் நாடகத்தில் (சம்பலின்) சேர்த்துள்ளார். தமிழிலக்கியத்தில் இடைக்காலத்தில் ஏற்பட்ட மரபை ஒட்டி இறைவணக்கமாகப் பிள்ளையார், நாமகள், நடராசர், கலைமகள் முதலிய கடவுளர்க்குரிய துதிப்பாடல்களோடு நாடகத்தின் முதற்பகுதி தொடங்குகிறது. நாடகத்தின் இடையிடையே இசையுடன் நீண்ட குரலெடுத்துப் பாடும் நடிக

நடிகையர்க்கு வாய்ப்புக் கொடுக்கின்ற முறையிலும் அவற்றை நாளைய ரசிகப் பெருமக்களின் விருப்பிற்கேற்பவும் ஐம்பதுக்கு மேம்பட்ட பாடல்களைத் தாமே இயற்றிச் சேர்த்துள்ளார். இவற்றுள் இராகத்தோடு தாளம் போட்டுப் பாடுதற்குரிய பாடல்களும் சிலேடை விருத்தமும் சந்தப்பாடல்களும் அடங்கியுள்ளதை நோக்கும் பொழுது செட்டியார் தம் கவித்திறம் தெற்றெனப் புலனாகிறது (ப. 49).

வடுவூர் துரைசாமி ஐயங்கார் 1917இல் மங்கையர் பகட்டு எனக் கிங்லீயர் நாடகத்தை நீண்ட அகவற்பாவில் மொழிபெயர்த்துள்ளார். இதற்கு டி செல்வக்கேசவராய முதலியார் அளித்த முன்னுரை, 'இங்கிலீஷ் நாடகத்தில் முக்கியமான நடிகர்கள் மரிப்பதனால் கதை துக்ககரமாக முடிகின்றதோடு கதையின் பிற்பகுதியும் நம்மவர்கள் மனதிற்கு ஒவ்வாத விதமாய் எழுதப் பெற்றிருக்கின்றது. மங்கையர் பகட்டில் இவற்றைச் செம்மைப் படுத்திக் கதையின் பிற்பகுதியையே மாற்றி அரசன் பிணி வீடடைந்து பிழைத்துத் தன் கடைமகளான மாதவிக்கு முடிசூட்டியதாக முடித்திருப்பது இவ்வாசிரியரின் திறமையை நன்கு விளக்குகின்றது" என்று பாராட்டுகின்றது (பக். 120-121).

இந்நூற்றாண்டின் இடைக்காலத்திலோ ஷேக்ஸ்பியரைத் தமிழ் கூறும் நல்லுலகத்தில் அறியாதார் இல்லை என்று கருதும் அளவிற்கு அவர் அறிமுகமாகி விட்டார். எனவே கள்ளப்பிரான் பிள்ளைக்கு மூலநாடகத்தின் பெயர்களை (வெனிஸ் வர்த்தகன்) மாற்றம் செய்ய வேண்டிய தேவை இல்லை. இலக்கியக் குறிப்புகள், புராணக் குறிப்புகள், விவிலிய நூற் கருத்துகள், வரலாற்றுச் செய்திகள் ஆகியவற்றையும் கூட அவர் அப்படியே மொழிபெயர்த்து விடுகின்றார். தேவையான விளக்கத்திற்கு அடிக்குறிப்பினைக் கொடுக்கிறார் (பக். 127-128).

ஷேக்ஸ்பியரின் ஒத்தெல்லோ என்னும் துன்பியல் நாடகத்தினை ஏ.சி. செட்டியார் சாகித்திய அக்காதெமியின் ஆதரவில் தமிழில் பெயர்த்தனர். புகழ் வாய்ந்த ஆங்கிலத் திறனாய்வாளர் டோவர் வில்சன் இந்த நாடகத்தைப் பற்றி எழுதியுள்ள ஆய்வுக் கருத்துகளை இவர் தமது நூல் முன்னுரையாக இணைத்துள்ளார்.

நாராயணசாமி நாயுடு 1950இல் ஜூலியசீசர் நாடகத்தையும் 1957இல் மாக்பெத் நாடகத்தையும் மொழிபெயர்த்துள்ளார். மாணவர்களுக்கென்று அந்நாளில் வெளியாகிய ஆங்கிலப்

பதிப்புகளைப் போன்றே தமது பெயர்ப்பிலும் சுருக்கமாக ஷேக்ஸ்பியரின் வரலாற்றையும் கதைச் சுருக்கத்தினையும் கதாப்பாத்திரங்களைப் பற்றிய பண்புகளையும் இயல்புகளையும் முறையே தொகுத்தளித்துள்ளார். ஆங்கிலப் பெயர்ச் சொற்களைத் துல்லியமாக உச்சரிப்பதற்குரிய வழிமுறைகளை எந்தப் பெயர்ப்பாளரும் விளக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (ப.140).

ஏகாம்பர நாட்டார் பெயர்த்த புயல் என்னும் நாடகம் கிரேக்க நாடக இலக்கண நியதிப்படி கால ஒற்றுமையைக் கவனமுடன் பின்பற்றியுள்ளது. இதனைப் பெயர்ப்பாளர் தனது முன்னுரையில் குறிப்பிடுவதை நோக்கும் போது டெம்பஸ்ட் நாடகத்தின் பின்னணியில் உள்ள பல்வேறு செய்திகளையும் தெளிவுறத் தெரிந்து கொண்ட பின்னரே இப்பணியைச் செய்துள்ளார் என்பது புலனாகிறது (ப.145).

ஷேக்ஸ்பியரை அறிமுகப்படுத்தும் இலக்கியத் தொண்டில் மகராசனின் பணி கலாநிலயம் நடத்திய சேஷாசலத்தினை ஓரளவு ஒத்து நிற்கிறது (ப. 154) சேஷாசலத்தின் மொழிபெயர்ப்பான டெம்பஸ்ட் நாடகத்தில் வரும் பாடல்களும் கவிதைகளும் முதல் நூலின் இயல்புக்கு மாறாகாமல் தமிழிலும் பாடல்களாகவே பெயர்க்கப்பட்டுள்ள திறம் பாராட்டுதற்குரியது. முதற்நூற் பாடலின் ஓசை, ஒலி ஆகியவற்றைக் கூட தமிழ்ப் பெயர்ப்பில் தொனிக்குமாறு அமைத்துள்ளார்........ வழக்கம் போல் அந்தப் பெயர்ப்புக்குச் சேஷாசலம் கொடுத்துள்ள மிக நீண்ட அடிக்குறிப்பு ஆங்கிலத்திலேயே இந்த நூலைப் பயில்வாரும் படித்துத் தெளிவுறுமாறு அமைந்துள்ளது. தனிவொரு நாடகத் தமிழ்ப் பெயர்ப்பு நிறைவுற்றதும், அந்நாடகம் பற்றிய இலக்கியத் திறனாய்வினை ஒரு சில இதழ்களில் தொடர்ந்து எழுதி வருவதும் சேஷாசலத்தின் பழக்கமாக இருந்திருக்கிறது (ப.170).

ஷேக்ஸ்பியரின் கதைப்பாடலைத் (Rape of Lucrece) தமிழாக்கம் செய்ததற்குச் சான்றாகச் ச.கு. ஆதித்தனாரின் கற்பின் கனலி எனும் கவிதை நாடகம் அமைகிறது.

**பொதுநிலை**

தமிழாக்கம் கண்டுள்ள வங்க மொழிப் புதினங்களையும், சிறுகதைகளையும் ஆராய்ந்த பெ. பானுமதி (முன்சுட்டியது) அவற்றுள் பின்பற்றப் பட்டுள்ள சில மொழிபெயர்ப்புக் கூறுகளைப் பட்டியலிட்டுள்ளார்.

1. சிலேடை போன்ற சொல் விளையாட்டுகளுக்கு இணையானவை இருப்பின் அது; அல்லது மொழிபெயர்ப்பில் விளக்கிச் செல்லல்; அல்லது அடைப்புக் குறியுள் விளக்கம் தரல்; அல்லது நீண்டதாக இருப்பின் அடிக்குறிப்பில் விளக்கந் தரல்.

2. மூலத்தொடரில் இயல்பாகக் கூறப்பட்டுள்ள செய்திகளை மொழிபெயர்ப்பில் மரபுத் தொடர் வாயிலாகக் கூறுதல், அல்லது பழமொழி வாயிலாகக் கூறுதல்.

3. மூலப் பொருட் பெயர்களையும் பழக்க வழக்கங்களையும் (நம்பிக்கை, பழமொழி போல்வன) எவ்வித விளக்கமும் இன்றித்தரல், அடிக்குறிப்பு அல்லது அடைப்புக் குறியுள் விளக்கந் தரல்; நெருங்கிய இணையைத் தரல்; விட்டு விடல்; பொருந்தாதனவற்றைத் தரல்; ஏற்கும் மொழியில் உள்ள பிறவற்றைத் தரல் என்பன வழக்கமாகின்றன (பக். 241, 339, 267) என்றுரைக்கிறார்.

இவை ஏனைய பிறமொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப் படும் நூல்களுக்கும் பொருந்தும் எனக் கொள்வதில் தவறில்லை; ஆகவே இங்குத் தனித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

பொதுவாக மொழிபெயர்ப்புகளில் அடைப்புக் குறியுள் அல்லது அடிக்குறிப்புள் விளக்கங்கள் என்பன இன்றியமையாத கூறாக அமைவதையும் அறியலாம்.

**கண்ணோட்டக் குறிப்புகள்**

இதுவரை சுமார் ஐம்பது மொழிகளின் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. அவற்றின் மீதான பரந்துப்பட்ட பார்வையில் கீழ்க்கண்ட கருத்துகள் பெறப்படுகின்றன.

1. பிறமொழிகளிலிருந்து தமிழுக்கு வந்தவற்றுள் ஆங்கிலம், வடமொழி, வங்காளம், ரஷியன் ஆகிய மொழி நூல்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. இவற்றுள், ஆங்கிலம் பரவலாக எல்லாத் துறைகளிலும் மொழி மாற்றம் அடைந்துள்ள சிறப்பினைப் பெறுகின்றது. வடமொழி, சமய, பக்தி இலக்கியங்களிலும், வங்காளம் புதினம், சிறுகதை போன்றவற்றிலும், ரஷ்ய மொழி புதினம், சிறுகதை, அரசியல் ஆகியவற்றிலும் மிகுதியாக மொழிமாற்றம் பெற்றுள்ளன.

2. காந்தியடிகள், விவேகானந்தர், ரவீந்திரநாத் தாகூர், காண்டேகர், சரத் சந்திரர், பங்கிம் சந்திரர் போன்றோர் படைப்புகள்

ஏறக்குறைய முழுமையாகத் தமிழ் மொழிமாற்றம் பெற்றுள்ளன எனலாம். த.நா. குமாரஸ்வாமி தாகூரை முழுமையாக மொழிபெயர்த்துள்ளார் என்பர் (பெ. பானுமதி, முன்சுட்டியது, ப. 10). சேக்ஸ்பியரின் படைப்புகளில் பல நூல்கள் பலராலும் மொழியாக்கம் பெறும் சிறப்பினைக் கொண்டுள்ளன. ரஷ்ய இலக்கியத்தில் டால்ஸ்டாய் படைப்புகள் பெரும்பாலும் அனைத்தும் தமிழிற்கு வந்துவிட்டன என்றே நவிலலாம். இது போன்றே புஷ்கினின் உரைநடை நூல்கள் எல்லாம் தமிழில் வெளிவந்துவிட்டன. எஞ்சி இருப்பவை அவரது கவிதைகள் தாம் என்பதையும் அறிய முடிகிறது. (ரதுலன், புஷ்கின் கதைகள்).

3. இலக்கியம் தவிரப் பிற துறைகளில் அறிவியல், அரசியல், வரலாறு ஆகியன மிகுதியாக மாற்றம் பெற்றுள்ளன.

4. மொழிபெயர்ப்பிற்கு நூல்களைத் தேர்வதில் சில சிறப்புகள் காணப்படுகின்றன. அவற்றுள் குறிப்பாக இரண்டைச் சுட்டலாம். மொழிபெயர்ப்பாளர் ஒரு மொழியில் தம்மைக் கவர்ந்த ஆசிரியர் என்ற முறையில் அவர் நூலை மொழிபெயர்த்தல் ஒன்றாம். இக் கூற்றிற்குச் சான்றாக தநா. சேனாபதி, தநா. குமாரசுவாமி ஆகியோர் தாகூரையும் அ.கி. ஜெயராமன் சரத்சந்திரரையும், கா, ஸ்ரீ.ஸ்ரீ. வி.ஸ. காண்டேகரையும் மொழிபெயர்ப்பதில் கொள்ளும் விழைவினைச் சுட்டலாம். ஒரு மொழியில் மிகுந்த செல்வாக்கு பெற்ற நூல் என்பதால் மொழிபெயர்த்தல் இரண்டாவதாம், கிரேக்க நாடகங்களையும், டால்ஸ்டாயின் புதினங்களையும் இதற்குச் சான்றுகளாக்கலாம். ந. கடிகாசலம், சீனத்துச் சிறுவர் (நாட்டுப்புறக்) கதைகளை நவதந்திர கதைகள், விந்தைக் கதைகள், மந்திரப்பறவை எனத் தொடர்ந்து மொழிபெயர்த்து வருவதும் கூறத்தக்கது.

5. ஒரு மொழியின் இலக்கிய வளத்தினைக் காட்ட அல்லது ஒரு இனத்தவரின் வாழ்க்கை முறை, நாகரிகம், பழக்க வழக்கங்கள், பண்பாடு போன்றவற்றை இயம்ப எனும் கண்ணோட்டத்துடனும் மொழிபெயர்ப்புகள் எழுகின்றன. இந்நோக்கம் பெரும்பாலும் இந்திச் சிறுகதைகள் (சரஸ்வதி ராமனாத்), குஜராத்தி ஓரங்க நாடகங்கள் (ஹரிஹர சர்மா) போன்ற தொகுப்புகளால் நிறைவுறுகிறது. ஒன்றன் தேவை குறித்து மொழிபெயர்த்தல், மிகுதியும் அறிவியல், மருத்துவம், புவியியல் போன்ற பிற துறைகளில் காணப்படுகிறது.

6. இலக்கிய மொழிபெயர்ப்பு நூல்களின் அமைப்பு பற்றியும் சில கருத்துகள் கிடைக்கின்றன. தனிப்பட்ட நூலாக

(அடிவானத்திற்கு அப்பால் - அகி. ஜெயராமன்) அல்லது தொகுப்பு நூலாக இவை அமைகின்றன. தொகுப்பு நூல்கள் மூவகையாக அமைதல் குறிப்பிடற்பாலது.

1. ஒரே மொழி இலக்கியங்கள் தொகுப்பு
(நான்கு கிரேக்க நாடகங்கள் - கே. எஸ். வேங்கடராமன்).

2. குறிப்பிட்ட ஆசிரியரின் நூல்கள் தொகுப்பு
(ரவீந்திரர் கதைத் திரட்டு - தநா. குமாரசுவாமி).

3. பல மொழி இலக்கியங்களின் தொகுப்பு
(உலகத்துச் சிறந்த நாவல்கள் - கநா. சுப்பிரமணியன்)

என்பன அவை. மூன்றாம் வகையுள் பல இலக்கிய வகைகள் கலந்தமைதலும் உண்டு (படகுப் பாவை - அசுவத்தாமா).

7. அமைப்பு என்று காணும்பொழுது இவற்றுள் அமையும் முன்னுரைகள் இன்றியமையா இடம்பெறுகின்றன. சில நூல்களின் மூல நூலில் அமைந்துள்ள நூலாசிரியர் உரை, ஆய்வுரை, அறிமுகவுரை போன்றனவும் மொழிபெயர்த்துக் கொடுக்கப் பட்டிருப்பது பாராட்டிற்குரியது. (நமது நகரம் - டி.என். சுகிசுப்பிரமணியம்) பொதுவாகச் சாகித்திய அக்காதெமியின் மொழிபெயர்ப்புகளில் இவை சிறப்புற அமைந்துள்ளன. மூல நூலாசிரியர் பற்றியோ, நூல்பற்றியோ எத்தகைய குறிப்பும் இன்றி அமையும் மொழிபெயர்ப்புகளும் உண்டு. (போஜன் - தி.எஸ். நாராயண சாஸ்திரி) இத்தகையனவற்றால் மூலமொழி, அதன் ஆசிரியர், மூல நூல், இலக்கிய வகை போன்றவற்றிலும் சுருக்கமா? விரிவா? தழுவலா என அதனியல்பை உணர்வதிலும் தடங்கல் அமைகிறது. இக்குறைபாடு மொழிபெயர்ப்பாளரால் தவிர்க்கப்பட வேண்டியதாகும்.

8. நீண்ட இலக்கியங்களில் குறிப்பிட்ட பகுதி மட்டும் தரப்படுதலும் உண்டு (அசுவமேத பருவம் - மகாபாரதம் - சரவண பண்டிதர்). நாடகப் பாத்திரங்கள் பற்றிய முன் அறிமுகத்தினை நாடக நூல்கள் சில தருகின்றன (டாக்டர் பாஸ்டஸ் - ஆரார்). செய்யுள் இலக்கியங்களைக் கவிதை வடிவிலேயே வடிக்க இயலாத நிலையில் அவற்றை உரைநடை வடிவில் தருதலும் பரவலாக அமைகிறது (வால்மீகி ராமாயண வசனம் - நடேச சாஸ்திரி). நாடக வடிவினைக் கதை வடிவமாக்கித் தருதலும் குறிப்பிடற்பாலது (நடியின் பூஜை - ஆ. கந்தசாமி).

9. இலக்கியத்தின் மூலப் பெயரினை அவ்வாறே தருதல் பெரும்பான்மையாகக் காணப்படினும் மொழிபெயர்ப்பாளர் தம் விருப்பிற்கேற்ப மாற்றித் தருதலும் ஓரளவு காணப்படுகிறது. 'பாரடைஸ் லாஸ்ட்'டைச் (Paradise lost) சாமுவேல் வி. தாமஸ் 'பூங்காவனப் பிரளயம்' எனத் தந்திருப்பதனைக் குறிப்பிடலாம்.

10. மொழிபெயர்ப்பினை வெளியிடுவதிலும் சில தனிப் பண்புகளைக் காணலாம். வாசகர்களுக்கு எளிமைப்படுத்தித் தருதற் பொருட்டுக் கதை நிகழ்வுக் களன்களையும், பாத்திரப் பெயர்களையும் தன்வயமாக்கி மொழிதல் சுட்டற்பாலது (வாணிபுர வணிகன் - பம்மல் சம்பந்தம்). அவ்வாறன்றி, அம்மொழியின் ஏனைய சிறப்புப் பெயர்களையும் அவ்வாறே தற்சமமாகத் தருதல் பலரால் பின்பற்றப்படுகிறது. (ஹேமாங்கினி. அ.கி. ஐயராமன்). இத்துடன் அச்சிறப்புப் பெயர்களுக்குத் தேவையான விளக்கங்களைத் தருதல் ஒரு சிலரிடம் அமைகிறது. (சக்கரவர்த்தி பீட்டர் - எஸ். இராமகிருஷ்ணன்).

11. மொழிபெயர்ப்பு நேரிடையாக மூலமொழியிலிருந்து அமையாமல் ஊடுமொழியாக ஆங்கிலம் போன்றவற்றின் மூலம் தோன்றுதல் மிகுதியான நூல்களில் காணப்படுகிறது. இதற்கு ஆங்கிலமே மிகுதியும் பயன்பட்டுள்ளது. பல்கேரியா கவிதைகள் (எம். ராஜமாணிக்கம்), ஹோமரின் ஒடிஸி (ஏ. சிங்காரவேலு) மாசேதுங் கவிதைகள் (எஸ். சிவசேகரம்) என்பன இதற்குச் சான்றுகளாகும். ஓரிய மொழிப் புதினமான நினைவுகள் அழிவதில்லை (பிஆர். பரமேஸ்வரன் நாயர்) மலையாள மொழியையும், வடமொழி பஞ்சதந்திரக் கதைகள் (வேநீ. தட்சிணாமூர்த்தி) இந்தி மொழியையும், வங்கமொழிப் புதினம் கபாலகுந்தலா (எம். ராமலிங்க முதலி) கன்னட மொழியையும் ஊடுமொழியாகக் கொண்டுள்ளமைக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

12. ஒரே நூல் பலரால் பல வடிவங்களில் மொழிபெயர்க்கப் படும் சிறப்பினையும் வான்மீகி ராமாயணம், மகாபாரதம், காதம்பரி, கீதாஞ்சலி, சேக்ஸ்பியர் நாடகங்கள் போன்றன பெறுகின்றன. மிருச்சகடிகம் எனும் வடமொழி சூத்திரகனின் நாடகம் இன்பப்புரட்சி (எச். வைத்தியநாதன் + பி. ஹநுமந்தராவ், 1907), மிருச்சகடிக நாடகம் (எஸ்.எம். நடேச சாஸ்திரி, 1887), மிருச்சகடிகம் (மோ. க. சடகோபாசாரியார், 1907, எஸ்.எ. பாலகிருஷ்ண ஐயர், 1909), வஸந்த கோகிலம் (வடுவூர் கி. துரைசாமி ஐயங்கார், 1919), மண்ணியல் சிறுதேர் (மு. கதிரேசச்செட்டியார்) பொன்னூர்தி

(நலங்கிள்ளி) என மொழிமாற்றம் கண்டுள்ளமை எடுத்துக்காட்டாகும். டேனியல் டீபோவின் தி லைப் அண்டு அட்வென்ஸர்ஸ் ஆப் ராபின்சன் குருசோ, இராபின்சன் குருஸோ சரித்திரம் (வீ. விசுவநாதபிள்ளை, 1867), இராபின்சன் குருசோ (தி. செல்வக் கேசவராய முதலியார், 1915), ராபின்சன் குருசோ (சி.எஸ். செல்லப்பா, 1915), இராபின்சன் குருசோ (வி.எஸ்வி. இராகவன், 1954, கு. பரமசிவம், 1958, ந.சி. கந்தையாபிள்ளை, 1959, தி.எஸ். இராகவன் 1964) எனப் பல தமிழாக்கம் பெற்றுள்ளமை பிறிதொரு காட்டாகும்.

13. தமிழில் மொழிபெயர்க்கப்படும் நூல் உடன் பிறமொழி மொழிபெயர்ப்பையும் கொண்டு அமைவதும் அருகிய நிலையில் அமைகிறது. சான்றாக, ஜமதக்கினியின் ஸ்ரீராதா மாதவப் பேரின்ப அமுதம் எனும் இந்தி மொழிக் கவிதை மொழிபெயர்ப்பு ஆங்கில மொழிபெயர்ப்புடன் கூடியதாகும். ஸ்ரீசந்திரசேகர சமாஜ் வெளியிட்டுள்ள ஆதிசங்கரரின் தமிழாக்க சௌந்தர்ய லஹரி இந்தி, ஆங்கில மொழிபெயர்ப்புகளுடன் அமைவதும் சுட்டத்தக்கது.

14. தமிழைக் களமாகக் கொண்ட பிறமொழி நூல்கள் மீண்டும் தமிழாக்கம் பெற்றுக் கொள்வதும் ஒருசிலவே எனினும் குறிக்கத்தக்கதாம். வீரமாமுனிவர் மொழிபெயர்த்த திருக்குறளின் முதல் ஐந்து அதிகார இலத்தீன் மொழிபெயர்ப்பு மீண்டும் வி.எம். ஞானப்பிரகாசத்தால் தமிழுரு பெற்றதும் கோ. வன்மீகநாதனின் பாத்வே டு காட் த்ரு வள்ளலார், ஜோதிவழியில் வள்ளலாராகத் தமிழில் வழங்குவதும் (பகீரதன் + மு. இராமலிங்கம்) சான்றுகளாகும்.

15. இன்றைய தமிழிலக்கிய உலகில் புகழ்பெற்று விளங்கும் பாடலாசிரியர்கள் பிறமொழிக் கவிதைகளை, கதைகளைத் தமிழ்ப்படுத்தித் தருவதிலும் முனைந்துள்ளனர். நிர்மலா சுரேஷின் 'அரபுக் கவிதைக்கு ஆரத்தி'; வைரமுத்துவின் 'எல்லா நதிகளிலும் என் ஓடம்', தெசிணியின் 'தமிழாக்கப் பாடல் திரட்டு' என்பன சான்றுகளாகும்.

16. மொழிபெயர்ப்பு இயல்பிலும் மாற்றம் ஏற்பட்டு அதன் மொழி நடை சிறப்புற்றிருப்பது இவண் சுட்டற்பாலது. "பிரான்ஸ் தேசத்து பத்திரிகைகள் ஜெர்மன் பாஷையிலிருந்து பல விஷயங்களை மொழிபெயர்த்து எழுதுகின்றன. ஆனால் அந்த மொழிபெயர்ப்புகளில் ஸ்வபாஷையின் வழக்கங்களையும் பிரயோகங்களையும் கைவிட்டு அன்னிய பாஷையின்

வசனநடையைப் பின்பற்றும் வழக்கம் கிடையாது. ஆனால் தமிழ்நாட்டிலோ முழுதும் தமிழ்நடையை விட்டு இங்கிலீஷ் நடையில் தமிழை எழுதும் விநோதமான பழக்கம் நமது பத்திராதிபர்களிடம் காணப்படுகிறது" எனப் பாரதியாராலும் பிறராலும் கடுமையான விமர்சனங்களுக்கு உட்பட்ட மொழிபெயர்ப்பு நடை இன்று,

"சில தினங்களுக்கு முன் இம்மாதிரி ஒருநாள் மாலை எங்கள் வீட்டுக்குள் வந்தேன். இன்று மாலை அது போலவே பேசாமல் வெளியேறிக் கொண்டிருக்கிறேன். அன்றும் என்னை யாரும் அன்புடன் வரவேற்கவில்லை. இன்றும் ஒருவரும் அன்புடன் விடைகொடுத்து அனுப்பவில்லை. அன்று மாலையும் இவ்வாறே ஒவ்வொரு வீட்டினின்றும் சங்கநாதம் கேட்டுக் கொண்டிருந்தது. வஸீமல்லிக்கின், ஸ்ரீகோபாலகிருஷ்ணன் கோயிலின் தீபாராதனையின் மணியோசை காற்றில் மிதந்து வந்து எங்கள் செவிகளில் அலைமோதியது" என்பது போன்று (அ.கி. ஜெயராமன், கனவு முடியவில்லை - மூன்றாம் பாகம், ப. 3) சிறப்புற அமையக் காணலாம். மொழிபெயர்ப்பின் வளர்ச்சி நிலையாகவும் இதனைக் கொள்ளலாம்.

17. கா. அப்பாத்துரைப்பிள்ளை; வி.எஸ்.வி. இராகவன்; கா. திரவியம்; எஸ். மகராஜன்; பூ. சோமசுந்தரம்; பெ. நா. அப்புசுவாமி... என மிகப் பலர் மிகச்சிறப்பான மொழிபெயர்ப்புகளைத் தந்துள்ளனர்.

படைப்பிலக்கியம் போன்றே, மொழிபெயர்ப்பும் மற்றொரு தனிக்கலைத் துறையாக இன்று வளர்ந்துள்ளது. பள்ளி, கல்லூரி நிலைகளிலும் இதனை வளர்க்கத் தேர்வின் ஒரு பகுதியாக மொழிபெயர்ப்பு கொடுக்கப்பட்டு மாணவர்க்கு அதன் சிறப்பு உணர்த்தப்படுகிறது. தமிழ் மொழியில் இருநிலைகளிலும் மொழிபெயர்ப்புகள் இன்னும் சிறப்பாகவும் அதிகமாகவும் வருவதற்குரிய சூழல்கள் இன்று காணப்படுகின்றன.

நீண்ட நெடிய வரலாற்றையுடைய தமிழ்மொழிபெயர்ப்பு வரலாற்றை இன்னும் ஆழ்ந்து நோக்கின் மொழிபெயர்ப்புக் கொள்கை வளர்ச்சியிலும் வரலாற்றைக் காணவியலும். தனிக்கலையாக, துறையாக விரைந்து வளர்ந்து கொண்டிருக்கும் மொழிபெயர்ப்பு, தமிழின் எதிர்காலம் ஒளிமயமானது என்பதையும் உணர்த்தி நிற்கிறது.

# பின்னிணைப்பு

இதுவரை தமிழில் மொழிபெயர்ப்புக்குப் பரிசு பெற்ற நூல்கள் / ஆசிரியர்கள் விபரம்:

| | மொழிபெயர்ப்பு நூலின் தலைப்பு | மொழி பெயர்ப்பாளர் | மூலநூலின் தலைப்பு | மூல நூலாசிரியர் |
|---|---|---|---|---|
| 1989 | ஆமுக்தமால்யத | மு.கு. ஜகந்நாத ராஜா | ஆமுக்தமால்யத (தெலுங்கு) | கிருஷ்ணதேவராயர் |
| 1990 | மண்ணும் மனிதரும் | டி.பி. சித்தலிங்கையா | மரலிமண்ணிகே (கன்னட நாவல்) | கே. சிவராம கரந்த் |
| 1991 | யயாதி | கா.ஸ்ரீ.ஸ்ரீ | யயாதி (மராத்தி நாவல்) | வி.ஸ. காண்டேகர் |
| 1992 | மௌன ஓலம் | கே. வெங்கடாச்சலம் | வைசாக (கன்னட நாவல்) | சதுரங்க |
| 1993 | இந்தியமொழி நாடகங்கள் | சரஸ்வதி ராம்நாத் | பலமொழி நாடகங்களின் தொகுப்பு | பலர் |
| 1994 | விஷக்கன்னி | குறிஞ்சிவேலன் | விஷகன்யக (மலையாள நாவல்) | எஸ்.கே. பொற்றேகாட் |
| 1995 | மீதி சரித்திரம் | பெ. பானுமதி | பாக்கி இதிகாஸ் (வங்க நாடகம்) | பாதல் சர்க்கார் |
| 1996 | மங்கியதோர் நிலவினிலே | தி.சா. ராஜு | ஆத் சன்னானி ராத் (பஞ்சாபி நாவல்) | குருதயாள் சிங் |
| 1997 | சந்திரகிரி ஆற்றங்கரையில் | தி.சு. சதாசிவம் | சந்திரகிரிய தீரத்தல்லி (கன்னட நாவல்) | சாரா அபுபக்கர் |
| 1998 | மையழிக் கரையோரம் | ருத்ர துளசிதாஸ் (இளம்பாரதி) | மையழிப்புழையுடெ தீரங்களில் (மலையாள நாவல்) | எம். முகுந்தன் |
| 1999 | ஏழு கார்டூன்களும் ஒரு வண்ண ஓவியமும் | தமிழ்நாடன் | ஒரியச் சிறுகதைகள் தொகுப்பு | ரிஷிகேஷ் பண்டா |

| | | | | |
|---|---|---|---|---|
| 2000 | அக்னிசாட்சி | சிற்பி பாலசுப்பிரமணியம் | அக்னிசாட்சி (மலையாள நாவல்) | லலிதாம்பிகா அந்தர்ஜனம் |
| 2001 | எனது நினைவலைகள் | நாராயண் | எ-ஜா சோனா ரோபா வார்க் (சிந்தி - தன்வரலாறு) | ஆர். ஹீராநந்தினி |
| 2002 | பணீஷ்வர்நாத் ரேணு சிறுகதைகள் | எச். பாலசுப்பிரமணியன் | பணீஷ்வர்நாத் ரேணு கி ஷெரஸ்தா கஹானியன் (இந்திச் சிறுகதைகள்) | பணீஷ்வர்நாத் ரேணு |

| | மொழியாக்கம் பெற்ற மொழி, மொழியாக்க நூலின் பெயர் | மொழிபெயர்ப்பாளரின் பெயர் | மூலநூலும் மூல நூலாசிரியரின் பெயரும் |
|---|---|---|---|
| 1991 | வங்கம் ரக்தபன்யா | சு. கிருஷ்ணமூர்த்தி | இந்திரா பார்த்தசாரதியின் குருதிப்புனல் |
| 1991 | மலையாளம் கலித்தொகா | எம். நாராயணக்குட்டி | கலித்தொகை |
| 1991 | தெலுங்கு திருக்குறள் | சி.ஆர். சர்மா | திருவள்ளுவரின் திருக்குறள் |
| 1995 | ஆங்கிலம் தி டேல் ஆஃப்த ஆங்லெட் | ஆர். பார்த்தசாரதி | இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் |
| 1996 | கன்னடம் ஹடிநேந்த நேயா அக்ஷரேகா | சேஷ நாராயண | அசோகமித்ரனின் பதினெட்டாவது அட்சக்கோடு |
| 1997 | மலையாளம் ஜே.ஜே. சில குறிப்புகள் | ஆற்றூர் ரவிவர்மா | சுந்தரராமசாமியின் ஜே.ஜே. சில குறிப்புகள் |

நன்றி: திசை எட்டும் சனவரி - மார்ச் 2004, பக். 123-124.

# உலக மொழிகளில் தமிழ்

தமிழ் மொழியின், அதன் இலக்கிய வளத்தின் பெருமையை அளவிடு கருவிகளுள் ஒன்றாக மொழிபெயர்ப்பு அமைகிறது. பிற மொழிகளில் ஒரு நூல் மொழிமாற்றம் பெறுகிறது என்பதே அது ஏதேனும் ஒருவகையில் மொழிபெயர்ப்பாளரைக் கவர்ந்துள்ளது; மொழிபெயர்ப்பிற்குரியதொரு சிறப்பினைப் பெற்றுள்ளது என்பதைப் புலப்படுத்துவதாகும். அவ்வகையில் தமிழ்ப் படைப்புகள் உலகளவில் பல மொழியினரையும் ஈர்த்துள்ளதைக் கிடைக்கும் தரவுகள் உணர்த்துகின்றன.

உலகளாவிய நிலையில் சுமார் நாற்பது மொழிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் தமிழை மூலமாகக் கொண்டுள்ளன. பிறமொழிகளிலிருந்து தமிழுக்கு வந்தவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இவ்வெண்ணிக்கை மிகக் குறைவாகத் தோன்றலாம். பிறமொழிகளிலிருந்து தமிழுக்கு வந்தனவற்றை அறியக் கூடிய வாய்ப்பு மிகவும் குறைவு. எனவே இவ்வெண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும் என உறுதியாக நம்பலாம். மற்றும் அந்தந்த மொழிகளில் உள்ள மொழிபெயர்ப்புகளைத் தனித்தனியே தொகுக்கும் போதுதான் அவற்றுள் தமிழ்மொழியின் பங்கு என்ன என்பதையும் தெளிவாகப் பெற முடியும்.

கிறித்துவப் பாதிரிமார்கள் மூலமே தமிழ் இலக்கியம் உலகத்தினருக்கு அறிமுகமாயிற்று என்பது' பொதுவாகப் பலரும் ஏற்றுக் கொள்ளும் உண்மையாகும். தமிழின் தலை நூலாம் தொல்காப்பியம் முதல் இன்றைய உரைநடை இலக்கியங்கள் வரை பரவலான மொழிபெயர்ப்புகள் பிறமொழிகளில் எழுந்துள்ளன. அவை பற்றியதொரு பருந்துப் பார்வையை இவண் காணலாம்.

தொல்காப்பியம்

தமிழின் 'உலக மொழிகளுள் மிகப் பழமை வாய்ந்தது' என்ற பெருமையையும்[2], தொல்காப்பியத்தின் அருமையையும் உலகினர் அண்மையில் தான் உணர்ந்து ஏற்றுள்ளனர். எனவே இருபதின் முற்பகுதியில்தான் தொல்காப்பிய முதன் மொழிபெயர்ப்புத் தோன்றியது. 1927இல் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி இதன் எழுத்து மற்றும் பொருளதிகார ஆங்கில மொழிபெயர்ப்பினை Journal of Oriental Researchஇல் வெளியிட்டார். பின் சொல்லதிகார மொழிபெயர்ப்பினை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக 1945இல் வெளியிட்டார். தொல்காப்பிய மொழிபெயர்ப்பு முதல்வரே அதனை முழுமையாகவும் மொழிபெயர்த்து வெளியிட்டிருப்பது நோக்கத்தக்கது. எனினும் தொல்காப்பியம் வடமொழி இலக்கணத் தழுவல் என்ற இவரது கொள்கையால் தெ.பொ. மீனாட்சிசுந்தரம் முதலியோரின் எதிர்ப்பிற்குள்ளானார்.

இந்நூலின் இரண்டாம் பதிப்பு (The Kuppuswami Sastri Research Institute, 1999) முன்னுரை 'Prof. P.S.S. Sastri's text of Tolkāppiyam in Roman transliteration and English Translation, received encomiums from linguists all over the world. Leonard Bloomfield, known as the father of Modern Linguistics' declared that he could learn of such a peerless work, 'Tolkāppiyam only because of Prof. Sastri's translation of it' எனஅம்மொழிபெயர்ப்பின் பெருமையை எடுத்துரைக்கிறது. இதனால் தமிழின் பெருமையை நிலைநாட்டத் தொல்காப்பிய மொழிபெயர்ப்பு மிகமிக இன்றியமையாததாக அமைவது புலனாகக் காணலாம்.

இதனைத் தொடர்ந்து மற்றும் பல மொழிபெயர்ப்புகள் முழுமையாகவும், பகுதி பகுதியாகவும் ஆங்கிலத்தில் எழுந்துள்ளன. ஈ.எஸ். வரதராஜ ஐயர் (1948), இலக்குவனார் (முழுமையானது, எளிமையானது 1963), கமில் சுவலபில் (Journal of Tamil Studies - 1972 - 1985), தெ. ஆல்பட் (1986), அ.அ. மணவாளன் (1998), எனப் பலர் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். 2001 இல் ஆசியவியல் நிறுவனத்தின் வழி வி. முருகன், மெய்யப்பன் பதிப்பகம் மூலமாகத் தமிழூர் ச.வே. சுப்பிரமணியன் (2004) எனத் தொல்காப்பியம் முழுமைக்குமான ஆங்கில மொழிபெயர்ப்பு தொடர்வது மகிழ்விற்குரியதாகும்.

இந்திய மொழிகளில் மலையாளத்தில் இளையபெருமாள் மொழியாக்கம் செய்துள்ளதை அறியமுடிகிறது. இலக்கணம் என்ற எல்லை தாண்டி, பண்டைத் தமிழர் சமுதாயத்தைப் புலப்படுத்தும் அரிய நூல் என்ற பெருமையைப் பிறமொழியினரும் உணரும் பொழுது அவற்றிலும் தொல்காப்பியம் மொழிபெயர்க்கப்படும் மாண்புறும் எனலாம்.

**சங்க இலக்கியம்**

தமிழின் தனிப்பெருஞ் செல்வமான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பிறமொழிகளில் குறிப்பிடத்தக்க செல்வாக்கு பெற்றுள்ளதை அம்மொழி மொழிபெயர்ப்புகள் காட்டுகின்றன. இதன் முதல் மொழிபெயர்ப்பு 1895இல் இலங்கையைச் சேர்ந்த பி. குமாரசாமி என்பவரால் ஆங்கிலத்தில் ஏற்பட்டுள்ளது. 'A half hour with two ancient Tamil Poets' என்ற பெயரில் கபிலரின் குறிஞ்சிப்பாட்டையும், முடத்தாமக்கண்ணியாரின் பொருநராற்றுப் படையையும் மொழிபெயர்த்து, கொழும்புவிலிருந்து வெளிவந்த 'Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society' (Vol. 13, No. 65:1) எனும் இதழில் வெளியிட்டுள்ளார். 1897இல் வெளிவந்த எட்டுத்தொகையின் தேர்ந்த பாடல்களின் மொழிபெயர்ப்பும் 1898இல் ஜி.யு. போப் மொழிபெயர்த்த புறநானூற்றுப் பாடல்களும் அடுத்து எழுந்துள்ளன.

குறிப்பிடத்தக்க பல ஆங்கில மொழிபெயர்ப்புகள் அது முதல் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. தனி நூல்களாகவும், தொகை களாகவும் அம்மொழிபெயர்ப்புகள் அமைகின்றன. முல்லைப்பாட்டு (தெ.பொ. மீனாட்சிசுந்தரம், 1958), திருமுருகாற்றுப்படை (கமில் சுவலபில், 1976-77), Five Tamil Idylls of Pathuppattu (J.M. SomaSundaram 1947), The Golden Anthology of Ancient Tamil Literature (N.R. Balakrishna Mudaliar, 1959, 3 Vols), Ancient Poems of love and War (George L, Hart, 1976), The Interior landscape love poems from a Classical Tamil anthology (A.K. Ramanujan, 1967) Tamil Verse in Translation (P.N. Appusami, 1987), A Tamil Reader (J. Vacek & S.V. Subramanian, 1989, 2 Vols) போல்வன சங்கப்பாக்களின் தேர்ந்த பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பாகின்றன.

குறிப்பிட்ட சங்க இலக்கியத்தின் முழுமையான மொழிபெயர்ப்பாகவும் பல உள்ளன. எம். சண்முகம்பிள்ளையும்

டேவிட் இ. லடனும் சேர்ந்தளித்த குறுந்தொகை (1976), வி. முருகனின் கலித்தொகை, ஜியார்ஜ் எல் ஹாட் மற்றும் ஹாங் ஹெய்பெட்ஸ் இணைந்தளித்த புறநானூறு (The Four Hundred Songs of war and wisdom) ஜே.வி. செல்லையாவின் பத்துப்பாட்டு, பி. ஜோதிமுத்தின் ஐங்குறு நூறு (1984), அ. தட்சிணா மூர்த்தியின் அகநானூறு (1999), நற்றிணை (2001) எனப் பரந்து சிறந்துள்ளன. ஏ.வி. சுப்பிரமணியன் தமிழக அரசு உதவியுடன் நற்றிணையை ஆங்கிலப்படுத்தியுள்ளார்.

சங்க இலக்கியத்தை மொழிபெயர்த்த மேனாட்டறிஞரின் மதிப்புரைகள் தமிழுக்குப் புகழ் சேர்க்கின்றன. சான்றாக, ஜி.எல். ஹார்ட் என்பார், 'Perhaps if the Tamil rediscover their most ancient literature and understand correctly its techniques, a new dimension will be added to the works of Tamil Writers that will make Tamilnadu once again the home of one of the world's finest literature' (Tamil Verses in Translation, P. IV) என உலகின் மிகச் சிறந்த இலக்கியங்களுள் ஒன்றாக நமது பழந்தமிழ் சங்க இலக்கியங்கள் விளங்கக் கூடிய வாய்ப்பினைச் சுட்டியுள்ளார். வால்டர் வைஃபர் என்பார் இந்திய மண்ணின் மிகப் பழங்கால இலக்கியமாகத் திராவிடத்தைச் சுட்டுவது (ஆ. ஞானசேகரன், தமிழகமும் ஜெர்மானியரும் - 280 ஆண்டுக்கால உறவுகள், ப.9) இதனைக் கருதியே எனலாம்.

தமிழ் மாணாக்கன் என்று தம்மை அழைப்பதில் பெருமிதம் கொண்ட ஜி.யு. போப் 1906ஆம் ஆண்டு தமது இந்திய நண்பர்களுக்கு அனுப்பியப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் புறநானூற்றுக் கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாடலின் மொழிபெயர்ப்பு இடம் பெற்றது குறிக்கத் தக்கதாகும். (Tamil Heroic Poems, p. 67).

இலக்கிய வளத்தாலும், பழமையாலும் பிற இந்திய இலக்கியங்களுடன் ஒப்பிடுகையில் இணையற்று சங்க இலக்கியம் தனிப்பெருமை கொள்வதை ஏ.கே. இராமானுஜன் 'In their antiquity and in their contemporaniety there is not much else in any Indian literature equal to these quiet and dramatic Tamil poems. In their values and there stances, they represent a mature classical poetry; passion is balanced by courtesy, transparencies by ironics and nuances of design, in personality by vivid detail, leanness of line by richness of implication' (Tamil verse in translation, preface) என விளக்கியுரைக்கிறார்.

மிகச் சிறந்த மொழிபெயர்ப்பாளராகப் பாராட்டப்படும் ஏ.கே. ராமானுஜனை நினைவுகூரும் வகையில் அவர் மொழிபெயர்த்த சங்கப்பாடல்களில் சிலவற்றை (அகம் 358, குறுந்தொகை 370, 399, நற்றிணை 174, ஐங்குறுநூறு 113, The Interior Landscape) 'What She Said' எனும் தலைப்பில் கீதாஞ்சலி கோலனாடு சென்னையில் (29, 31-8-1993) அரங்கம் டிரஸ்ட் உதவியுடன் நடனமாக அரங்கேற்றியதும் கூறத்தகும். இவரது மொழிபெயர்ப்புகள் மற்றும் படைப்புகள் இணைந்த முழுத்தொகுப்பினைத் தற்பொழுது (2004) ஆக்ஸ்போர்டு யுனிவர்ஸிட்டி பிரஸ் வெளியிட்டுள்ளது.

பிரெஞ்சு மொழியறிஞரால் சங்கத் தமிழ்ப்பாக்கள் பிரெஞ்சு மொழியிலும் ஏற்றம் பெற்றிருப்பதை அறிய முடிகிறது. பிரான்சுவா குரோ என்பவரால் 1968இல் பரிபாடலும் ழான் ஃபிலியோசாவால் திருமுருகாற்றுப்படையும், கமில் சுவலபிலால் சங்கப் பாடல் தொகையும் (Blossoms of Jasmine - Anthology of Cankam Poetry) பிரெஞ்ச் ஆக்கம் கண்டுள்ளன.

அலெவ் இப்ரகிமோவ், ரஷ்ய மொழியில் முல்லைப் பாட்டு மற்றும் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, புறநானூறு, கலித்தொகை முதலிய தொகைகளிலிருந்து பல பாடல்களையும் மொழிபெயர்த்து ரஷ்யர்களுக்குச் சங்கத் தமிழிலக்கியத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

1979இல் ஜெர்மன் மொழியிலும் ஹெர்மன் திகென் என்பவரால் சங்கப்பாக்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

இந்திய மொழிகளில் மலையாளம் சங்கப்பாக்களைத் தன் வயப்படுத்துவதில் அதிக அக்கறை காட்டியுள்ளது. ஜி. வைத்தியநாத ஐயரால் 1961இல் பதிற்றுப்பத்து, பி. விஸ்வநாதன் நாயரால் அகநானூறு, வி.ஆர். நாராயணப் பணிக்கரால் 1958இல் பதிற்றுப்பத்து, புறநானூறு மற்றும் முத்தொள்ளாயிரம் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட பாடல்கள், எம். நாராயண குட்டி 1974இல் செந்தமிழ் முத்துக்கள் எனத் தந்த சங்கப் பாக்களின் தொகுப்பு, 1981இல் என்.வி. கிருஷ்ண வாரியாரின் 'அகம் கவிதைகள்' தொகுப்பு எனப் பல இதனை உணர்த்துகின்றன.

மு.கு. ஜகந்நாத ராஜா, தம் மொழிபெயர்ப்பால் குறிஞ்சிப்பாட்டு, புறநானூறு, முத்தொள்ளாயிரம் முதலியவற்றைத்

தெலுங்கு மொழியினருக்கு அறிமுகம் செய்துள்ளார். எஸ்.என். ஸ்ரீராமதேசிகன் சமஸ்கிருதத்தில் பரிபாடலையும் பத்துப்பாட்டையும் (1977, 1972) மொழிபெயர்த்துள்ளார். பிற இந்திய மொழிகளில் சங்கத்தமிழின் மொழிபெயர்ப்பு நிலை அறிய இயலவில்லை.

### அறநூல்கள்

'தமிழரின் பெருமை அவரது நீதிநூல்களேயாம். அவைகள் எழுதப்பட்ட அமைப்பும், அதன் கருத்துகளும் சீர் படைத்தன. நினைவிற் பதியும் சிறு வாக்கியங்களில் ஒரு வரியாக, இரு வரியாக அல்லது நான்கு வரிகளாய் அமைந்துள்ளன. உவமைகளையும் உருவகங்களையும் கொண்டதாய் வாழ்வு முறைத் தத்துவங்களை விளக்குகின்றன' என்று ஹில்கோ வியார்டோ ஷோமரூஸ் எனும் செர்மானிய அறிஞர் பாராட்டை (ஆ. ஞானசேகரன், முன்சுட்டியது) கிடைக்கும் மொழிபெயர்ப்புகள் உறுதிப்படுகின்றன.

தமிழரைத் தரணியில் தலைநிமிர்ந்து நிற்கச் செய்யும் திருக்குறளின் தனிப்பெருமை கருதி அதனை முதற்கண் தனித்து நோக்கலாம். அறியவரும் மொழிபெயர்ப்புகளைத் தொகுத்து நோக்கும் பொழுது திருக்குறளே மிக அதிகமாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. உலக மொழிகளில் பைபிளுக்கும், குரானுக்கும் அடுத்தபடியாக அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட நூல் 'திருக்குறள்' என்ற பெருமையும் இதற்குண்டு. சுமார் முப்பது மொழிகளில் சுமார் நூற்றைம்பது மொழிபெயர்ப்புகளைக் கொண்டு உலகரங்கில் தமிழுக்குத் தனிமேடை யளித்துள்ளது. பல மொழிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிபெயர்ப்புகளைப் பெற்றுள்ளதும் குறித்தற்பாலது. ஆங்கிலத்தில் மட்டும் ஐம்பதிற்கு மேற்பட்ட மொழிபெயர்ப்புகள் உள்நாட்டு வெளிநாட்டு அறிஞரால் எழுந்திருப்பது இதன் மேன்மைக்கு மற்றொரு சான்றாகும்.

திருக்குறளின் முதல் மொழிபெயர்ப்பு மலையாளத்தில் 1595இல் நிகழ்ந்துள்ளது. ஆனால் அது 1938, 1940-41ஆம் ஆண்டுகளில் தான் வெளிவரும் சிறப்பினைப் பெற்றது. அதன் மொழிபெயர்ப்பாளர் பற்றிய விவரம் அறிய இயலவில்லை. லத்தீன் மொழியில் 1730இல் மொழிபெயர்த்த வீரமாமுனிவர் குறளை ஐரோப்பிய மொழியில் முதன் முதலில் தந்த ஐரோப்பியர் என்ற பெருமைக்குரியவராகிறார் (K.D. Thirunavukkarasu, Tirukkural in the languages of the world, Cyclostyled Booklet). எனினும் இவர் குறளின்

முதல் இரு பகுதிகளுக்கு மட்டுமே மொழிபெயர்ப்பு அளித்துள்ளதாகத் தெரிகிறது.

அடுத்தபடியாகப் பிரெஞ்சு மொழியில் 1767இலும், ஆங்கிலத்தில் 1794இல் கிண்டர்ஸ்லே என்பவராலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாக அறிகிறோம். இவை தமிழின், திருக்குறளின் மிகப் பழமை வாய்ந்த மொழிபெயர்ப்புகள் என்ற சிறப்பையும் பெறுகின்றன. அறியவரும் தமிழின் மொழிபெயர்ப்பு களுள் திருக்குறள் மலையாள மொழிபெயர்ப்பு முதன்மையானதாக, பதினாறாம் நூற்றாண்டினதாக அமையக் காண்கிறோம்.

ஆங்கில மொழிபெயர்ப்பாளர்களில் குறிப்பிடத்தக்க சிலராக எப். டபிள்யூ. எல்லீஸ் (1812) டபிள்யூ.எச்.ட்ரூ (1840), ஜான் லாசரஸ் 1885, ஜி.யூ. போப் (1886), வ.வே.சு. ஐயர் (1915), அ. மாதவையா (1925), எச். எ. பாப்லே (1931) எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை (1942) வி.ஆர். ராமசந்திர தீட்சிதர் (1949), யோகி சுத்தானந்த பாரதியார் (1968), கஸ்தூரி சீனிவாசன் (1969), முதலியோரைக் காட்டலாம். தொடர்ந்து இன்றும் ஆங்கில மொழிபெயர்ப்புகள் தோன்றிக் கொண்டிருப்பதைப் பி.எஸ். சுந்தரம், புனரபி பாரதி (1998), கே. ஆர். ஸ்ரீனிவாஸ ஐயங்கார் (1998) மொழிபெயர்ப்புகளால் உணரலாம்.

மிக அண்மையில் மொழிபெயர்த்த சி.ஆர். ஆச்சார்யா (மு.ப. 1999, இ.ப. 2000) தமது Maxims of Truth - Commentary on Thirukkural நூல்வழித் திருக்குறள் மொழிபெயர்ப்புச் செம்மல் எனும் சிறப்புப் பெற்றிருப்பது நவிலத்தக்கது. இவர் பத்தாண்டுகளுக்கு மேலாகத் தெலுங்கு மொழியில் திருக்குறள் சொற்பொழிவுகள் நிகழ்த்தியதும் குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் முதல் மொழிபெயர்ப்பு கண்ட பிரெஞ்சு மொழி பத்தொன்பதிலும் மேலும் நான்கு மொழிபெயர்ப்புகளை இ.எஸ். ஏரியல் (1848), பி.ஜி. டுமாஸ்ட் (1854), இ. லாமெரிஸ் (1867), எல். ஜாக்கொல்லாய்ட் (1867) என்போர் தந்துள்ளனர். சென்ற நூற்றாண்டிலும் குறள் மொழிபெயர்ப்பு (1942) இதில் காணப்படுகிறது.

ஜெர்மன் மொழிக்கும் திருக்குறள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. 1803இல் காம்மெரா என்பவராலும் தொடர்ந்து பிரிடிரிக் ரெக்கெட் (1847), கார்ல் க்ரால் (1854) வில்லியம், நார்கேட் என இருவர் இணைந்தும்

(1866) மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை அறிய வருகிறது. ஆல்பெர்ட்பென்ஸ், கே. லலிதாம்பாள் இணைந்து 1977இல் மொழிபெயர்த்துள்ளமை இக்காலத்ததாகிறது.

லத்தீன் மொழியிலும் இப்பத்தொன்பதில் சார்லஸ் க்ரால் (1856) மற்றும் பிறிதொருவராலும் (1865) மொழிபெயர்க்கப் பட்டுள்ளதை அறியலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே குறள் உலகப் புகழ் பெற்று விட்டதை இவை காட்டுகின்றன.

மற்றும் பர்மீஸ் (மியோதண்ட், 1964), சீனம் (1967), செக் (கமில் சுவலபில் 1952-54), டச் (டிகத் 1964), பிஜி (எஸ்.எல். பெர்விக் 1964), பின்னிஷ் (பெண்டிட் ஆல்டோ 1972), மலாய் (ஹூசைன் இஸ்மாயில் 1967, ராம்லி பின் தாகிர் - 1964), போலிஷ் (உமாதேவி, 1958), ரஷ்யன் (ஜே.ஜே. க்ளாசவ் & ஏ. கிருஷ்ணமூர்த்தி 1963, ஆலிப் இப்ராஹிமோவ் 1964), சிங்களம் (சார்லஸ் டிசில்வா 1964, எம்மிசிகமி கோவோக்கடா, 1961) ஸ்வீடிஷ் (1971) சப்பான் எனப் பிற உலக மொழிகளில் குறள் உலா வந்துள்ளது.

இந்திய மொழிகளில் மலையாளம், தெலுங்கு, இந்தி ஆகியன அதிக அளவிலான மொழிபெயர்ப்புகளைக் (ஒவ்வொன்றும் சுமார் பத்திற்கு மேல்) கொண்டு குறளைச் சிறப்பித்துள்ளன. அழகத்து குரூப் (1875), பரமேசுவரன் பிள்ளை (1926), ஜி. பாலகிருஷ்ண நாயர் (1963) கே. செல்லன் நாடார் (1962) என்போரை மலையாள மொழிபெயர்ப்புகளுக்குச் சுட்டலாம். சிறுவர்களுக்காகத் தாமோதரம் பிள்ளை (1951) மலையாளத்தில் தந்திருப்பது கருதற்பாலது. அண்மை மலையாள மொழிபெயர்ப்பான ரமேச நாயரின் ஆக்கம் பரவலாகப் போற்றப்படும் பெருமையதாகும்.

கனுபர்த்தி வெங்கடராம வித்யானந்தா என்பவர் முதலாவதாக 1880இல் தெலுங்கில் குறளை ஏற்றியுள்ளார். அடுத்து சொக்கம் நரசிம்ம நாயுடு (1892), பூதலப்பட்டு ஸ்ரீராமுலுரெட்டி (1948), முதிகண்டி ஜகன்ன சாஸ்திரி (1952), சல்லா ராதாகிருஷ்ண சர்மா (1954 சாகித்திய அக்காதெமி விருதுபெற்ற சிறப்புடையது) எனத் தொடர்ந்து மொழிபெயர்ப்புகள் எழுந்துள்ளன. விடுதலைப் போராட்ட வீரர் சரிமெள்ள சத்திய நாராயண அறத்துப்பாலைப் பரிமேலழகர் உரையுடன் தெலுங்காக்கம் க்ண்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இம்மொழிபெயர்ப்புகள் தொடர்ந்து (மு.கு. ஜகந்நாத ராஜா. . . . ) குறளுக்கு அணியாகின்றன.

ஹேம்நாத் ரகத் இந்தியில் 1924இல் முதன் முதலாகக் குறளை மொழிபெயர்த்துள்ளார். கோவிந்த்ராஜ் ஜெயின் (1942), சங்கர்ராஜ் நாயுடு (1958), ராஜன் பிள்ளை (1976), சேஷாதிரி (1982) எனப் பிறரும் குறளை இந்தி மொழிக்கு மாற்றம் செய்துள்ளனர். திருக்குறள் பிரச்சார சங்கம் என்ற அமைப்பின் வழி என்.ஜி. வேங்கட கிருஷ்ணன் இந்தியில் மொழிபெயர்த்துள்ளதும் அறியத்தக்கது.

சமஸ்கிருதத்திலும் சக்கரபாணி ஐயர் (1858), பி.எஸ். சுப்ரமணிய சாஸ்திரி (1922), எஸ்.என். ஸ்ரீராமதேசிகன் (1978) பிறர் (1942, 1956) என ஐந்து மொழிபெயர்ப்புகள் காணப்படுகின்றன.

1898இல் ஆர். நரசிம்மாசாரியார் மொழிபெயர்த்த அறத்துப்பால் 1911இல் வெளிவந்து குறளைக் கன்னட மொழிக்கு அறிமுகப்படுத்தியது. தொடர்ந்து ஸ்ரீகண்டையா (1940) குண்டப்பா (1960) போன்றோரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 1982இல் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் வழி பி.எஸ். ஸ்ரீனிவாசன் மொழிபெயர்த்த கன்னடக் குறள் சிறப்பானதாகப் பாராட்டப் படுகிறது.

ஏனைய இந்திய மொழிகளான வங்காளம் (நளினி மோகன் சன்யால் 1939, இ.சி. சாஸ்திரி 1974, சுவாமி ஸ்ரீ நரசிங்க ராமானுஜ தாஸ் 1993), குஜராத்தி (நஞ்சுலால் ஷோச்சி 1931, காந்திலால் கலானி 1971) தெலுங்கு (பூதலப்பட்டு ஸ்ரீ ராமுலு செட்டியார்), மராத்தி (பி.எஸ்.எஸ். சானே குருஜி 1940), ஒரியா (கிஷோர் தாஸ் 1985, பிஸ்வநாத் மிஸ்ரா 1996), பஞ்சாபி (ராம்மூர்த்தி சர்மா, 1983), ராஜஸ்தானி (கமலாகூர்க் 1982), சௌராஷ்டிரம் (எஸ்.எஸ். ராம் ? 1980), உருது (ஹஸ்ரத் சுக்ரவர்தி 1962, முகமது யாசுப் ஹோகன் 1976) என்பனவற்றிலும் குறள் மொழியாக்கம் கண்டுள்ளது. மராத்தி, வங்காளம் தவிர இங்குள்ள பிறமொழிகளில் இருபதின் பிற்பகுதியில் தான் குறள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை அறியத்தக்கது. அஸ்ஸாமி முதலான பிற இந்திய மொழிகளில் இன்மையும் கவனத்திற்குரியதாகும். குறள் தேசிய நூலாக அறிவிக்கப்படின் இக்குறை நீங்கும் எனக் கருதலாம்.

இந்திய மொழிகளில் திருக்குறள் பெற்றுள்ள செல்வாக்கினை First-All-India Tirukkural Research Seminar papers (May 1972) - Dr. Sanjeevi (ed.) எனும் சென்னைப் பல்கலைக்கழகக் கருத்தரங்க வெளியீட்டினில் காணலாம்.

திருக்குறளின் மொழிபெயர்ப்புகள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளுடன் இணைந்து அமைந்திருப்பதும் சிறப்பாக உணர்த்தத் தக்கதாகும். சான்றாக, குறள் இயக்க வெளியீடாக அமையும் இன்செராமிலி பின் ஹாஜிதாகிர் மொழிபெயர்ப்பு ஆங்கிலம் மற்றும் மலாய் மொழியுடன் அமைவது; 1956இல் வெளியான சமஸ்கிருத மொழிபெயர்ப்பு இந்தி மொழியுடனுமாக அமைவது; முகமது யூசுப் ஹோகன் உருது மற்றும் அரபி மொழிபெயர்ப்புகளை இணைத்திருப்பது ஆகியவற்றைச் சுட்டலாம்.

இம்மொழிபெயர்ப்புகள் குறிப்பாக ஆங்கிலத்தில் அமைவன தமிழ் மூலம் மற்றும் பரிமேலழகர் உரையுடனும் வெளிவருவதும் அறிதற்பாலது. கே.எம். பாலசுப்ரமணியன் மொழிபெயர்ப்பு தமிழ் மூலத்துடன் கூடியதற்குச் சான்றாகும். 1972இல் வடிவேலுச் செட்டியாரின் உரையுடன் கூடிய ஆங்கில மொழிபெயர்ப்பு பரிமேலழகர் உரையையும் உட்கொண்டமைக்கு எடுத்துக் காட்டாகும். சார்லஸ் க்ராலின் லத்தீன் மொழிபெயர்ப்பு திருக்குறளின் செம்மொழி வடிவம் மற்றும் வழக்குத் தமிழ் வடிவத்துடனும் அமைவது குறிப்பிடத்தக்கது. கே. பரமேஸ்வரன் பிள்ளையின் மலையாள மொழிபெயர்ப்பு மலையாள வரிவடிவிலும் (Transliteration) அமைந்துள்ளது.

திருக்குறளின் இணையற்ற பெருமையைப் பலரும் பலவாறாகப் போற்றியுள்ளதில் (Tributes and Translations of Tirukkural) ஒன்றிரண்டை இங்குச் சான்றாகக் காட்டலாம். 'Nothing in the whole compass of human language, can equal the force and terseness of the distichs in which the author of **Kural** conveys the lessons of Wisdom' என்பது பி. பெர்சிவெல் தரும் புகழுரையாகும். ஈரடிகளில் மிகச் செறிவாக, ஆழமாக அறிவார்ந்த முதுமொழிகளைப் படிப்பினை யாகத் தந்துள்ளதில் குறளுக்கு ஈடு இணையில்லை இவ்வுலகில் என இவர் அதன் பொருண்மையைப் பாராட்டியுள்ளார். மனிதநேய மாண்பாளராக, நண்பராக, ஆசிரியராக நின்று வள்ளுவர் பொதுநிலையில் மனிதனுக்கு வழிகாட்டுகிறார் என்பது "Tirukkural is an integral homogeneous work of art, the author of which addresses either king, subject nor priest but men. And he (Tiruvalluvar) does not addresses man either as law given or prophet, but as a well - wisher, teacher and friend" எனும் அலெக்ஸாண்டர் பயாதிகோர்ஸ்கியின் கருத்தாகும்.

வாழ்வியலை வள்ளுவர் அழகிய நெறியில் வரிசைப் படுத்தியுள்ளார் என வள்ளுவத்தின் அமைப்பு முறையைக் கமில் சுவலபில் ஏற்றியுரைப்பதும் இங்குச் சுட்டத்தக்கதாகும். "Man in the totality of his relationships is the subject of the Kural, after a 'Cosmic' introduction, which praises god, rain, superman, and virtue, the author of the book turns towards man, whose personality is gradually unfolded in 'ever expanding concentric cycles' within the family with his wife and children, within his country in his relationship towards the ruler and the state. Man is shown not in a static state but in development and the force that is behind this dynamism is sympathy, even love, manifesting itself through kind thought sweet words, and right actions" என்பது அவர் வாய்மொழியாகும். "கீதை உலக வாழ்வினையொத்துச் செயற்துடிப்பு மிக்க வாழ்வில் விடாமுயற்சியைக் கட்டாயமாக்கி, வைராக்கியமுடைய ஒரு நெறியை வலியுறுத்துகிறது. ஆனால் குறளில்தான் எத்தனை முன்னேற்றம். குறளின்படி ஒருவன் செய்யும் எத்தொழிலும் தன்னளவில் உயர்ந்ததாயும் உன்னதமாயும் அமைகிறது" எனும் அல்பர்ட் ஷ்வைட்ஸரின் கருத்துத் (ஆ. ஞானசேகரன், முன்சுட்டியது, ப. 9) தமிழருக்குப் பெருமிதம் அளிப்பதாகும்.

பதினெண் கீழ்க்கணக்கின் ஏனைய நூல்கள் குறிப்பிடத்தக்க சிறப்பினை மொழிபெயர்ப்பில் பெறவில்லை எனலாம். நாலடியார் மட்டும் சுட்டத்தக்க மொழிபெயர்ப்புகளைப் பெற்றுள்ளதாகத் தெரிகிறது. 1892இல் புஷ்பரத செட்டியால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. 1893இல் போப் மொழிபெயர்த்துள்ளார். அனவரதம் பிள்ளையின் நாலடி மொழிபெயர்ப்பு தற்பொழுது மீண்டும் (2000) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. பிரெஞ்சு மொழியில் 1946இல் ஞானு தியாகோ, மலையாளத்தில் திருவள்ளா ஜி. பாஸ்கரன் நாயர் (1967), தெலுங்கில் ஸ்ரீராமுலு ரெட்டி, சமஸ்கிருதத்தில் கடலங்குடி சுப்ரமணிய சாஸ்திரி எனப்பிற நாலடியார் மொழிபெயர்ப்புகளை அறிய முடிகிறது. பழமொழி நானூறை உமா (2002) அண்மையில் தெலுங்கில் தந்துள்ளார். திரிகடுகம் 1887இல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட, நான்மணிக்கடிகை பிரெஞ்சிலும் (ஞானு தியாகோ, 1954) கன்னடத்திலும் (எல். குண்டப்பா 1939) மொழிமாற்றம் கண்டுள்ளது.

பிற்காலத்திய அறநூல்கள் பலவும் இணைந்து மொழிபெயர்க்கப்படும் தன்மையை அறிய முடிகிறது. ஆத்திசூடி கொன்றை வேந்தன் என அவ்வையார் பாடல்கள், குமரகுருபரரின் நீதி நெறி விளக்கம், சிவப்பிரகாசரின் நன்னெறி என்பன அவற்றுள் சிறப்பிடம் கொள்கின்றன. ஜே. வின்பிரெட் (இரண்டாம் பதிப்பு 1872) டி.பி. கிருஷ்ணசாமி (1937), மொழிபெயர்ப்புகளைச் சான்றாக்கலாம். 1830இல் எச். ஸ்டோக்ஸ் நீதிநெறிவிளக்கத்தை மொழிபெயர்த்துள்ளதும் கூறத்தக்கது. தற்பொழுது சு.ந. சொக்கலிங்கம் (1995-1998) இவற்றுடன் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களையும் ஆங்கில வாக்கியமாக்கித் தமிழ் மூலத்துடன் அளித்துள்ளார்.

பிரெஞ்சு மொழியில் ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை, நன்னெறி, நீதிநெறிவிளக்கம் (பெ. ஆடம்) அறிநெறிச்சாரம் ஆசாரக்கோவை (ஞானு தியாகோ 1950) ஜெர்மன் மொழியில் நீதிவெண்பா, கொன்றை வேந்தன், உலக நீதி (ஜீகன் பால்கு), மலையாளத்தில் ஆத்திசூடி (திருவள்ளா பாஸ்கரன் நாயர், 1933), சமஸ்கிருதத்தில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி (எஸ்.என். ஸ்ரீராமதேசிகன், 1971), நல்வழி, வாக்குண்டாம் (ஒய். மகாலிங்க சாஸ்திரி) என்பன அறியவரும் பிறமொழி மொழிபெயர்ப்புகளாம். இவற்றுள் எஸ்.என். ஸ்ரீராமதேசிகனின் சமஸ்கிருத மொழிபெயர்ப்பு உத்தரபிரதேச அரசின் பாராட்டினை 1973இல் பெற்றது சிறப்பாகும்.

**காப்பியங்கள்**

தமிழின் முதற் காப்பியமான சிலப்பதிகாரமும், தனிப்பெருங்காப்பியமான கம்ப இராமாயணமும் மொழிபெயர்ப்பு களைப் பிறவற்றை விட மிகுதியாகப் பெற்று தமிழின் இலக்கிய வளத்தை, செழுமையை உலகு ஏற்றுள்ளமையை, உணர்ந்துள்ளமையைத் தெரிவிக்கின்றன.

1900இல் ஜூலியன் வின்சனால் பிரெஞ்சு மொழியில் பதிகம் மற்றும் மூன்ற காதைகள் (16,17,18) பெயர்க்கப்பட்டதே சிலப்பதிகாரத்திற்கான முதல் மொழிபெயர்ப்பு போலும். ஆங்கிலத்தில் வி.ஆர். ராமசந்திர தீட்சிதர் (1939), ஏ.எஸ். பஞ்சாபகேச ஐயர் (1947) அலெய்ன் டேனியல் (1965), எஸ். கிருஷ்ணமூர்த்தி (1966), க.நா. சுப்பிரமணியம் (1977), பார்த்தசாரதி (1996) எனப் பல மொழிபெயர்ப்புகள் வந்துள்ளன. அலெய்ன் டேனியல் பிரெஞ்சு

மொழியிலும் ஆர்.எஸ்.என். தேசிகனுடன் இணைந்து (1961) மொழிபெயர்த்துள்ளார். ஒய்.ஒய். கிளாஜோவ் என்பார் ரஷ்ய மொழியில் சிலம்பைத் தந்துள்ளார்.

இந்தி, மலையாளம், தெலுங்கு, மராத்தி, சமஸ்கிருதம் என இந்திய மொழிகளிலும் சிலப்பதிகார மொழிபெயர்ப்புகள் அறிய வருகின்றன. எம்.ஜி. வெங்கடேசன் (1965), சங்கர் ராஜ் நாயுடு + எஸ்.என். கணேசன் (1979), அம்ருத்லால் நாகர் ஆகியோரால் இந்தி மொழி சிலப்பதிகாரத்தைப் பெற்றுள்ளது. பி. நாராயணன் நாயர் 1931இல் மலையாளத்திலும் 1955இல் சமஸ்கிருதத்திலும் சிலம்பை மொழிபெயர்த்துள்ளார். பி. விசுவநாதன் நாயர் (1975), நாராயண பணிக்கர், ச.வே. சுப்பிரமணியன் (வஞ்சிக்காண்டம்) ஆகியோர் சிலம்பின் பிற மலையாள மொழிபெயர்ப்பாளர் ஆவர். தெலுங்கில் பூதலப்பட்டு ஸ்ரீராமலு ரெட்டி செய்துள்ளதாக அறிய முடிகிறது. ஸ்ரீ ராமதேசிகன் புகார் காண்டத்தை மட்டும் 1968இல் சமஸ்கிருத வாக்கம் செய்துள்ளார். மகாதேவ சாஸ்திரி (1955) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி இணைந்த நிலையில் மராத்தியில் அறிமுகம் செய்துள்ளார்.

சுதாராணி ரகுபதியால் அவரது குழுவினருடன் ஸ்கெல்டன் என்பவர் ஆங்கிலத்தில் " Tale of Puhar" என மொழிபெயர்க்கப்பட்ட சிலப்பதிகாரத்தைக் 'கார்த்திக் பைன் ஆர்ட்ஸில்' அரங்கேற்றி யுள்ளார். இந்நாட்டிய நாடகத்தின் பாடல்களுக்கு மதுரை என். கிருஷ்ணசாமி அந்தந்த மெய்ப்பாடுகளுக்கு ஏற்ப பொருத்தமான ராகங்களினால் இசையமைத்துள்ளார். இதனை இந்து நாளிதழ் "A well planned team work dedicated participants, excellent music, a talented orchestra and above all, very simple yet sincere dance narrative of the main story based on the original Epic - Poem, have all contributed to the success of the 'Tale of Puhar'. Devised and executed with deep involvement by Sudharani Ragupathi" (Hindu, Dec 12, 2003. FR-4) எனப் பாராட்டியுள்ளது.

இவருக்கு முன்னோடியாக இருபதாம் நூற்றாண்டின் இடைப் பகுதிகளில் மிருணாளினி சாராபாய் தாமே பெயர்த்த சிலப்பதிகாரத்தினை நாட்டிய நாடகமாக அரங்கேற்றியுள்ளார். பின் மல்லிகா என்பவரும் இந்தியில் நாட்டிய நாடகமாக அரங்கேற்றி யுள்ளார். இவை வட இந்தியாவில் மிகுந்த வரவேற்பைப் பெற்றதும் அறிய முடிகிறது. (Madras Musings April 16-30. 2004) தமிழின் பிற

இலக்கியங்கள் பெறாது சிலப்பதிகாரத்தின் தனிப்புகழாகவும் இதனைக் கருதலாம்.

சென்னைக் கல்விச் சங்கத்தைத் தோற்றுவித்தோரில் ஒருவரான எல்லீசு பாதிரியார் 1812இல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள கம்பராமாயணப் பகுதிகளே கம்பனுக்கு அறியவரும் முதல் மொழிபெயர்ப்பாகும். 1900இல் அ. மாதவையாவும் ஆங்கில மொழிபெயர்ப்பு முயற்சியை மேற்கொண்டுள்ளதைச் சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் ஆண்டு மலர் அறிவிக்கிறது (1900). 1910இல் வெளிவந்த கம்பராமாயணக் கருப்பொருளின் நூறு பாடல்களும் உரைநடையில் ஆங்கில வாக்கம் கண்டுள்ளன.

கம்பனுக்கு இன்று கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்று திராவிட மொழிகளிலும், இந்தி, சமஸ்கிருதம் எனும் வட இந்திய மொழிகளிலும், ஆங்கிலம், பிரெஞ்சு எனும் மேலை மொழிகளிலும் ஆக சுமார் 30 மொழிபெயர்ப்புகள் மலர்ந்துள்ளன. மலையாளமும் (11), ஆங்கிலமும் (12) அதிகமான மொழிபெயர்ப்புகளைப் பெற்றுள்ளன. ஆங்கில மொழிபெயர்ப்புகளில் அ. சீநிவாசராகவனின் சுருக்க மொழிபெயர்ப்பு (1955), யுனெஸ்கோவின் தொகுப்பிற்காகப் பெறப்பட்ட ராஜாஜியின் அயோத்தியா காண்ட மொழிபெயர்ப்பு (1961), வி. சண்முக முதலியார் (1970), எஸ். மகராஜன் (1972), ஜார்ஜ் எல். ஹார்ட்டின் ஆரண்ய காண்ட மொழிபெயர்ப்பு (1998), தமிழக அரசு மொழிபெயர்ப்புத் திட்டத்தின் கீழ் வெளியிட்டுள்ள பி.எஸ். சுந்தரத்தின் முழுமையான செய்யுள் வடிவம் (1999) என்பன குறிக்கத்தக்கன. எம்.எஸ். வேங்கடாசலம் 'selected poems of Kamban' என 2000 பாடல்களை மொழிபெயர்த்துள்ளார் (2003) வ.வே. சுப்பிரமணிய ஐயர் சுமார் 4000 கம்பன் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளதாகத் தி. வைத்தமாநிதி அறிவிக்கிறார். இவரின் 'Kambaramayana - A study' நூலுள் ஏறத்தாழ 500 பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்பதும் இவண் எண்ணத்தக்கது.

1922இல் மலையாளத்தின் முதல் மொழிபெயர்ப்பு 'கம்பருடைய கதா' என வெளிவந்துள்ளது. 1937இல் பிறிதொரு மொழிபெயர்ப்பு எழுந்துள்ளது. மற்றும் 1954இல் ஜி. ராமகிருஷ்ண பிள்ளை, காவூங்கல் நீலகண்ட பிள்ளை (1959), எஸ்.கே. நாயரின் முதல் நான்கு காண்டங்கள் (1963-71) என்பன உள்ளன. அண்மையில் (2004) முழுமையான மலையாள மொழிபெயர்ப்பை உரைநடையில் ஸ்ரீதரன் நாயர் அளித்துள்ளார். சரசுவதி ராமநாதனின் இந்தி

மொழிபெயர்ப்பு மைய அரசின் விருது பெற்றதும் குறிக்கத்தக்கதாம் (தினமணி 3-8-1999). இந்தியில் என்.வி. ராஜகோபாலனின் மொழிபெயர்ப்புப் பிறிதொன்றாகும். சமஸ்கிருதத்திலும் எஸ்.என். ஸ்ரீராமதேசிகன் (1964), எஸ். நீலகண்டசாஸ்திரி ஆகியோரின் இரு மொழிபெயர்ப்புகளும் தெலுங்கில் பூதலப்பட்டு ஸ்ரீராமலுரெட்டியின் பெயர்ப்பும் அறிய வருகின்றன. பிரெஞ்சு (ஞானு தியாகோ சுந்தரகாண்டம், 1972), கன்னடம் (குசலப்ப கௌடே, சி. உருத்திரபதி), தெலுங்கு (ஆர்ஆர். ரெட்டி, 1950) எனப் பிறமொழிபெயர்ப்புகளும் கம்பராமாயணத்துக்கு அமைந்துள்ளன.

சின்மயா யுவகேந்திரா, ஆங்கிலத்தில் கம்பராமாயணச் சுருக்க மொழிபெயர்ப்பை (கே.எஸ். ஸ்ரீனிவாசன்) ஒளி-ஒலிக் காட்சியாக 1980/1981இல் நிகழ்த்தியது சிறப்பாகச் சுட்டத்தக்கதாகும்.

மற்றைய காப்பியங்களில் மணிமேகலையை ஆங்கிலத்தில் ஜி.யு.போப் 1911இல் அறிமுகப்படுத்தியுள்ளார். 1923இல் அ. மாதவையா, 1947இல் பஞ்சாபகேச ஐயர் எனப் பிறரும் ஆங்கிலத்தில் தந்துள்ளனர். 1928இல் பி. நாராயணன் நாயர் மலையாளத்திற்கும் பூதலப்பட்டு ஸ்ரீராமலு ரெட்டி தெலுங்கிலும் மாற்றம் செய்துள்ளனர். சிலம்பும் மணிமேகலையும் இணைந்த ஆங்கில மொழிபெயர்ப்பாக 1956இல் வி. கனகசபையும், 1996இல் லக்ஷ்மி ஹோல்ம்ஸ்ரோமும் அளித்துள்ளனர். இவை இரட்டைக் காப்பியங்கள் என வழங்கப்படுவதால் இந்நிலை எனலாம்.

பெரியபுராணம் முழுமையாக ஆங்கிலத்தில் டி.என். ராமச்சந்திரன் மொழிபெயர்க்கத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. கன்னடத்தில் எ.சங்கர் கேடிலியா என்பரால் 1974இல் பெரியபுராணக் கன்னட வரிவடிவத்துடன் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. தெலுங்கில் பி. சுப்பிரமண்ய சர்மா மற்றும் பூதலப்பட்டு ஸ்ரீராமலு ரெட்டி தந்துள்ளார்.

சீவகசிந்தாமணியின் நாமகள் இலம்பகம் மட்டுமா எச். பவர் மற்றும் இ. முத்தையா பிள்ளை இணைந்து 1868இல் ஆங்கிலத்தில் ஆக்கியுள்ளனர். 1883இல் சூலியின் வில்சன் பிரெஞ்சு மொழியில் பெயர்த்துள்ளார். இவர் பெரியபுராணம் மற்றும் கம்பராமாயணத்தையும் சிற்சில பாடல்களின் மொழிபெயர்ப்பால் பிரெஞ்சு நாட்டினருக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். நீலகேசியை ஏ. சக்கரவர்த்தி ஆங்கிலத்தில் 1936இல் தந்துள்ளார்.

## பக்தி இலக்கியங்கள்

தனித்து எண்ணத்தக்க மொழிபெயர்ப்புகள் என்ற வகையில் அடுத்து பக்தி இலக்கியப் படைப்புகள் அமைகின்றன. பக்தி இலக்கியங்கள் மிகுதியும் சிற்றிலக்கிய வகைமைகளைத் தம் வடிவமாகக் கொண்டுள்ளமையால் சிற்றிலக்கியங்களின் மொழிபெயர்ப்பாகவும் பின்வருவனவற்றைக் கருதலாம்.

1672இல் கன்னடத்தில் சிக்கோபாத்யா என்பவர் நம்மாழ்வார் திருவாய் மொழியை மொழிபெயர்த்துள்ளமை மிகப் பழமையான மொழிபெயர்ப்பாகும்.

பொதுவாகப் பக்தியிலக்கியங்களுள் மணிவாசகரின் திருவாசகமும், ஆண்டாளின் திருப்பாவையும் பிறமொழி யேற்றத்தில் சிறப்புப் பெற்றுள்ளன.

1897இல் திருவாசகத்தின் பெருமையுணர்ந்த ஜி.யு.போப் அந்நூல் மொழிபெயர்க்கப்பட வேண்டியதன் கட்டாயத் தேவையை, 'It has been repeatedly asked, 'of what possible use the republication, translation and editing of books like the Tiruvacagam be, and who can be expected to desire to make themselves acquainted with such works? This consideration has delayed the publication for some time and it is not at all to be anticipated that the circulation of the book, at least in Europe will, for some time to come be encouraging. Still this is a work ought to be done! If the Tamil people and the English are ever in any degree to understand, one another and to appreciated each others thoughts and feeling regarding the highest matter if any progress is to be made in the development of a real science of Hinduism, as it now is, our English people must have the means of obtaining some insight in to the living system which exercises at the present day such a marvellous power over the minds of the great majority of the best Tamil people" என நவின்றுள்ளார். தமிழ், ஆங்கிலம் என இருமொழியினரும் ஒருவரையொருவர், அடுத்தவரது கருத்துகளையும், உணர்வுகளையும் புரிந்து கொண்டு பாராட்டுதல் செய்யவும், தமிழ் மக்களின் உள்ளத்தில் மிக உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ள வாழ்வியல் நெறியை வலியுறுத்தும் திருவாசகத்தின் பெருமையை, பொருளாழத்தை ஆங்கிலேயர் நுண்ணிதின் உணர்ந்து கொள்ளவும் இன்றியமையாதது என அவர் மொழிந்திருப்பது திருவாசகத்திற்கு மட்டுமின்றித் தமிழ் மொழிக்கும், தமிழருக்கும் பெருமை தருவதாகும்.

பி. அருணாசலம், கே.எம். பாலசுப்பிரமணியன் (1958), ரத்னா நவரத்னம் (1963), ஜி. வான்மீகநாதன் (1971), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வழி டி.என். ராமச்சந்திரன் (2001) சி. சீனிவாசன், இறையன்பன் எனப் பிற பல மொழிபெயர்ப்புகள் ஆங்கிலத்தில் திருவாசகத்திற்குத் தோன்றியுள்ளன. ஆல்பிரெச்ட் பிரென்ஸ் பி. நாகராசன் இணைந்து அளித்துள்ள ஜெர்மன் மொழிபெயர்ப்பு (1977), ஹில்கோ வியார்டோ ஷோமரூஸின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு (1923), சி. உருத்திரபதியின் கன்னட மொழிபெயர்ப்பு என இதன் பிறமொழிபெயர்ப்புகள் உள.

திருப்பாவை ஆங்கிலத்தில் ஆர். சேஷாத்திரி (1950) எம்.ஆர். சம்பத்குமாரன் ஸ்ரீனிவாசனுடன் இணைந்து, கிருஷ்ண ஸ்ரீனிவாசன் (1972) பி.எஸ். சுந்தரம் ஆகியோர் மொழிபெயர்த்துள்ளனர். திருவாசகமணி 1962இல் இதனுடன் திருவெம்பாவையையும் இணைத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். தெலுங்கில் திருப்பாவை 1914இலேயே ஏற்றம் கண்டுள்ளது. புலுசு வெங்கடேசுவரலு (1972) மற்றும் தாமேர ராஜகோபாலராவும் செய்தவை திருப்பாவையின் பிற தெலுங்கு மொழிபெயர்ப்புகளாம். பிரெஞ்ச் மொழியில் ஆர். டெஸிக்னே (1952), ஜீன் பிலியோஸாட் என இரு மொழிபெயர்ப்புகள் காணப்படுகின்றன. இதே போன்று திருப்பாவைக்கு இந்தியிலும் விஹிஷா சார்யா சாஸ்திரி (1967), கஸ்தூரி ரங்கா சார்யா (1961) என இருவரின் பெயர்ப்புகள் அமைகின்றன. வங்காளத்தில் யதிந்திர ராமானுஜ தாஸ் மொழிபெயர்த்துள்ளார். கன்னடத்தில் ஸ்ரீ ரங்காச்சாரியர் (1937), ஏ.என். ஸ்ரீனிவாச ஐயங்கார் ஆகியோரின் மொழிபெயர்ப்புகள் அறிய வருகின்றன. சமஸ்கிருதத்தில் எஸ்.என். ஸ்ரீராமதேசிகனும், பிறிதொருவரும் (1910) தனித்தனியே மொழிபெயர்த்துள்ளனர். ஜெர்மன் மொழியில் ஹில்கோ வியார்டோ ஷோமரூஸ் 1931இல் திருப்பாவையுடன் காரைக்காலம்மையார் பாடல்களையும் சேர்த்து மொழிபெயர்த்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தேவாரப்பாடல்களை ஆங்கிலத்தில் எப். கிங்ஸ்பரியும் சி.இ. பிலிப்ஸும் இணைந்து 1921இல் அறிமுகப்படுத்தியுள்ளனர். கே.எம். வேங்கடராமையா இவற்றை 1981இல் சிறு சிறு தொகுப்புகளில் மொழிபெயர்த்துள்ளார். சோ.ந. கந்தசாமியின் சுந்தரர் தேவாரத்தின் முதல் பகுதி மொழிபெயர்ப்பை ஆசியவியல் நிறுவனம் (2000) வெளியிட்டுள்ளது. மலையாளத்தில் ஸ்ரீநாராயணகுரு (1974) தேவாரப்பாடல்களை மொழிபெயர்த்துள்ளார். சமஸ்கிருதத்தில் 1910இல்

இதன் மொழிபெயர்ப்பை அறிய முடிகிறது. எஸ்என். ஸ்ரீராமதேசிகனும் பின்னாளில் தேவாரப்பாடல்களுக்குச் சமஸ்கிருத மொழிபெயர்ப்பைத் தந்துள்ளார். ஆங்கிலத்தில் பன்னிரு திருமுறை திரட்டு (1981, கே.எம். வேங்கடராமையா) (Poems to Siva: The Hymns of the Tamil Saints இந்திரா விஸ்வநாதன் பீட்டர்சன், 1989) என்பன போன்றும் அமைதல் சுட்டற்பாலது. காரைக்காலம்மையாரைப் பிரெஞ்சு மொழியில் காராவெலேன் 1956இல் அறிமுகப்படுத்தியுள்ளார். மற்றும் எதுவார் அரியேல் திருக்கோவையார் (1848), கல்லாடத்தைப் பிரெஞ்ச் மொழியில் தந்திருப்பது கூறற்பாலது.

தாயுமானவர் பாடல்களும், திருவருட்பாவும் ஓரளவு ஆங்கிலேயர்க்கு அறிமுகமாகியுள்ள பிற சைவ இலக்கியங்களாம். ஆர். சண்முக முதலியார் (1897), ஐசக் தம்பையா (1925), சுத்தானந்த பாரதி (1963), முத்து குமாரசாமி (1977) என்போர் தாயுமானவர் பாடல்களுக்கு ஆங்கிலவாக்கம் அளித்துள்ளனர். இதற்கு ஆர்னோ லெக்மான் 1935இல் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு தந்துள்ளார்.

திருவருட்பாவினைப் பி. முத்தரசு (1964) அ. பாலகிருஷ்ணன் (1966), எஸ், ராமலிங்கம் (1977), டிஎன். ராமசந்திரன் (1995 ஆறாம் திருமுறை) முதலியோர் ஆங்கிலவாக்கம் செய்துள்ளனர். தெலுங்கில் (1965) மணிமங்கலம் பத்மநாபன் தெய்வமணி மாலையை மட்டும் பெயர்த்துள்ளார். டிஆர். துளசிராம் 1980இல் சமஸ்கிருதத்தில் திருவருட்பாவை மொழிபெயர்த்துள்ளார். திருமந்திரம் ஆங்கிலத்தில் பி. நடராசனாலும் (1958) மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மலையாளத்தில் திருவள்ளம் பாஸ்கரன் நாயர் (1976) மொழிபெயர்த்துள்ளார். கந்தரனுபூதி (என்.வி. கார்த்திகேயன் 1971), அபிராமி அந்தாதி (அ. தட்சிணாமூர்த்தி), சகலகலாவல்லிமாலை (திருப்பனந்தாள் காசி மடம்) பழனியாண்டவர் மயில் விடு தூது (எச். விவேகானந்தம் பிள்ளை), கந்தர் கலிவெண்பா (கே. சிவராமன், 1962), நெஞ்சு விடு தூது, போற்றிப் பஃறொடை (டிஎன். ராமசந்திரன்) என்பன ஆங்கில மொழிபெயர்ப்பினைப் பெற்றுள்ள பிற சைவ சமய இலக்கியங்களாம். ஆர். டெஸிக்னே பட்டாபிராமனுடன் இணைந்து 1967இல் கந்தபுராணத்தைப் பிரெஞ்சு மொழியில் தந்ததும், இரா. தேசிகம்பிள்ளையின் சரசுவதி அந்தாதி, சகல கலா வல்லிமாலையின் பிரெஞ்சுப் பதிப்பும் 1974இல் அலின்பஹாசா ஜி.சூசை அபிராமி அந்தாதியை மலாய் மொழியில் தந்ததும், 1963இல் படிகோர்ஸ்கிஸ் ரஷ்ய மொழியில் திருவிளையாடற் புராணம் மொழியாக்கம் செய்ததும் சுட்டத்தக்க பிறவாம். இந்தியில் கந்தர் கலிவெண்பாவை (1965) ரெங்கநாதசாரியர் தந்ததும் குறிக்கத்தக்கதே.

சைவ சமயத் தத்துவ விளக்க நூல்களும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளமை கூறத்தக்கதாகும். அவிரோத உந்தியார் (தாமஸ் பவுல்கஸ், 1860, என். முருகேச முதலியார், 1976), சசிவர்ண போதம் (தாமஸ் பவுல்கஸ், 1862) சங்கற்ப நிராகரணம் (என். முருகேச முதலியார், 1976) சிவஞான சித்தியார் (கே. சிவராமையர், 1949), சிவஞான போதம் (ஜி.யு. போப், ஹென்றி ஆர் ஹெய்சிங்டன் 1854, ஜே.எம். நல்லசாமி பிள்ளை, 1895), சிவப்பிரகாச கட்டளை (தாமஸ் பவுல்கஸ், 1863), கைவல்ய நவநீதம் (டிடி சார்லஸ் க்ரால், 1855), தத்துவக் கட்டளை (ஹென்றி ஆர் ஹெய்சிங்டன்), திருவருட்பயன் (ஜே.எம். நல்லசாமி பிள்ளை, 1896), உண்மை விளக்கம் (நல்லசாமி பிள்ளை) என இப்பட்டியல் நீளக் காணலாம். இவற்றின் மொழிபெயர்ப்புகள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே எழுந்திருப்பதும் எண்ணத்தக்கது. சமயப் போராட்டம் நிலவிய காலமாக அதுஅமைந்திருந்ததும் கருதற்பாலது. மீண்டும் அவ்வப்போது சைவசித்தாந்த நூல்களின் ஆங்கிலப் பெயர்ப்புகள் மலருவதை பா. தேவேந்திரனின் சிவஞானபோத மொழிபெயர்ப்பு (1989), திருவருட் பயன், வினா வெண்பா, கொடிக் கவி, உண்மை விளக்கம் ஆகியவற்றை இணைத்து சைவ சித்தாந்த சதுஷ்டயமாக டிஎன். ராமசந்திரன் மொழிபெயர்த்தது போல்வன கொண்டறியலாம்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைக் கன்னடத்தில் முழுமையாக ஜி.என். ராமபிரசாத் மொழிபெயர்த்து அண்மையில் வெளியிட்டுள்ளார். பெரும்பாலும் இதன் பிற மொழிபெயர்ப்புகள் பகுதி பகுதியாகவே அமைந்துள்ளன. ஆங்கிலத்தில் முதலாயிரத்தின் தொகுப்பு 1906இல் வெளிவந்துள்ளது. நாலாயிரத்திற்குமான தொகுப்பினை 1902இல் கோவிந்தா சார்யாவும் 1929இல் ஜே.எஸ். எம். ஹீப்பரும் அளித்துள்ளனர். பாரதியாரும் ஆண்டாள், நம்மாழ்வார் பாடல் ஆங்கில மொழிபெயர்ப்பில் ஈடுபட்டதும் அறியத்தக்கது. வங்காளத்தில் திருப்பாவையை மொழிபெயர்த்த யதிந்திரராமானுஜதாஸ், நம்மாழ்வார் திருவாய் மொழி( 1963) மற்றும் மணவாள மாமுனிகளின் உபதேச ரத்னமாலையை மொழிபெயர்த்துள்ளார். இந்திக்கு நம்மாழ்வார் பாடல்கள் குமாராச்சர்யா ஸ்வாமியால் கொண்டு செல்லப்பட்டுள்ளன. பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டை ஜிபி. ராஜரத்தினமும் (1960) தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருமாலை ஏ.என். ஸ்ரீனிவாச ஐயங்காரும் கன்னடவாக்கம் செய்துள்ளனர். தெலுங்கிலும் எம். ராமானுஜசாரி (1962), பாபாயசெட்டி (1951), மாடபூசி கோபாலசார்யலு (1965), பவான சங்கரராமு உமா (2003), எனப்

பலரும் அவ்வப்போது தம்மைக் கவர்ந்த பகுதிகளை நாலாயிரத்தினின்றும் மொழிபெயர்த்துள்ளனர்.

சமஸ்கிருதத்தில் வேதாந்த தேசிகர், வரத வேதாந்தசாரியார், ஆகியோர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே இதன் பகுதிகளை மொழிபெயர்த்துள்ளனர். இருபதின் தொடக்கத்தில் சுண்டப்பாளையம், பாகவதவர்த்தினி அச்சகத்தார் பகுதிபகுதியாக மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர் (1910-1913). அண்ணங்கராச் சாரியரின் பிறிதொரு சமஸ்கிருத மொழிபெயர்ப்பு இரு தொகுதியாக 1961-1962 இல் வெளிவந்துள்ளது காஞ்சிபுரம் ஸ்ரீனிவாசா பிரஸ் பதினேழு தொகுதிகளாக 1913-1945இல் வெளியிட்டுள்ளதும் கூறற்பாலது. இவற்றால் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திற்குச் சமஸ்கிருதம் தனிவரவேற்பளித்துச் சிறப்பளித்துள்ளதை அறியலாம்.

**தற்காலம்**

தற்கால இலக்கியப் படைப்பாளர்களில் கவிதையில் பாரதியார் படைப்புகள் மொழிபெயர்ப்பில் முன்னிற்கின்றன. இருபதிற்கு மேற்பட்டன ஆங்கிலத்தில் எழுந்திருப்பது மகிழ்விற்குரியதாகும். 1937இல் பாரதியே அக்னிக்குஞ்சு முதலான சில பாடல்களை ஆங்கிலத்தில் வடித்து உலகினருக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். "அவருக்கும் முன்பாக, முதல் மொழிபெயர்ப்பாக அன்றைய ஆங்கில அரசாங்கமே திருநெல்வேலி சதிவழக்கிற்காக மொழிபெயர்த்தது. பாரதியார் நூலுக்கு அவ்வரசு தடை செய்ய, அதற்கு மறுப்பு தெரிவிக்கும் போது சட்டசபை உரையில் எஸ். சத்தியமூர்த்தியும் பாரதி பாடல்களை மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளார்" என்பர் (பிரேமா நந்தகுமார், பாரதியார் கருத்தரங்கு, காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகம், 20,21,-7-1993 கலந்துரையாடல்).

தேர்ந்தெடுத்தக் கவிதைத் தொகுப்புகள் (சி. இராஜகோபாலாச்சாரி, இப. 1965, கிருஷ்ணா ஸ்ரீனிவாஸ் 1979, பி.எஸ். சுந்தரம், 1982, பி. ராஜா, 1982) குயில்பாட்டு (ஹெப்சிபா ஜேசுதாசன், 1950), வசன கவிதைகள் (பி. ராஜா, 1982), பாஞ்சாலி சபதம் (ஹாகி. வாலம், மூப. 1972), கண்ணன் பாட்டு (ஏடி துரைசாமி பிள்ளை, 1966, டேவிட் பன்ச் 1975) சக்திப் பாடல்கள் (கே.ஜி. சேஷாத்திரி) எனக் குறிப்பிட்ட பகுதி மட்டும் கொண்டன எனப் பலவாறாக இவ் ஆங்கில மொழிபெயர்ப்புகள் அமைகின்றன. தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் முழுமையான, பாரதி பாடல்களின்

ஆங்கில மொழிபெயர்ப்பில் மூன்றில் இரு பங்கை டி.என். இராமச்சந்திரன் நிறைவு செய்திருப்பது குறிக்கத்தக்கது.

பாரதியார் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதில் 1958 முதல் தனி ஈடுபாடு காட்டி வரும் பிரேமா நந்தகுமாரின் சாகித்திய அக்காதெமி வழி வெளிவந்த Poems of Subramania Bharati (1977) யுனெஸ்கோவின் இந்திய இலக்கியக் களஞ்சியத்துள் இடம் பெற்று பாரதிக்கு மேலும் உலகளாவிய புகழ் சேர்த்துள்ளது.

பாரதி பாடல்கள் ரஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்டு 1960இல் Young Poets of India இதழில் வெளிவந்துள்ளது. சில செக் மொழியிலும் மொழியாக்கம் பெற்று அந்நாட்டு இதழ்களில் வந்துள்ளன. ஆத்திசூடி வழி லெயோன் சேன்ழான் பிரெஞ்சு மொழிக்குப் பாரதியை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்திய மொழிகளில், பாரதி பாடல்களின் தேர்ந்தவை (ஆனந்தி ராமனாதன் 1966, சரஸ்வதி ராம்னாத், 1976), தேசியப் பாடல்கள் (என். சுந்தரம் மற்றும் விஸ்வநாதன், 1971), பாஞ்சாலி சபதம் (ஹா.கி. வாலம் 1977), குயில்பாட்டு (1972) என மற்றும் சில இந்தியில் எழுந்துள்ளன. 1963இல் எஸ்.என். ஸ்ரீராமதேசிகன் சமஸ்கிருத மொழிபெயர்ப்பைத் தந்துள்ளார். கன்னடத்தில், எல். குண்டப்பா 1961இல் ரா.பி. சேதுப்பிள்ளை தொகுத்த பாரதி கவிதைகளை மொழிபெயர்த்துள்ளார். மலையாள மொழிக்கு டி. சுப்பிரமணியம், பாரதியின் வந்தே மாதரம் முதலான தேசியக் கவிதைகளையும், வெண்ணிக்குளம் கோபால குருப் தேர்ந்த கவிதை தொகுப்பினையும் (1962) மொழிபெயர்த்தளித்துள்ளனர். 1961இல் பூதலப்பட்டு ஸ்ரீராம ரெட்டியும் 1965இல் சல்லா ராதாகிருஷ்ண சர்மாவும், தெலுங்கில் பாரதி பாடல்களின் தொகுப்பினை மொழிபெயர்த்துள்ளனர். பொக்கோரே என்பவரால் சந்திரிகையின் கதை தெலுங்கு ஆக்கம் பெற்றுள்ளதும் நவிலற்பாலது.

திராவிட இயக்கக் கவிஞரான பாரதிதாசன், பாரதிக்கு அடுத்த நிலையில் சிறப்புறுகிறார். அவரது நூற்றாண்டு அவரது பாடல்களின் மொழிபெயர்ப்புப் பணியை மிகுவித்துள்ளது. 1990இல் வெளிவந்த அ. தட்சிணாமூர்த்தியின் Poems of Bharathidasan நூலும் புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனமும், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகமும் தனித்தனியே வெளியிட்ட பாரததாசனின் தேர்ந்தெடுத்த கவிதைத் தொகுப்பின்

மொழிபெயர்ப்பும் குறிக்கத்தக்கன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பாரதிதாசனின் சிறந்த 100 கவிதைகளைத் தேர்ந்து ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என நான்கு மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட்டது சிறப்பு நிலையாகும்.

பாரதிக்குப் பிரேமா நந்தகுமார் போன்று பாரதிதாசனுக்கு எம்.எஸ். வெங்கடாசலம் அமைகிறார். இவர் பாரதிதாசனின் புரட்சிக்கவி, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், வீரத்தாய், தனிக்கவிதைகள் 20 (Selected poems of Bharathidasan), பாண்டியன் பரிசு, என்பனவற்றை ஆங்கிலப்படுத்தி யிருப்பதுடன் 'குடும்ப விளக்கு' மொழிபெயர்ப்பு போன்றவற்றால் தொடர்ந்து இதில் முனைந்துள்ளார். அழகின் சிரிப்பினைத் தற்பொழுது பிரெஞ்சில் கதலீஸ் லியோன்ஸ் மொழிபெயர்த்துள்ளார்.

செக் மொழியிலும், ரஷ்ய மொழியிலும் பாரதிதாசனின் சில கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டு அந்நாட்டு இதழ்களை அலங்கரித்துள்ளன.

வாணிதாசன், தமிழ் ஒளி, புதுவை சிவன் ஆகியோர் பாடல்களில் சிறந்தனவற்றிற்கும், புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் ஆங்கில மொழிபெயர்ப்பு அளித்துள்ளது. மு. கருணாநிதியின் சிலப்பதிகாரமும் (டி.ஜி. நாராயண சுவாமி, 1968), சங்கத்தமிழும் ஆங்கிலத்திற்குச் சென்றுள்ளன. கே.எம். ஸ்ரீராம்சர்மா இந்தியில் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளையின் கவிதைகளை மொழிபெயர்த்துள்ளார். சுத்தானந்த பாரதியார் (பொதுநெறி இ.ப. 1936), பி.எஸ். கிருஷ்ணசுவாமி (கடல்துமி, 1969) போன்றோர் தம் படைப்புகளுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பும் செய்துள்ளனர். கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் 'Tamil poets today' எனும் நூலில் பல கவிஞரது படைப்புகளை மொழிபெயர்த்துள்ளார். நீல. பத்மநாபனின் கவிதைகள் Surrender and other poems என அவராலும் பிறராலும் இணைந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளன (1982). வைரமுத்துவின் கவிதைகளில் தேர்ந்தவற்றை, பாலன் மேனன் 'A drop in search of the Ocean - Best poems of Vairamuthu' என மொழிபெயர்த்து வெளியிட்டிருப்பது அண்மை வெளியீடாகும். 1960இல் வெளியான 'Young poets of India' வில் அரசன், வாணிதாசன், வெங்கடபதி, துரைசாமி, துறைவன் முதலியோர் கவிதைகளும் ரஷ்ய மொழியில் இடம் பெற்றுள்ளன. இவை போல்வன இக்காலக் கவிஞர்களும் பிறமொழியினரைக் கவர்ந்து பெருமை பெறுவதை உணர்த்துகின்றன.

சாகித்திய அக்காதெமி வெளியிட்டுள்ள, Ancient Indian Literature - Vol.III, மற்றும் Medieval Indian Literature - An Anthology Vol. IV என்பன இங்குக் குறிக்கத்தக்கன. சங்க இலக்கியம் முதல் நாட்டுப்புறக் கதைப்பாடலான ராஜா தேசிங்கு கதை வரை தமிழிலக்கியப் பரப்பின் முதன்மை இலக்கியங்களும், முன்னோடிகளின் படைப்புகளும், பிற சிறப்பிலக்கியங்களும் இவற்றில் ஆங்கிலப் பெயர்ப்பு கண்டுள்ளன. கலிங்கத்துப்பரணி தமிழ் விடு தூது, நன்னூல், உலா, பட்டினத்தார், உமாபதி சிவாசாரியார், அதிவீரராம பாண்டியர், சிவஞான முனிவர், பகழிக்கூத்தர், இராமநாடகக் கீர்த்தனை, திருக்குற்றாலக் குறவஞ்சி, அழகர் கிள்ளைவிடு தூது, திருவரங்கக் கலம்பகம், திருவருணைக் கலம்பகம் போன்றவற்றின் உள்ளடக்கமும் இத்தொகுப்பின் தன்மையை நன்குணர்த்தும். ஏற்கெனவே மொழிபெயர்க்கப் பட்டனவற்றின் சிறந்த மொழிபெயர்ப்பினைத் தேர்ந்தும், தேவையானவற்றிற்குப் புதிய மொழிபெயர்ப்புகளைப் பெற்றும் இத்தொகுதிகள் எழுந்துள்ளன. ஏ.கே. ராமானுஜன், பி.எஸ். சுந்தரம், பிரேமா நந்தகுமார், மருதநாயகம், சிற்பி, சிவராமன், டி.என். இராமச்சந்திரன், 'கமில் சுவலபில், பழனி. அரங்கசாமி, கே. செல்லப்பன் எனக் கைதேர்ந்த மொழிபெயர்ப்பாளரின் மொழிபெயர்ப்புத் திறமையால் இத்தொகுதிகள் தனிச்சிறப்புறுகின்றன.

மனித வாழ்க்கையை, சமூக, பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துவனவும், புதிய போக்குகளையும், மரபு மாற்றங்களையும் இலக்கிய வரலாற்றுத் தடத்தில் பதித்தனவும் ஆகிய பெருமைக்குரிய பகுதிகளின் இலக்கியங்களின் தொகுப்பாக இத்தொகுதிகள் அமைந்துள்ளன. இவற்றின் இலக்கிய வரலாற்றுச் சிறப்புகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சுருங்கக் கூறின் தமிழிலக்கிய வரலாற்றை உலக அரங்கிற்குச் சிறப்பாக அறிமுகம் செய்யும் பணி இதனால் நிறைவேறுகிறது எனலாம்.

உரைநடையிலக்கியங்களின் மொழிபெயர்ப்பினையும் பரவலாகக் காணமுடிகிறது. ராஜாஜியின் வியாசர் விருந்து, சக்கரவர்த்தித் திருமகன், தேர்ந்த தமிழ்ச் சிறுகதைகள் முதலான பல, பல மொழியினருக்கும் சென்றுள்ளன. கல்கி தம் அலை ஓசை, பார்த்திபன் கனவு போன்ற புதினங்களால் உலகறியும் வாய்ப்பினைப் பெற்றுள்ளார். மற்றும் அகிலன், ஜெயகாந்தன், நீல. பத்மனாபன், மு. வரதராசனார் போன்றோர் தம் படைப்புகளும் பிறமொழி யாக்கத்தில் சிறப்புற்றுள்ளன. உ.வே. சாமிநாதையரின்

என் சரித்திரமும் பலரால் மொழிபெயர்க்கப்பட்ட பெருமை கொண்டுள்ளது.

இந்திரா பார்த்தசாரதியின் தந்திர பூமி (ஆங்கிலம்), குருதிப்புனல் (வங்காளம்), கு. சின்னப்பாரதியின் சங்கம் (வங்காளம்), நீல. பத்மனாபனின் தலைமுறைகள் (ஆங்கிலம்); தி. ஜானகிராமனின் அம்மா வந்தாள் (ஆங்கிலம், மலையாளம்), மோகமுள் (மலையாளம்) என்பனவும் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள ராஜம் கிருஷ்ணனின் குறிஞ்சித்தேன், உமாச்சந்திரனின் முள்ளும் மலரும், ஜெகசிற்பியனின் ஜீவகீதம் என்பனவும் புதின மொழிபெயர்ப்புகளில் சில சான்றுகளாம்.

ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' என்னும் புதினமே தமிழிலிருந்து ஐரோப்பிய மொழிக்கு (செக் மொழி) மாற்றம் பெற்ற முதல் மொழிபெயர்ப்பு என்பர் (செ. செல்லப்பன், இலக்கிய விமர்சனம் - ரகுநாதன், பதிப்புரை). இவரின் கதைகள் பலவும் செக், ஹங்கேரியன், செர்மன், போலிஷ், ரஷ்யன் எனப் பிறமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன (மேற்படி). ஆதவனின் சிறுகதைகள் முக்கியமான இந்திய மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப் பட்டிருப்பதுடன், ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ரஷ்யன், அராபிக், செக் முதலிய பிறநாட்டு மொழிகளிலும் வெளிவந்துள்ளன என்பர் (புதுமைப் பித்தனின் துரோகம், ஆதவன், பதிப்புரை).

புதுமைப்பித்தன், அகிலன், ல.சா. ராமாமிர்தம், ஜெயகாந்தன், ஜானகிராமன், ரகுநாதன், பிச்சமூர்த்தி, கு. அழகிரிசாமி, வல்லிக்கண்ணன், செல்வராஜ், பெ. தூரன் போன்றோர் கதைகளும் கம்பர், அருணகிரிநாதர், பாரதி, பாரதிதாசன் ஆகியோர் பாடல்களும் செக் மொழியில் பெயர்க்கப்பட்டு அந்நாட்டு இதழ்களில் வெளிவந்துள்ளன. உ.வே. சாமிநாதையரின் என் சரித்திரமும், லசா. ராமாமிர்தத்தின் 'புத்ர' புதினமும், சங்க இலக்கியக் குறுந்தொகையும் செக் மொழியில் மாற்றம் பெறும் வாய்ப்பினைப் பெற்றுள்ளன.

அகிலன், கி.வா. ஜகந்நாதன், தி.ஜரா, அழகிரிசாமி, ரகுநாதன், புதுமைப்பித்தன் முதலியோர் கதைகள் ரஷ்ய மொழியில் மாற்றம் பெற்றுள்ளன. ஜெயகாந்தனின் வாழ்க்கை அழைக்கிறது, லட்சுமியின் பெண் மனம், திருவாசகத்தின் சில பகுதிகள் போன்றனவும் ரஷ்ய மொழியில் வந்துள்ளன. நளதமயந்தி கதையும் இம்மொழியில் கவிதை வடிவம் பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

மீ.ப. சோமசுந்தரம் தொகுத்த புதுமைப்பித்தன் சிறுகதைகள், ஜெயகாந்தன் தேர்ந்தெடுத்த அவரது சிறுகதைகள், பெ. தூரன் தொகுத்த பாரதியாரின் உரைநடைகள், சுகி. சுப்பிரமணியன், தொகுத்த ஓரங்க நாடகங்கள், நீல. பத்மநாபனின் 'பள்ளி கொண்டபுரம்' ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' போல்வன நேஷனல் புக் டிரஸ்ட்டினால் பிற இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் சிறப்பினைப் பெற்றுள்ளன.

### எஞ்சியன

மேற்கண்ட தவிர மற்றும் சிலவற்றின் மொழிபெயர்ப்புகளும் கருதத்தக்கனவாகும். வீரமாமுனிவரின் பரமார்த்த குருவின் கதை செக் (1954), பிரெஞ்சு (ஜே.ஏ. டுபியாஸ் - 1977), கன்னடம் (1877) ஆங்கிலம் (பி. ராஜா 1981) ஆகிய மொழிகளில் வெளிவந்துள்ளது. ரமணமகரிஷியின் நான் யார்? ரமணமந்திரம், ஸ்ரீரமணாவளி என்பன ஆங்கிலம், தெலுங்கு, சமஸ்கிருத மொழிபெயர்ப்புகளைப் பெற்றுள்ளன. ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பு ஆங்கிலம் (ஜெ. பிரெடெரிக் பிரைஸ் 1905-1927), பிரெஞ்சு (ஜூலியன் வின்சன் 1894) ஆகியவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பழமொழிகள் ஆங்கிலத்தில் பெர்சிவல் (1874), சபாபதி முதலியார் 1898 முதலியோராலும் ரஷ்ய மொழியிலும் பெயர்க்கப்பட்டுள்ளன.

ஜெயகாந்தனின் ஒரு அரசியல்வாதியின் அனுபவங்கள் (எம்.எஸ். வெங்கடரமணி, 1976), ம.பொ. சிவஞானத்தின் விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு (கே. செல்லம்) மரியாதைராமன் கதைகள் (இ.கே. ராபின்சன் 1873), பஞ்சதந்திரம் (எஸ். வின்பிரெட் 1873) என பிற ஆங்கிலத்தில் எழுந்துள்ள பிற மொழிபெயர்ப்புகளும் குறிப்பிடத்தக்கனவாம். பஞ்சதந்திரத்தினைக் கன்னடத்தில் சி. உருத்திர பதி மொழி மாற்றம் செய்துள்ளார். கமலாவின் சோவியத் நாட்டில் ஒரு தமிழ் மாணவி எனும் பயண இலக்கியம் வங்காளத்தில் (1975) மொழிமாற்றம் கண்டுள்ளது. ஈ.வே. ராவின் ஹீமாயணம் ராம்தரால் 1968இல் இந்திக்குச் சென்றுள்ளது. சிறுவர் இலக்கிய நூல்கள் சில மலையாளம், தெலுங்கு மொழிகளுக்குச் சென்றுள்ளமையும் உணர்த்தற்பாலது.

நன்னூல் ஆங்கிலத்தில் டபிள்யூ. ஜாய்ஸ் + எஸ். சாமுவேல் பிள்ளை (1848-1850) எச். பவர் (1876), ஜான் லாஸரஸ் (1978) எனப் பல மொழிபெயர்ப்புகளைக் கண்டுள்ளது. இதனைச் செர்மன் மொழியில் டபிள்யூ. கிராபே (1942) மொழிபெயர்த்துள்ளார்.

நன்னூலும் வீரசோழியமும் மலையாளத்தில் இளைய பெருமாளால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

**கண்ணோட்டக் குறிப்புகள்**

உலக மொழிகளில் தமிழ்மொழி பெற்றுள்ள செல்வாக்கினை அதன் மொழிபெயர்ப்புகள் உணர்த்துகின்றன. அவற்றை நோக்குகையில் கீழ்க்கண்ட கருத்துகள் எழுகின்றன.

1. தமிழிலிருந்து பிற மொழிகளுக்குச் சென்ற நூல்களில் மிகுதியானவை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆங்கிலேயர் ஆட்சி, மதப்பரப்புதலுக்காக வந்த ஐரோப்பியர் தமிழின் பால் பெற்ற ஈடுபாடு, ஆங்கிலக்கல்வி, உலகளாவிய மொழி எனப் பல காரணங்கள் இதற்கு அடிப்படையாகின்றன. அடுத்து இந்திய மொழிகளான மலையாளமும், தெலுங்கும் முன்னிற்கின்றன. அண்டை மாநிலங்கள் என்பதும் இதற்கு ஓர் காரணமாகலாம்.

2. குறிப்பிட்ட மொழிகளில் குறிப்பிட்ட சிலர் மொழிபெயர்ப்பில் மிகுந்த அக்கறை காட்டுவதையும் சுட்டலாம். ஜியு. போப், ஏ.கே. ராமானுஜன், கே.எம். வெங்கட்ராமையா, பிரேமா நந்தகுமார், டி.என். இராமச்சந்திரன், வி. முருகன், அ. தட்சிணாமூர்த்தி எனப்பலர் ஆங்கிலத்தில் சிறப்புற்றுள்ளனர். கமில் சுவலபில் தமக்குத் தமிழின்பால் உள்ள ஈர்ப்பினை ஆங்கிலம், செக், பிரெஞ்சு மொழிகளில் மொழிபெயர்ப்புகளைத் தந்துள்ளதன் வழிக் காட்டுகிறார். ஞானு தியாகோ பிரெஞ்சு மொழியிலறியப் படும் பிறிதொரு தமிழன்பராவார். வங்காளத்தில் யதிந்திர ராமானுஜதாஸ், இந்தியில் சரசுவதி ராமநாதன், ஆர். வீழிநாதன், கன்னடத்தில் எல். குண்டப்பா, சி. உருத்திரபதி, மலையாளத்தில் பி. நாராயணன் நாயர், சி. ஏ. பாலன், தெலுங்கில் பூதலப்பட்டு ஸ்ரீராமலு ரெட்டி, மு. ஜகந்நாதராஜா, சமஸ்கிருதத்தில் எஸ்.என். ஸ்ரீராமதேசிகன் எனப் பிறரைக் காட்டலாம்.

3. இங்குக் காட்டப்பட்டுள்ள மொழிபெயர்ப்புகள் அனைத்தும் முழுமையானவை என்று கூறுவதற்கில்லை. பெரும்பான்மையானவற்றின் இயல்பு நிலை அறியுமாறில்லை.

4. அற இலக்கியங்கள் மற்றும் பக்தியிலக்கியங்களின் மொழிபெயர்ப்புகள் குறிப்பாக ஆங்கில மொழிபெயர்ப்புகள் தமிழ் மூலத்துடன் அமைகின்றன. சு.ந. சொக்கலிங்கத்தின் அறவிலக்கிய மொழிபெயர்ப்புகளையும் கே.எம். வெங்கட ராமையாவின் தேவார

திருவாசக மொழிபெயர்ப்புகளையும் சான்று காட்டலாம். அண்மை சங்க இலக்கிய மொழிபெயர்ப்புகளிலும் இந்நிலை காணப்படுகிறது. அ. தட்சிணாமூர்த்தியின் நற்றிணை மொழிபெயர்ப்பு சான்றாகும்.

5. மொழிபெயர்ப்புத் துறையின் வளர்ச்சியாக, மொழிபெயர்க்கப்படும் நூல் பற்றிய பலவிதமான செய்திகளும் இணைக்கப்படுதல் குறிக்கத்தக்கதாகும். சான்றாக, ஜி.என். ராம்பிரசாத்தின் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தின் கன்னட மொழிபெயர்ப்பைச் சுட்டலாம். இதில் பன்னிரு ஆழ்வார்களின் வாழ்க்கைக் குறிப்புகள், அவர்தம் பாடல்களின் கருப்பொருள், புதிய முயற்சிகள், நூற்றெட்டுத் திருப்பதிகளின் இருப்பிடம், அவற்றில் உள்ள தெய்வங்கள், சிறப்பு விழாக்களும் அப்பொழுது இடம் பெறம் ஆழ்வார் பாடல்களும் என்பன இடம் பெற்றுள்ளன (Hindu 25-03-04).

6. வ.வே.சு. ஐயரின், குறுந்தொகையின், முழுமையான ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியிடப்படாமலே மறைந்துவிட்டது மிகுந்த வருத்தத்திற்குரியதாம். 'இந்தியனே வெளியேறு' இயக்கச் சூழலில் தொலைந்து விட்டதாகக் கருதப்படும் இம்மொழிபெயர்ப்பே குறுந்தொகைக்கான முதல் முழுமையான மொழிபெயர்ப்பாகவும் இருந்தற் கூடும் என்பர்.[3] இவ்வாறு வெளியுலகு அறியாது அழிந்த உன்னத மொழிபெயர்ப்புகளும் பலவாக இருந்தற் கூடும்.

அறிந்த வரையில் ஆங்கில மொழிபெயர்ப்புகளான தட்சிணாமூர்த்தியின் குறுந்தொகை, டி.என். இராமச்சந்திரனின் திருமங்கையாழ்வாரின் சிறிய திருமடல், போல்வன அச்சேற்றத்தை எதிர்நோக்கியுள்ளன.

7. ஜி. ராமகிருஷ்ணனின் மலையாள மொழிபெயர்ப்பு, கம்பராமாயணத்தில் இல்லாதவற்றை இணைத்திருப்பதுடன் (இறுதிப்போரில் எழுத்தச்சனின் ஆதித்திய ஹிருதயம்) மிக மிகக் கொடுமையான பிழைகள் செய்து கம்பருக்கும் தமிழருக்கும் தீங்கு செய்துள்ளதாகவும் அதனை நீக்கவே தாம் இம்மொழிபெயர்ப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் ஸ்ரீதரன் நாயர் (நேர்காணல் 28-11-03) கூறியுள்ளார்.

8. குறிப்பிட்டதொரு நூல் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளின் மொழிபெயர்ப்புடன் அமைதலும் அருகிக் காணப்படுகிறது. சான்றாக, கந்தர்கலிவெண்பா ஆங்கிலம் மற்றும்

இந்தி மொழிகளின் (1968) இணைவில் அமைவதையும், நித்தியானு சந்தானம் ஆங்கிலம், கன்னட மொழிகளின் பெயர்ப்புடன் அமைவதையும் சுட்டலாம்.

9. தமிழாக்கம் ஊடுமொழி வாயிலாகவும் நடைபெறுவது போல், தமிழின் மொழிபெயர்ப்புகளிலும் இந்நிலை அமைதல் காணப்படுகிறது. ராஜாஜியின் சக்கரவர்த்தி திருமகன் ஆங்கில மொழிபெயர்ப்பின் வழியே அஸ்ஸாமி, ஓரியா மொழிகளுக்குச் சென்றுள்ளது, ஸ்ரீரமணரின் உபதேச மொழிகளான ஸ்ரீரமணகீதை சமஸ்கிருதமொழிபெயர்ப்பால் ஆங்கிலம் மற்றும் தெலுங்கில் ஏற்றம் பெற்றுள்ளது; திருக்குறளின் ஆங்கில வாக்கம் பர்மிஸ் மொழியில் திருக்குறள் இடம் பெறுவதற்குத் துணையாயிற்று எனப் பல சான்றுகளைத் தரலாம்.

10. பெ.நா. அப்புசாமி, சி.ஏ. பாலன், ஹா.கி. வாலம், பிரேமா நந்தகுமார், மு.கு. ஜகந்நாதராஜா, சு. கிருஷ்ணமூர்த்தி எனச் சிலர் தமிழிலிருந்து பிறமொழிகளுக்கும், பிறமொழிகளிலிருந்து தமிழுக்கும் என இருவழிகளிலும் மொழிபெயர்த்துத் தமிழைச் சிறப்பிப்பதில் முன்னிற்பதும் நவிலற்பாலது.

11. தமிழிலக்கிய மொழிபெயர்ப்புகள் எந்த அளவிற்குத் தமிழுக்கு உண்மையாக, நெருக்கமாக இருக்கின்றன என்பதும் அறியத்தக்கது.

குறிப்பிடத்தக்களவு தமிழிலக்கியங்கள் மொழிபெயர்க்கப் பட்டிருப்பதாகத் தோன்றிடினும் தமிழின் பழமைக்கு, பெருமைக்கு இவை போதா. தமிழகத்தே நிலவும் மொழிபெயர்ப்புச் சூழலை ஊன்றிக் கவனித்தால் இவை மேலும் பெருகித் தமிழின் புகழை வளர்க்கும் என்பதில் ஐயமில்லை.

### அடிக்குறிப்புகள்

1. It is the Christian missionaries who introduced Tamil Literature to world audience through their translations into German, Latin, French and English. Notable among them are Tirukkural, Naladiar and Tiruvacagam. After independence, ofcourse, a new awareness of the resources of Indian languages has resulted in establishing separate agencies like the Sahitya Akademi, National Book Trust etc., which promote translation of modern literature.

Ranganayaki Mahapatra, On translation, p. 59.

2. Tamil language, one of the principal Dravidian languages, spoken in South India, and perhaps the only example of an ancient classical tongue which has survived as a spoken language for more than 2500 years with its basic structure almost unchanged.

Encyclopaedia Britannica - Vol.21; William Benton; Chicago; 1972; p. 647.

3. Probably the earliest full length translation of Kuruntokai was by V.V.S.Aiyar, the translations of which was lost in the 'Quit India' disturbances of 1942 according to a note in the author's 'Kambaramayana - A study' - Delhi Tamil Sangam - 1950. This translation must have been in poetic prose which Aiyar believed to be the best medium for English translation of Tamil Classic.

I. Parthasarathy, The Concept of faithfulness in translation of Sangam poetry into English - Proceeding of the Fifth International Conference - Seminar of Tamil studies, Vol.2, pp 15-17.

# தமிழின் ஆங்கிலப் பெயர்ப்புகள்

தமிழின் தொன்மையும், இலக்கியச் செழுமையும் அதன் பொருள் வளமும் பிற மொழியினரைப் பெரிதும் ஈர்த்துள்ளமையை அதன் மொழிபெயர்ப்புகள் உணர்த்துகின்றன. தமிழுக்கு அணிசேர்க்கும் தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், திருக்குறள், பக்தியிலக்கியம், கம்பராமாயணம், பாரதியார் என அன்று முதல் இன்று வரையிலான தமிழ்ப் படைப்புகள் குறிப்பிடத்தக்க அளவு ஆங்கிலத்தில் மொழிமாற்று கண்டுள்ளன. அவை பற்றியதொரு கண்ணோட்டத்தினை இவண் காணலாம். பிறமொழியினரைக் கவர்ந்த தமிழ் நூல்கள் யாவை? அவை எங்ஙனம் மொழிபெயர்க்கப்படுகின்றன என்பன போன்ற வினாக்களுக்கு விடை காணக் கூடிய வாய்ப்பாகவும் இதனைக் கொள்ளலாம்.

### தொல்காப்பியம்

தமிழ் மொழியின் இலக்கணத்தை, இலக்கிய ஆக்கத்தைத் தெளிவுபடுத்த எழுந்த நூல் தொல்காப்பியமாயினும் அது தமிழ்ப் பண்பாட்டு வேர்களையும் வெளிப்படுத்துவதால் போலும் பலரால் முழுமையான மொழிபெயர்ப்புகளைப் பெற்றுள்ளது. உலக இலக்கியங்களிடையே மிக உயரிய இடத்தைப் பெறுதற்குரிய தகுதியுடையதும் உலகப் பழமை வாய்ந்த சமஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம் மொழிகளின் படைப்புகளுடன் ஒப்புநோக்கத்தக்க பெருமையுடையதும், தொலைநோக்குடன் கூடிய இலக்கியக் கொள்கைகளை வரையறுத்துள்ளது போன்ற பல உயர்வுகளை யுடைய இதன் சிறப்பு நோக்கி வி. முருகன்[1] இதன் மொழிபெயர்ப்புப் பணியை மேற்கொண்டுள்ளார்.

தொல்காப்பியம் பற்றிய முழுமையான அறிமுகத்துடன் இவரின் மொழிபெயர்ப்பு தொடர்கிறது. தமிழ் மூலம், ஆங்கில

வரிவடிவம் (transliteration) பின் ஆங்கில மொழிபெயர்ப்பு, நூற்பாவிற்கான சான்றுகள் தமிழ் மற்றும் ஆங்கில வரிவடிவம், தேவையானால் விளக்கம் என்ற அமைப்பு பொதுவாக உள்ளது. இறுதியில் சிறப்புச் சொற்கள் விளக்கங்களுடன் இடம் பெறுகின்றன. நூற்பாக்கள் பொருள்புரியும் வண்ணம் சீர்பிரித்து அமைகின்றன.

உட்பெறுபுள்ளி உருவாகும்மே - Not in use in the current practice; மறம் கடைக்கூட்டிய குடிநிலை - A textual variation in tuṭinilai which means adoring and worshipping the war - drum (p. 399) contexts of Hero utterance - Naccinārkkiniyar attributes it to the heroine (p. 561) என இன்றைய மாற்றம், பாடவேறுபாடு, உரையாசிரியர் கருத்து வேறுபாடு ஆகியனவும் இவர் மொழிபெயர்ப்பில் இடம் பெறுகின்றன.

தேவையான இடங்களில் அமையும் மரபு விளக்கங்களுக்கு, Annai is mother and ennai is mylover or my brother according to conventions of usage. But in poetry we find the confidante and the heroine addressing each other as annai and both of them addressing the hero as e<u>nn</u>ai' என்றுரைத்திருப்பதைச் சான்றாக்கலாம். நூற்பாவில் குறிப்பாகச் சுட்டப்படுவன உரை விளக்கத்தில் விரித்துரைக்கப் படுகின்றன. எடுத்துக்காட்டாக, 'பண்புகொள் பெயரும் அதன் ஓரற்றே' எனும் தொல்காப்பிய 619ஆம் நூற்பா,

The Change above (618)

Does mark the nouns denoting attributes too

(ā<u>n</u> - ending modified to āy)

eg. பெரியான் → பெரியாய் (periyā<u>n</u> → periyāy (o the great one)' என விளக்கம் காண்பதைச் சுட்டலாம்.

இவற்றின் காரணமாகத் தொல்காப்பியத்தை மட்டுமின்றிப் பண்டைத் தமிழ் மரபும் தெளிவாகப் பிறருக்கு உணர்த்தப் பட்டுள்ளது எனலாம். இத்தகு மொழிபெயர்ப்புகள் ஏனைய இந்திய, உலகமொழிகளில் வெளிவரின் தமிழின் பெருமை நன்கு சுடர்விடும்.

தொல்காப்பியம் முழுமைக்குமான முதல் மொழிபெயர்ப்பாளர் பி.என். சுப்பிரமணிய சாஸ்திரியின் பொருளதிகார - இரண்டாம்

தொகுதிக்கு, "Dr. Sastri's work is important for two reasons, i.e., its appearance in English and its preparation based on comparison with Sanskritic literary and grammatical studies. The text is re-arranged rationally and its meaning is given in English and critical notes are added. Views of early commentators are compared and criticised. Thus the publication is a very valuable addition to our knowledge on the subject and as a first attempt to popularise the book in foreign lands is highly commendable" என The Hindu (11-10-1953) மதிப்புரை வழங்கியிருப்பதும் அறியத்தக்கது. இது அம்மொழிபெயர்ப்பின் இயல்பினையும் விளக்கி நிற்கக் காணலாம்.

மூலநூல் செய்யுள் வடிவில் இருக்குமானால் அதை உரைநடைப்படுத்திப் பின்னர் அதன் அடிப்படையில் மொழிபெயர்ப்பது மூலநூல் கருத்தை உள்ளவாறு எடுத்துரைக்கும் வாய்ப்பை மிகுதிப்படுத்தும் என்னும் மொழிபெயர்ப்புக் கோட்பாட்டை அடியொற்றி அ.அ. மணவாளனின் அகத்திணை, புறத்திணை இயல் மட்டுக்குமான மொழிபெயர்ப்பு அமைகிறது. ஒருபுறம் தமிழ் எதிர்ப்புறம் ஆங்கிலம் என அமையும் இவர் நூல் நூற்பாவிற்கு ஆங்கில வரிவடிவம் மற்றும் உரைநடையில் விளக்கம் என உள்ளது.

ஈ.எஸ். வரதராஜ ஐயரின் தொல்காப்பியப் பொருளதிகார மொழிபெயர்ப்பு நூற்பாவின் ஆங்கில வரிவடிவத்தின் பின் பழைய உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகளையும் மொழிபெயர்த்துள்ளது. மற்றும் சோமசுந்தர பாரதியாரின் கருத்துகளையும் பொருத்தமான இடங்களில் இணைத்துள்ளது. நூற்பாவிற்குச் சான்றாக உரையாசிரியர் அளித்த நானூறுக்கும் மேற்பட்ட சங்கப்பாடல்களை மொழிபெயர்த்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பிய மொழிபெயர்ப்பு என்பது அதன் பெருமை மிகு உரையாசிரியர்களின் உரைகளையும் உட்கொண்டமைவது அறிதற்பாலது.

இடதுபக்கம் மூலமும் ஆங்கில வரிவடிவமும் வலது பக்கம் மொழிபெயர்ப்பும் சான்றும் என அமையும் அண்மை வெளியீடான ச.வே. சுப்பிரமணியத்தின் மொழிபெயர்ப்பு ஒவ்வொரு அதிகாரத்திற்கும் இயலுக்கும் சிறந்ததோர் அறிமுகத்தைத் தந்துள்ளது. இதுவரை வெளிவந்துள்ள பதிப்புகள்,

மொழிபெயர்ப்புகள், தொல்காப்பியத்தின் உலகப் பொதுமை போன்ற சிறப்புகளை நூன்முகம் வாயிலாக உணர்த்தியுள்ள மொழிபெயர்ப்பாளர் தம் மொழிபெயர்ப்பு இயல்பு மற்றும் நோக்கம் பற்றி, "The purpose of this translation of Tolkappiyam in English is to inform the English knowing world about the culture and civilization of the Tamils and the greatness of Tolkappiyam in B.C. itself.

Regarding this translation in some places it is a word to word translation; in few places it is a cultural translation. It is an interpretative translation also. Due to linguistic knowledge, linguistic terminologis have been used. It is a communicative informative and paraphrasing translation" எனத் தருகிறார் (Tolkappiyam in English - Content and Cultural Translation - with short commentary, pp. 20-21).

**சங்க இலக்கியம்**

தமிழிலக்கியப் பரப்பில் தனித்தன்மைகள் பலவுடன் மொழிபெயர்ப்புக்கு மிகுந்த சவாலாய் அமையும் சங்க இலக்கிய மொழிபெயர்ப்புகளும் உரையாசிரியர் துணையுடன் அமைகின்றன.[2] பலவிதமான அட்டவணைகள், விளக்கங்கள் இதன் மொழிபெயர்ப்பு வெற்றிக்குப் பக்கபலமாகியுள்ளன. பொதுவாகச் சங்க இலக்கிய மொழிபெயர்ப்புகள் இரு நிலைகளில் அமைகின்றன. அதனை பிறமொழியினருக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தேர்ந்த கவிகளின் தொகுப்பு ஒருநிலையாகும். மற்றது குறிப்பிட்ட நூலை முழுமையாக மொழிபெயர்த்தல் என்பதாகும்.

தேர்ந்த பாடல்களின் மொழிபெயர்ப்பாக அமைவனவற்றுள் ஜே.வாசெக்கும், ச.வே. சுப்பிரமணியமும் இணைந்து செய்த 'A Tamil Reader - Introducing Sangam Literature இங்குக் கருதத்தக்கதாகும். இதில் பாடல்கள் பொருள் புரிதலில் அமையும் எளிமை நோக்கி வரிசைப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சிறிது சிறிதாகச் சிறிய பாடல்கள் வழிச் சங்க இலக்கியத்தை உள்வாங்கிக் கொண்டு பின் நீண்ட, கடினமான பாடல்களுக்குச் சென்றால் அவற்றையும் முழுமையாகப் புரிந்து கொள்வது எளிதாகும் என்ற பாண்மையில் இவ்வமைப்பு கொள்ளப்பட்டுள்ளது. இதனை,

"The Reader is divided into three (more or less graded) parts. The ordering of the texts could not be done according to the serial numbers in the collection. Part one contains short poems (குறுந், ஐங்) and the

grammatical explanations go into details. These short poems seem to be easier to grasp due to their briefness, though not always with regard to the language and contents. Part two contains (புறம், கலி, நற், அகம்) longer poems. The puram poems are mostly easy to understand. After them comes a block of slightly more difficult longer poems of the akam type (கலி, அகம், நற்). In this part of the grammatical comment is reduced to just the most conspicuous features of sandhi, a few morphological forms and the general construction of the poems. Part three presents two long pieces from paṭṭiṉappālai and paripāṭal which in some respects may be more difficult but the student may be prepared by the previous work so that he will already have learned the basic patterns of the language" எனும் மொழிபெயர்ப்பாளர் மொழி கொண்டறியலாம்.

ஜி.யு. போப்பின் Tamil Heroic Poems, புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூற்றின் தேர்ந்த பாடல்கள் ஆகியவற்றின் மொழிபெயர்ப்பாகும். புறநானூற்று வரிசையிலன்றித் தம் விருப்பம் போல் போப் தம் மொழிபெயர்ப்புத் தொகுப்பினை அமைத்திருப்பினும் முழுமையாகப் புறநானூற்றை முழுமையாகக் கற்ற உணர்வினை அளிப்பது நூலின் வெற்றியை உணர்த்துகிறது.

தொகுப்பாயினும், முழுமையாயினும் மொழிபெயர்ப்பாளர் பின்பற்றும் சில நடைமுறைகளும், முன் பின் இணைப்புகளும் சங்க இலக்கியத்தைப் பிறமொழியினருக்குப் புரிய வைப்பதில் அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை, ஆர்வத்தை நன்கு வெளிப்படுத்து கின்றன. அவற்றினைக் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தலாம்.

1. நூல், நூலின் நுவல்பொருள், பாட்டுடைத் தலைவர், பாடலாசிரியர் பற்றிய விளக்கங்களை அளித்து மொழிபெயர்ப்புப் பகுதிக்குச் சிறந்ததோர் அறிமுகம் அமைகிறது. மொழிபெயர்ப்பாளர் தாம் மொழிபெயர்த்துள்ள முறைமை பற்றிய விளக்கமும் இடம் பெறுகிறது. வி.முருகன் தம்மொழிபெயர்ப்பு முன் பகுதியில் 'Akam Poetry: A Thematic Perspective' அமைத்திருப்பது,

> "But the author (A.V. Subramaniyan) for his own reasons chose to be a transcomposer rather than a translator in the popular sense. As the learned translator has added many things of his own and omitted several things found in the original, a faithful translation has become a felt need. As a translator, my vote is in favour of a literal translation. I have tried to be as faithful as

possible to the original text. I have tried to translate even very minute details found in the original

Regarding the names of plants I follow the method adopted by many translator of the classical poems. Thus I have retained most of the Tamil names with rare exceptions like sandal, Jasmine, water lily etc. A glossary is however provided which furnishes the English equivalents.

I have enumerated all the simple comparisons found in this collection. However for the convenience of the reader, the implied similes (Ullurai Uvamai) are explained at the end of the translations of the respective verses.

எனத் தட்சிணாமூர்த்தி (The Narriṇai four hunderd) கூறியிருப்பது,

> "இத்தகைய விளக்கங்கள் (பலவிதமான உரைகள், கருத்துகள்) பலவற்றை ஊன்றிப் படித்தும் அவற்றுள் என் அறிவுக்குட்பட்ட வரையில், எது பொருத்தமான சிறந்தபொருள் என்று ஆய்ந்தே நான், பெரும்பாலும் இந்த மொழிபெயர்ப்பைச் செய்திருக்கிறேன். ஆயினும் சிற்சில இடங்களில், அவர்கள் இட்டகட்டுக்களை எல்லாம் அறுத்தெறிந்து விட்டு, பாடலை அமைத்த கவி வழங்கிய சொற்களின் அடிப்படையிலேயே என் மொழிபெயர்ப்பை அமைத்திருக்கிறேன். சங்கத்தமிழ்ப் பாடல்களைப் பாடிய மூதாதையர்களின் மரபில் நான் தோன்றியவன் என்னும் என்னுடைய உரிமையை முன்னிட்டு எனக்கு இந்த உரிமை உண்டு"

எனும் பெ.நா. அப்புசாமியின் முன்னுரை என்பன (Tamil Verse in Translation - Sangam age) இதற்குப் போதுமான சான்றுகளாகும்.

2. பெ.நா. அப்புசாமி தம் மொழிபெயர்ப்பில் கவிதை உறுப்பினர்களை (Poetic Characters) அறிமுகம் செய்துள்ளார். யார் கூற்று, இடம் பெறும் நூல், புலவர், தமிழ்ப்பாடலுக்கும் தலைப்பு, அருஞ்சொற்களுக்குத் தமிழிலும் உரை என அமைத்திருப்பினும் இவர் திணை, துறை விளக்கம் அளிக்காமை எண்ணத்தக்கது.

3. ஜி.யு. போப் தாம் மொழிபெயர்க்கும் பாடல்களுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் தலைப்புத் தருகிறார். அது அப்பாடலின்

கருத்தைப் புலப்படுத்துவதாக அல்லது தமிழ் மரபைப் பின்பற்றி அதன் சிறந்த தொடரைக் கொண்டதாக அமைகிறது. கோவூர் கிழாரின் (புறம் 41) பாடலுக்குப் போரின் கொடுமை (The Terror of Invasion) என்றும் புறம் 46ஆம் பாடலுக்குப் புன்றலைச்சிறார் (Little innocents) என்றும் பெயர் சூட்டியிருப்பதைச் சான்றாக்கலாம்.

4. மொழிபெயர்ப்பின் பின் அப்பாடலுக்குத் தேவையான விளக்கத்தினை அளித்தலும் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. குறுந்தொகை, இரண்டாம் பாடலின் மொழிபெயர்ப்பில் அதன் மொழிபெயர்ப்பாளர், 'It is said that this song has a legendry history. A Pandya King wondered if there was a smell to a woman's hair. A contest of poets who held, and Iṟaiyaṉār won with this poem, but not before being challenged by the great poet Nakkīrar. As if turned out Iṟaiyaṉār was none other than the God Shiva in his form as Madurai Somasundara. In this poem 'ancient eternal love' is a rendering of Keṟiiya Naṭpu which is the love of lovers bound together birth after birth. For other expressions of this love see poems numbered 3, 82, 236, 243. The man seeks to overcome her bashfulness with this flathery. Shyness is one of the four essential virtues of women in this tradition: the others being fearfulness, modesty and innocence. Thus her shyness is both a characteristic that attracts him and one which he must seek to overcome in order to further their intimacy' (Kuruntokai - M. Shanmugam Pillai, David E. Ludden, P. 35) எனும் பகுதியை இதற்கு எடுத்துக் காட்டாக்கலாம்.

புறப்பாடல்களிலும் இத்தகு விளக்கங்கள் அமைவதைப் போப் மொழிபெயர்ப்பில் காணலாம். புறம் 18ஆம் பாடலுக்காகப் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு மிகச் சிறந்த பாராட்டுரை வழங்குவதையும், நீர்ப்பாசனம் பற்றிய கருத்துரையளித்துள்ளதையும் (Tamil Heroic Poems, pp. 68-69) சான்றாக்கலாம்.

5. உரையாடல், கவிதையில் இடம் பெறும் பொழுது யார்-யார் என உட்தலைப்பிடலும் சுட்டத்தக்கது. (V. Murugan, Kalittokai in English, p. 524).

6. பெநா. அப்புசாமியின் மொழிபெயர்ப்பில் மொழிபெயர்க்கும் பாடலோடு ஒப்புமை கொள்ளும் பிறமொழிக் கவிதைகளையும் பிற தமிழ்க் கவிதைகளையும் அவற்றின் மொழிபெயர்ப்போடு காட்டுவது சிறப்பாகும். இதற்கு,

*அவரோ வாரார்; தான் வந்தன்றே-*
*வலம்சுரிமராஅம் வேய்ந்து, நம்*
*மணம் கமழ் தண்பொழில் மலரும் பொழுதே!*
*(ஐங்குறுநூறு - 348, ஓதலாந்தையார்)*

எனும் பாடலுக்குச் சர் வால்டர் ஸ்காட்டின்,

**The orange flower perfumes the bower,**
**The breeze is on the sea,**
**The Lark his lay who trill'd all day**
**Sits hushed his partner nigh**
**Breeze, bird, and flower confess the hour;**
**But where is County Guy**

எனும் கவிதையை ஒப்பு நோக்கத் தருவதைக் காட்டாக்கலாம்.

7. சங்க அகப்பாடல்களின் தனிச்சிறப்புகளுள் ஒன்றான உள்ளுறையை, அ. தட்சிணாமூர்த்தி தனித்து வெளிப்படுத்திக் காட்டுவது பாராட்டிற்குரியதாகும். நற்றிணையின், நெய்தல் திணையில் அமையும் 4ஆம் பாடலுக்கு, "Latent Meaning: 1. The fisher folk stay beneath the punnai trees, drying their nets and wait for the favourable moment to go for fishing. Like them the hero waits near the fence and looks for the opportune time and plans to meet his beloved.

2. The crane gets scared on hearing the noise of the salt - Vendors. So also the gossips of the village will be silenced on hearing the roar of the wedding drums" (p. 10) என்று தருவது சான்றாம்.

சங்கப்பாக்களின் பொருளாழத்தை மொழிபெயர்ப்பில் வெளிப்படுத்தும் உத்திகளுள் ஒன்றாகவும் இது அமைகிறது.

8. முன்னோடி மொழிபெயர்ப்பாளர்களை, 'Coming to the translation of the verses of Naṟṟiṇai S. Natesan is the first scholar who, in 1959 published his translation of selected verses of the collection. Nallāṭai R. Balakrishna Mudaliyar's 'The Golden Anthology of Ancient Tamil Literature' (in three Vols) also has some of the verses of this work in translation. G.L. Hart, A.K.Ramanujan, P.N. Appusamy, Prof. Ponnaiah and A.V. Subramaniyam are other scholars who deserve mention here. A.V. Subramaniyam deserves our admiration for his commendable work 'Narrinai an anthology of Amour (1989)' (A. Dakshinamurthy, The Narrinai

four hundred) எனச் சுட்டிச் செல்வது மொழிபெயர்ப்பு வரலாற்றறிவிற்கும் பெருந்துணையாகிறது.

9. பழந்தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் எனப் பெ.நா. அப்புசாமி, ஜி.யு. போப், கே.ஜி. சேஷ ஐயர், ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை, ஜே.எம். சோமசுந்தரம் பிள்ளை, பாஸ்கர நாராயணன், ஜே.எஸ். செல்லையா, மதுரை ஷண்முகனார், டாக்டர் கே.ஏ. இராமானுஜன், என். ரகுநாத ஐயர் முதலியோரைச் சுட்டுவதும் கூறத்தக்கது. (Tamil Verse in Translations, p. xx).

சங்கப்பாடல்கள் ஆங்கிலத்தில் அமையும் தன்மைக்கு இங்கு அகம் மற்றும் புறப்பாடல்களில் ஒவ்வொரு சான்றினைக் காட்டலாம். 'யாயும் யாயும் யாராகியரோ' எனும் குறுந்தொகைப் பாடலின், சண்முகம் பிள்ளை மற்றும் டேவிட் இ. லடன் இணைந்து அளித்த மொழிபெயர்ப்பு:

**What He said**

(To her, after their union -by-fate when she was afraid he would leave her)

Your mother and my mother
how are they related?
Your father and my father
what are they to
one another?
You and I,
how do we know each other?
Like the rain
And red earth
Our Loving hearts are mingled
As one

- Cempulappeyaṉīrār

The poets name is a pseudonym taken from the main image of the poem: it means 'the man of red earth and rain - water'. As in poem I, the intent of the poem is to convey the eternal nature of their love, Their parents too are eternally related in virtue of the love that is reborn between them birth and birth. The hearts of the lovers united like the rain and the earth, which though each is distinct and different, are united as one substance

during the rains. There is an Advaita aspect of this image, which is consciously portrayed in the translation. The red earth may symbolize Murugan or may be just the clay - laden earth so common in Tamil Nadu.

*தம்மை ஒரு தமிழ் மாணாக்கன் எனக் கூறித் தமிழுக்குப் பெருந்தொண்டாற்றியுள்ள, தமிழ்முனி ஜி.யு. போப் அளித்துள்ள, 'இரவலர் புரவலை நீயுமல்லை' எனும் புறநானூற்றுப் பாடலின் மொழிபெயர்ப்பு:*

*இப்பாடலுக்கு (162)க் 'கடியுறை' எனத் தலைப்பு காணப்படுகிறது. பாடலுக்கு முன்னுரையாக,* 'After our poet had been treated discourteously by Veliman's successor, who offered him a paltry gift which he rejected with scorn, he made his way to Kumanan's court, who on this occasion treated him with the utmost cordiality, and presented him with a lordly elephant. With this he made his way back to the palace erewhile belonging to his chrulish successor, and tethered his elephant under the trees close to the fort gate. He then revenged himself upon the younger brother, who had occupied the deceased chieftain's seat by singing the following song. To realise the situation fully we must remember that the bard was considered sacred, and his words of reproach and threatening would surely have effect; while for the present the song was sure to pass from mouth to mouth, and would render the new ruler an object of contempt to some, and of their detestation to others.

*இதனைத் தொடர்ந்து தமிழ் மூலம் அமைகிறது. அடுத்து மொழிபெயர்ப்பு தொடர்கிறது.*

Reproaches

"Thou'rt no protector or the suppliant poor. Yet to the suppliant kindly friends are ever found, see here the state of worthy suppliants! see here the worth of kindly friends! Behold I tether'neath the shadow of thy fort. This elephant, another's gift, and so, farewell, Thou chieftain of the swiftly running steed"

This does not seem to be a very clever bit of spit; but the reference to the house here implies an imputation of cowardice and the tethering his elephant there was a prophecy that the elephants of hositile kings would soon be found in the same spot.

This over generous Kumanan was at one period dispossessed of his kingdom by his younger brother and feld to the deseat, where he was in great poverty. To him our bard found his way, and sought a gift from the utterly impoverished king. The generous hearted prince drew his sword and presented it to the suppliant, saying, ' I've nothing to give thee but my head cut is off and bear it away!'

இதனின்றும் போப் சங்க இலக்கியத்துள் பெற்றிருந்த பயிற்சியினையும், தான் அதன் வழி பெற்ற இன்பத்தைப் பிறருக்கு அளிக்க மேற்கொண்ட முயற்சியினையும் ஆர்வத்தினையும் உணரலாம்.

பொதுவாகச் சங்க இலக்கியத்தை மொழிபெயர்த்துள்ள பிற நாட்டினருக்கும், பிறமொழியினருக்கும் கூட இக்கருத்துப் பொருந்தும்.

**திருக்குறள்**

உலகப் பொதுமறையாக, மனித வாழ்க்கை மேம்பாட்டிற்குத் தேவையான அடிப்படைக்கூறுகளை அறிவுறுத்துவதாக அமைவதே திருக்குறளின் பரந்துபட்ட மொழிபெயர்ப்புக்குக் காரணமாகிறது.[3] இதனை வ.வே.சு. ஐயர், "In undertaking this translation, my object has been not only to spread a knowledge of Tiruvalluvar's grand work as widely as possible in the world, but also to induce my own country man speaking other languages than Tamil to retranslate it into their different Vernaculars, so that the words of a great moral teacher who intended his message for all the world and for all time, many not fail at least now to reach the ears of the poorest of the poor and the simplest of the simple of his own country men, and to saw in their hearts the seeds of a noble, dignified, virtuous and manly life" என மொழிந்திருப்பது வழி அறியலாம். (The Kural or the Maxims of Tiruvalluvar, p. xlvi). காந்தியடிகளையும் வினோபா பாவேயையும் தன் பொருண்மையால் குறள் ஈர்த்ததும் கூறத்தக்கது.

ஈரடியில் அமையும் வெண்பாவாயினும் அதன் கருத்தாழமும் சொற் சுருக்கமும் பொருள் பெருக்கமும் அதனை உரைநடை வடிவில் அளிப்பதையும் இயல்பாகக் கொண்டுள்ளது. சில மொழிபெயர்ப்புகளில் பரிமேலழகரும் இடம் பெறுதல் காணலாம். தேர்ந்த குறள்களின் மொழிபெயர்ப்பைச் செய்துள்ள ராஜாஜி

தொடர்புடைய இரு குறள்களை ஒருங்கிணைத்து மொழிபெயர்ப்பும் விளக்கமும் அளித்திருப்பதும் (Kural - the great book of Thiruvalluvar, p. 93) சுட்டத்தக்கது.

வள்ளுவம் பலரால் அவரவர் புரிதல் மற்றும் விருப்பிற்கேற்ப மொழிமாற்றம் செய்துள்ளதை ஒரு குறள் கொண்டு உணர்த்தலாம்.

*அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார்*
*மறத்திற்கும் அஃதே துணை (76)* எனும் குறட்பா

The unwise deem love virtue only can sustain,
It also helps the man who evil would restrain
- G.U. Pope.

The ignorant say that love is an ally to Virtue only,
but it is also a help to vice
- W.H. Drew and John Lazarus

They are fools who say that love is for the righteous alone; for even against the evil-minded love is the only ally for a man.
- V.V.S. Aiyar.

Men of imperfect understanding think that a tender heart helps one, only in the path of good morality. Love inspires the warlike deeds of the brave soldier too,

It is well known that the bravest warrior is often the most tender - hearted. Parimelazhagar's interpretation of this Kural is different. *மறம்* maram in his commentary is the contrary of *அறம்* aram and he explains the verse to mean that love overcomes wrath and enmity and helps a man not only himself to do the right, but also to overcome the wrong done by others, *மறம்* has in Tamil literature also another meaning besides the one Parimelazhagar has taken up. *மறம்* stands for the virtues of the soldier (see Kural ch. 39-4) and I think that is the sense in which the work is used in this verse and it makes the use of the word *துணை* appropriate.
- C. Rajagopalachari

The fools maintain that love sustaineth righteous acts alone
But love doth as much actuate the cruel acts of one
- Tiruvachakamani K.M. Balasubramanian.

"Loves helps only virtue" say the fools;
But it also cures vice
(For vice Rajaji suggests valour. 'It also strengthens valour")
- P.S. Sundarams

'Virtue alone stems from love' say the unwise from narrow self - love arise crimes.
- T.S. Ramalingam Pillai

**Preface:** the objective gain of love is expressed below original Poetry

Transliteration: Ar̄ath thir̄ke anbusarbu enba ar̄iyār
Mar̄aththīr̄kum ahgh'e' thuṇai

Translation: Indiscreet men say
That love helps only
For doing righteous; hay,
It helps for valour exactly 76

**Substance:** Indiscreet men say that love helps only for doing righteous (deeds) = Imprudent men utter that love is useful in performance of righteous doings only; nay; it helps for valour, exactly = not that, it stands for courage, nicely.

**Annotation:** If some becomes spiteful, by showing love towards such spiter, it mitigates the spite and uses for making friendship. So it is mentioned that the love is not only for doing righteous doings but also stands helpful in alleviating the spite. In the above five maxims, the author told about the usefulness of love.
-C.R. Acharya.

குறள் போன்று இரண்டே அடிகளில் மொழிபெயர்க்கும் முயற்சி, தெளிவிற்காக உரைநடை வடிவம், நீண்ட விளக்கம், வரிவடிவினையும் இணைத்தல் எனப் பல முறைமைகள் குறள் மொழிபெயர்ப்பிலும் அமைந்துள்ளன. தொட்டனைத் தூறும் மணற்கேணியாக, வற்றாத வளம் கொண்டதாகப் பலரும் போற்றும் வண்ணம் வாழ்வியலைக் கற்பிப்பதாகச் சிறப்புறுவதே இதன் எண்ணற்ற மொழிபெயர்ப்புகளுக்கு அடிப்படையாகும்.

**தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தாற் காணப் படும் (114)**

எனும் ஒரு குறள் பெற்றுள்ள மொழிபெயர்ப்புகளில் இருபத்து நான்கினை நுணுகி ஆராய்ந்த அ.அ. மணவாளன் "பொதுவாகக் கணிக்குமிடத்து 24 மொழிபெயர்ப்புகளுள், 18 மொழிபெயர்ப்புகள் இக்குறளின் (114) பொதுக்கருத்தை நன்கு வெளிப்படுத்துகின்றன. இவற்றுள்ளும் ஆறு மொழிபெயர்ப்புகள் (எல்லிஸ், ட்ரூ, திருமதி திருநாவுக்கரசு, இராஜாஜி, சக்கரவர்த்தி, இராகவாச்சாரி) வள்ளுவரின் கருத்தாழத்தை நன்கு வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. படிப்பினிமை (readablity) என்னும் மொழிபெயர்ப்புத் திறனாய்வு நோக்கில் காணுமிடத்துச் செய்யுள் வடிவ மொழிபெயர்ப்புகளை விட உரைநடையாகச் செய்யப் பெற்ற மொழிபெயர்ப்புகளே திருக்குறள் கருத்தை முழுமையாகத் தருவதில் வெற்றி பெற்றிருக்கக் காண்கிறோம்" என முடிவுரைத்திருப்பது (On Translation, p.147) திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் பற்றிய கருத்துக் கணிப்பிற்குப் போதுமானதாகும்.

கழகம் வெளியிட்டுள்ள ஜி.யு. போப் முதலானோரின் மொழிபெயர்ப்புகள் அடங்கிய நூலுள் சொற்பொருளகராதி (Glossary) இடம் பெற்றிருப்பதும் குறிக்கத்தக்கது.

பிற அறநூல்களைப் பொறுத்தமட்டிலும் அவையும் கவிதை வடிவம், உரைநடை வடிவம் என இரண்டையும் மொழிபெயர்ப்பில் பயன்கொண்டுள்ளன. அவ்வையார் பாடல்களை மொழிபெயர்த்த சு.ந. சொக்கலிங்கம்,

அறம் செய விரும்பு - Have the desire to do charity
ஆறுவது சினம் - Anger should be subdued
இயல்வது கரவேல் - Do not conceal your means
ஈவது விலக்கேல் - Do not prevent giving alms
உடையது விளம்பேல் - Do not boast of your possessions

எனவும்,

**அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்**
**உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்**
**கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே**
**ஒட்டி உலர்வார் உறவு (வாக்குண்டாம் - 17)**

என்பது

'True relatives are those who stick to one even when fortune turns against him. Likewise, the water plants (Kotti, Ambal and Neithal)

in a pond die when the water dries up. Some birds flourish when the water in the pond is full and desert it when it becomes dry. Likewise relatives who gather around one when fortune favours him and desert him in misfortune are not termed as relatives.

எனவும், மொழிபெயர்த்திருப்பதைச் சான்றாக்கலாம்.

அறநூல்களில் அவற்றின் கருத்தைத் தெளிவாக, முழுமையாக உணர்த்துவதற்கு உரைநடையே மிகச் சிறப்பாக உதவுகிறது எனலாம். பொருள் விளக்கத்திற்காக, மொழிபெயர்ப்பாளர் பாடலமைப்பின் முன்பின் பகுதிகளை முறைமாற்றியிருப்பதையும், கொட்டி, ஆம்பல், நெய்தல் என்பனவற்றைத் தனித்தனியே மொழிபெயர்க்காதுப் பொதுவாக water plants என்று சுட்டியிருப்பதும் நோக்கத்தக்கது.

பாரதிதாசனின் இருண்ட வீட்டை உரைநடை வடிவில் மொழிபெயர்த்த ம.லெ. தங்கப்பா, "உரைநடையில் உள்ள செய்திகளைப் பாடலாக மொழிபெயர்ப்பது கொஞ்சம் கடினம்தான். ஆனால் பாடலை உரைநடையில் மொழிபெயர்ப்பது கடினமன்று. அதிலும் கற்பனைகளும், அணிகளும் மிகுதியாக இல்லாமல் இயல்பு நவிற்சிச் சுவையில் அமைந்த பாடல் என்றால் உரைநடையில் ஆற்றொழுக்காக அமைத்து விடலாம்" (On Translation. p. 139) எனக் கூறியிருப்பதையும், "மூலநூலின் அமைப்பு, வரிசைக்கிரமம் முதலியவைகளை அப்படியே பின்பற்ற வேண்டுமென்பதையும் நோக்கமாகக் கொள்ளக் கூடாது" எனும் பெஞ்சமின் ஜோவெட் எண்ணத்தையும் (மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும், ப. 16) உறுதிப்படுத்துவதாக இம்மொழிபெயர்ப்பு அமைந்திருக்கக் காணலாம்.

### சிலப்பதிகாரம்

வி.ஆர். ராமச்சந்திர தீட்சிதரின் சிலப்பதிகார மொழிபெயர்ப்பு மிகச் சிறப்பாகப் பேசப்படுகின்றது. அக்காலத் தமிழ்ச் சமுதாயத்தை நன்கு தெரிந்து கொண்டால்தான் இக்காப்பியத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும் என்ற கருத்தில் மிக விரிவான முன்னுரையையும் பல பின்னிணைப்புகளையும் இவர் தந்துள்ளார். மூவேந்தர், சமுதாயம், அரசியல், பண்பாட்டுப் பின்புலங்கள் என்பன மிக விரிவாக ஆய்வுப் போக்கில் முன்னுரையாக அமைகின்றன. வடமொழிப் பயன்பாடும், சிலம்பின் காலமும், (Use of Sanskrit Words

and the date of Cilampu) சோதிடக் கணிப்பும் சிலம்பின் காலமும் (Astronomical data and the date of the Cilampu), சிலம்பில் இசை (Music in the Cilampu), காலந்தோறும் பத்தினித் தெய்வ வழிபாடு (The Pattini cult through the ages) சொல்லடைவு என்பன பின்னிணைப்புகளாக அமைந்துள்ளன.

அடிக்குறிப்புகள் இல்லாத பக்கங்களே இல்லை யெனும் படி அமைவதுடன் அவை மிக விரிவாகவும் விளக்கமாகவும் இடம் பெற்றுள்ளன. இவற்றால் இவரது மொழிபெயர்ப்பு ஒரு கலைக்களஞ்சிய இயல்புடன் மிளிர்வதாக அணிந்துரை வழங்கிய கே.ஆர். சீனிவாச ஐயங்கார் பாராட்டுகிறார்.

"These were Windows peculiar to those days see studies in Tamil Literature and History, pp. 263-4, It is of absorbing interest to note similar institutions in the Indus Valley during the Chalcolithic period. In the Annual Report, 1928 - 9, of the Archaeological Survey of India, the remark is made that no-windows have been discovered in the Mohenjodaro buildings excavated, 'In all probability there were only simple ventilation hole just beneath the ceiling of the rooms' - Report p. 65" (p. 231) என விரிவான விளக்கங்கள் சான்றுகளுடனும், மேல் விளக்கம் தேவைப்படின் அறிந்து கொள்ளத்துணையாகும் நூல் பற்றிய குறிப்புடனும் அடிக்குறிப்புகள் அமைகின்றன.

"Experts in the art of cutting gems. The nine kinds of precious stones are mentioned. Aṭiyārkkunallār furnishes interesting details as regards their superiority and fineness as well as the defects of each one of them. The commentators study is scientific and deserves close scruting" (p. 236) என உரையாசிரியர் சிறப்பும் அவற்றில் எடுத்துக்காட்டப் படுகிறது. முப்பதுகாதைத் தலைப்புகளும், 'Mangala Valtuppatal or the Song of Benediction என்பது போன்று கொடுக்கப்பட்டுள்ளன.

பண்பாட்டுச் சிறப்பு மிக்க ஒரு கதையிலக்கியத்தை மொழிபெயர்க்கும் பொழுது அது வெறும் இலக்கிய மொழிபெயர்ப்பாக மட்டும் அமைந்துவிடாது அதனோடு தொடர்புடைய அனைத்துக் கூறுகளும் முழுமையாக விளக்கம் பெற வேண்டும்; அப்பொழுதுதான் அவ்விலக்கியத்தின் பெருமையை மொழிபெயர்ப்பினைக் கற்போர் நன்கு புரிந்து கொள்ள முடியும் என்ற உணர்வினராக வி.ஆர். ராமசந்திர தீட்சிதர் காணப்படுகிறார்.

அவரது மொழிபெயர்ப்புத் திறனை, ஊர்சூழ்வரியில் கண்ணகி காட்டும் ஆவேசத்தை,

> O! Look at me
>
> Here my words, O all you good damsels of the cow-herd community who have gathered here, and have with fore sight, engaged yourselves in the Kuravi! Here my Words! Here all of you cowherd girls!
>
> 'O Lord of the hot rays! You who are a Witness for all deeds of this seagirt world, speak! is my husband a theif' (p. 280)

என மொழிபெயர்த்திருப்பது கொண்டறியலாம்.

கே.ஆர். ஸ்ரீனிவாச ஐயங்கார் சிலம்பின் பிறமொழிபெயர்ப்புகள் குறித்து, 'Ten years ago, the French scholar, Alain Danielou's new English translation of Cilappatikaram appeared in the west. It was a prose rendering in the main, but the more poetically effective passages in the original were turned (though not always very successfully) into English verse. The book had a pleasant format, and there were hardly any footnotes and being tailored to the requirements of a world audience, it was immediately readable and intelligible. Another English translation has just appeared, 'The Anklet-Story' by Kanaa Subramanyam a well-known Tamil writer and scholar. Here too there is a mixture of verse and prose, but the rendering is rather closer to the original than Danielou's though not as close as Dikshitar's" (V.R. Ramachandra Dikshitar, Cilapatikaram, Foreward p. xv) எனத் தம் கருத்துரைத்துள்ளார்.

The tale of an Anklet: An epic of south India, (The Cilappatikarm of Ilaṅkō Aṭikal) என மொழிபெயர்த்துள்ள ஆர். பார்த்தசாரதியும் பாட்டும் உரைநடையுமாகவே இதனை மொழிபெயர்த்துள்ளார். அதன் சிறப்பிற்கு, ஆய்ச்சியர் குரவையில் நாராயணனின் புகழையேத்தும் இளங்கோவின் இனிய பாடலுக்கு

> Tongues are not tongues that haven't praised the Lord
> Who frustrated the Wiles of foolish Kamca
> Who went as a envoy of th Pāṇdavas to the sound
> Of Vedic chants, and was praised in all your directions
> By a hundred people Tongues are not-Tongues
> That haven't uttered the name Nārāyaṇā

எனக் கவிதை வடிவம் கொடுத்துள்ளமையைச் சான்று காட்டலாம்.

ஏ.வி. இளங்கோவின் ஓவியங்களுடன் ஓரியண்ட் லாங்மென் வெளியிட்டுள்ள லக்ஷ்மி ஹாம்ஸ்டோர்மின் 'Silappadikaram, Manimekalai' மொழிபெயர்ப்பும் குறிப்பிடத்தக்க சிறப்புடையதாகும். இரட்டைக் காப்பியங்கள் எனக் கதைத் தொடர்ச்சியால் சிறப்புறும் இவற்றை ஆங்கிலத்திலும் இரட்டைக் காப்பியமாகவே தந்துள்ளார். சிலப்பதிகாரத்தை ஆறு உட்தலைப்புகளிலும் மணிமேகலையை இருபத்திரண்டு உட்தலைப்புகளிலுமாகக் கூறிச்செல்லும் இம்மொழிபெயர்ப்பு உரைநடையையே பெரிதும் போற்றியுள்ளது. அரிதாக,

Long may you live Kaveri!
And may you never grieve, even if our garlanded king
Who carries the white umbrella of compassion
Who spreads the reign of justice
Should fall in love with the Ganga
As the best of wives, You will forgive him we know
So long may your live, Kaveri

எனக் கவிதை வடிவமும் காணப்படுகிறது. வண்ண ஓவியங்களுக்கான விளக்கமும் நூலின் இறுதியில், 'Kannagi Breaks the Silambu (facing page 68): the intensity of the scene is captured in the depth of the colours. Note especially the white umbrella, standing for the reputation of the king as a protector of the people, now bent and the kol (Scptre) now fallen. The shame and quilt is evident in the bent heads of all present. Kannagi alone holds her heads upright' (p. 183) என்பது போன்று அமைந்துள்ளது. மொழிபெயர்ப்பில், இலக்கியங்களின் புரிதலுக்கு இத்தகு ஓவியங்களும், அவற்றின் விளக்கங்களும் பெரிதும் துணையாகும் என்பதை இது உணர்த்துகிறது.

நூலின் இறுதியில் இவ்விரு காப்பியங்களையும் இணைத்து ஓர் விமர்சனக் கட்டுரை அமைந்துள்ளது. அதில், 'we are fortunate, then in having these two poems, both for their historical interest and for the boldness and complexity of their literary design. But most of all, they speak to us with immediacy, telling their powerful stories of remarkable women who made such remarkable choices in their time' என (p.182) முடிவுரைத்திருப்பது குறிக்கத்தக்கது.

இத்தகு இணைப்புகள், மொழிபெயர்ப்பாளர் இலக்கியங்களுக்கு வெளியே நின்று தம் கருத்தை வெளிப்படுத்தவும்,

மொழிபெயர்ப்பிற்குக் கூடுதல் தகவல்கள், விளக்கங்கள் முதலானவை அளிக்கவும், வாசகர் குறிப்பிட்ட இலக்கியத்தின் அருமை பெருமைகளை நன்கு அறியவும், வழி செய்கின்றன.

கம்பராமாயண மொழிபெயர்ப்பு பற்றிய செய்திகளை, 'இருபதில் கம்பன்' எனும் நூலுள் விரிவாகக் காணலாம் (ச. சிவகாமி, மொழிபெயர்ப்புகள், பக். 76-84).

இதுவரை பழந்தமிழ் இலக்கியங்களின் ஆங்கில வாக்கம் பற்றிய அறிமுகம் தரப்பட்டது. எஞ்சிய தமிழிலக்கியப் பரப்பின் ஆங்கிலப்பெயர்ப்புகள் பற்றியதொரு பொதுவான கண்ணோட்டத்தினைச் சுருக்கமாகச் சில குறிப்புகள் வழிக் காணலாம்.

1. பாடல்கள் முழுமையாக அன்றித் தொகையாக அமையும் பொழுது, அத்தொகுப்பு குறிப்பிட்ட எண்ணத்தின் அடிப்படையில் நிகழ்வதைப் பார்க்கலாம். பாண்டிச்சேரி மொழியியல் பண்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள 'Bharathidasan Selected Poems', அதன் பாடல் தேர்வினையும் அமைப்பினையும் 'Though Bharathidasan has composed thousands of poems in his lifetime, the expert committee decided to choose for this volume the best 200 of his short poems. As for as possible, poems that are already available in English and extracts from long narrative poems were avoided. Major importance was given to poems that demonstrate the basic rhetorical character and poetic experience of Bharathidasan.

This comprehensive edition of Bharathidasan's poems starts with a critical introduction followed by a biographical note on the poet Bharathidasan.

Throughout this volume the original Tamil Version of the poems appears on the left side and its English translation on the right. Of the total of 200 poems 197 are arranged in an approximately chronological order according to the date of composition. Under the title 'Notes' provided for all the poems" என வெளிப்படுத்தியுள்ளது.

2. குறிப்பிட்ட நூலின் முழுமையான மொழிபெயர்ப்பு எனினும் மொழிபெயர்ப்பாளரின் மனநிலைக்கு ஏற்ப அது உருக்கொள்வதை, 'He believes that Puhalendi's Nala is worthy to stand in the company of the great narrative poems of the world. . . . In following the rule that each stanza of the original must be represented by one stanza

in the translation, an occasional exception has been made in transferring a less important conceit from one stanza to another, in preference to omitting it altogether. In one place two stanzas have been transposed to provide a more logical order. The extreamely dull introductory verses have been compressed into a prose prologue and the prayers to the gods with which each canto is prefaced have been omitted, as being so packed with allusions to Hindu mythology as to defy translations' என எம்.சி. லாங்டன் தன் நளவெண்பா மொழிபெயர்ப்பில் மொழிந்திருப்பதன் வழியறியலாம்.

3. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவியாகத் தமிழகத்தில் தோன்றித் தமிழிலக்கியத்தில் பெரும் புரட்சியைத் தோற்றுவித்த பாரதியார் தமது பாடல்களுடன் ஆழ்வார் பாடல்களுள் சிலவற்றையும் மொழிபெயர்த்துள்ளார். அவற்றுள் ஒன்றினை எவ்வித விளக்கங்களுமின்றி வெறுமனே பாடலை மொழிபெயர்த்துச் செல்லும் மொழிபெயர்ப்பிற்குச் சான்றாகக் காட்டலாம். நம்மாழ்வாரின் திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே' எனும் பாடலை

And in all your wealthy princes she
but sees the Lord of Lakshmi
At the sight of beautiful colours she cries
'O my Lord World - Scanning
And all the shrines in the land,
to her are shrines of Vishnu
And in awe and in love, unceasing, she
adores the feet of the wizard

என்று மொழிபெயர்த்துள்ளார்.

இதனுள் பாடல் தலைப்போ, பாடலை மேலும் தமிழ் மரபுடன் விளங்கிக் கொள்வதற்கான விளக்கங்களோ பாடலாசிரியர் பற்றிய விளக்கமோ இல்லை. எனினும் பதிகத்தின் தொடக்கத்தில் Love - Had எனப் பொதுத்தலைப்பும், The realisation of god in all things by the vision of Divine Love. The poetic image used in the following verses is characteristically Indian. The mother of a love stricken girl (sympolishing the human soul yearning tomarge into the god-head) in complaining to her friends of the sad plight of her child, whom love for Krishna has rendered 'mad'; the effect of the madness being that in all

things she is able to see nothing but forms of Krishna, the ultimate spirit of the Universe என்று முன்னுரையளித்துள்ளார்.

இது போன்று பாடலை மொழிமாற்றித் தருவதில் மட்டுமே கவனம் செலுத்தும், தேவையான மேல் விளக்கங்கள் அளிக்காத மொழிபெயர்ப்புகளும் பரவலாக உள்ளன.

4. தனிப்பாடல்கள் மொழிபெயர்ப்புகளிலும் தேவையான விளக்கங்களைத் தரும் இயல்பு பரவலாகக் காணப்படுகிறது. பெ.நா. அப்புசாமியின் முத்தொள்ளாயிர மொழிபெயர்ப்பை இதற்குச் சான்று காட்டலாம்.

I am just a helpless woman
Will anyone who knows
Tell me how
I may go and meet,
Some day or other,
The lord of the people
Of Madura city
Where the waves of the river
Move to and fro
And chafe against the storied mansions
Walking, if I have to,
Over the heads
of the dense throngs of those
Who so closely surround him (1530)

1. line 6 & 7. Refer to the Pandyan King.

2. Line 11 & 14 . The meaning is not clear, over the heads perhaps means 'avoiding the strict watch.

என்பதாக அப்பாடல் அமைந்துள்ளது. மூவேந்தர்களின் பட்டப் பெயர்களும், சிறப்புப் பெயர்களும் தனித்து அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளதையும் இவண் கருதலாம்.

5. பொருள் விளக்கத்திற்காகக் கவிதைகளில் பெயரடை வினையடை முதலானவற்றை இணைத்து வழங்குதலும் காணப்படுகிறது. இவற்றின் தேவையை மொழிபெயர்ப்பறிஞர் பெ.நா. அப்புசாமி, ' The attempt has rather been to make the rendering

a close and understandable paraphrase, without too much change or dilution. Adjectives and adverbs have been added here and there, though they may not have been in the original, in order to convey the poets' idea better and to make his meaning clearer. In this translation each poem has lengthened out, and its general length is between ten and fifteen lines," எனக் கூறுகிறார். (Muttollayiram - On Teenage Love, Introduction).

6. பாடல்களுக்கு மூலத்தில் தனித்தலைப்பு இல்லாவிட்டாலும் மொழிபெயர்ப்பாளர், பாடல் கருத்தை வெளிப்படுத்தும் இயல்பினதான தலைப்பை மொழிபெயர்ப்பில் நடைமுறைப் படுத்துவதையும் அறிய முடிகிறது. திருமந்திரத்தை மொழிபெயர்த்த பி. நடராசன்,

**Why I Perserve My Body**

725) Time was when I despirsed the body
But then I saw the god within
And the body, I realised, is the Lord's temple
And so I began preserving it
With infinite care

எனத் தந்திருப்பது சான்றாகும். இங்குத் திருமந்திரத்தின் நான்கு வரிப்பா, ஐந்துவரிகளாக நீண்டிருப்பதையும் கருத்தில் கொள்ளலாம்.

7. தமிழ்ப் பக்தியிலக்கியங்களின் தத்துவப் பொருளினை, பொருளாழத்தை மொழிபெயர்ப்பது மிகக் கடினமாக அமைவதை, பட்டினத்தார் பாடல்களை மொழிபெயர்த்த எஸ்பி.ஒய். சுரேந்தர நாத் வோக்லி - ஆர்யா கூறுவதினின்றும் பெறலாம். 'The translation are by no means literal, Literal translations of such long mystical and meta physical religions poems as those of Pattanathu Pillai, rich in alliteration and rhyme, sweet in sound and language, high and heavenly in imagination are not possible' (Dedication - Poems of St. Pattanathu Pillai, p.11) என்பது அவர் கூற்று.

8. பாடல்களைப் பாடல் வடிவில் மொழிபெயர்க்கும் பொழுது பின்பற்றப்படும் யாப்புநிலை குறித்து, திருவருட்பாவினை ஆங்கிலப்படுத்திய ம.லெ. தங்கப்பா, "யாப்பு வடிவத்தின் கட்டுக்குள் அடங்குவதற்காகத் தொடர்களை வளைத்தும் நெளித்தும் பயன்படுத்தாமல் உரைநடையின் விடுதலையோடு உணர்வுகளை ஓடவிட்டிருப்பதே அருட்பா மொழிபெயர்ப்பின் வெற்றிக்குக்

காரணம் என்று எண்ணுகின்றேன். ஆங்கில உரைநடையில் அமைந்திருந்த தாகூரின் கீதாஞ்சலி மொழிபெயர்ப்பே எனக்கு முன் எடுத்துக்காட்டாக இருந்தது. . . . . . தமிழிலிருந்து ஆங்கிலத்தில் பெயர்க்கையில் மூலவடிவின் தேவைக்கும் அமைப்புக்கும் ஏற்ற ஆங்கில யாப்பு வடிவங்களைத் தேடிக் காணவும் கையாளவும் இயலாமல் பெரும்பாலும் எல்லாவற்றுக்கும் விடுதலைப்பா (free verse) வையே பயன்படுத்த நேர்வது போல அல்லாமல் தமிழில் யாப்பு வடிவங்களைக் கையாளும் திறன் அமைந்திருப்பது மொழிபெயர்ப்புக்கு மிகக் கை கொடுக்கின்றது. எந்தப்பாட்டை எந்த யாப்பில் அமைத்தால் சிறக்கும் என்று தேர்ந்தெடுத்து அமைத்தால் சிறக்கின்றது. . . . பொதுவாக எண்சீர் விருத்தமும் அகவலும் மொழிபெயர்ப்புக்கு நன்கு கை கொடுக்கின்றன" (On Translation, pp. 138-140) என்று கூறுவது நோக்கற்பாலது.

9. நாட்டுப்புற இலக்கியங்களில் மிகுந்து நிற்கும் நாட்டுப்புற வழக்காறுகள், கொச்சைமொழிகள், நாட்டுப்புற இசையமைப்பு, பண்பாடு போல்வன மொழிபெயர்ப்பிற்குக் கூடுதல் சிக்கலாக அமைவதையும், அவற்றை நீக்குவதற்கு அடிக்குறிப்புகள் மிகுந்த தேவையாய் அமைவதையும் பலத்தமிழ் நாட்டுப்புறக் கதைப்பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்த வி.முருகன் இயம்புகிறார். அவற்றை அவர் எப்படி மொழிபெயர்ப்பில் கொண்டு வந்தார் என்பதை, "The folk songs in particular with their complex content the abundance of colloquial idiom, the dialectal variations, the typical folk linguistic culture and their musical pattern present special problems to the translator. . . . . And no attempt has been made to imitate the matrical and rhyming pattern of the originals. For the most part it is a direct line by line translation. Where no English equivalents are available for objects of nature and eatables peculiar to this land they have been given in transliteration with their descriptions in foot notes. '(The wandering voice, p. xviii);' In case where line by line translations is not possible, shortest, meaningful units with narrative courses of the text have been taken for translation' (The Dateless Muse, p. xix) எனத் தம் முன்னுரையில் புலப்படுத்தியுள்ளார்.

10. மொழிபெயர்ப்பாளரின் மொழிபெயர்ப்புத் திறன் குறித்த விமர்சனங்களும் அமைகின்றன. "ஆளன்று வாளின் தப்பார்' (புறம்) என்ற வரியை ஏ.கே. இராமானுஜன், 'To give the thing the Warrior's Death' என்று உட்கருத்தை விளக்கி மொழிபெயர்த்துள்ளார்.

ஏ.கே. இராமானுஜன் மொழிபெயர்ப்பின் அடிக்குறிப்பு உத்தியை விரும்பாது, மூலத்தின் உட்கருத்தை மொழிபெயர்ப்பினுள் வாசகரை மனத்தில் வைத்து மூலத்தினின்று செய்தியைக் கூடுதலாகச் சேர்த்து விளக்கியுள்ளார்" எனும் வீ.சந்திரன் கருத்து (மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும், ப. 30) இதனை உணர்த்தும்.

11. தமிழ் மூலநூலார் பற்றிய மதிப்புரைகளும் அவ்வப்போது இம்மொழிபெயர்ப்புகளில் இடம் பிடிக்கின்றன. தாயுமானவரின் பெருமையை வில்ஹேய்ஸ் என்பார், 'Thayumanavar belongs to the whole world. His poems will one day take their place in the Larger Bible of the Universal Church. This little book, is by its very nature appointed to be read in churches' என்று போற்றியிருப்பது (Foreword, Temple Chimes - Poems of St. Thayumanavar) இதற்கு எடுத்துக்காட்டாகும்.

நளவெண்பாவை மொழிபெயர்த்த எம்.சி. லாங்டன் அதன் படைப்பாளரான புகழேந்தியைப் புகழ்ந்து ஒரு பாடல் எழுதியிருப்பதும் அறியத்தக்கதாம்.

12. சென்னை மாகாண அரசாங்கம் 1928 செப்டம்பரில் பாரதியார் பாடல்களைத் தடை செய்த போது, Young India இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றிருந்த இராஜாஜி, பாரதியாரின் 18 பாடல்களை மொழிபெயர்த்து, டிசம்பர்.1928, சனவரி 19, 29 ஆகிய அவ்இதழ்களில் வெளியிட்டுள்ளார். (Bharati as a Translator, C. Visvanathan - Compiler) என்பன போன்ற இன்றியமையாத கருத்துகளையும் இவற்றின் வழிப் பெறலாம்.

### நிறைவுரை

தமிழிலக்கிய ஆங்கில ஆக்கங்களின் முழுமையான தொகுப்பினை ஆய்விற்குட்படுத்தும் பொழுது மற்றும் பல புதிய கருத்துகள் கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. இது பற்றிய மேலாய்வில் இனி வரக்கூடிய மொழிபெயர்ப்புகள் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய சில நடைமுறைகளைக் கூட தமிழிலக்கிய மொழிபெயர்ப்புக் கொள்கைகளாக வடிக்க இயலும்.

உலக மொழியாகக் கருதப்படும் ஆங்கிலத்தில் எழுந்துள்ள மொழிபெயர்ப்புகள் பொதுநிலையில் தமிழுக்குப் பெருமையளிப்பதாகவே உள்ளன; தொடர்ந்து பலரும் அதில் முனைப்புடன் ஈடுபடுவதும் வரவேற்கத்தக்கது; தமிழன்பருக்கு மகிழ்ச்சியளிப்பதுமாகும்.

அடிக்குறிப்புகள்

1. 'Tolkāppiyam is indisputably a classic of towering dimensions. It deserves to occupy an eminent place among the works of world literature. It needs extensive studies not only in comparison with the ancient Sanskrit, Greek and Latin treatises, but in a new historic perspective. Several of its linguistic insight and literary theories are far ahead of its times. The varied conventions on literary usage vis-a-vis the worldly usage, and those on the manifest emotions constitute refreshingly new areas of the theory of literary meaning.

Insights into communicology, semiotics, theory or reading, thematology, reader - response criticism, besides formulation on the theories of language can have a significant bearing on the present day developments in these areas, as much as they constitute rewarding materials for comparative criticism.

- V. Murugan, Tolkappiyam in English, p. xvi.

2. Wherever the translator faced problems in the understanding of the units of sound and meaning myths and symbols, modes and techniques inhering in the structure of the SL text, he has been guided by the commentary of Naccinarkkiniyar a multifaced scholar - critic of the 14th Century

- V. Murugan, Kalittokai in English, p. xxxv

I have mostly followed the commentary of Pinnathur Narayanaswami Aiyar. However I did not fail to consult other scholars like Po.Ve. Somasundaranar and Avvai D. Doraiswami Pillai occasionally.

- A. Dakshinamurthy, The Narrinai four hundred, Introduction.

3. The aim of the Kural translators has all along been to stress its philosophy rather than its poetry.

- P.S. Sundaram, Ancient Indian Literature - Vol.3, p. 228.

# சொல்லாக்கம்

மொழியின் தோற்றம் பன்னூறு ஆண்டுகட்கு முற்பட்டதாயினும் அதன் வளர்ச்சி தொடர்ந்துகொண்டே இருக்கிறது. அவ்வப்போது தோன்றும் புதிய புதிய சொற்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. இச்சொற்கள் பற்றிய ஆய்வு சொற்கள் தோன்றுவதன் நோக்கம், தோன்றுகின்ற நெறிமுறைகள், பயன் போன்றவற்றை அறிவுறுத்தும் கல்வியாக (Terminology - சொல்லாக்கக் கல்வி) அமைகின்றது.

**சொல் – சொல்லாக்கம்**

மொழி, கிளவி, வாக்கு, வழக்கு எனவும் குறிக்கப்படும்[1] இச்சொல் பேச்சு வழக்கில் வார்த்தை எனும் வடசொல்லாலும் வழங்கப்படுகின்றது. தனித்தும், இணைந்தும் பொருள்தரும் இச்சொல், பொதுநிலையிலின்றித் தனித்த சிறப்புடையதாய் விளங்குதலும் உண்டு. அத்தகு சொற்கள் உருவாகுநிலையில் சிறப்புக் கூறுகளை இனங்காணும் கல்வியாகச் 'சொல்லாக்கம்' அமைகின்றது.

**சொல்லாக்க வகைகள்**

மனிதன் அறிவு வளர வளர, அவ்வப்போது புதிய புதிய கதைகள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. நாள்தோறும் அவை மாற்றமும் மலர்ச்சியும் வளர்ச்சியும் விரிவும் பெறுகின்றன. அவற்றை உணர்த்த உடனுக்குடன் சொற்கள் தோற்றுவிக்கப் படுகின்றன. அறிவியலின் விரைந்த வளர்ச்சி, மொழிகளில் புதிய புதிய சொற்கள் தோன்றுவதை, ஆக்கப்படுவதைத் தூண்டுகின்றது. குறிப்பிட்ட ஓர் துறை எனாது அறிவியல், புவியியல், பொறியியல், மருத்துவ இயல், சமூகவியல், கலையியல், விளையாட்டியல், பண்பாட்டியல் என எல்லாத் துறைகளிலும் சொல்லாக்கங்களைக் காணலாம். தோன்றுகின்ற சொற்களின் எண்ணிக்கையில் வேறுபாடுண்டே தவிர, புதிய சொற்களின் தோற்றத்திற்கு இடமில்லை என்று

1. எடுத்த **மொழி** இனம் செப்பலும் உரித்தே (தொல். 544)
பன்மை சுட்டிய சினைநிலைக் **கிளவி** (தொல். 545)
**வழக் கெனப்** படுவது உயர்ந்தோர் மேற்றே (தொல். 1592)

எத்துறையினையும் சுட்ட இயலாது என்பதும் குறிப்பிடற்பாலது. இதுபோன்றே சொற்கள் தோன்றுகின்ற துறைகள் வேறுபடினும் தோன்றுகின்ற முறைமைகளில் மாற்றம் இல்லை.

பொதுவாகச் சொற்கள் உருவாவதில் 3 வகைகளைக் காணமுடிகிறது. அவையாவன:

1. புதிய சொற்களை உருவாக்குதல் (பெயரிடுதல்)

2. துறைச் சொற்களை உருவாக்குதல்

3. மொழிபெயர்த்தல்

**1. புதிய சொற்களை உருவாக்குதல்**

புதியனவற்றைக் கண்டுபிடிக்கும், உட்புகுத்தும் சூழலில் அவற்றிற்குப் பெயரிடும் தேவையில் உருவாகும் சொற்களை இவ்வகையில் நோக்கலாம். சான்றாகத் தொலைக்காட்சி, நீம்பேஸ்ட், நாரதர், குறளடி, வள்ளுவம், இயக்குநர், விவா, தூது, புதிய வார்ப்புகள், தேய்புரி பழங்கயிற்றனார், வடபழனி போன்றவற்றைச் சுட்டலாம்.

தொடக்க காலத்தில், முதலில் ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் காட்டுதற்காக இடுகுறியாக இத்தகு சொல்லாக்கங்கள் தோன்றின. பின் ஏதேனும் காரணம் பற்றிப் பெயரிடும் மரபு தோன்றி வளம் பெற்றது. இன்று பெரும்பாலும் தோன்றும் சொற்கள் காரணப்பெயராக அமைகின்றன. இவ்வாறு தோன்றுதற்குரிய காரணங்களைச் சொற்கள் உருவாகும் முறைமைகளாக அணுகலாம்.

**2. துறைச்சொற்களை உருவாக்குதல்**

புதிய சொல்லாக்கங்களினின்று துறைச் சொற்கள் பெரிதும் வேறுபட்டன. ஆயின் இரண்டினையும் ஒருங்கிணைத்து நோக்கும் போக்கும் காணப்படுகின்றது. (இராதா செல்லப்பன் - கலைச்சொல்லாக்கம்; வே. சிதம்பரநாத பிள்ளை - கலைச்சொற்களின் பயன்பாடு, தமிழில் அறிவியல்) கலைச்சொல் என்பதனை விட, துறைச்சொல் என்பதே பொருத்தமானது என்ற கருத்தில் 'துறைச்சொல்'லே இங்குப் பயன்படுத்தப்படுகிறது. பொதுவாகத் துறைச் சொற்களை, "ஒரு குறிப்பிட்ட பொருளை, ஒரு குறிப்பிட்ட துறையில் வழங்கும் சிறப்புச் சொற்களைத் துறைச்

சொற்கள் எனலாம். இவை அத்துறையின் பெருமையினை, இயல்பினை வெளியிடும் அடிப்படைச் சொற்கள் எனவும் கொள்ளலாம்" என விளக்கலாம்.

ஆங்கிலத்தில் "Term" என்பதற்குத் தரும் விளக்கம் இதனுடன் ஒப்ப அமைகிறது.[2]

துறைச் சொற்களின் இயல்பினை, "மிகத் துல்லியமானது; வரையறைக்குட்பட்டது; பொருள் மயக்கற்றத் தெளிவுடையது; கருத்திற்கே முதலிடம் தருவது; என்றும் மாறாதது; பின் எழும் வளர்ச்சிக்குத் துணையாவது" என நவில்வர் (சி. செல்வக்குமார், மருந்தியல் கலைச்சொற்கள் - தமிழில் அறிவியல், ப. 548). இதன் காரணமாகக் குறிப்பிட்ட சொல்லுக்குக் குறிப்பிட்ட ஒரு பொருள் மட்டுமே நிற்றல் வெளிப்படை. இவ்வியல்புக் கூறுகளே துறைச் சொற்களைப் பிற சொல்லாக்கங்களினின்றும் வேறுபடுத்துகின்றன எனலாம்.

திரிபுணர்ச்சி (Delusion); காரணமற்ற அச்சம் (Phobia); உருவெளித் தோற்றம் (Phantasy); போட்டி மனப்பான்மை (Rivalry Complex); இரட்டை இயல்பு (Double personality) போன்றன உளவியல் துறையில் பயன்படும் துறைச் சொற்களுக்குக் காட்டுகளாம். இதுபோன்றே எல்லாத் துறைகளிலும் அமைகின்றது.

32 உத்திகளுள் ஒன்றாகத் தொல்காப்பியர் சுட்டும் 'தன் குறியிடுதலை'த் (தொல். 1610) துறைச் சொல்லாக்கத்தின் முன்னோடியாகக் கருதுவர் (வே. சிதம்பரநாதப்பிள்ளை, கலைச்சொற்களின் பயன்பாடு, தமிழில் அறிவியல், ப. 457). சாதாரணமாக வழக்கில் உள்ள சொற்கள் சிறப்புப் பொருட்களைப் பெற்றுவிட்டால் அச்சொற்கள் துறைச்சொற்கள் நிலைக்கு உயர்வதாகவும் உரைப்பர் (மேற்படி).

### 3. மொழிபெயர்த்தல்

அறிவியல் வளர்ச்சியின் பயனாக நாடுகளுக்கிடையே தோன்றியுள்ள நெருக்கத்தை ஆழப்படுத்துவதாகவும்

2. Term: A word or phrase used in a definite or precise sense in some particular subject, as a science of art. Any word or group of words expressing a notion or conception or denoting an object of thought, expression. C.T. Onions (ed); The shorter Oxford English Dictionary - Vol. II; p. 2153.

விரிவுபடுத்துவதாகவும் அமைவன மொழிபெயர்ப்புகள். கலை, இலக்கியம், அறிவியல் முதலான படைப்புகளை மொழி பெயர்க்கும்பொழுது, மொழிபெயர்க்கும் மொழியில், புதிய புதிய சொற்களின் தோற்றம் இன்றியமையாததாகவும், தவிர்க்க இயலாததாகவும் அமைகிறது இவ்வாறு மொழிபெயர்க்கப்படும் சொற்கள் அம்மொழியை வளப்படுத்துகின்றன. இம்மொழி பெயர்ப்பு முன்சுட்டியுள்ள இருகூறுகளிலும் இடம்பெறக் காணலாம்.

### சொல்லாக்க முறைமைகள் (Methods)

அவ்வப்போது தோன்றுகின்ற புதிய சொல்லாட்சிகளைத் தொகுத்து நோக்குங்கால், அவற்றின் தோற்றக் காரணிகளாக, சொல்லாக்க முறைமைகளாகக் கீழ்க்காண்பன அறிய வருகின்றன.

1. **பண்பு (இயல்பு):** ஒன்றன் இயல்பினை வெளிப்படுத்துதல் இதன்கண் அடங்கும். சான்றாக நன்னூல், வழிகாட்டி (Guide) போல்வனவற்றைச் சுட்டலாம்.

2. **உட்பொருள் (Content):** ஒருபொருள் உருவாவதற்குத் தேவைப்படும் முதன்மைப் பொருளால் (மூலக்கூறு) உணர்த்தப் படுவன. லிம்கா, மார்கோ.

3. **தொழில் :** செய்கின்ற தொழிலைக் குறிப்பன. கணி, கணினி (Computer), ஒலிபெருக்கி (loud speaker).

4. **நோக்கம்:** எதன் காரணமாக எழுந்தது என்பதை வெளிப்படுத்துவன. தராசு, நக்கீரன், துக்ளக்.

5. **அமைப்பு:** அமைந்துள்ள முறைமையை முதன்மை யாக்குவன. சதகம், பதிகம், அந்தாதி.

6. **சிறப்பு:** ஒன்றன் தனித்தன்மையை நவில்வன. வீராங்கனை, வெற்றித்திலகம், சூப்பர்செம். ஒரு பெயரில் தோன்றிப் பின் தனிச்சிறப்புக் காரணமாக வேறொரு பெயர் பெறுவன - கம்பன் (இராமகாதை), வள்ளுவம் (திருக்குறள்) போன்றனவற்றையும் இங்கு இணைத்து நோக்கலாம்.

7. **பயன்பாடு:** எதற்குத் தேவையெனும் அதன் பயன்பாட்டினைத் தெரிவிப்பன. மனமகிழ் மன்றம், போனிமிக்ஸ்.

8. **குறியீடு:** குறிப்பிட்டதொரு பொருளை, நேரிடையாகவோ, மறைமுகமாகவோ, எதிர்நிலையாகவோ, ஒன்று அல்லது பன்முக நோக்கோடு மற்றொன்றால், இடம் பெறும் சூழலின் வழிச் சுருக்கமாக உணர்த்துவது குறியீடாகும். புனைகதை, திரைப்படம் போன்றவற்றின் தலைப்புகளில் இதனை மிகுதியாகக் காண வாய்ப்புண்டு. கருப்பொருளினை, முடிவினை இவை குறியீடாக உணர்த்துகின்றன. மாயமான் வேட்டை, இருகோடுகள்.

9. **சுருக்கம்:** மிக நீண்ட பெயர்களைச் சுருக்கமாக அழைக்க அவற்றில் இடம்பெறும் சொற்களின் முதலெழுத்து அல்லது பகுதியைக் கொண்டு தரல். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் - உதநி., United Nations Educational Scientific and Cultural Organisation - UNESCO (யுனெஸ்கோ), உதகமண்டலம் - உதகை.

10. **புனைபெயர்:** மறைவு வேண்டி அல்லது தனிவிருப்பம் நோக்கிப் புனைந்துகொள்வது - கண்ணதாசன், சோ, புதுமைப்பித்தன். இதுபோன்று பிறருக்குச் சூட்டும் நையாண்டிப் பெயர்களை (nicknames)யும் கருதலாம்.

11. **ஒன்றிலிருந்து மற்றொன்றை உருவாக்கல்:** இதனுடன் மொழியியலாரின் போலச் செய்தல் கொள்கையை ஒப்பு நோக்கலாம். இயக்குநர், நடத்துநர், ஓட்டுநர், வடபழனி, தென்காசி.

சொற்களை உருவாக்க முடியாத நிலையில் அவ்வச் சொற்களே எழுத்துப் பெயர்ப்பு செய்யப்பட்டுத் தேவையான விளக்கங்களை அளிக்க வேண்டியுள்ளது. நடனம், ஓவியம், சிற்பம் போன்றவற்றில் நிழற்படங்கள், வரைபடங்கள் ஆகியனவும் அத்துறைச் சொற்களின் விளக்கத்திற்குத் துணை செய்கின்றன.

ஆழ்ந்து நோக்குங்கால் இவை மட்டுமின்றி மற்றும் சில சொல்லாக்க முறைமைகளும் கிடைத்தற்கு வாய்ப்புண்டு.

## துறைச் சொல்லாக்க முறைகள்

மேற்காட்டியனவற்றுள் ஒன்றனையோ, ஒன்றுக்கு மேற்பட்டனவற்றையோ, துறைச் சொற்கள் அடிப்படையாகக் கொள்வதுடன் (பின்னிணைப்பு - 1 காண்க) தமக்கெனச் சில தனித்த சிறப்புகளையும் கொண்டுள்ளன. அவற்றைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1) முன்தோன்றியுள்ள சொல்லிலிருந்து உருவாக்குவதே பரவலாக எல்லாத் துறைகளிலும் மிகுதியாகக் காணப்படுகிறது. எளிமை, தெளிவு என்பனவற்றை இன்றியமையாததாகத் துறைச் சொற்கள் கொள்வதால் இந்நிலை எனலாம்.

அகழ்வாராய்ச்சி (Excavation), ஆட்சிமுறை (administration).

2) இவ்வாறு முன்தோன்றிய சொற்களிலிருந்து துறைச் சொற்களைப் பெறும்பொழுது முன் இணைப்பு அல்லது பின்னிணைப்பு இவற்றால் அமைப்பதும் உண்டு.

மூலதனம் (Capital), துணைவேந்தர் (Vice-Chancellor),
மின்னோட்டம் (Current), கதிர்வீச்சு (radiation),
குறியீடு (symbol).

3) இருசொற்களின் இணைவில் புதியனவற்றை உருவாக்கலும் பரவலாகக் காணப்படும் ஒன்றாம்.

தடையிலா வணிகம் (free trade), பணவீக்கம் (inflation),
தற்காப்பு எதிர்வினைகள் (defensive reactions).

4) மாற்றம் இன்றி வழக்கில், இலக்கியத்தில் உள்ளனவற்றை அப்படியே பயன்கொள்ளலும் உண்டு.

கழலை (Tumour), கலக்கி (Stirrer), பெருவழி (Highways) (மதுரைக்கு ஏகும் பெருவழி - சிலம்பு).

5) ஒரு துறைச்சொல், வேர்ச்சொல் அல்லது அடிச்சொல் போன்று தன்னின்றும் பிற பல சொற்களின் உருவாக்கத்திற்கு இடமளிப்பதும் சுட்டற்பாலது.

ஆட்சி, ஆட்சியாளர், ஆட்சிநெறி, ஆட்சித்தலைமை.

துறைச்சொற்களின் உருவாக்கத்தில், 'நூல்-வழக்கு, உலக வழக்கு, கல்வெட்டு இம்மூன்றினின்றும் இதுகாறும் அகராதியில் புகாத சொற்களையெல்லாம் தொகுத்துக் கொள்ளல் வேண்டும்; முன்னொட்டுகள், பின்னொட்டுகள், இடையொட்டுகள், ஈறுகள் என்ற நாற்றிறப்பட்ட சொற்களின் அல்லது குறைச்சொற்களின் பொருட்கள் பயன்கள் எல்லாம் தெரிந்துகொள்ளல் வேண்டும்' என்ற பாவாணரின் கருத்தினை (தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள், இரா. இளங்குமரன், ப. 111) நினைவிற் கோடல் ஏற்புடையது.

### மொழிபெயர்ப்பு முறைமைகள்

ஒரு மொழியினின்று மற்றொரு மொழி அறிவுத் துறையினைக் கடன்பெறுவது மொழிபெயர்ப்பின் ஊடாக நிகழ்கிறது. குறிப்பிட்டதொரு தொடரை மொழிபெயர்த்தலினும் சொல்லாக்கங்களை, துறைச் சொற்களைமொழிபெயர்த்தல் மேலும் நுண்மையானது. இதற்கான வழிமுறைகளை முன்னோர் வகுத்திருப்பதைப் பின்னிணைப்பு-2இல் காணலாம். துறைச்சொல் மொழிபெயர்ப்பில் 1. செய்யப்படும் சொல் தமிழ்ச் சொல்லாக இருத்தல் வேண்டும். 2. அச்சொல் பிறமொழிச் சொல்லுக்குப் பொருளில் பொருத்தமானதாக இருக்க வேண்டும். 3. வடிவில் சிறிதாகவும் எளிமையாகவும் இருக்க வேண்டும். 4. ஓசைநயமுள்ளதாக விளங்க வேண்டும். 5. தமிழ் மரபுக்கு ஒத்ததாக அமைய வேண்டும் எனக் கீ. இராமலிங்கனார் கருத்துத் தெரிவிக்கிறார் (மொழிபெயர்ப்பு மரபுகள், ப. 80).

பொருத்தமுடைமை (Suitability), எளிமை (Simplicity), ஏற்புடைமை (Adaptability), மொழித்தூய்மை (Language purity), ஒருசீர்மை (Uniformity), பல்துறை அணுகுமுறையும் போக்கும் (Interdepartmental approach and Trend) என்பனவற்றால் துறைச்சொற்களைத் தரப்படுத்தலாம் எனக் காட்டும் வீ. சந்திரன் (மொழிபெயர்ப்பு மரபுகள், பக். 82-83), மொழிபெயர்ப்பில் புதிய சொற்களை உருவாக்குவதற்கும் (innovation) வழிகாட்டுகிறார். 1. ஒரு மொழியில் மக்கள் வழக்கிலிருந்து, பயன்பாட்டிலிருந்து விலகிப் போன ஒரு சொல்லை, காலத் தேவைக்கேற்ற முறையில் மீண்டும் பயன்படுத்தத் தொடங்குதல்; 2. ஒரு மொழியில் ஏற்கெனவே பயன்பாட்டிலுள்ள ஒரு சொல்லுக்குப் புதிய பொருள் கொடுத்து, அச்சொற்பொருளின் திறனை விரிவுபடுத்தி அதன் செயற்பாட்டை, பொருளை அதிகரிக்கச்செய்தல் என்பன அம்வழிமுறைகள் (மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும், ப.109). "இந்தியன் என்ற முறையில் ஒருவருக்கு ஆங்கில மொழி அறிவு மிகப் பொதுவானதாயினும், அவருக்கு ஆங்கிலத் தொழில் நுட்பச் சொற்றொடர் அறிமுகமாயிருப்பதால், பழக்கப்பட்டு விட்டதால், ஆங்கிலத்திலிருந்து கடன் வாங்கப்பட்ட சொற்கள் பெருமளவில் ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதும் இவர் எண்ணமாகும். (மேற்படி, ப. 150).

தற்சமம், தற்பவம் ஆகிய விதிகட்கு உட்பட்டுப் பிறமொழிச் சொற்களை இறக்குமதி செய்தல் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஆயினும் தமிழ்ச்சொல் உருவாகும் வரை காலம் தாழ்த்தலும் கருத்து வளர்ச்சியைத் தடை செய்யும். எனவே தேவை - விரைவு கருதி தவிர்க்க முடியாத நிலையில் புதுச்சொல் உருவாகும் வரை பிற சொற்களை (சான்று: பாரத ஸ்டேட் வங்கி) ஏற்கலாம் எனும் சிந்தனையும் முன்னவர் கருத்தை வலியுறுத்தக் காணலாம் (ப. இறையரசன், மொழிபெயர்ப்பு - பண்பும் பயனும், ப. 61).

"தனித்தமிழில் சொல்ல வேண்டும் என்பதற்காக மொழியோடு ஒட்டாமல் கிலோ மீட்டரை (Kilometer) 'ஆயிர மாத்திரை என்றும் 'டன்' என்பதைக் 'கல்லெடை' என்றும் customer என்பதை 'வழமைக்காரன்' என்றும் எழுதி வருவதைச் சில ஏடுகளில் கண்டு வருகிறோம். Kidy's Centre - குழந்தைகள் நடுவகம், Milk Icecream Bar பால்பனிக்குழைவு அங்காடி, Coffee-Bar - கொட்டைவடிநீர் குழம்பியகம் - இவ்வகைச் சொல்லாக்கங்கள் மொழிபெயர்ப்பில் தெளிவின்மையைக் காட்டுவன. இவை எந்த அளவிற்கு நன்மை தருவது என்பது சிந்தனைக்குரியது" என்பதும் இவர் கருத்தாம். (மேற்படி பக். 62-63) "கலைச் சொல்லாக்கத்தின் போது உலகப் பொதுவானவை என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமச் சொற்கள் தவிர்ந்த பிறவற்றைத் தமிழாக்கும் பொழுது இயலுமானவரை பிறமொழிக் கூறுகளை விலக்குவதே அறிவுடைமையாகும். அதே நேரத்தில் தமிழ்மொழியுடனும் தமிழோசையுடனும் தமிழ் மக்களின் வாழ்வுடனும் இரண்டறக்கலந்து தமிழ் மயமாகி விட்ட எந்தச் சொல்லையும் அதன் ஆற்றல் கருதிக் கலைச்சொல் ஆக்கத்திலே சேர்த்துக் கொள்வதில் எவ்வித தயக்கமும் வேண்டியதில்லை" எனவும் கருதுவர் (இ. முருகையன், மொழிபெயர்ப்பு நுட்பம் - ஓர் அறிமுகம், ப. 120).

பொதுவாக, இத்தகு சொற்களைக் குறிப்பிட்ட மொழியில் இயன்றால் மொழிபெயர்த்தல் அல்லது ஒலிபெயர்த்தலாக ஏற்றுக் கொள்ளல் எனும் கருத்தில் முரண்பாடில்லை. மொழியைவிடக் கருத்திற்குச் சிறப்பிடம் வழங்குதல் இதன் முதன்மை நோக்கம் எனலாம்.

Revolution - புரட்சி, Speculation - ஊக வணிகம்,
X-Ray - எக்ஸ்ரே, Cheque - செக்

சிலவிடங்களில் இருமொழிகளின் கலப்பாகவும் அமைவதுண்டு.

Civil Right - சிவில் உரிமை, Money Bill - பணமசோதா

மொழிபெயர்ப்புச் சூழல்களில் இச்சொல்லாக்கங்கள் சொல்லுக்குச் சொல் பொருள் கொள்ளல் என்பதன்றி உணர்த்தும் பொருளுக்கே முதன்மை வழங்குகின்றன.

Typewriter - தட்டச்சு, Bicycle - மிதிவண்டி

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் துறைச்சொற்களை உருவாக்கியபோது, 1. சொற்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் பொருள் பொதிந்தனவாகவும் இருத்தல் வேண்டும்; 2. அவை தமிழோடு தமிழாய்க் கலக்கும் இயல்பினவாக இருத்தல் வேண்டும் எனும் இரு அடிப்படைகளைக் கையாண்டதாக உரைப்பர் (எப்.எக்ஸ்.சி. நடராஜா, மொழிபெயர்ப்பு - பண்பும் பயனும், ப. 24)

"தமிழ் (தாய்) மொழியின் தோற்றம், வளர்ச்சி, தன்மை, இலக்கண இலக்கியங்கள் இவற்றைப் பற்றிய நல்லறிவு கலைச்சொல் ஆராய்வோர்க்கு வேண்டியது ஆகும். மரபும் வழக்கும் நன்கு விளங்கினால் தான் கலைச்சொற்கள் செம்மையுறும்" எனும் எண்ணமும் குறிப்பிடற்பாலது.

### நோக்கமும் பயனும்

அறிவியல், கலை என எல்லாத் துறைகளிலும் விரைந்த முன்னேற்றம் காணும் இன்றைய சூழலில் அவற்றை உடனுக்குடன் தொடர்புடையோருக்கு அறிவிக்க, உணர்த்த சொற்கள் தேவைப்படுகின்றன. இத்தேவையை நிறைவு செய்தல் முதன்மை நோக்கமாகிறது எனலாம். "இன்றைய நவீன அறிவு யுகத்தில் கண்டுபிடிப்புகள் நாளுக்கு நாள் முற்றிலும் புதியதான விளக்கங்களை, இயந்திரங்களை, பயன்களை, பொருள்களை முன்வைத்துக் கொண்டிருக்கின்றன. இப்புயல் வேக முன்னேற்றத்தை மக்களின் அறிவுத்திறத்திற்குக் கொண்டுவர வழக்கிலுள்ள சொற்களால் முடிவதில்லை. இந்தக் கடினமான பிரச்சினையைக் கலைச்சொற்களே தீர்த்து வைக்கின்றன" எனும் கருத்தும் இணைந்து நோக்கத்தக்கது (சி. செல்வகுமார், முன்சுட்டியது, ப. 553).

ஒரு துறையின் ஆய்வு முடிவுகளையும், கண்டுபிடிப்பு களையும், வளர்ச்சியையும் உடனுக்குடன் எல்லா மொழியினரும் தடங்கலின்றிப் பெறுதற்கும், ஒருமைப்பாட்டைப் பேணுதற்கும் இவை, குறிப்பாகத் துறைச்சொற்கள் இன்றியமையாதன வாகின்றன.

"கலைச்சொல் என்ற கருவியை உருவாக்குவதன் மூலமாக மட்டுமே அறிவியல் - தொழிலியல் செய்தித் தொடர்புகளை மேம்படுத்த முடியும்" எனும் யூஜின் ஊஸ்டர் கருத்தும் (இராதா செல்லப்பன், முன்சுட்டியது, ப. 1) இவற்றின் தேவையை, பயனை வலியுறுத்தக் காணலாம்.

சொல்லாக்கத் தேர்ச்சி, பொது அறிவினையும், துறைச் சொல்லாக்க அறிவு, அத்துறையின் அறிவு வளர்ச்சியையும் சிறப்பிக்கின்றன. இத்தகு புதிய சொல்லாக்கங்கள் மொழியின் வளர்ச்சியிலும் பேரிடம் கொள்கின்றன. குறிப்பாகப் பிறமொழிச் சொற்களின் ஆட்சியை, உட்புகுதலை எதிர்க்கின்றன. ஒரு துறையின் வளர்ச்சியை அதில் தோன்றும் துறைச்சொற்களின் பெருக்கமும் அறிவுறுத்துகின்றன. இச்சொல்லாக்கங்களின் நோக்கமும் பயனும் வேறுபடினும், விரிவுபடினும் இவற்றின் தோற்றம் இயல்பானது, தவிர்க்க இயலாதது என்பன சுட்டத்தக்கன.

"அறிவியல், தொழில் நுட்ப, சட்டமொழிபெயர்ப்புகளில் ஒரு சொல் இலக்கண அமைப்பில் பொருத்தமாகவும் பொருளியலில் துல்லியமாகவும் இருந்தாலும் அது மக்களிடையே பழக்கத்திற்குக் கொண்டு வந்து அறிமுகம் செய்யப்படாவிட்டால், அதன் பயன்பாடு பலனற்று விடுகிறது. இந்தியாவைப் போன்று வளரும் நாடுகளில் உரிய வழிமுறைகளில் இத்தகைய அரிய சொற்களஞ்சியங்களை வளர்க்கப் போதிய காரணங்கள் உள்ளன. அதே நேரத்தில் இயற்கையிலேயே அவற்றை வளர அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தவும் போதிய காரணங்கள் உள்ளன" என்ற கருத்தும் இவண் உணர்த்தத்தக்கது. (வீ.சந்திரன், மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும், ப. 110).

**தமிழில் சொல்லாக்கப்பணி**

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே

பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லினாகும் என்மனார் புலவர்

தெரிபுவேறு நிலையலுங் குறிப்பில் தோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே (தொல். 640-642)

எனும் தொல்காப்பியர் கூற்று இன்றைய சொல்லாக்கங்களுக்கும் பொருந்தும்.

தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டதன் பயனாகச் சொல்லாக்கங்கள் விரைவுபடுத்தப்பட்டு பல்கிப் பெருகியுள்ளன.

அரசு, இதழ்கள், தனியார் விருப்பம் இவற்றின் காரணமாக நல்ல வளர்ச்சியைக் காணமுடிகிறது. "1971இல் வெளியான தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் கலைச் சொல்லகராதி, மணவை முஸ்தபா தொகுத்த அறிவியல் தமிழ்க் கலைச்சொல் களஞ்சியம், 30 ஆண்டுகளுக்கு மேலாகக் கலைக்கதிர் இதழில் பல்வேறு துறை வல்லுநரால் பயன்படுத்தப்பட்ட 45 ஆயிரம் கலைச் சொற்களைத் தொகுத்து வெளியிடப்பட்ட கலைச் சொல்லகராதிகள்..." என்பது (கலவை மு. முபாரக் அலி, மருத்துவத்தமிழ் - தமிழில் அறிவியல், ப. 565) இவ்வுண்மையை உணர்த்தும். இதில் மொழிபெயர்ப்பாளரின் பங்கும் குறிப்பிடத்தக்க அளவு சிறப்பாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள, பல்துறை சார்ந்த பாடநூல்களில் இவற்றின் தொகுப்பு தமிழ் - ஆங்கிலம் என இருமொழிகளிலும் பின்னிணைப்பாக அமைந்துள்ளது போற்றத்தக்கது.

சொல்லாக்க முயற்சியில் தனித்தமிழைப் பின்பற்ற வேண்டும் எனும் கொள்கை தற்பொழுது வேண்டப்படுகிறது. இதனை, "வரலாற்று அடிப்படையில் புதுச்சொல் படைப்பைப் பார்க்கும்போது ஒருவகையில் சீரான தமிழாக்கம் காணப்படுகிறது என்றே சொல்ல முடியும். எடுத்துக்காட்டாக, தொடக்கத்தில் ஆங்கிலச் சொல்லான 'Oxygen' என்பது ஒலிபெயர்ப்பு முறையில் தமிழில் ஆக்ஸிஜன் என்றே எழுதப்படலாயிற்று. இம்முறையில் எழுதப்படுவதை மாற்ற எண்ணிய நிலையில், ஒரு காலக்கட்டத்தில் இதற்குப் பதிலாகப் பிராண, வாயு என இரண்டு வடமொழிச் சொற்களை இணைத்துப் பிராணவாயு என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இரண்டும் வடமொழிச் சொற்களாக அமைந்துவிட்டதைக் கண்ட நிலையில் மேலும் தமிழாக்கம் செய்யப்பட வேண்டும் என்ற உணர்வில் உயிர் வாயு என்ற சொல்லமைப்பு உருவானது. இதிலும் ஒன்று வடசொல் என்பதால் மேலும் முழுமையான தமிழாக்கம் வேண்டியதாயிற்று. இம்முறையில் பழைய தமிழ் இலக்கிய இலக்கணங்களின் பயன்பாட்டில் காணப்பட்ட வளி என்ற சொல் எடுத்தாளப்பட, நமக்கு உயிர்வளி என்ற முழுமையான தமிழ் அமைப்புக் கிடைத்தது.

சொல்: Oxygen

ஆக்ஸிஜன் (ஒலிபெயர்ப்புமுறை - Transliteration)
பிராணவாயு (மேல்நிலையாக்கம் - Sanskritisation)
உயிர்வாயு (ஓரளவு தமிழாக்கம் - Partial Tamilisation)

உயிர்வளி (முழுமையான தமிழாக்கம் - Complete Tamilisation)"

என எடுத்துக்காட்டுவர் (கி. கருணாகரன் & வ. ஜெயா, தமிழில் புதுச் சொல்லாக்கம், மொழியியல் - தொகுதி 9, ப. 102). இதனின்றும் சொற்கள் செம்மைப் படுத்தும் நிலையில் மொழிபெயர்ப்பில் அவ்வப்போது மாற்றம் நிகழ்வதை அறியமுடிகிறது.

இத்துறை தமிழில் வளர்ந்துகொண்டிருக்கும் வேளையில், தவிர்க்க வேண்டிய குறைபாடொன்றும் இடம்பெற்றிருத்தல் சுட்ட வேண்டியதாகும். ஒரே சொல்லுக்குப் பல மொழி பெயர்ப்புகளை வழங்குதலே அது; ஒலிபெயர்ப்பிலும்கூட இக் குறைபாடு அமைந்துள்ளது. இதனைத் துறைச் சொல்லாக்கத்தில் நிகழும் சிக்கலாகச் சுட்டுவர் (மேற்படி). எங்ஙனம் ஐயம் திரிபற குறிப்பிட்ட சொல் குறிப்பிட்ட பொருளை உணர்த்த வேண்டுமோ அஃதே போன்று குறிப்பிட்ட பொருளுக்குக் குறிப்பிட்ட ஒரே சொல்லை மட்டுமே கையாளுதலும் வேண்டத்தக்கது. எனவே, இக்குறைபாட்டைக் களைதல் உடனடித் தேவையாகும்.

சான்றாக ஒருவரே caste organization என்பதற்கு 'இனநிறுவனம்' என்றும், caste prejudice என்பதற்குச் 'சாதிச்சார்பெண்ணம்' என்றும் caste என்ற ஒரு சொல்லுக்கு, இனம், சாதி என்ற இருவித மொழிபெயர்ப்புகளைத் தந்திருப்பதைச் சுட்டலாம் (நா. சந்தான கிருஷ்ணன் (மொழி), சமூக உளவியலுக்கு ஓர் அறிமுகம், ப. 401). இஃதன்றி ஒரே சொல்லையே, ஒரு துறை சார்ந்தோரே ஒவ்வொருவிதமாக மொழிபெயர்த்திருத்தலும் உணர்த்தத்தக்கது. இதனுடன் இலங்கை, மலேயா, சிங்கப்பூர் என நாடுகளுக்கிடையேயும் தோன்றும் தமிழ் மொழிபெயர்ப்புகளும் இணைத்து நோக்கத்தக்கன.

காலப்போக்கில் அரசின் ஆணை மற்றும், வழங்குதல் எளிமை, தெளிவு குறித்துப் பரவலாக ஏற்றுக் கொள்ளப்படும் ஒன்று மட்டும் நிலைத்து நிற்றல் என இக்குறை களையப்படலாம் என எதிர்நோக்கலாம். மொழிபெயர்ப்புத் தேவையின்றித் தன்னிறைவு அடையுங்காலம் மறையலாம். உடனடியாக நீங்குதல் அல்லது நீக்குதல் என்பது இயலாததாகவே தோன்றுகிறது.

தமிழில் உருவாகும் புதிய சொல்லாக்கங்களும், துறைச் சொற்களும் (மொழிபெயர்ப்பு உட்பட) விளம்பரம், இதழ், பாட நூல், பிற செய்தித் தொடர்புக் கருவிகள் மூலமாகச் செம்மைப்

படல், பரவல், நிலைபெறல் ஆகியவற்றைப் பெறுகின்றன. ஓரளவு நன்கு வளர்ந்து வளம்பெற்றுள்ள இத்துறை இன்று அவற்றைச் செம்மைப்படுத்தும் நிலையிலும் சிறப்புற்றிருப்பதைக் காணலாம். சான்றாக,

முதலமைச்சர் - முதல்வர்
ஆட்சித் தலைவர் - ஆட்சியர்
அஞ்சல் நிலையம் - அஞ்சலகம்

போன்றவற்றைக் காட்டலாம்.

### நிறைவுரை

மொழி வளர்ச்சியில், மொழி ஆய்வில் இடம்பெறும் 'சொல்லாக்கக் கல்வி' மொழிபெயர்ப்புடன் நெருங்கிய தொடர்புடையதாய், மொழிபெயர்ப்பாளருக்குத் தேவையான கல்வியாகவும் அமைகின்றது. இலக்கியம் படைத்தல் போன்று சொல்லாக்கமும் சிறந்த கலையாகும். இக்கலை கைவரின் சொல்லேருழவராகப் போற்றப்படுதல் திண்ணம்.

### பின்னிணைப்பு-1

**துறைச்சொல்லாக்க முறைகள் : (இயற்பியல் துறை)**

| முறை | சான்று | ஆங்கில மூலம் |
|---|---|---|
| பண்பு | அமுத்தம் | density |
| உட்பொருள் | காந்தப்புலம் | magnetic field |
| தொழில் | ஆவியாதல் | vaporization |
| அமைப்பு | கப்பித்தொடர் | System of pulleys |
| சிறப்பு | ஒருதிசைத்தொடுமுறை | Single touch method |
| பயன் | காந்த விளைவு | magneting effect |
| குறியீடு | சார்லஸ் விதி | Charles law |
| சுருக்கம் | மின்னியக்குவிசை | cmf |
| ஒன்றிலிருந்து | மின்காந்தம் | electromagnetic |
| மற்றொன்றை | மின்சுற்று | electrical circuit |
| உருவாக்கல் | மின்திறன் | electric power |
| | மின் தூண்டல் | electric induction |

குறிப்பு : புனைபெயரிடல் சொல்லாக்கத்தில் அரிது எனத் தோன்றுகிறது. காண்க: புகுமுக பௌதிகம்; க. தங்கராசு; பாப்புலர் புக் டெப்போ; சென்னை; மு.ப. 1969.

## பின்னிணைப்பு-2

ஆங்கிலமொழியில் கலை நூல்கள் அதிகமுண்டு. அவை தமிழ் மொழியில் இடம்பெறல் வேண்டும். இவ்வேலையில் ஈடுபட்டவர்கள் அமெரிக்கா தேசத்திலிருந்து வந்த சமயப் போதகர்களே. ஒவ்வொரு புத்தகத்திலும் சொற்களைத் தயாரித்த முறை கூறப்பெற்றதுண்டு. அவர்கள் பின்பற்றிய முறைகளாவன.

1. ஏற்ற தமிழ்ப்பதங்களைக் கண்டுபிடிப்பதில் மிகுந்த ஆராய்ச்சி செய்தல் வேண்டும். இப்பதங்கள் தனிமொழிகளாகவோ தொடர் மொழிகளாகவோ அன்றேல் சாதாரணச் சொற்களாகவோ, அசாதாரண சொற்களாகவோ இருக்கலாம். ஒரு பழஞ்சொல் அல்லது உலகோரால் அறியப்படாது இலைமறைகாய் போலிருக்கும் சொல், ஏற்றதாயின் அதனை எடுத்துக்காட்டி வெளிப்படுத்தித் தாய்மொழியை வளமுறச் செய்தல் அந்நியமொழியினின்றும் அப்படியே எடுத்துத் தமிழ் மயமாக்குவதிலும் சிறந்த தொண்டாகும்.

2. சொற்கள் மிகவும் சுருக்கமாக விருத்தல் வேண்டும். ஆனால் அவற்றின் அமைப்பும் பிறப்பும் சந்த இன்னிசைக்கும் ஏற்புடைத் தன்மைக்கும் முரணுடையதாயிருத்தலாகா.

3. சொல் கிடைக்காத பட்சத்தில் வினையடிகளுடன் இடைச்சொற்களைச் சேர்த்து இடையூறுகளை நீக்குக.

4. ஏதாவதொரு சொல்லுக்குப் பல சொற்கள் பொருத்தமானவை போல் தோன்றில் மிகவும் சிறந்த சொல்லைத் தெரிந்தெடுக்கவும். அதனையே எப்பொழுதும் உபயோகிக்க.

5. ஆங்கிலத்தில் உள்ள சொல்லையோ, மரபுத் தொடரையோ சொற்றொடரையோ நன்கு விளக்குதல் முதற்கடமையாகும். பின் ஒவ்வோர் சொல்லையும் மொழிபெயர்க்க. பின் எல்லாவற்றையும் ஒன்று கூட்டிக் கருத்தை வெளிப்படுத்துக. ஆனால் எடுத்தாண்ட சொற்கள், இலக்கண அமைதிகளின் படி வேறு பொருள் தராமல் அமைந்திருக்கின்றனவோ என்று பார்த்தல் அத்தியாவசியம்.

6. மேற்சொன்ன முறைகளின் படி ஏற்ற தமிழ்ப் பதத்தைக் கண்டு கொள்ள முடியாத பட்சத்தில் ஆங்கிலப் பதத்தையே தமிழ் வடிவமாக்கி உபயோகிக்க. தமிழின் சாயலில் வேற்றுமொழியைக் கொண்டு வருவதற்கு முன் அதனைப் பெயர்ச்சொல்லாக மாற்றவும். சொல்லின் சத்த வித்தியாசங்களையுணர்ந்து தக்க மாதிரி தமிழ் விகுதிகள் கொடுக்கவும்.

7. மேலே சொல்லிய முறைப்படி வந்த சொல்லை இடைச்சொல் கொடுத்தும் சீர்ப்படுத்துக.

8. ஏதாவது ஒரு சொல்லை முறைப்படி தமிழ் மயமாக்குவதில் தொல்லையிருந்தால் சொல்லாக்கம் செய்யலாம். அன்றேல் சங்கத மொழியில் (வடமொழி) சொல் தேடவும்.

9. சங்கத மொழியில் அகராதிகளால் அங்கீகரிக்கப் பட்டதாயிருத்தல் வேண்டும்.

-எப்.எக்ஸ்.சி. நடராசா, மொழிபெயர்த்தல் - மொழிபெயர்ப்பு பண்பும் பயனும், பக். 22-23.

# உரைநடையிலக்கிய மொழிபெயர்ப்புக் கோட்பாடுகள்

கவிதை நடையினின்றும் மாறுபட்டுப் பேச்சுநடை அமைப்பில் உருவாவன பொதுநிலையில் உரைநடை இலக்கியமாகக் கருதப்படுகின்றன. இவை புனைவிலக்கியம் (Fiction), புனைவிலியிலக்கியம் (Non-fiction) என இருவகைப்படுகின்றன. புதினம், சிறுகதை, நாடகம், சிறுவர் இலக்கியம் போன்று கற்பனைக்கு முதலிடம் தருவன புனைவிலக்கியமாகும். வாழ்க்கை வரலாற்றிலக்கியம், பயணவிலக்கியம் போல்வன கற்பனைக்கு இடந்தராது புனைவிலியிலக்கியமாகின்றன. கட்டுரை, மடல், சொற்பொழிவு என்பன இரண்டிலும் இடம் பெறுவதுண்டு.

ஒரு மொழியில் இடம்பெற்றுள்ள செய்தியைப் பிறிதொரு மொழிக்கு மாற்றித் தருதல் மொழிபெயர்ப்பு என்பது பொதுநிலை. இப்பொதுமை மொழிபெயர்க்கப்படும் நூல்களின் வகைமைக்கேற்ப சில மாற்றங்களுக்கும் உட்படுகின்றது. மொழிபெயர்ப்பிற்குரிய பொதுநெறி முறையினின்றும் மாறுபட்டு உரைநடை மொழிபெயர்ப்பில் அமையும் கூறுகள், அதன் தனித்த உத்திகளாகின்றன. அவற்றுள் சிறப்பெனப் போற்றப்படும் உத்திகளையும், இப்படியிருப்பின் முழு வெற்றி பெறக்கூடும் எனக் கருதும் கூறுகளையும் கோட்பாடுகளாகக் குறிக்கலாம். உரைநடையிலக்கிய மொழிபெயர்ப்பில் காணும் நெகிழ்வுத் தன்மை அதன் சிறப்பியல்பாகும். எனவே இது, இதழ்கள், விளம்பரங்கள், பாடநூல்கள், பிறகலை - அறிவியல் நூல்கள் இவற்றின் மொழிபெயர்ப்பினின்றும் பெருமளவு வேறுபடுகிறது. நூலின் புறத்தே சிந்திக்க வேண்டிய மொழிபெயர்ப்புச் சிந்தனைகளை முதலில் காணலாம்.

**மொழிபெயர்ப்பாளர்:** 1. மூலமொழி, இலக்குமொழி என்ற இருமொழிகளிலும் மக்களிடையே வழங்கும் வழக்கு மொழியிலும் தேர்ச்சி பெற்றிருத்தல் உரைநடையிலக்கிய மொழி பெயர்ப்பாளருக்கு இன்றியமையாதது. மொழிபெயர்ப்பின் எளிய

இயல்பான மொழி நடைக்கும், புதிய சொல்லாக்கத்திற்கும் இது துணை நிற்கும். "மொழிபெயர்ப்பின் நடை, அது ஏற்படுத்தும் உணர்வு முதலியன மொழிபெயர்ப்பாளரின் திறனோடு தொடர்புடையன. மொழிபெயர்ப்பாளரின் திறனே மொழிபெயர்ப்பின் தன்மையை இயல்பை விளக்க வல்லது" எனும் வீ. சந்திரன் (மொழிபெயர்ப்பு மரபுகள், ப. 38) கருத்தும் இங்கு இணைத்து நோக்கத்தக்கது.

2. மொழிபெயர்ப்பாளர் படைப்புத் திறனும் கொண்டிருப்பின் மொழிபெயர்ப்பு மேலும் மெருகேறும்.

3. மொழிபெயர்ப்புகள், தம்மொழிபெயர்ப்பிற்கு முன்னுரை தருதல் வேண்டத்தக்கது. அதில் மூலமொழி, முதனூலாசிரியர், தாம் செய்துள்ள மாற்றங்கள் ஆகியவற்றைக் குறித்தல் இன்றியமையாதது. நேரடி மொழிபெயர்ப்பின்றிப் பிறிதொரு (ஊடுமொழி) மொழிபெயர்ப்பின்வழி மொழிபெயர்த்திருப்பின் அதனையும் குறித்தல் தேவை. மற்றும் மூலநூலில் அமைந்திருக்கும் முன்னுரை, அணிந்துரை, மதிப்புரை போன்றவற்றையும் மொழிபெயர்த்துத்தரல் ஏற்புடைத்து. இவற்றால் மூலநூலைச் சிறப்பாகப் புரிந்து கொள்ளவியலும்.

4. உரைநடையிலக்கிய மொழிபெயர்ப்பாளருக்குப் பிறரைவிடக் கட்டுப்பாடுகள் குறைவாகும். அவர்தம் விருப்பிற் கேற்ப மூலநூலின் சுருங்கிய, அரிதாக விரிந்த மொழி பெயர்ப்பினை அளிக்க வியலும்.

**அவை:** ஏனைய மொழிபெயர்ப்புகளைவிட உரைநடையிலக்கிய மொழிபெயர்ப்பின் களம் பரந்து விரிந்தது. சிறுவர், மாணாக்கர், சுவைஞர் எனப் பலவகையினருக்கும் ஒரே மொழிபெயர்ப்பைத் தரல் பொருந்தாது. **சிறுவர்க்காயின்** மிகச் சிறிய தொடர்களில் அவர்களறிந்த சொற்களைக் கொண்டு பொருள் மயக்கற எளிய நடையில் மொழிபெயர்க்க வேண்டும். சொற்சுவை, பொருட் சுவை யறிந்து இன்புறத்தக்க அளவில் சொற்தேர்ச்சியுடன் தெளிந்த செம்மையான நடை **மாணாக்கருக்கு** ஏற்புடையதாகும். வழக்குச் சொற்களும், மரபுத் தொடர்களும் கலந்த இனிய நடை **சுவைஞரை** எளிதில் கவரும் தன்மையது.

5. இன்னார்க்கு இன்ன நூல் தேவையானது என்பதனை நன்கறிந்து, தேர்ந்து அதனை அவரவர்க்கேற்ற முறையில்

மொழிபெயர்க்கும் திறன் மொழிபெயர்ப்பாளருக்கு அடிப்படைத் தேவையாகும்.

6. நாடகம் புதினமாகவோ, புதினம் நாடகமாகவோ, கவிதை உரைநடையாகவோ அல்லது இவைபோன்று பிற நிலைகளிலோ வகைமை மாற்றம் செய்து மொழிபெயர்த்தலும் ஏற்புடையதே. மொழிபெயர்ப்பாளர் தம் விருப்பிற்கேற்ற வகைமையில் தரும் உரிமையை இலக்கிய மொழிபெயர்ப்பில் பெறுகிறார்.

**இனி, நூலின் அகத்தே கருதப்பட வேண்டிய மொழிபெயர்ப்புக் கோட்பாடுகளை நோக்கலாம்.**

1. இலக்கிய இன்பம் நல்குவதுடன் இலக்கிய நய மிகுதிப்பாட்டிற்கும் அடிப்படையாய் இருக்கும் உவமை, உருவகம், குறிப்பு, குறியீடு போல்வன மொழிபெயர்ப்பிற்கு இடையூறாய் அமையினும் தவிர்க்க இயலாதன. எவ்வகை யிலேனும் இலக்கு மொழியில் தருதல் தேவை. மூலமொழியில் உள்ளனவற்றிற்கு முழுநிலையில் ஒத்த மொழிபெயர்ப்பைத் தர இயலாவிடினும், இலக்குமொழியின் வழக்கில் உள்ளனவற்றுள் இயன்றளவு பொருந்திவரக் கூடியனவற்றைத் தேர்ந்தளித்தல் சிறப்பாகும். "மூலத்தின் உள்ளுணர்ச்சியைக் காட்டவல்ல, ஆனால் தமிழகத்தில் வழக்கில் உள்ள ஒரு பொருளைப் (flakes - பிச்சிப்பூ) பதில் உவமையாக சொல்லலாம். இந்தப் பிரச்சினையை இதைக் காட்டிலும் சிறந்த முறையில் சமாளிக்க முடியும் என்று தோன்றவில்லை" எனும் கருத்து (எஸ். மகாராஜன், Studies in Arts and Sciences - A felicitation, ப. 99) இதனை வலியுறுத்தும்.

2. இரட்டுற மொழிதல், அடுக்குத் தொடர், ஒலிக்குறிப்பு போன்றவற்றை மொழிபெயர்த்தல் மிகமிகக் கடினம். இத்தகையனவற்றை இயன்றால் இலக்கு மொழியில் வருவித்தல் அல்லது நீக்கிவிட்டு மேற்செல்லுதல் என்பது தவிர்க்க இயலாததாகிறது. "இதுவும் இங்கு வருகின்ற மற்ற சிலேடைகளும் முதல் நூலில் சிலேடையாக வந்துள்ள சொற்களின் நேர்மொழிபெயர்ப்புகள் அல்ல. அது இயலாதாகையால் ஒரு சிறிது அக்கருத்து அமையும்படி வேறுசில தமிழில் வருவித்துக் கொள்ளப்பட்டன." எனும் டி.என். சேஷாசலம் கூற்று (ஜூலியஸ் ஸீஸர், ப. 6) ஏற்றுக் கொள்ளத்தக்கது. "மூலத்திலுள்ள சொல்லும் எழுத்தும் மொழிபெயர்ப்பாளருடைய சுதந்திரத்தைப் பாதிக்கும் விலங்காக அமைந்துவிடக்கூடாது. சில சமயங்களில், மூலத்திலுள்ள

சில சொற்களை மொழிபெயர்க்காமல் விட்டு விட்டால் அதனால் ஒன்றும் கெட்டுப்போய்விடாது. உண்மையில் மூலத்தின் பொதுபாவத்தைச் செம்மையாக மொழி பெயர்ப்பதற்காகவே சில சொற்களைத் தமிழாக்கம் செய்யாமல் தவிர்க்க வேண்டியிருக்கும்" என்ற மொழிபெயர்ப்பறிஞர் கருத்து (எஸ். மகாராஜன், மேற்படி, ப. 95-96) பட்டறிவின் வெளிப்பாடாதலின் பின்பற்றத் தக்கதாம்.

3. பழமொழி, மரபுத்தொடர், உவமைத்தொடர் போல்வன உலகில் எல்லா மொழியினராலும் வழங்கப்படுகின்றன. சொல்லும் மொழியில், வெளிப்பாட்டில் வேறுபாடுண்டே தவிர வழங்கும் சூழல், கருத்து என்பன ஒன்றுபடுகின்றன. எனவே இவற்றை மொழிபெயர்த்தல் எளிது. மூலமொழியின் கருத்தை முற்றிலுமாக இலக்குமொழியில் மாற்றித் தருதல் என்பதே மொழிபெயர்ப்பின் நோக்கமாதலின், மேற்கண்டனவற்றிற்கு இணையாக இலக்கு மொழியில் வழங்குவனவற்றையே தருதல் வேண்டப்படுகிறது. இங்குச் சொற்கள் பற்றிக் கவலையில்லை. அவைதரும் பொருளே முதன்மையானது. ஞானமும் கல்வியும் நாழி அரிசியிலே - The belly teaches all arts (பழமொழி); Dip into a book - நுனிப்புல் மேய்தல் (மரபுத்தொடர்); நகமும் சதையும் போல - Hand in glove (உவமைத்தொடர்) என இவற்றிற்குச் சான்று காட்டலாம்.

4. குறிப்பிட்ட இனத்தவரின் பழக்கவழக்கம், சடங்கு, சிறப்பிடம் போன்றவற்றை உணர்த்தும் சிறப்புச் சொற்களை, இலக்கு மொழியின் ஒலிப்பிற்கேற்ப ஒலிபெயர்த்தால் (Transliteration) மட்டும் போதாது; அவை பற்றிய விளக்கத்தினைத் தனித்துத் தரலும் இன்றியமையாதது. இது மொழிபெயர்ப்புடன் முழுமையாக ஒன்றுதற்கும், மூலமொழியினரைத் தெரிந்து கொள்வதற்கும் பெரிதும் பயன்படும். சான்றாக, Ku̱ravai: a particular kind of dance in a circle, performed by women in ancient times, and associated with hillside and woodland regions (Lakshmi Holmstrom, Silappadikaram, Manimekalai, glossary). தம்பிட்டு உருண்டை = அரிசிமாவினால் செய்யப்பட்டு நைவேத்தியத்துக்கு வைக்கும் பொருள் (சேஷநாராயண, தாண்டு, ப. 499) என்பனவற்றைக் காட்டலாம். ஒவ்வொரு மொழியினருக்குமெனத் தனித்த சிறப்புகளும் பண்பாட்டுக் கூறுகளும் உண்டு. அவற்றை இத்தகு விளக்கங்கள் புலப்படுத்தும்.

5. உவகை, அச்சம், வெகுளி போன்ற எண் வகை மெய்ப்பாடுகளை வெளிக்கொணர்தல் மொழிபெயர்ப்பாளரின்

வெளியீட்டுத் திறத்தைப் பொறுத்தமைகிறது. இதனைச் சிறப்புற சுவைஞர் உணரும் வகையில் உணர்த்தல் இன்றியமையாதது. மொழிபெயர்ப்பாளர் படைப்புத் திறனுடையவராயின் இதனை அவரால் மிக எளிதாக மாற்ற வியலும்.

6. புனைவிலக்கியங்கள் மொழிபெயர்ப்பாளரின் விருப்பிற்கேற்ப பெயர்மாற்றம் கொள்வதும் உண்டு. மூலமொழியில் உள்ளதைவிடப் பொருத்தமாக அது அமையுங்கால் ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. சார்லஸ் டிக்கன்ஸின் 'ஆலிவர் டுவிஸ்ட்', அனாதைச் சிறுவன் (பூவை. அமுதன்) என்றும் தி. ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' The Sins of Appu's mother' என்றும் மாற்றம் பெற்றுள்ளமை சான்றாம்.

"மொழிபெயர்ப்பிற்குத் தலைப்பிடுதல் மொழிபெயர்ப்பாளரின் தலையாய பிரச்சினையாகிறது. . . . மொழிபெயர்ப்பாளர் கதையின் தலைப்பு அக்கதையின் மையக் கருத்தினுக்கு ஏற்ப அமைய வேண்டுமென்பதோடு அது தம்முடைய மொழியின் மரபிலிருந்து வழுவாமல் இருத்தல் வேண்டும் என்பதையும் தலைப்பு சிறிதும் செயற்கைத்தன்மை இல்லாமல் அமைந்திருத்தல் வேண்டும் என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டியவராகிறார். . . . த.நா. குமாரஸ்வாமி நௌகாடுபி - படகுமுழுக்கு என்பது இயற்கையான தலைப்பாக அமையவில்லை என்பதோடு மொழிபெயர்ப்பாளர் மூலத்தலைப்பை விடப் பொருத்தமான தலைப்பைச் சுட்ட வேண்டுமென்ற எண்ணத்தினால் தலைப்பை (புயல்) மாற்றியுள்ளார்" எனும் பெ. பானுமதியின் கூற்று இக்கருத்திற்கு அரணாகும்.

சேக்ஸ்பியரின் Winters taleஐ மொழிபெயர்த்த நடேச ஐயர், "வின்டர்ஸ் டேல் எனும் பதங்களின் அர்த்தம் மாரிக்காலத்திற்குரிய கதை என்பதாகும். இங்கிலாந்தில் மழை பெய்யும் பொழுது பொது ஜனங்கள் அதிகமாய் வெளியே நின்று வேலை செய்யக் கூடாதாகையால் அப்பொழுது அவரவர்கள் தங்கள் கணப்பைச் சுற்றி உட்கார்ந்து குளிர் காய்ந்து கதை சொல்லிக் கொண்டு பொழுது போக்குவது வழக்கம். அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் சொல்லத்தகுந்த கதை என்பது வின்டர்ஸ், டேல் என்னும் பதங்களின் அர்த்தம். இந்தப் பெயரை நாம் தமிழில் எடுத்துக்காட்டுவது வருத்தம். அதன் நிமித்தம் இதனைப் பெர்டிடா சரித்திரம் என்று தமிழில் குறிப்பது நலம்" என நவின்றிருப்பதும் (பழனி. அரங்கசாமி, தமிழுக்கு வந்த ஷேக்ஸ்பியர், ப. 46) அறியத்தக்கது.

சில நேரங்களில் இத்தகு மாற்றங்கள் தேவையாகவும், சில இடங்களில் தேவையற்றதாகவும் அமைகின்றன. இது மொழிபெயர்ப்பாளரின் கண்ணோட்டத்தினைப் பொறுத்ததாகிறது.

ஆசிரியரின் உட்கருத்துகள் அத்தலைப்பில் பொதிந்திருப்பின், அதனை மாற்றாது அப்படியே தரலே ஏற்புடைத்து; தேவையானால் அதற்குரிய விளக்கத்தையும் கொடுக்கலாம்.

7. கதை மாந்தர், கதை நிகழிடம் முதலியவற்றை இலக்குமொழிக் கேற்ப மாற்றிக் கொள்ளுதலும் புனைவிலக்கிய மொழிபெயர்ப்பில் ஏற்கத்தக்கதே. கதையின் அந்நியத்தன்மையை முற்றிலுமாக அகற்றி, மூலநூல் என்ற உணர்வுடன் சுவைஞரை ஒன்றச் செய்வதற்கு இவ்வுத்தி பயன்படுகிறது. தொடக்ககால மொழிபெயர்ப்புகளில் பெரிதும் பின்பற்றப்பட்ட இந்நிலை (பம்மல் சம்பந்த முதலியார் வாணீபுர வணிகன், மெர்ச்சன்ட் ஆப் வெனிஸ்) இன்று அருகியுள்ளது வரவேற்கத்தக்கது. மொழிபெயர்ப்புகளின் தேவை உணரப்பட்டுப் பெருகிக் கொண்டிருக்கும் சூழலில் இப்பெயர்கள் மாற்றம் பெறாது ஒலிபெயர்ப்பாகத் தருதலே சிறப்பு.

8. வாழ்க்கை வரலாறு, பயணம் போன்ற புனைவிலி யிலக்கியங்களில் இவை அவ்வவ் இயல்பிலேயே மாற்றம் பெறாது தருதல் கட்டாயமாகிறது.

9. ஒலிபெயர்ப்பில் இயன்றவரை ஒருமையைக் கடைப்பிடித்தல் மொழிவளர்ச்சி நோக்கில் வேண்டப்படுகிறது. சேக்ஸ்பியர், ஷேக்ஸ்பியர், செகப்பிரியர் எனப் பலவித ஒலிபெயர்ப்புகளைத் தருதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

10. கட்டுரைகள் சொற்பொழிவுகள் போன்றவற்றை மொழிபெயர்க்கும் பொழுது பாடநூல்களை மொழிபெயர்த்தல் போன்று மிக்க கவனத்துடன் பொருட்சிதைவோ, மாற்றமோ நிகழாவண்ணம் பெயர்த்தல் வேண்டும். இவற்றில் மூலநூலாரின் சிந்தனையில் கருத்தோட்டத்தில் மொழிபெயர்ப்பாளர் இடைபுகுதல் சற்றும் பொருந்தாது.

11. சிறுவர் இலக்கியத்தை மொழிபெயர்க்கும்பொழுது அவரது மன, அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற, அவர்களறிந்த சொற்களால் மொழிபெயர்த்தல் அடிப்படைத் தேவை. அவர்கள் புரிந்து கொள்வதற்கு இடர்ப்படும் உருவகம், குறியீடு போன்றவற்றை முற்றிலுமாக ஒதுக்க வேண்டும். இணைப்பின் அவர் படிக்கும் ஆவல் தடைபடும்.

மேற்கண்ட சிந்தனைகளைக் கருத்துட்கொண்டு உரைநடையிலக்கியங்கள் மொழிபெயர்க்கப்படின் அவை வெற்றி பெறும். இன்று இத்தகு முயற்சி வரவேற்கப்படுவதை, பொழுதுபோக்கை மட்டுமே இலக்காகக் கொண்ட இதழ்களில் கூட இம்மொழிபெயர்ப்புகள் இடம்பெறுவது கொண்டு அறியலாம்.

# மொழிபெயர்ப்புச் சிந்தனைகள்

தமிழறிஞரின் மொழிபெயர்ப்பு பற்றிய கருத்துகளும் அவர்தம் மொழிபெயர்ப்பு அனுபவங்களில் சிலவும் இங்கே வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

**மொழிபெயர்ப்பு** என்பது என்ன என்பதை அனைவரும் அறிவர். ஆயினும் அதன் அடிப்படைத் தத்துவங்களை நினைவூட்டுவது நன்று. முதலாவதாக, நாம் பேசும் ஒவ்வொரு சொல்லும் அடிப்படையில் ஒரு மொழிபெயர்ப்பு. ஒரு பொருளையோ, ஒரு கருத்தையோ, ஒருவன் தன் மனத்தில் எண்ணுகிறான். அந்தப் பொருளுக்கு அடிப்படையில் மொழி வடிவம் கிடையாது. ஒவ்வொருவனும் தன்னுடைய மொழியில் அந்த எண்ணத்தை, நினைப்பை வெளியிடுகிறான். இது ஒரு மொழிபெயர்ப்புத்தான் அல்லவா! அதாவது மனத்தில் தோன்றிய எண்ணத்துக்கு மொழி வடிவங்களைக் கொடுப்பது. இந்த அடிப்படையில் பார்த்தால், எதை வேண்டுமானாலும் மொழிபெயர்க்க முடியும் என்பது விளங்கும்.

மொழிபெயர்ப்பு என்னும் துறையில் பல உறுப்புக்கள் உள்ளன. அவற்றை பார்ப்போம்.

1. சொல்லுபவன் அல்லது எழுதுபவன்
2. கேட்பவன் அல்லது படிப்பவன்
3. சொல்லப்படும் பொருள், நிகழ்ச்சி, செயல், விளைவு ஆகியவை.
4. அவற்றுக்குத் தேவையான சொற்களும் சொல் தொகுதிகளும்
5. சொற்கள் வெளியிடும் ஒலிகளும்
6. அவற்றின் வடிவடிவங்களாகிய எழுத்துக்களும்

இந்த ஆறு உறுப்புக்களும் திருத்தமாக இருக்குமானால் மொழிபெயர்ப்பு என்னும் துறை வளரும்; வளர்ந்து செயல்படும்; நாடு முன்னேறி மகிழும். முதல் இரண்டு உறுப்புக்களும் ஒன்றை

ஒன்று சார்ந்தவை. அவற்றுள் ஒன்று இல்லாவிடில் மற்றொன்று தனியாக நிற்காது.

- **பெ.நா. அப்புசுவாமி,** அறிவியல் தமிழ் அறிஞர் பெ.நா. அப்புசுவாமி, ப. 45.

**மூலநூலின்** கருத்துகள் கசங்காமல் மொழிபெயர்ப்பில் உருப்பெற வேண்டும் என்பதே என் கருத்து. படிப்பதற்கு எளிதாகவும் மூலக் கருத்தோடு மாறுபடாமலும் மொழிபெயர்ப்பு இயற்றப்பட வேண்டும். மூலநூலின் நடைக்கு ஏற்ப மொழிபெயர்ப்பு போற்றப்படும் வகையில் அமைதல் வேண்டும். குயில்பாட்டை நான் எப்படி மொழிபெயர்த்தேன் என்பது பற்றி நான் இப்போது கூறுகிறேன். பாரதியார் மேனாட்டுப் புலவர்களைப் பயின்றிருக்கிறார். ஷெல்லி, கீட்ஸ், பைரன் ஆகியோர் நூல்களை விரும்பிப் பயின்றிருக்கிறார். ஸ்ரீ அரவிந்தர், வ.வே.சு. ஐயர் அவருடைய நெருங்கிய நண்பர்கள். இவ்விருவருமே சிறந்த மொழிபெயர்ப்பாளர்கள். குயில்பாட்டின் மொழி பெயர்ப்பைத் தொடங்குவதற்குப் பலமாதங்களுக்கு முன்பே நான் மேற்கூறிய புலவர்களின் நூல்களைத் திரும்பத் திரும்பப் படித்து வந்தேன். ஷேக்ஸ்பியர், மில்டன் போன்றோர் படைப்புகளையும் ஊன்றிப் படித்தேன். இதனால் விரைவாகவும், எளிமையாகவும் சிறப்பாகவும் நான் மொழிபெயர்க்க முடிந்தது. சிறு பிராயத்தி லிருந்தே நான் தமிழ், ஆங்கில அகராதிகளைப் படிக்கின்ற பழக்கத்தை மேற்கொண்டிருந்தேன். ஆகவே தடை ஏதுமின்றி என்னுடைய மொழிபெயர்ப்புப் பணி நடந்தேறியது. எதிரும் முட்டுப்பாடுகளைச் சமாளிக்க முடிந்தது.

எடுத்துக்காட்டாக ஒரு செய்தி மட்டும் கூறுகிறேன். குயில் பாட்டில் ஏற்ற நீர்ப்பாட்டு என்று ஒரு தொடர் வருகிறது. ஏற்றம் என்பதைத் தெளிவுபடுத்த கற்றறிந்த மொழிபெயர்ப்பாளர்களில் சிலர் தங்கள் விளக்கத்தைச் சுற்றி வளைத்துக் கூறி இருக்கிறார்கள். ஏற்றம் என்பதற்கான சரியான ஆங்கிலச் சொல் Shadoof என்பதாகும். படங்களுடன் வெளிவந்த அகராதி ஒன்றை நான் பயின்றதால் இச்சொல்லை நான் முன்பே கண்டறிந்து வைத்திருந்தேன். ஆரஞ்சுச்சுளை, பலாச்சுளை ஆகியவற்றிற்கான சரியான ஆங்கிலச் சொற்களை நான் அறிவேன். இவையெல்லாம் அகராதிப் பயிற்சியால் யான் பெற்ற பலன்கள். மொழிபெயர்க்கும் போது அகராதியைத் தேடிப்போகாமல் அதற்கு முன்பே

அகராதியைப் பயின்று வைத்திருத்தல் அவசியம் என்பது என் கருத்து.

படிப்போரின் தரம் குறைந்திருக்க நேர்ந்தாலும் அக்குறைவை இட்டு நிறைக்கும் பணியை மொழிபெயர்ப்பாளர் ஏற்க வேண்டும். இதற்காக மிகவும் அத்தியாவசியமான தகவல் களையும் குறிப்புகளையும் மொழிபெயர்ப்பாளர் வாசகருக்கு வழங்க வேண்டும்.

- **டி.என். இராமச்சந்திரன்,** ஓங்கு தமிழ் சூலை 2002, பக். 29-30.

**இனி, மொழிபெயர்ப்பென்பதோவெனின்,** எடுத்துக் கொண்ட பொருளின் கருத்தும் நுட்பமும் நயமும் தோன்றுமாறு ஏற்றவாறு கூட்டியும் குறைத்தும் சுருக்கியும் விரித்தும் பெயர்த்தமைத்தலாகும். அதிலும் எடுத்துக் கொண்ட பொருளின் அளவிற்கேற்ப அணியும் ஆற்றலும் செறிந்து விளங்க, மொழிப் பெருமை நலிவுறாது இருமொழிகளின் பெருநலந் தோன்ற பெயர்த்து மொழிதலே சீரிதாம். இன்னும் இருமொழிக் கண்ணுமுள்ள ஆன்றோர் வாக்குகளின் கருத்தொப்புமை கண்டவிடத்து அதனை எடுத்துக் காட்டியும் படிப்போர் எளிதில் உணருமாறு பழமொழியும் மேற்கோளும் இயையப் பொருத்தியும் மொழிபெயர்த்தல் சிறந்ததொன்றாகும். 'சூடாயிருக்கும் போதே இரும்பையடித்துக்கொள்' (Strike the iron while it is hot) என்று கூறுவது மொழிபெயர்ப்பாயினும், உண்மையில், மொழிமாற்றே யாகும். காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்று கூறின் அஃது உண்மை மொழிபெயர்ப்பாய் உள்ளதுணர்த்தி நிற்கும்.

- **காழி. சிவ. கண்ணுசாமி,** மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும், ப. 18-19.

**தமிழில் மொழிபெயர்ப்பதற்காக** ஆங்கில உரைநடைப் பகுதியொன்று கொடுக்கப்பட்டிருந்தால் பொதுக் கருத்தினை அறிந்து கொள்வதற்காக, கொடுக்கப்பட்ட பகுதி முழுவதையும் முதலில் இரண்டொருமுறை படித்துப் பார்த்தல் வேண்டும். அதன்பின் அவ்வுரைநடைப் பகுதியை வாக்கியம் வாக்கியமாக எடுத்து ஒவ்வொன்றையும் ஆங்கில வாக்கியத்திலடங்கிய அதே கருத்து அமைந்திருக்கத்தக்கதாக மொழிபெயர்த்தல் வேண்டும்.

ஒரு வாக்கியத்தை மொழிபெயர்க்கும் போது, சொற்றொடர் சொற்றொடராக எடுத்து மொழிபெயர்த்தல் வேண்டும். சொற்களுக்கோ சொற்றொடர்களுக்கோ நேரான தமிழ்ச் சொற்களை அறிந்து கொள்வதற்கு அகராதிகளைப் பயன்படுத்தலாம். வாக்கியங்கள் நீண்டனவாயமைந்திருந்தால், அவற்றைச் சிறு வாக்கியங்கள் இரண்டு மூன்று வரத்தக்கதாகப் பகுத்துக் கொண்டு மொழிபெயர்த்தல் இலகுவாயிருக்கும்.

மொழிபெயர்ப்பு மூலமாகிய ஆங்கில உரைநடைப் பகுதியிலுள்ளவாறே தமிழிலும் கருத்துத் தொடர்பும் நியாய முடிப்பும் இருத்தல் முக்கியமாகும். தொடர்பு ஏற்படுவதற்கு, 'ஆனால், ஆயினும், ஆகவே, எனவே, எனினும்' என்பன போன்ற சொற்கள் உபயோகிக்கப்படலாம்.

மொழிபெயர்ப்பிலே தமிழ் மரபு பேணப்படுதல் வேண்டும். தமிழ்மொழியில் இப்போது வழக்கிலுள்ள சொற்களும் சொற்றொடர்களும் கையாளப்படுதல் விரும்பத்தக்கது. மூலப்பகுதியிலேயுள்ள மரபுச் சொற்றொடர்களுக்கும் பழமொழி களுக்கும் ஏற்ற தமிழ்ச் சொற்றொடர்களும் தமிழ்ப்பழமொழி களுமே உபயோகிக்கப்படுதல் வேண்டும். ஆங்கிலத்திலுள்ள மரபினை நன்கு உணர்ந்து கொள்ளாமல் மொழிபெயர்ப்பினை மேற்கொள்ளுதல் சில வேளைகளில் மயக்கம் விளைத்தல் கூடும்.

மொழிபெயர்ப்பிலே நாடோடிப் பேச்சு வழக்கும் இழிசினர் பேச்சு வழக்கும் வருதலாகாது. பிறமொழிச் சொற்களை எடுத்தாள்வதும் விரும்பத்தக்கதன்று.

மொழிபெயர்த்து முடிந்தபின் மொழிபெயர்த்து எழுதிய முழுப்பகுதியையும் வாசித்து, மொழிபெயர்ப்பு மூலத்திலுள்ள கருத்து மொழிபெயர்ப்பிலும் முற்றாக அமைந்துள்ளதோ என்று கவனித்துக் கொள்ளுதல் வேண்டும். அதன்பின் வாக்கியம் வாக்கியமாக எடுத்து, எழுவாய், பயனிலைகளுக்குள் இயைபு உள்ளதோ என நோக்குதல் வேண்டும். அத்துடன் திணை, பால், எண், இடம் ஆகியனவும் இயைந்துள்ளனவோ என்றும் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.

- **தென்புலோலியூர் மு. கணபதிபிள்ளை,**
மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும், பக். 19-20.

**மொழிபெயர்ப்பென்பது** எளிதான வேலையல்ல. மூலபாடம் எழுதவல்ல ஆற்றலுடையவர்களே மொழிபெயர்ப்பில் இறங்க முடியும். மூலபாடம் எழுதுபவர்க்காயினும் ஒருமொழிப் பயிற்சிப் போதுமானது. மொழிபெயர்ப்பாளர்க்கோ இரு மொழிகளிலும் தேர்ந்த கல்வி ஞானம் இருக்க வேண்டுவது இன்றியமையாதது. சொல்லுக்குச் சொல் பெயர்த்தடுக்குவது மொழிபெயர்ப்பாகாது. பெயர்க்கப்பட வேண்டியது பொருளே.

- **கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை,** மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும், ப. 14.

**மொழிபெயர்ப்பு** தனிமனிதனின் மேம்பாட்டிற்கு மட்டுமின்றிச் சமுதாய மேம்பாடு, கல்வி மேம்பாடு, நாட்டு மேம்பாடு, பொருளாதார வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி முதலியனவற்றுக்கும் இன்றியமையாதது ஆகின்றன. மொழிபெயர்ப்பின் சிறப்பை அல்லது சிறப்பின்மையை மதிப்பிடுவதற்குப் பல்வேறு அளவுகோல்கள் இருப்பினும் அவற்றை யெல்லாம் பின்வரும் இரண்டனுள் அடக்கலாம்.

1. மூலநூற் கருத்தமைதி (Fidelity to the text)
2. மூலநூல் முருகியலமைதி (Fidelity to the text's Aestheticism)

- **பா. கார்த்திகேயன்,** மொழிபெயர்ப்புத் திறனாய்வு (எட்வின் அர்னால்டும் கவிமணியும்), பக். 140-141.

**மொழிபெயர்ப்பு** என்பது ஓர் நுண்கலை (Fine Art). பாட்டில் பிசிறு தட்டினால் இசை சிறக்காது. நாட்டியத்தில் ஓர் உணர்ச்சிக்குப் பதிலாக வேறோர் உணர்ச்சியை அபிநயத்தால் நாட்டியம் சிறக்காது. அதுபோலவே மொழிபெயர்ப்பில் ஒவ்வொரு சொல்லும் அங்கங்கே பொருத்தமாக அமைய வேண்டும். மூல ஆசிரியர் சமைப்பதற்கு வேண்டிய பண்டங் களைக் கொடுக்கிறார். அந்தப் பண்டங்களைக் கொண்டு மொழி பெயர்ப்பைச் சுவைபட அமைப்பது மொழிபெயர்ப்பாளரின் திறமை. சமையலில் உப்போ, புளிப்போ, காரமோ சிறிது குறைந்தாலும் அதிகமானாலும் உணவை யாரும் சீந்த மாட்டார்கள். மொழிபெயர்ப்பைப் படிக்கையில் எங்கும் தங்கு தடையின்றி வாசகம் வேகமாகச் செல்ல வேண்டும். இல்லையென்றால் தடை வந்ததுமே வாசகன் புத்தகத்தை மூடி

வைத்து விடுவான். மொழிபெயர்ப்பு என்பது ஒரு நூலை ஆழ்ந்து படிப்பதாகும். மொழியாக்கத்துக்குத் தேவையான கருவிகளை மொழிபெயர்ப்பாளன் முன்னமே சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். மொழிபெயர்ப்பு என்பது எளிதான செயல் என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால் அது ஓர் கடுந்தவம்.

என் தமிழாக்கங்களில் மூல ஆசிரியர் தமிழில் எழுதினால் எப்படிச் சொற்களை அமைப்பாரோ அது போலவே மிகவும் ஆழ்ந்து சிந்தித்தே சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறேன். ஆங்காங்கே விளக்கம் கொடுக்க வேண்டிய இடங்களில் அடிக்குறிப்பு விளக்கம் தந்திருக்கிறேன்.

- **கா.ஸ்ரீ.ஸ்ரீ (நிவாஸா சார்யர்)**, காண்டேகரும் கா.ஸ்ரீ.ஸ்ரீயும், ப. 69.

**நூறுசதவிகிதம்** சரியான மொழிபெயர்ப்பு என்பது சாத்தியமே இல்லை. அதிகபட்சம் 70 சதவிகிதம் வரை மூலத்தின் கூறுகள் சிதையாமல் மொழிபெயர்க்க முடியும். நேரடியாக அன்றி ஏற்கெனவே இன்னொரு மொழிக்கு மாற்றப்பட்ட படைப்பைப் பிறிதொரு மொழிக்கு மாற்றும் போது நம்பகத்தன்மையின் சதவிகிதம் இன்னும் குறையலாம். . . . ஒரு மொழிபெயர்ப்பாளன் மூலப்படைப்புக்கு முழுவிசுவாசமாக இருத்தல் அவசியம். மூலப்பிரதியை ‘எடிட்’ செய்யவும் கூடாது. இவற்றுடன் படிப்பிற்கு எளிமையான நடையில் மொழிபெயர்க்க வேண்டும்.

- **சு. கிருஷ்ணமூர்த்தி**, தினமணிகதிர், 1-8-2004.

**உண்மையில்** மொழிபெயர்ப்பின் - மொழியாக்கத்தின் குறிக்கோள் என்ன? நாட்டு மக்களை மேம்படுத்தவும், ஒன்றுபடுத்தவும் ஒருமைப்பாட்டை, உலகின் உறவினை உருவாக்கவும் உதவும் ஓர் ஏதுவாகும். நாள்தோறும் வளர்ந்துவரும் எண்ணச் செழுமைகளைக் கொள்வதும் கொடுப்பதுமாகும். மூலமொழிக்கும் இலக்கு மொழிக்கும் பாலம் அமைப்பதற்கு ஒப்பாகும். மொழிக்கும் பிறமொழி(களு)க்கும் இருக்கும் பல்வேறு தடைகளை நீக்கிச் சமூகத்தில் கருத்துறவு ஏற்படுத்துவதே தலையாய குறிக்கோளாகும்.

- **த. கோவேந்தன்**, மொழிபெயர்ப்பு - பண்பும் பயனும், ப. 74

**கூடுமானவரையில்** மொழிபெயர்ப்பில் குறிப்பாக அறிவியல் தொழில்நுட்பத்துறை மொழிபெயர்ப்புகளில் அகராதிப் பொருளோடு வட்டார வழக்கையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

- **வீ. சந்திரன்**, *மொழிபெயர்ப்பு மரபுகள், ப. 12*

**ஜெயகாந்தனின்** கதையை மொழிபெயர்த்தால் அதில் ஜெயகாந்தனின் வீச்சு, ஓட்டம், உயிர் இருக்க வேண்டும். நான் இருக்கக் கூடாது . . . . மொழிபெயர்ப்பாளர் மூல ஆசிரியரின் படைப்பை உள்வாங்கி வெளிப்படுத்த வேண்டும். அதில் ஜீவனைக் கொண்டு வர வேண்டும். கூட்டியோ குறைத்தோ எழுதக்கூடாது.

- **சரஸ்வதி ராம்நாத்**, *மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும், ப. 31*

**மொழிபெயர்ப்பு** என்பது ஒரு தனிக்கலை. கடினமான கலையுங்கூட. இதற்கு இருமொழிப்புலமை இருந்தால் மட்டும் போதாது. எந்த மொழியிலிருந்து மொழிபெயர்க்கிறோமோ அந்த மொழி பேசுவோருடைய நாட்டுவரலாறு, அவர்களுடைய சமயக் கோட்பாடுகள், பழக்கவழக்கங்கள், மொழி மரபுகள் ஆகிய எல்லாவற்றையும் தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் நூல்களில் சொல்லப்பெறும் கருத்துகள் கையாளும் சொல்லாட்சிகள் ஆகிய யாவற்றையும் நமது மொழி மரபுக்கேற்றபடி கொண்டுவர முடியும்.

- **வெ. சாமிநாதசர்மா**, *மொழிபெயர்ப்புக்கலை, ப. 204*

**தாகூர்** கையாண்ட செய்யுள் வடிவத்தை அப்படியே தமிழில் பிரதி செய்தவற்குப் பதிலாக அவருடைய பாட்டின் பொருளையும் தொனியையும் தமிழ்ச் சொற்களில் எப்படி நோக்கலாம் என்று எண்ணி, பிறகு அச்சொற்களை எந்தச் செய்யுள் வடிவத்தில் அமைத்தால், மூலத்தின் சந்தமும் யாப்பமைதியும் தருகின்ற உணர்ச்சியைத் தமிழிலே எட்டக் கூடும் என்று ஒருவாறு முடிவு செய்து மொழிபெயர்ப்பை உருவாக்கினேன்.

- **அ. சீநிவாசராகவன்**, *மொழிபெயர்ப்பியல் கோட்பாடுகளும் உத்திகளும், ப. 20.*

**ஓர் மொழியின்** வளர்ச்சிக்கும் வளத்திற்கும் பிறமொழி, நாட்டு இலக்கியங்களின் வருகையும் அவசியமாகும். கலாச்சார பரிவர்த்தனைக்கும் சிந்தனைத் தூண்டுதலுக்கும் பிறமொழி இலக்கியங்கள் பேருதவியாக அமையும்.

பண்டைக்கால முதலே வெவ்வேறு நாடுகளில் வழங்கி வந்த நாட்டுப்புறக் கதைகள் பல நாடுகளிலும் அந்த மண்ணின் தன்மை, நாகரிகம், பழக்க வழக்கங்களை யொட்டி மருவி மக்களிடையே உலவி வந்திருப்பதைக் காண முடிகிறது. கீழ்த்திசை நாடுகளான சீனா, ஜப்பான், தாய்லாந்து, இந்தோனேசியா, பாரதம் ஆகிய நாடுகளில் சொல்லப்பட்டு வரும் நாடோடிக்கதைகளில் பல ஒப்புமைகளை உணர முடிகிறது. போக்குவரத்து வசதிகள், விரைவான தகவல் தொடர்பு, கடினமான அந்தக் காலகட்டத் திலேயே கூட வணிகர்களாலும், பயணிகளாலும் இத்தகைய இலக்கியப் பரிமாற்றம் நிகழ்ந்தே வந்திருக்கிறது.

– **இரா. சுப்பராயலு**, *ஷெல்லி, கீட்ஸ், பைரன் கவிதைகள், பதிப்புரை.*

மொழிபெயர்ப்புக் கோட்பாடுகளை உருவாக்குவதில்

1. மூலத்தின் உள்ளடக்கம்.
2. மூலமொழி, பெறும்மொழி ஆகியவற்றில் மொழியியல் கலாச்சாரக் கூறுகள்.
3. மூலம் - மொழிபெயர்ப்பு இவற்றிடையே அமையும் பொருள் ஒருமை, நடை ஒருமை
4. மொழிபெயர்ப்பு நிகரன்களின் (translation Equivalents) வழக்கும் (distribution) ஆற்றலும் (dynamics).
5. பெறுமொழி வாசகரின் எதிரொலி

என்பன தேவையாகின்றன.

– **சேதுமணி மணியன்**, *மொழிபெயர்ப்பியல் கோட்பாடுகளும் உத்திகளும்*, ப. 12.

**முதலில் மொழிபெயர்ப்பாளர்** படைப்பாற்றல் வாய்க்கப் பெற்றிருத்தல் வேண்டும். உரைநடை மொழி பெயர்ப்பானால் இருமொழிகளிலும் புலமை இருந்தால் போதும். ஆனால் பாட்டிலக்கியம் பெயர்ப்புக்குப் படைப்பாற்றல்

கட்டாயம் தேவை. மொழிபெயர்ப்பாளர்கள் அவ்வம் மொழிகளில் சொந்தமாகப் பாடல் எழுதுபவராக இருத்தல் வேண்டும். அத்தகையோரே மொழிபெயர்ப்பில் வெற்றி பெற்றுள்ளனர்.

அடுத்து, மரபு பிறழாத மொழி நடை. சொந்த மொழியில் பெயர்ப்பவர்க்கு இதில் சிக்கல் இல்லை. ஆனால் தாய்மொழி இலக்கியத்தை ஆங்கிலத்தில் பெயர்ப்பவர்கள் படைப்பாற்றல் பெற்றிருப்பதோடு மரபு பிறழாது ஆங்கில மொழிநடையும் கைவரப் பெற்றிருத்தல் வேண்டும். இவை இரண்டும் இல்லாமையாலேயே தமிழிலக்கியத்தின் ஆங்கிலப் பெயர்ப்புகள் பல எடுபடாமற் போயுள்ளன.

மற்றும் ஒரு நூலை எடுத்துக் கொண்டால் அந்நூல் முழுமையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. சுவையான நூல்கள், நூற் பகுதிகளை மட்டுமே மொழிபெயர்த்தால் போதும்.

ஒரு தெலுங்கரோ, மராத்தியரோ ஆங்கில மொழி பெயர்ப்பின் வாயிலாகத் தமிழ் இலக்கியத்தை அறிந்து கொள்வதை விடத்தம் சொந்த மொழியில் நேருக்கு நேரான மொழிபெயர்ப்பிருந்தால் அதையே மிகுதியும் விரும்புவார். நாமும் ஆங்கிலத்தைக் கொஞ்சம் தள்ளி வைத்து விட்டு நம்மைச் சுற்றியுள்ள இந்திய மொழிகளிலிருந்து தமிழுக்கு நிறைய மொழிபெயர்ப்புகள் செய்ய வேண்டும். சிறுகதை புதினத் துறைகளில் இவ்விருவழிப் பரிமாற்றங்களும் நிகழ்ந்துள்ளன. பாட்டிலக்கியத்திலும் இது மிகுதியாக நிகழவேண்டும். ஆங்கிலம் இடைமொழியாக நிற்பதால்தான் பிற இந்திய மொழிகளோடு நமக்குச் சரியான இலக்கிய உறவு இல்லை. இனியேனும் இத்துறைகளில் நம் மொழிபெயர்ப்பை விரிவடையச் செய்தல் வேண்டும். ஒவ்வொரு தமிழ் மொழிபெயர்ப்பாளரும் ஓர் இந்திய மொழியைக் கற்று அதிலிருக்கும் சீரிய படைப்புகளைத் தமிழில் கொண்டு வரலாம். தமிழ் நன்கறிந்த பிறமொழிப் படைப் பாளரைக் கண்டுபிடித்து, அவரவர் வாயிலாக அந்தந்த மொழிகட்குத் தமிழிலக்கியத்தை எடுத்துச் செல்ல முயற்சி மேற்கொள்ளலாம்.

– **இல. தங்கப்பா,** *ஓங்குதமிழ் சன. 2003, பக். 33-34.*

**மொழிபெயர்ப்பின்** இலக்கணம் என்று குறிப்பிட்டுச் சொல்ல ஒன்றும் இல்லை. மொழிபெயர்ப்புப் பற்றி ஒன்றோடு ஒன்று முரண்படும் பல கோட்பாடுகள் சொல்லப்பட்டு வருகின்றன. எனக்கு என்ற எந்த மொழிபெயர்ப்புக் கோட்பாடும் இல்லை. ஆனால் எப்படியிருந்தால் நல்லது என்று என் உள்ளுணர்வு சொல்கிறதோ அதன்வழிச் செல்பவன் நான்.

மூலத்தின் பொருளைப் பிறழ உணராது, சரியான பொருளை நன்றாக உள்வாங்கிக் கொண்டு, அதன் உணர்ச்சிக் கூறுகள் சிதையா வண்ணம் தருமொழியில், அதன் மரபுகட்கு உட்பட்ட மொழிநடையில் தரக்கூடுமாயின் அதனை நல்ல மொழிபெயர்ப்பு எனலாம். பாட்டில் உள்ள எதனையும் ஒதுக்குவதற்கும் இல்லாத ஒன்றைச் சேர்ப்பதற்கும் யாருக்கும் உரிமை இல்லை. என் மொழிபெயர்ப்புகள் சொல்லுக்குச் சொல் அமைந்தவை அல்ல. ஆனாலும் மூலத்திலுள்ள கருத்தை முழுமையாக வாங்கி ஆங்கிலத்தில் தர முயன்றுள்ளேன். மூலத்திலுள்ள எல்லாச் சொற்களும் சேர்ந்து தரும் பொருள் உணர்ச்சி மொழிபெயர்ப்பில் அமையுமாறு பார்த்துக் கொள்வது இன்றியமையாதது. ஓர் இடைச்சொல் கூடச் செய்யுளின் பொருளாழத்திற்கு அடிப்படையாக அமைதல் கூடும் என்பதனை நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழின் இலக்கண நுட்பத்தினையும், இலக்கிய மரபினையும் பண்பாட்டுப் பின்னணியையும் உணராத யாரும் அவர்கள் தருமொழியில் எவ்வளவு ஆற்றல் உடையவராயினும் வெற்றி பெறுவது அரிது. எனவே, தமிழில் சிறப்புப் பயிற்சி இல்லாதோர் மொழிபெயர்க்கும் பொழுது நல்ல தமிழறிவு படைத்த ஒருவரின் துணையை நாடுவது இன்றியமையாதது. ஒரு கூட்டு வேள்வியாக மொழிபெயர்ப்பு அமைந்தால், பெரும் பாலான குறைகளைத் தவிர்க்க முடியும். சுருக்கமாகச் சொன்னால் தமிழறிஞரும் ஆங்கிலப் புலவரும் உடன் அமர்ந்து செய்யும் மொழிபெயர்ப்பு உலகோரால் மதிக்கப்படும்.

– **அ. தட்சிணாமூர்த்தி**, ஓங்குதமிழ் ஏப் 2003, பக். 5-6.

**இலக்கியக் கலையின்** ஒரு கூறாகிய மொழிபெயர்ப்பு ஒரு பயன்கலை (Utilitarian art)......உலகின் அறிவுக் களஞ்சியத்தை அணுகுவதற்கு – விரைவாக அணுகுவதற்கு உதவும் கலை . . .

மொழிபெயர்ப்பு செம்மையாகவும் எளிமையாகவும் தெளிவாகவும் அமைய வேண்டுமானால் பட்டறிவு - அனுபவ அறிவு கட்டாயம் தேவை.

- **க.த. திருநாவுக்கரசு**, *மொழிபெயர்ப்புக்கலை, பக். iv-vi*

**பல மொழிகளும்** தம்பால் தேக்கி வைத்துள்ள கலைச் செல்வங்களையும் அறிவு நிதியங்களையும் மொழிபெயர்ப்பின் மூலமே பரிமாற்றம் செய்து கொண்டு உலகோர் மகிழ முடியும். பெயர்க்கப்படும் மொழிநலத்துக்கு வளமும் ஆக்கமும் கூட்டுவதால் மொழிபெயர்ப்பை மொழியாக்கம் என்றே கூறுகிறோம். மொழியாக்கத்தினால் ஒருமொழி வளமும் உரமும் பெறுதல் கண்கூடு.

- **அவ்வை. நடராசன்**, *மொழிபெயர்ப்பியல், ப. iii*

**மொழிபெயர்த்தல்** என்னும் துறையில் எழுத்துப் பெயர்ப்பும் சொற்பெயர்ப்பும் அடங்கும். . . . (அதில் இன்றியமையாதது) தமிழ் மரபு தொனித்தல், வசனத்திலாயினும் சரி செய்யுளிலாயினும் சரி தமிழ் மரபு ஒலித்தல் வேண்டும்.

- **எப்.எக்ஸ்.சி. நடராசா**, *மொழிபெயர்ப்பு - பண்பும் பயனும், பக். 14-17.*

**மூலமொழியும்** ஏற்கும் மொழியும் பேசும் சமூகங்கள் எந்த அளவுக்குப் பண்பாடு, நாகரிகம் முதலியவற்றில் தொடர்புடையவை என்ற அடிப்படையிலேயே மொழி பெயர்ப்பில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்மானிக்க வேண்டும்.

மொழிபெயர்ப்பில் பிழை ஏற்படுவதற்குரிய இரு காரணங்கள்: 1. பதற்றம், அவசரம், அசட்டை முதலிய காரணங்களால் பொருளை அறியத் தவறி விடுகிறார். 2. பொதுச் சொல்லை மூலநூலில் கண்டவுடன் இரு மொழிகளிலும் அச்சொல் ஒரே பொருளைத்தான் கொண்டிருக்கும் என்ற ஊகத்தில் அகராதியைப் பார்க்கத் தவறிவிடுகிறார்.

- **பெ. பானுமதி**, *வங்கமொழிப் புதினங்கள், சிறுகதைகளின் தமிழ்மொழிபெயர்ப்புகள், - ஒரு திறனாய்வு, ப. 262, 37.*

மொழிபெயர்ப்பிற்கு இலக்கணம் வரைய முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஒரு மொழியிலிருந்து இன்னுமொரு மொழிக்குச் சொற்களைப் பெயர்க்கும் போது பல தடைகளைக் (சொல்லாட்சிகள், பழமொழிகள், வழக்குச் சொற்கள்) கடக்க வேண்டும். சொற்களுக்கு அகராதி தரும் மொழிபெயர்ப்புகளை அப்படியே அதே வரிசையில் போட்டு விட்டால் கோணல்மாணலாகிவிடும். பாரதியின்

காதல், காதல், காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்

என்பதை

Love Love Love
Love going, Love going
Death, Death, Death

என்று மாற்றமுடியாது.

மேலும், பண்பாடுகள் பலதரப்பட்டவை. பண்பாடு சார்ந்த மொழிபெயர்ப்பு மிகவும் முக்கியம் (Cultural translation is important) என்பதையும் மறக்க முடியாது. ஒரு மொழி பெயர்ப்பினைப் படித்தபின், அதை மூல மொழியிலேயே படிக்க வேண்டும் என்ற அவா ஒருவருக்கு ஏற்பட்டால் அது வெற்றிகரமான மொழிபெயர்ப்பு எனலாம். மூலத்தின் உள்ளீடுகளான உணர்வுகளை மொழிபெயர்ப்பாளன் தெரிந்து கொண்டு, அவற்றைச் சிதையாமல் மொழிபெயர்த்தால் அதை இலக்கியத்திற்கு நல்ல வரவு என்பேன். ஆனால், இது தன்னிச்சையான மொழிபெயர்ப்பாகிவிடக் கூடாது. (free translation) மூலம் என்பது என் சொந்தச் சரக்கல்ல என்பதை மறக்கலாகாது. தன்னிச்சையான மொழிபெயர்ப்பு தழுவல் எனப்படும்; மொழிபெயர்ப்பல்ல.

ஒரு நல்ல கலைஞனின் உயர்ந்த கருத்துகளை மற்றொரு மொழியில் சிதறாமல், கோணாமல் எடுத்துச் செல்வதை ஒரு முனைப்பாட்டோடு கூடிய தெய்வீக யாத்திரையாகவே நான் கருதுகிறேன். மூலநூலில் ஈடுபாடு இருந்தால்தான் மொழி

பெயர்ப்பது சுலபமாகவும் ஆன்மதிருப்தி அளிப்பதாகவும் இருக்கிறது. இதை நான் அனுபவத்தால் உணர்ந்திருக்கிறேன்.

- **பிரேமா நந்தகுமார்**, ஓங்குதமிழ், அக்டோபர் 2002, பக். 26-27.

**மொழிபெயர்ப்பாவது** தருமொழிப் பாடத்தை (SLT) பெறுமொழிப் பாடமாக (TLT) மாற்றியமைக்கும் பணி என்பது வரையறை. இவ்வாறு மாற்றியமைக்கும் பணி இயந்திரகதியாக நடைபெறுவதில்லை. தருமொழிப் பாடல் பொருளை உணர்ந்து கொள்ளுதல்; உணர்ந்த பொருளைப் பெறுமொழிக்கு மாற்றி யமைத்தல் என்னும் இரு பணி நிலைகளில் மொழிபெயர்ப்புப் பணி நடைபெறுகிறது. இவ்விரு நிலைகளில் முன்னது வாசக நிலை. பின்னது எழுத்தாளன் நிலை. தருமொழிப் பாடத்தை உணர்ந்து கொள்வதில் உடன்காலச் சமுதாயப் பண்பாட்டுச் சூழல்கள் வாசகனைக் கட்டுப்படுத்துகின்றன. இந்நிலை உரையாசிரியர்க்கும் ஒக்கும். காலமாற்றமும் பண்பாட்டு மாற்றமும் ஏற்படுத்தும் தாக்கத்தால் தருமொழிப் பாடத்தை உணர்ந்து கொள்வதில் வேறுபாடுகள் தோன்றுவது இயற்கை. எல்லா வகையான இலக்கியங்களுக்கும் இது பொருந்தும்.

எனவே உரைகள் பல தோன்றுவது போலவே, மொழி பெயர்ப்புகளும் பல தோன்றுகின்றன; இனியும் தோன்றும். அதாவது மொழிபெயர்ப்பாளனும் ஒரு வாசகனாக, ஓர் உரையாசிரியனாகச் செயற்படுகிறான் என்பது கருத்து. ஒரு மொழி வழக்கு, பன்மொழி வழக்கு என்பதே இவரிடை வேறுபாடு.

- **அ.அ. மணவாளன்**, On Translation, ப. 141

**கவிதை** இயற்றுவது போலவே, கவிதையை மொழி பெயர்ப்பதும் கூட உயர்ந்த பாவாக்கத் திறனை வேண்டி நிற்கும் ஒரு கலைப்பணியே எனலாம். எந்தவொரு மொழிபெயர்ப்பும் எடுத்த எடுப்பில் முழுநிறைவு பெற்றிடுதல் அரிதாகும். மொழிபெயர்ப்பின் முதல் வரைவினை யாரேனும் ஒருவர் பரிசோதித்துச் செப்பனிடுதல் வேண்டும். அப்போது மூன்று முதன்மையான அம்சங்களைக் கவனித்தல் வேண்டும் அவை பின் வருவன.

அ. பெறுமொழியில் உரைக்கப்பட்ட கருத்து தெளிவாக இயல்பாக வெளிப்படுகிறதா என்று பார்த்துக் கொள்ளுதல்.

ஆ. பெறுமொழி உரைகோவையில் இலக்கணப்பிழை இல்லாதிருப்பதை உறுதி செய்தல்.

இ. தருமொழி மரபுகளோடு பழக்கமில்லாத பெறுமொழியாளருக்கும் நல் விளக்கம் கிடைத்திடுவதை உத்தரவாதப் படுத்துதல்.

- **இ. முருகையன்,** மொழிபெயர்ப்பு நுட்பம், (ஓர்அறிமுகம்), ப. 126.

**கருத்து** சிதையாமல் இருக்க வேண்டும். இது மிகவும் முக்கியம். மூல நூலில் உள்ள அழகு, இயன்றளவு மொழிபெயர்ப்பு நூலிலும் பிரதிபலிக்க வேண்டும். இது முழுக்க முழுக்க சாத்தியமானது அல்ல. எனவேதான் 'இயன்ற அளவு' என்று குறிப்பிட்டுள்ளேன். மூலநூலில் தோன்றும் சொற்கள் அனைத்தும் மொழிபெயர்ப்பு நூலிலும் இடம் பெற வேண்டும் என்று பொருளல்ல. நான் விரும்புவது Literal translation அல்ல, Dynamic Translation.

- **எம்.எஸ். வேங்கடாசலம்,** ஓங்குதமிழ் ஏப் 2002, ப. 42.

**மொழிபெயர்ப்பு** இருமொழிகளை மட்டுமன்று இரு இனங்களையும் இணைவிக்கும் பாலமாகும்.

மூலநூலின் கருத்தைத் தெளிவுபடுத்துவதற்காகத் தன் கூற்றுகள் செய்ய வேண்டி ஏற்படும் போது தன் கருத்தை அடைப்புக் குறிக்குள் எடுத்துக்காட்ட வேண்டும். ஏனென்றால் தன் சுயமான கருத்தோ, கருத்து விளக்கமோ மூல நூலின் கருத்தாகக் கருதி மயங்காமல் இருக்க தார்மீகக் கடமையாகக் கருதி மொழிபெயர்ப்பாளர் இவ்விதம் அடைப்புக் குறிகளுக் குள்ளோ, அடிக்குறிப்புகளிலோ தன் கருத்தைத் தரலாம். தான் மொழிபெயர்க்கும் நூலில் தனக்குத் தெரியாத துறைகளின் கலைச்சொற்களோ பொருட் பெயர்களோ வந்தால் கூடுமானவரை அத்துறையாளரின் மூலமே விளக்கம் பெற்று மொழிபெயர்க்க வேண்டும். அத்தகு வாய்ப்பு இல்லாவிட்டால் மூலநூலில் குறிப்பிட்ட சொல்லையே தானும் பயன்படுத்திச் செல்வதே நல்லது. அப்படியின்றி ஒன்றை ஒன்றாகக் கருதிக் கொண்டு மொழிபெயர்க்கும் போது விபரீதங்கள் நேரலாம்.

- **மு.கு. ஜகந்நாத ராஜா,** மொழிபெயர்ப்பு - பண்பும் பயனும், ப. 95, 102.

**When** all the Tamil works of the classical period are translated into English and placed before the world, the Tamil nation is sure to be loved better and respected more.

- **A. Chidambaranatha Chettiar**, Tolkappiam - Porulatikaram, p. x

**Generally** no translation can be called a perfect and faithful rendering of the original for the reason that the translator is not free to render the original as if it is his own creation. When it is so it deviates from the original and becomes a transcreation or creative treason. Further, the intricacies and subtle implications of one language cannot be so rendered into another language is an obvious fact known to scholars in this profession. When the work is a philosophic one, it is a Himalayan task to recapture the original meaning or try to approximate the rendering to the original. In his attempt when the translator tries the one he has to sacrifice the other. Again a work proves a hard nut to crack for the translator as the poetic quality of one language cannot be so faithfully infused into another when the latter is only a translation. However, the imaginative approach of the translator may bring in some of the beauties of the original without distroting the original ideas. Yet the charm and crispness of the original shall elude the aspirant in the rendering for which there is no need to feel any qualms, because, usually the translations are done more for the salient ideas enshrined in the work than for the reproduction of its beauty of form and poetic excellences.

- **B. Devendran**, Sivagnana Botham (Tamil text - English verse Exposion) Preface

**Translation** is a significant and purposeful aid toward a unified human consciousness.

- **John Samuel**, Kalittokai in English, Preface

**Translating** the hymns of Sundarar into English is not an easy job. A close study of the entire corpus of the Tirumurai classics is a prerequisite. Sufficient knowledge in Saiva Agama tradition, music, dance, sculpture and temple architecture is essential. A basic

knowledge in the social, political literary and cultural history of the period of Sundarar is needed. Since he refers to the heterodox systems, especially Jainism and Buddhism, the translator is required to have a comprehensive understanding of these systems. The Devaram hymns do not have adequate parallels in English literature in hence the translator can rarely get models in the target language. The metrics of the source language and that of the target language belong to different stocks and culture. Hence the translator has to render the original in a form, which though does not conform to the canons of English versification, should resemble, some way or other, a poetical form, distinguishing itself from the structure of a prose. However the translator should have good knowledge in English, equally in the vocabulary and essentials of grammar.

In the process of translation, one line in the original may be expanded more than that limit. In some contexts, even the lengthy sentences and pharases may be shortened, if there is no difficulty in the elegant communication of the original.

- **S.N. Kandaswamy**, On Translation, pp. 71-72.

**A Translator** need to be cautious as to whom the translation is meant. Translation is no doubt attempted for its utilitarian value.

- **K. Meenakshi**, On Translation, p. 27.

**The validity** and strength of a translation must be ultimately measured in terms of the intention of the translator and the end - use of his translation.

- **V. Murugan**, Tolkappiyam in English, p. xxi

**The realities** of life are idealised by genius and given the form that makes drama, poetry and even great prose. That form perishes when translated from one language into another. The material part of the narrative or the thought can of cause be conveyed, but poetry does not lie there. It is not possible in a translation to reproduce the exquisite art of the poet, the rhythm, the sparkle or the lilt of the original.

- **Rajaji**, The Voice of a Poet, Foreword.

**My translations** are the free renderings of the mind of our saint. I read each poem many times; took notes; closed to book and laid it aside. First, I consciously meditated on the truths I found in the poems. Secondly, I tried to slip into his self, suspending for a moment my own views of his poems. When I woke up from my sleepless slumber in our saints mind I quickly wrote down what I believed to be the true interpretations of his mind according to himself. Then again I read my translation with my notes. I copied for the press that translation which made me feel that I did not wander away from the poet's mind.

- **S.P.Y. Surendranath Voegeli - Arya**, Dedication, p. 11.

மொழிபெயர்ப்பு வல்லுநர்களின் இம்மொழிகள் ஒரு மொழிபெயர்ப்பாளருக்குத் தேவையான உழைப்பையும், நேர்மையையும் வலியுறுத்துகின்றன. அவரவர் மொழிபெயர்ப்பு அனுபவங்களுக்கு ஏற்ப மொழிபெயர்ப்பிற்குரிய விளக்கங்களிலும் செய்முறைகளிலும் சிறு சிறு வேறுபாடுகள் அமையினும் பொதுநிலையில் மொழிபெயர்ப்புப் பற்றிய அடிப்படைக் கருத்தில் ஒன்றி நிற்பது குறிப்பிடத்தக்கது. அவர்களது மொழிபெயர்ப்புப் பட்டறிவு இளம் மொழிபெயர்ப்பாளருக்கு நல் வழிகாட்டியாகும்.

## பார்வை நூல்கள்


அவ்வையார் பாடல்கள், சு.நா. சொக்கலிங்கம், வானதி பதிப்பகம், சென்னை, இ.ப. 2003.

ஆளும் தமிழ், சிலம்பு நா. செல்வராசு (பதி.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1999.

தமிழுக்கு வந்த ஷேக்ஸ்பியர், பழனி. அரங்கசாமி, தமிழ் இல்லம், தஞ்சாவூர், 2002.

திசை எட்டும் (மொழிபெயர்ப்புக் காலாண்டிதழ்), சனவரி-மார்ச் 2004.

தெசிணியின் தமிழாக்கப்பாடல் திரட்டு, தி.வ. தெய்வசிகாமணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2003.

தொல்காப்பியம் பொருளதிகாரம் கருத்துரையும் ஆங்கில மொழிபெயர்ப்பும் - Poruḷatikaram of Tolkappiyam An English Version - A.A. Manavalan, IITS, Chennai, 1998.

புதுவை பேணும் தமிழ், கு. இராசேந்திரன், தாய், புதுச்சேரி, 2002.

மொழிபெயர்ப்பியல், சு. சண்முக வேலாயுதம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

மொழிபெயர்ப்பியல், சி. சிவசண்முகம் & வே. தயாளன், அகரம், கும்பகோணம், 1989.

மொழிபெயர்ப்பியல் கோட்பாடுகளும் உத்திகளும், சேதுமணி மணியன், செண்பகம் வெளியீடு, மதுரை, 1990.

மொழிபெயர்ப்புக்கலை, மு. வளர்மதி, திருமகள் நிலையம், சென்னை, 1987.

மொழிபெயர்ப்புக் கலை, கா. பட்டாபிராமன், வசந்த செல்வி பதிப்பகம், தருமபுரி, 1989.

மொழிபெயர்ப்புக் கொள்கைகள், க. பூரணச்சந்திரன், அகரம், தஞ்சாவூர், 2003.

மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும், வீ. சந்திரன், ராஜகுமாரி வெளியீடு, சென்னை, 1999.

மொழிபெயர்ப்புத் திறனாய்வு (எட்வின் அர்னால்டும் கவிமணியும்), பா. கார்த்திகேயன், தமிழியல் நிலையம், சென்னை, 1991.

மொழிபெயர்ப்பு நுட்பங்கள் (அலுவலகத் தொடர்பானவை), கா. பட்டாபிராமன், யமுனைப் பதிப்பகம், திருவண்ணாமலை, 1994.

மொழிபெயர்ப்பு நுட்பம் - ஓர் அறிமுகம், இ. முருகையன், குமரன் புத்தக இல்லம், சென்னை, 2002.

மொழிபெயர்ப்பு - பண்பும் பயனும் (ஆய்வுக் கட்டுரைகள், தொகுப்பு), ----, வளர்மதி பதிப்பகம், சென்னை, 1984.

மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும், தென்புலோலியூர் & கணபதிப் பிள்ளை, அருள்நிலையம், சென்னை, 1967.

மொழிபெயர்ப்பு மரபுகள், வீ. சந்திரன், பயோனியர் புக் சர்வீசஸ், சென்னை, 1996.

மொழிபெயர்ப்பு வேடிக்கைகள், கோ. முத்துப்பிள்ளை, வசந்தா பதிப்பகம், சென்னை, 1998.

வங்கமொழிப் புதினங்கள் சிறுகதைகளின் தமிழ்மொழிபெயர்ப்புகள் - ஒரு திறனாய்வு, பெ. பானுமதி, 1988 (கல்கத்தாப் பல்கலைக் கழக முனைவர் பட்ட ஆய்வேடு, தட்டச்சுப்படி)

ஷெல்லி, கீட்ஸ், பைரன் கவிதைகள், இரா. சுப்பராயலு, மருதம் பதிப்பகம், ஒரத்த நாடு, 2002.

Ancient Indian Literature - An Anthology - Vol. III (Tamil and Kannada), Sahitya Akademi, New Delhi, 2000.

Anatomy of Translation, S. Kanakaraj & Samuel Kirubahar, Prem Publishers, Madurai, 1995.

Approaches to Translation, Peter Newmark, Pergamon Press, Oxford, 1981.

Bharathidasan Selected Poems, Pondicherry, Institute of Linguistics and Culture, Pondicherry, 1996.

Bharati as a Translator, C. Visvanathan (Comp) Annam, Sivagangai, 1982.

Bibliography on Translations, S. Sivakami, IITS, Chennai, 1983.

Dedication - Poems of St. Pattanathu Pillai, S.P.Y. Surendranath Voegeli Arya, IITS, Chennai, 1997.

Kalittokai in English, V. Murugan, Institute of Asian Studies, Chennai. 1999.

Kural or the Maxims of Tiruvalluvar, V.V.S. Aiyar, Amudha Nilayam, Madras, 1961.

Kural the Great Book of Tiruvalluvar, C. Rajagopalachari, Bharatiya Vidya Bhavan, Bombay, 1970.

Kuruncipattu, Muttollayiram, P.N. Appuswami, IITS, 1997.

Kuruntokai, M. Shanmugam Pillai & David E. Ludden, IITS, 1997.

Narrinai Four Hundred, A. Dakshinamurthy, IITS, 2001.

On Translation, M. Valarmathi (ed), IITS, Chennai, 1999.

Poems of Subramania Bharati, Prema Nandakumar, Sahitya Akademi, New Delhi, 1977.

Silappadikaram, Manimekalai - Lakshmi Holmstrom, Orient Longman, 1996.

Tamil Heroic Poems, G.U. Pope, IITS, 1997.

Tamil Verse in Translation (Sangam age) P.N. Appuswami, IITS, 1987.

Tolkappiyam Vol-1 (Eluttatikaram) Vol-II (Porulatikaram), P.S. Subramanya Sastri (Tr), The Kuppuswami Sastri Research Institute, Chennai, 1999.

Tolkappiyam in English, V. Murugan, Institute of Asian Studies, 2001.

Towards Translation, R, Shanti, Sarguru Publications, Thanjavur, 2003.

Translation As Discovery, Sujit Mukherjee, Orient Longman, Hyderabad, 1994.

Translation As Synthesis, A Search for a New Gestalt, K. Karunakaran & M. Jeyakumar (eds), Bahri Publications, New Delhi.

Translation Studies, Susan Bassnett, Routledge, London, 1988.

Translation - Theory and Application, M. Valarmathi (ed). IITS, 2001.

Tributes and Translations of Tirukkural, M.A. Manickavelu & K.D. Thirunavukkarasu (eds), Maniyagam Publications, Madras, 1986.


***********

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| பாரதியின் சமுதாயச் சிந்தனைகள் | 25.00 |
| இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும் | 40.00 |
| பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும் | 80.00 |
| சங்கத் தமிழர் வாழ்வியல் | 100.00 |
| தமிழெனப்படுவது | 115.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கணம் & மொழியியல் | 105.00 |
| வலங்கைமாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும் | 70.00 |
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| **Agreement in Dravidian Languages** | 100.00 |
| சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கியம் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| கருவூரார் பல திரட்டு | 70.00 |
| சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள் | 45.00 |
| சங்ககாலக் காசு இயல் | 30.00 |
| பாரதி இந்தியா | 40.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |
| மபொசியின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு | 30.00 |
| தணிகைமணி வ.சு.செங்கல்வராய பிள்ளை | 50.00 |
| அருந்தமிழ் நூற் காவலர் அடிகளார் | 50.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் திவை. சதாசிவ பண்டாரத்தார் | 45.00 |
| பாரத வெண்பா | 80.00 |
| நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| தட்சிணாமூர்த்தி குருமுகம் 100 | 50.00 |
| **Studies in Manimekalai** | 70.00 |
| தமிழெழுத்தின் வரிவடிவம் | 30.00 |
| திராவிடமொழி இலக்கியங்கள் | 180.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| நாவல் கலையியல் | 50.00 |
| நாடகவியல் | 70.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் - 3 தொகுதிகள் | 260.00 |
| குமரமலைப் பிள்ளைத் தமிழ் | 75.00 |
| தென்னிந்திய மருத்துவ வரலாறு | 115.00 |
| சமூகத்திலும் இலக்கியத்திலும் ஊனமுற்றோர் | 80.00 |

---

**525 மொழி பெயர்ப்புத் தமிழ் 60.00**